# ஆண்டறிக்கை
# 2013

## மத்திய சுற்றாடல் அதிகாரசபை

சுற்றாடல் அமைச்சு

## தூரநோக்கு

சிறந்த சேவையின் ஊடாக
சுத்தமானதும் பசுமையானதுமான
சுற்றாடலொன்று

## செயல் நோக்கு

பொது மக்களின் பங்கேற்றலை மேம்படுத்தி
உயர் தொழில்நுட்பவியல் தலையீடுகளுடன்
சுற்றாடலை நடைமுறைப்படுத்தி சுற்றாடல் தரத்தை
பாதுகாப்பதிலும் முகாமைத்துவம் செய்வதிலும்
தேசத்திற்கு தலைமைவகித்தல்.

# முன்னுரை

பணிப்பாளர்கள்/ பிரிவுகள் 15இன் தலைவர்கள்/ தலைமையகத்தின் பிரிவுகள்,09 மாகாண அலுவலகங்கள் மற்றும் சுற்றாடல் பேரவை ஆகியவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் 2013 ஆண்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் (ம.சு.அ) மேற்கொள்ளப்பட்ட விஷேட கருத்திட்டங்களின் தகவல்கள் மற்றும் செயலாற்றுகையும் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இத்தகவல்கள் பிரதான பிரிவுகள்/ தலைமையகத்தின் பிரிவுகள் மற்றும் மாகாண அலுவலகங்கள் ஆகியவற்றின் முக்கிய செயலாற்றுகையின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன.

1971 ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14ஆம் வாசகம் மற்றும் நல்லாட்சி வழிக்காட்டிகள் ஆகியவற்றுக்கமைய ம.சு.அ இவ்வாண்டு அறிக்கையை தயாரிக்கவேண்டியுள்ளதுடன், இவ்வறிக்கை அதிகாரசபையின் செயலாற்றுகை, வருடாந்த கணக்குகள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை பற்றிய தகவல்களை கொண்டுள்ளது.

தேவைப்படும் தகவல்களை அனுப்பி ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்கிய அனைத்து பணிப்பாளர்கள்/பிரிவுகளின் தலைவர்கள்/ பிரிவுகள்/மாகாண அலுவலகங்கள் மற்றும் கருத்திட்ட பணிப்பாளர்கள் ஆகிய அனைவருக்கும் நன்றி கூறுவதற்கு இச்சந்தர்ப்பத்தை திட்டமிடல் கண்காணிப்பு குழு பயன்படுத்திக்கொள்கின்றது.

திட்டமிடல் கண்காணிப்பு குழு

## 2013 ஆம் ஆண்டறிக்கைக்கான தலைவரின் செய்தி

2013 டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதி ஆண்டுக்கான ஐந்தொகை, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் கணக்காளர் தலைமை அதிபதியின் அறிக்கை உள்ளடங்களாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் (ம.சு.அ) ஆண்டற்க்கை மற்றும் கணக்காய்வுக்கு உட்பட்ட கணக்குகள் ஆகியவற்றை உங்களுக்கு சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்

நாட்டின் துரித அபிவிருத்தி செயற்பாட்டில் சுற்றுச்சூழல் கரிசனைகளை ஒருங்கிணைக்கும் மத்திய தாபனம் என்ற வகையில் ம.சு.அ தனது முயற்சிகளை பல்வேறு பிரிவுகளின் கீழ் தொடர்ந்தது.

சுற்றாடல் மாசடைதல், சுற்றாடல் முகாமைத்துவம், சுற்றாடல் கல்வி, மற்றும் சுற்றாடல் விழிப்புணர்வு ஆகியவற்றை கட்டுப்பாட்டில் வைக்கும் முகமாக மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு (ம.சு.அ) தேசிய சுற்றாடல் சட்டத்தினால் (தே.சு.ச) அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. ம.சு.அ யின் இலக்கை அடைவதற்கு சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் (சு.பா.உ) செயல்திட்டம் மற்றும் நிருவாக முறைமை என்பன போதுமானதாக இல்லையென்பதை உணர்ந்த ம.சு.அ அதிமேதகு சனாதிபதி மஹிந்தராஜபக்‌ஷவின் ஆதரவுடன் “தேசிய பசுமை விருதுகள் 2013/2014” செயற்திட்டத்தையும் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 2014 ஆண்டு மே மாதம் 12ம் திகதி நடாத்தும். இந்நிகழ்ச்சி நிரலின் குறிக்கோளாக அமைந்தது யாதெனில் கைத்தொழில்கள், பாடசாலைகள் மற்றும் உள்ளூர் அதிகாரசபைகள் அல்லது ஏனைய நிறுவனங்கள் ஆகியவற்றின் சுற்றாடல் மேம்படுத்துகை தொடர்பில் அவர்களின் பசுமை தொடர்பான அணுகுமுறைகள் மற்றும் செயலாற்றுகையை மதிப்பிடுவதும் ஊக்குவிப்பதுமாகும்.

மக்களுக்கு பயனுள்ள உபயோகத்திற்கு நீர் நிலைகளின் தரங்களை பேணுதல் மிகவும் முக்கியமானதொறு விடயமாகும். ஆனால் நீர் வளங்களை சீர்குலைக்கும் வகையில் கைத்தொழில்களின் கழிவுகளை அகற்றப்படும் நடைமுறையாளது துரிதமாக அதிகரித்துவருகிறது. 2008.02.01 ஆம் திகதியிடப்பட்டதும் 1534/18 ஆம் இலக்கமிடப்பட்டதுமான ஒழுங்குவிதி சுட்டிக்காட்டுவது யாதெனில் பல்வேறு கழிவுகளிலிருந்து நீர் நிலைகளை பாதுகாக்கும் சட்டங்களில் பல்வேறு ஓட்டைகள் இருக்கின்றன என்பதாகும். அதனால் மசுஅ நீர் மற்றும் சம்பந்தமுள்ளா துறைகள் சார் விற்பன்னர்களைக் கொண்ட மன்றம் ஒன்றை, தற்போதைய நியமங்களில் ஏற்பட்ட மாற்றங்களை மீள்பார்வை செய்வதற்காக நடாத்தியது. மேலதிகமாக, மசுஅ இரசாயன விபத்து தடுப்பு மற்றும் தயார்நிலை நிகழ்ச்சி ஒன்றை நடத்தியது. இதன் குறிக்கோள் இரசாயன விபத்து தடுப்பு மற்றும் தயார்நிலையை முன்னிறுத்தும் முறைமையை மேம்பாடுத்துவதற்காக, இலங்கையில் உள்ள இத்துறையில் சம்பந்தப்பட்ட நிறுவகங்களின் கொள்ளளவை கட்டியெழுப்புதல் ஆகும்.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் (ம.சு.அ) சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டுப் (சு.மா.க) பிரிவின் நீர் தரக் கண்காணிப்பு ஆய்வுக்கூடத்திடம் முழு நிறுவகத்திற்கும் அதன் ஆரம்பம் முதலே பகுப்பாய்வு சேவைகளை வழங்கும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன் பிரதான கடமையானது யாதெனில் ஒட்டு மொத்த நாட்டிலும் உள்ள கைத்தொழில் கழிவுகளின் தரத்தை கண்காணிப்பதாகும். அறிக்கையிடப்பட்ட கால அளவில், ம.சு.அ ஆய்வுக்கூடத்திற்கு பல்வேறு அம்சங்களையும் கண்டறியும் நோக்கில் மாதிரிகளை சேகரித்து பகுப்பாய்வுக்கு உட்படுத்தக் கூடியதாக இருந்தது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், சூ.தா.ம.ல் பங்கெடுத்த அலுவலர்களின் கொள்ளளாவு மேம்பாடு மற்றும் தேர்ந்த துறைகளுக்கான வழிகாட்டிகளைத் தயாரித்தல் ஆகியன எதிர்பார்க்கப்பட்டன. இந்த நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான முதலாவது சுவடாக, ஒரு பயனாளர் பட்டறை 2013 டிசெம்பர் 10ம் திகதி தாஜ் சமுத்ரா ஹொட்டேலில் நிகழ்ந்தது.

சூழலின் மேலான பாதகமான தாக்கத்தை குறைக்கின்ற வேளையில், இயற்கை வளங்களின் அதிஉச்சப்பயன்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காக, 1997ம் ஆண்டு தயாரிக்கப்பட்ட இயற்கை வளங்கள் முகாமைத்துவம் வழிகாட்டிநூலானது, மீள்பார்வைக்குட்படுத்தப்பட்டும் பயனாளர் அமைப்புகளுடனான ஆலோசனையின் பின்னர் மீளத்திருத்தியமைக்கப்பட்டும் மீளப் பதிப்பிக்கப்பட்டது. அனைத்து பயனாளர் அமைப்புகளின் மத்தியிலும் இப்புதிய பதிப்பின் பிரதிகள் விநியோகிக்கப்பட்டன. அதே வேளையில், மசுஅ ஆனது, இயற்கை வளங்கள் முகாமைத்துவம் சார் விழிப்புணர்வை பயனாளர்களுக்கு ஏற்படுத்துவதற்காக நாட்டின் பல பாகங்களிலும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்தியது.

2013ம் ஆண்டின் மத்தியில், மசுஅ ஆனது களுத்துறை மற்றும் கேகால்லை மாவட்டங்களுக்கான எண்மிய மாவட்ட வளங்கள் பக்கத்தை உள்ளடக்கிய கொம்பாக்ட் டிஸ்க்கைத் தயாரித்தது. சூழல் சார் தகவல் மற்றும் பிரதேச செயலக மட்டத்திலான மாவட்ட சமூக பொருளாதார தரவு ஆகியவற்றை இது உள்ளாடக்கியது. கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் தொழிலதிபர்கள் ஆகியோருக்குத் தேவையான அனைத்து விபரங்களையும் இது வழங்குவதால், இது மசுஅ இன் சிறந்த சாதனை ஆகும்.

தீங்கான கழிவு முகாமைத்துவ விதிமுறைகளை அமுல்படுத்தலுக்கு வசதியளித்தல் மற்றும் மருத்துவக் கழிவுகள் மூலம் வரும் பிரச்சினைகளுக்குகான தீர்வைத் தரல் ஆகியவற்றிற்காக, ம.சு.அ. ஆனது ஒரு மையமாக்கப்பட்ட எரிஉலையினை அமைப்பதற்கான ஆரம்ப முயற்சியினை தொடக்கி உள்ளது. இது, சிசிலி ஹனரோ என்கெயார் பிரைவேட் லிமிட். , மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் சுகாதார அமைச்சு ஆகிய முத்தரப்பும் பங்கேற்கும் முயற்சி ஆகும். ஐது முல்லேரியாவில் உள்ள கொழும்பு கிழக்கு ஆதார மருத்துவமனையில் அமைக்கப்படவுள்ளது. ஒரு நாளுக்கு ஆறு தொன் உரம் தயாரிக்கும் கொள்ளளவை

இது கொண்டுள்ளது. நாட்டில் உள்ள பொது மற்றும் தனியார் சுகாதாரக்கவனிப்பு வசதிகளுக்கு, இது உதவக்கூடியது. இதற்கிடையில் இலங்கை தேசிய இரசாயன ப்ரோ.்.பைல் மீதான இறுதி அறிக்கை, மற்றும் இரசாயன முகாமைத்துவம் தொடர்பான தேசிய அமுல்படுத்தும் திட்டம் ஆகியன தயாரிக்கப்பட்டிருப்பதுடன் தரம் மேம்படுத்தும் செயற்பாடு நடைபெறுகிறது.

விழிப்புணர்வை கட்டியெழுப்பல், சூழற்காப்பு சார் மக்களின் பங்குபற்றலைக் காத்தல் தொடர்பான கல்வியை மக்களுக்குத் தரல் மற்றும் சூழல் பற்றி அதிக அக்கறை கொண்டவர்களாக மாற்றல் ஆகியன ம.சு.அ. இன் பொறுப்புக்களாகும். அதனால் ம.சு.அ. ஆனது மக்களை சூழல் சார்ந்து விழிப்புணர்வடைய வைப்பதற்காகவும் அதன் முக்கியத்துவத்தை உணர வைப்பதற்காகவும், பல்வேறு கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியது. அதற்கு மேலாக,“சிந்திக்குக, உண்க, சேமிக்குக, உங்கள் உணவுப்பதிவை குறைக்குக” எனும் தொனிப்பொருளின் கீழ், டெம்பிள் ட்ரீஸ் இல் உலக சூழல் தினம் 2013 ஆனது நடைபெற்றது. இதில் சூழல் முன்னோடிகள் மற்றும் 5000ற்கும் மேலான பள்ளி குழந்தைகள் பங்குபற்றியதுடன், இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதியான அதிமேதகு மகிந்த ராஜபக்ஷ அவர்களும் பங்கேற்றார்.

உள்ளூராட்சிசபைகளின் கழிவு முகாமைத்துவம் சார்ந்த முக்கிய பொறுப்புகளில் ஒன்று, வீடுகள், வர்த்தக அமைப்பிடங்கள் மற்றும் பொது இடங்களில் இருந்து கழிவு சேகரித்தல் ஆகும்.கழிவுப் போக்குவரத்து வாகனங்களின் போதுமான தன்மை இன்மையானது ஒரு தடையாக உள்ளமையால் அது உடனடியாக நீக்கப்படும். ம.சு.அ. ஆனது 75 ட்ரக்டர்கள் மற்றும் 77 ட்ரெய்லர்கள் ஆகியவற்றை கொள்முதல் செய்து உள்ளூராட்சிசபைகள் மற்றும் மாகாணசபைகள் ஆகியவற்றுக்கு விநியோகித்தது. இதற்கிடையில், கழிவு வங்கி முறைமையினை அமுல்படுத்துவதற்காக, ம.சு.அ. ஆனது சனச அபிவிருத்தி வங்கியுடன் பேச்சுவார்த்தை நடத்தியது.

மக்கிப்போகாத தன்மையால் பிளாஸ்டிக்கானது அதன் பொருட்கள் எமது நாளாந்த வாழ்விற்கு அத்தியாவசியமாக மாறிவிட்ட போதிலும், சூழலுக்கான பாரிய அச்சுறுத்தல்களுள் ஒன்றாக மாறியுள்ளது. அதனாலும், பி.சி.பி.டபிள்யூ இனை சூழலுக்கு நட்பான முறையில் முகாமை செய்யவும், ம.சு.அ. ஆனது தேசிய பயன்படுத்தப்பட்ட பின்னரான பிளாஸ்டிக் கழிவு முகாமை செயற்றிட்டத்தை (என்.பி.சி.பி.டபிள்யூ.எம்.பி) 2013 இலும் தொடர்ந்தது. நாட்டில் சிறப்பாக செயற்படுகின்ற உள்ளூராட்சி சபைகளின் மத்தியில் பிளாஸ்டிக் அல்லது பொலித்தீன் கழிவுக் களஞ்சிய வசதிகளை மேம்படுத்துவதன் ஊடாக, இச்செயற்றிட்டமானது, பிளாஸ்டிக் அல்லது பொலித்தீன் மீள்சுழற்சிக்கும் தொழிற்றுறையினைச் செழுமையாக்குகிறது. அத்துடன், பிளாஸ்டிக் அல்லது பொலித்தீன் கழிவு மீள்சுழற்சிக்கும் கொள்ளளவை 2016ல் (தற்போதுள்ள) 40மூ இலிருந்து 80மூ ஆக்குவதற்கான திட்டமிடப்பட்ட விதிமுறையை இத்திட்டம் நடைமுறைப்படுத்துகிறது.

அரசாங்க மற்றும் தனியார் துறையினர் பல்வேறு மேம்பாட்டு செயற்றிட்டங்களை ஆரம்பிக்கையில், பொதுவாக, ஒவ்வொரு ஆண்டும் நாம் (ம.சு.அ.) வேறுபட்ட உத்திகளை சூழல் பேணுகையை முகாமை செய்வதற்காக உபயோகிக்கின்றது. சூழலை பாதுகாப்பதற்கு மேம்படுத்துநர்களால், மசு.அ. ஆல் அறிமுகப்படுத்தப்பட்ட உத்தி மொடல் ஆனது பின்பற்றப்படலாம்.

ம.சு.அ யின் குறிக்கோள்களையும் இலக்குகளையும் அடைவதற்கு மீளாய்வுக் காலத்தில் பங்களிப்பு செய்த பணியாளர் நாயகம், முகாமைத்துவ பணியாளர்கள் மற்றும் ம.சு.அ ஊழியர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். மேலும் ம.சு.அ அலுவல்களை முகாமைத்துவம் செய்வதற்கான ஒத்துழைப்பு, வழிக்காட்டல், ஆலோசனை மற்றும் ஆதரவை எனக்கு வழங்கிய ம.சு.அ முகாமைத்துவ சபை உறுப்பினர்கள் மற்றும் சுற்றாடல் பேரவையின் உறுப்பினர்கள் ஆகியோருக்கும் நன்றி கூற இந்த வாய்ப்பை நான் பயன்படுத்துகின்றேன். மேலும், ஒத்துழைப்பு, கவனம் மற்றும் ஆலோசனை வழங்கிய செயலாளர், மேலதிக செயலாளர்கள் மற்றும் சுற்றாடல் அமைச்சின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் எனது பாராட்டுக்களை தெரிவிக்க விரும்புகின்றேன். மேலும் சிறந்த ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டிகள் வழங்கிய சுற்றாடல் அமைச்சர் கௌரவ அநுர பிரியதர்சன யாப்பா அவர்களுக்கும் நன்றி கூற விரும்புகின்றேன்.

தலைவர்

மத்திய சுற்றாடல் அதிகாரசபை

**தாபனக் கட்டமைப்பு**


Organization Structure of the Central Environmental Authority
Ministry of Environmental
Central Environmental Authority
Chairman & Members of the Board
Director General
Internal Auditor
D.Director (P&M)
A. Director
Director (Legal)
D.Director
Legal Officer
DDG (EE&A)
01 Director
02 D.Directors
04 A.Directors
01 Snr. Librarian
03 Snr. EE&A Officers/
Ast. Librarian
02 EEA Officers / 01
A/V Technician
DDG (HRD, Admin, Fin)
03 Directors
04 D.Directors
02 A.Directors
01Admin Officer
01Supplier Officer
03 Staff Assistant
DDG (EM&A)
03 Directors
04 D.Directors
12 A.Directors
24 SEOs
08 EOs
DDG (EPC)
03 Directors
04 D.Directors
11 A.Directors
/01 Programmer Analyst
29 SEOs / 04 Chemists
10 EOs
Provincial Officers &
06 District Officers
04 Directors
08 D.Directors
12 A.Directors
24 SEOs
400 DEOs

**மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சிரேஷ்ட முகாமைத்துவ குழு**

| பெயர் | புதவிநிலை | தகைமைகள் |
|---|---|---|
| **திரு. விமல் ரூபசிங்க (இ.நி.சே)** | தலைவர் | பீ.ஏ, பட்டப்பின் முகாமைத்துவம், ஊடகவியல் டிப்ளோமா, முகாமைத்துவ பயிற்சி பிரித்தானியா |
| **மருத்துவர் சாரங்க அழகப்பெரும** | பணிப்பாளர் நாயகம் | எம்.பி.பி.எஸ், ஊடகவியல் டிப்ளோமா, ஊடகவியல் டிப்ளோமா (இலத்திரனியல் ஊடகம்) |
| **திரு. கே.எச்.முத்துக்குட ஆராச்சி** | பி.ப.நா(ஈ.பீ.சீ) | பீ.எஸ்.சீ.எம்.எஸ்.சீ |
| **பொறியியளாளர் ஜே.எம்.யூ இன்றரத்ன** | பி.ப.நா.(ம.வ.அ, நிர்வாகம், நிதி) | பீ.எஸ்.சீ(பொறியியல்) கௌரவம், எம்.பீ.ஏ பட்டய பொறியியலாளர்(இலங்கை) ஐ.ஈ (அவுஸ்திரேலியா) |
| **திரு.யூ.கே.டி.ஜீ ஜயசிங்க** | பி.ப.நா( சு.மு/ம) | பி.எஸ்.சீ, எம்.எஸ்.சீ |
| **திரு.எம்.ஜே.ஜே.பர்நாந்து** | பி.ப.நா (சு.மு/ம) | பி.எஸ்.சீ, எம்.எஸ்.சீ பட்டப் பின் டிப்லோமா (RS &GIS) |
| **திரு.எம்.கே.எஸ் நானயக்கார** | பணிப்பாளர் (நிதி) | பீ.கொம் (கௌரவம்) எஸ்.எல்.ஜ.சி.ஏ தகுதிச்சான்று,எ.ஃப்பிஎ.ஃப் |
| **மிஸ். காந்தி டி.சில்வா** | பணிப்பாளர் (சு.தா.ம) | பீ.எஸ்.சீ, எம்.எஸ்.சீ |
| **திரு.எம்.எஸ்.ஏ.ஈ திஸ்மல்பொல** | பணிப்பாளர்(ம.வ.அ) | சட்டத்தரணி,பட்டப் பின். டிப்ளோமா எச்.ஆர். |
| **திரு.எம்.ஏ.ஏ.என் ஹேமகுமார** | பணிப்பாளர் (புவிசார்-தகவல்) | பீ.எஸ்.சீ, எம்.எஸ்.சீ |
| **திரு. நீல் பெரேரா** | பணிப்பாளர் (சு.க. மற்றும் விழிப்புணர்வு) | பீ.ஏ, பொளியல்(விஷேட) எம்.ஏ(பொருளியல்) பொது முகாமைத்துவ டிப்லோமா |
| **மிஸ். மஞ்சுலா விமலசேன** | பணிப்பாளர் (சட்டம்) | சட்டத்தரனி, எல்.எல்.பீ. (இலங்கை) பிரசித்த நொத்தாரிஸ், சத்தியப்பிரமான ஆணையாளர், கம்பனி செயலாளர் |
| **திரு. டி.எம்.ஏ.எஸ்.கே. ரொட்ரிகோ** | பணிப்பாளர் (தே.வ.மு) | பீ.எஸ்.சீ, எம்.எஸ்.சீ(காட்டியல்) |
| **கலாநிதி ஆர்.எம்.எஸ்.கே ரத்னாயக்க** | பணிப்பாளர் (சு.மா.க) | பீ.எஸ்.சீ (விஷேட), பிஎச்டி, பட்டய இரசாயனவியலாளர், இரசாயனவியல் டிப்லோமா |
| **மிஸ்.வசந்த விஜேயசிங்க** | பணிப்பாளர் (ஆய்வுக்கூட சேவை) | பீ.எஸ்.சீ(இரசாயனம்) கௌரவம், எம்.எஸ்.சீ (பகுப்பாய்வு இரசாயனம்) எம்.ஐ.இரசாயனம் பட்டய இரசாயனவியலாளர் |
| **திரு.ஏ. வீரசுன்தர** | பணிப்பாளர் (கழிவு முகாமைத்துவம்) | பீ.எஸ்.சீ,எம்.ஃபில். |
| **திரு. வல்பொல** | பணிப்பாளர் (நிர்வாகம்) | பீ.ஏ. கௌரவம், எம்.எஸ்.சீ (சமூகவியல்) |
| **மிஸ். குமாரி குலதிலக** | பி.பணிப்பாளர் (தி.முகாமைத்துவம்) | பீ.ஏ.(பொது) |
| **திரு.சுனில் டீ சில்வா** | நிகழ்ச்சி நிரலாளர்/ பகுப்பாய்வாளர் | ஏம்.எஸ்.சீ(கணினி விஞ்ஞானம்) பிரித்தானிய கணினிச் சங்கத்தின் சாட்டர்ட் ஐடி. ப்ரொ.ஃபெஷனல் உறுப்பினர் (எம்பிசிஎஸ் சிஐடிபி) |

| **பெயர்** | **புதவிநிலை** | **தகைமைகள்** |
|---|---|---|
| **மிஸ்.ஏ.சி.பீ. தாபரே** | சிரேஷ்ட நூலகர் | பீ.ஏ.எம்.எஸ்.சி, பட்டய நூலகர் |
| **மிஸ். விதானாட்சி** | உள்ளக கணக்காய்வாளர் | பிஎஸ்சி (நிர்வாகம்) ,எம்.ஏ.ஏ.டீ எஸ்.எல்.ஐ.சி.ஏ தகுதிச்சான்று எச்.டி.எம். |
| **திரு.கே.ஜீ.டி.என் கிரிஎல்ல** | பணிப்பாளர் (ம.மா) | பீ.எஸ்.சீ, எம்.எஸ்.சீ |
| **திரு.கே.ஏ.பி வெளிகன்னகே** | பணிப்பாளர் (ச.மா) | பீ.எஸ்.சீ, எம்.எஸ்.சீ எம்.ஏ, பட்டப் பின(சூழல் விஞ்.), டிப் (எச்.ஆர்.எம். ரூ சந்தைப்படுத்தல்) |
| **திரு.எம். சிவகுமார்** | பணிப்பாளர் (கி.மா) | பீ.எஸ்.சீ, எம்.எஸ்.சீ |
| **திரு.எச்.எஸ்.பிரேமசந்திர** | பணிப்பாளர் (தெ.மா) | பீ.எஸ்.சி(விஷேட) கௌரவம், எம்.எஸ்.சி எம்.ஐ. உயிரியல் |
| **செல்வி.தேவிகா விதானகே** | (பதில்) பணிப்பாளர் (மே.மா) | பி. பீ.எஸ்.சீ, எம்.எஸ்.சீ (சுற்றாடல் முகாமைத்துவம்) பட்டப்பின் டிப்ளோமா (சுற்றாடல் விஞ்ஞானம் |
| **திரு. சுசந்த வெதகே** | பி.பணிப்பாளர் (வ.மா) | பீ.எஸ்.சீ, எம்.எஸ்.சீ |
| **செல்வி.விஜிதா சத்தியகுமார்** | உதவி பணிப்பாளர் (வ.மா) | பீ.எஸ்.சீ, எம்.எஸ்.சீ பட்டப்பின் டிப்ளோமா (சுற்றாடல் விஞ்ஞானம் |
| **திரு.ஆ.ஜீ.எம்.அநுர** | பதில் உதவி பணிப்பாளர் (வ.மத்திய மா) | பீ.எஸ்.சீ, எம்.எஸ்.சீ |

**உள்ளடக்கம்**

1. மத்திய சுற்றாடல் அதிகாரசபை.....1
1.1. அறிமுகம்.....1
1.2. குறிக்கோள்.....1
1.3. அதிகாரங்கள் (தத்துவங்கள்) பணிகள் மற்றும் கடமைகள்.....4
1.4. அதிகாரசபையின் உறுப்பினர்கள் .....5
1.5. சுற்றாடல் பேரவை .....5
2. ம.சு.அ.யின் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் .....10
3. சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு பிரிவு.....17
3.1. சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு அலகு .....17
3.1.1. ஒருங்கமைப்பு மற்றும் கண்காணிப்பு 17
3.1.2. கொள்கை விருத்தியாக்கம். 19
3.1.3. தொழில்நுட்ப அனுசரனை 19
3.1.4. மாசுக்கட்டுப்பாட்டு தொடர்பான விஷேட நிகழ்ச்சி நிரல் 22
3.1.5 பயிற்சிகள்: பயிற்சிப்பட்டறை, கூட்டங்கள் மற்றும் முன்னிலைப்படுத்தல் 24
3.2. ஆய்வுகூட சேவைகள் பிரிவு.....26
3.2.1 சுற்றுப்புற வளித் தரக் கண்காணிப்பு 26
3.2.2. நீர்த் தர கண்காணிப்பு ஆய்வுகூடம் 31
3.3 கழிவு முகாமைத்துவ பிரிவு. .....40
3.3.1 இலங்கையில் அபாயகர கழிவு முகாமைத்துவ ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்தல். 41
3.3.2 பேசல் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தல். 41
3.3.3 ரொட்டர்டாம் உடன்படிக்கை 42
3.3.4 இலத்திரனியல் மற்றும் மின் உபகரண முகாமைத்துவம் (இ.மி.உ.மு) 42
3.3.5 அனுபவம் மற்றும் அறிவுப் பகிர்வு 42
4. சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் மதீப்பீட்டு பிரிவு.....43
4.1. சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு (சு.தா.ம) செயற்பாட்டை நடைமுறைப்படுத்தல்.....43
4.2. இயற்கை வளங்கள் முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புப் பிரிவு.....50
4.3. ஆய்வு மற்றும் மேம்பாட்டு பிரிவு .....58
5. சட்டப்பிரிவு .....69
6. சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவு (சு.க.வி.பி).....74
7.0 திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு பிரிவு .....102
8. முறைப்பாட்டு பிரிவு .....106
9. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அதிகாரப் பரவலாக்கல்.....110
9.1. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மாகாண அலுவலகங்களுக்கான தத்துவங்களை (அதிகாரங்களை) ஒப்படைத்தல்.....110
9.2 உள்ளூர் அதிகாரசபைகளிடம் தத்துவங்களை (அதிகாரங்களை) ஒப்படைத்தல்...110
9.3. மாவட்ட சுற்றாடல் சட்டத்தை அமுல்படுத்தும் குழு (DELEC) .....111
10. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பிராந்திய மயமாக்கல் நிகழ்ச்சித்திட்டம் .....112
10.1 அறிமுகம்.....112
10.2சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் தொடர்பான செயன்முறை .....113
10.3புதிய கைத்தொழில்களுக்கென சுற்றாடல் விதப்புரைகளை (சிபாரிசுகளை) வழங்குதல் .....114

10.4 சுற்றாடல் மாசடைதல் / தொந்தரவுகள் மற்றும் இயற்கை மூலவளங்களின் மிகைப் பாவணை ஆகியவற்றின் மீதான பொதுமக்களின் முறைப்பாடுகளைத் தீர்த்து வைத்தல்......115

10.5 ISO 14001 தரத்தின் கீழ் உள்ள கைத்தொழில்களுக்கான சான்றிதழ் வழங்குதல் தொடர்பில் மேல் மாகாண அலுவலகத்தின் பங்களிப்பு .......................................................117

10.6. சுற்றாடல் முகாமைத்துவம்..................................................................................118

10.7 இயற்கைவள முகாமைத்துவம் ...........................................................................120

10.8 சுற்றாடற் கல்வி மற்றும் சுற்றாடல் விழிப்புணர்வு................................................122

10.9 2012ஆம் ஆண்டில் மாகாண அலுவலகங்களுக்கான வரவு-செலவு (ரூபாவில்.)....124

11. மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் அமுல்படுத்தப்படும் திறைசேரி நிதியிடப்பட்ட விசேட கருத்திட்டங்கள் ........................................................................ 125

11.1 தேசிய நுகர்வுக்குப் பின்னரான (பாவணைக்குப் பின்னரான) பிளாஸ்டிக் கழிவு முகாமைத்துவ கருத்திட்டம்..........................................................................................125

11.2. பாடசாலை முன்னோடி நிகழ்ச்சித்திட்டம்...........................................................130

11.3. மசுஅ ஆய்வுகூடங்களை வலுப்படுத்தலும் இலங்கையில் கண்காணிப்பு கொள்ளளவை மேம்படுத்தலும் ......................................................................................137

11.4. தேசிய சூழல் தகவல் மையம் அல்லது நூலகத்தை வலுப்படுத்தல்.................147

11.5 கொரிய சர்வதேச கூட்டுறவு முகவராண்மை (KOICA) .......................................149

11.6 இலங்கையில் திண்மக்கழிவு அகற்றலுக்கான வசதிகளை நிர்மாணிப்பதற்கான கருத்திட்டம் (EDCFகருத்திட்டம்) ..........................................................................173

12.0 கூட்டாண்மை ஆட்சி அறிக்கை ........................................................................ 186

13.0 மனிதவள அபிவிருத்தி, நிர்வாகம் மற்றும் நிதிப்பிரிவு.......................................... 190

13.1 மனிதவளங்கள் அபிவிருத்திப் பிரிவு (ம.அ.பி) .....................................................190

13.2 மனிதவளங்கள் முகாமைத்துவ பிரிவு .................................................................191

13.3 நிதிப் பிரிவு..........................................................................................................194

14. நிதிக்கூற்றுக்கள் பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிகை...................... 222

15.'பிலிசறு'தேசிய திண்மக் கழிவு முகாமைத்துவ கருத்திட்டம்.................................... 238

# 1. மத்திய சுற்றாடல் அதிகாரசபை

## 1.1. அறிமுகம்

1980 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் 1981ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது (ம.சு.அ) முப்பத்தொரு வருடங்களை 2012இல் பூர்த்திசெய்கின்றது. சுற்றாடல் அமைச்சின் ஆளகையின் கீழ் இயங்கும் ம.சு.அ தேசிய சுற்றாடல் கொள்கையை நடைமுறைப்படுத்தும் பிரதான தானங்களில் ஒன்றாகும். 2012ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையானது மாகாண அலுவலகங்கள் 08, மாவட்ட அலுவலகங்கள் 11, ஒருங்கிணைப்பு அலுவலகம் ஒன்று மற்றும் ம.சு.அ நடைமுறைப்படுத்திய விஷேட கருத்திட்டங்கள், பொது நிதிகள் மற்றும் நன்கொடையாளர் நிதிகள்/மானியங்கள் ஆகியவற்றை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட பணிகளின் முழு விபரங்களையும் வழங்கும் முகமாக ம.சு.அ யின் வெற்றிகள் தோல்விகள் உள்ளடங்களான ம.சு.அ செயலாற்றுகையை உள்ளடக்குகின்றது.

## 1.2. குறிக்கோள்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பரிந்துரைகளில் ஒன்றான 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தே.சு.தி (என்.ஈ.ஏ), 1988 மற்றும் 2000 ஆம் ஆண்டுகளில் தேசிய சுற்றாடல் (திருத்தம்) சட்டத்தாலும், 2000 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் (திருத்தம்) சட்டத்தாலும் முறையே திருத்தப்பட்டுள்ளது. 1980 ஆம் ஆண்டின் தேசிய சுற்றாடல் சட்டத்தின் உள்ளடக்கப்பட்டுள்ள பிரதான அதிகாரங்கள் (தத்துவங்கள்) யாதெனில்

- ❖ தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழான சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக சுற்றாடலின் தரத்திற்கு ஆபத்தாகவும் அல்லது ஆபத்தை விளைவிக்கும் சாத்தியமுடைய கழிவு வெளியேற்றம்,மற்றும் வெளிவீச்சுக்கள், வீழ்படிவுகள் அல்லது ஏனைய மாசு மூலங்கள் ஆகியவற்றை ஒழுங்கமைத்து, பேணி கட்டுப்படுத்தல்
- ❖ சுற்றாடல் தாக்க மதிப்பீட்டை (சு.தா.ம) ஓர் கருவியாக பயன்படுத்தி முறையான சுற்றாடல் விளைவுகள் பற்றிய மதிப்பீட்டின் ஊடாக சுற்றுச்சூழலுக்கு உகந்த அபிவிருத்தியை உறுதி செய்வதன் மூலம் நாட்டில் தேசிய வளத்தரத்தை பாதுகாத்தல்.
- ❖ சுற்றாடல் பாதுகாப்பில் விஷேடமாக பாடசாலை பிள்ளைகளின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளும் அதே வேளை பொதுமக்களை ஊக்குவித்து அவர்களின் ஆதரவையும் பங்களிப்பையும் மேம்படுத்தி உள்ளூர், தேசிய மற்றும் உலகளாவிய சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பில் மக்களின் விழிப்புணர்வை ஏற்படுத்தல்
- ❖ பரந்தளவில் வாடிக்கையாளர் தேவைகளுக்கு உகந்த சேவைகளை வழங்குவதன் மூலம் சுற்றாடலுடன் தொடர்புடைய தரவுகள் மற்றும் தகவல்கள் பற்றிய தகவல் நிலையமாக செயற்படல்.

## 1.3. அதிகாரங்கள் (தத்துவங்கள்) பணிகள் மற்றும் கடமைகள்

1980 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள பணிகள், அதிகாரங்கள் மற்றும் கடமைகளில், மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது தற்சமயம் பிரதானமாக கவனத்தை செலுத்தும் பணிகள், அதிகாரங்கள் மற்றும் கடமைகளாவன பின்வருமாறு.

அ) தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளையும் அதன் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளையும் நிருவகித்தல்.

ஆ) மாசடைதலின் காரணங்கள், இயல்புகள் மற்றும் அளவு பற்றிய ஆய்வுகள் மற்றும் விசாரணைகளை பொறுப்பேற்றலும் ஏனைய நபர்கள் அல்லது அமைப்புகளுக்கு அவ்வாறான ஆய்வுகள் மற்றும் விசாரணைகளை மேற்கொள்வதற்கு உதவிகள் மற்றும் ஒத்துழைப்பு வழங்குதல்.

இ) சுற்றாடல் தரவீழ்ச்சியுடன் தொடாபுடைய ஏதேனும் அம்சங்களுடன் தொடர்புடைய ஆய்வை நடாத்துதல், மேம்படுத்தல் மற்றும் ஆய்வுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கள் அல்லது அவற்றின் (அவ்வம்சங்களின்) விளைவுகளை தடுத்தல் மற்றும் சுற்றாடலை பாதுகாக்கவும் மேம்படுத்தவும் அவசியமான கோட்பாடுகளை தயாரித்தல்.

ஈ) சுற்றாடலின் நன்மையளிக்கும் பயன்களை பாதுகாப்பதற்கான தரங்கள், கோட்பாடுகள் மற்றும் விதிமுறைகளை குறித்துரைத்தல்.

உ) சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் பற்றிய ஏதேனும் இயல்புடன் தொடர்புடைய அறிக்கைகள் மற்றும் தகவல்கள் பிரசுரித்தல்.

ஊ) சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு தொடர்பில் பொதுமக்களுக்கு தகவல்கள் மற்றும் கல்வியை வழங்குதல்.

மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு அதன் ஆரம்பத்திலிருந்து 1988 மற்றும் 2000 ஆம் ஆண்டுகளில் திருத்தியமைக்கப்பட்ட தேசிய சுற்றாடல் சட்டத்திற்கிணங்க வரிவான ஒழுங்கமைப்பு அதிகாரங்கள் (தத்துவங்கள்) ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இத்திருத்தங்களுடன், மற்றவற்றிற்க்கிடையில் ஒப்படைக்கப்பட்டுள்ள பிரதான அதிகாரங்களாவன பின்வருமாறு.

அ) அதிகாரசபையில் குறித்துரைக்கப்பட்ட தரங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்க ம.சு.அ வழங்கிய உரிமத்தின் கீழ் சுற்றாடல் மாசுபடுத்திகளை அகற்றுவதால் ஏற்படும் விளைவுகளான பரிகார நடவடிக்கைகளை நாடுவதற்கும்.

ஆ) நடைமுறையாக்கத்தின் போது சுற்றாடலுக்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சில குறிப்பிட்ட அபிவிருத்தி கருத்திட்டங்களை அவை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் சுற்றாடல் தாக்க மதீப்பீட்டிற்கு உட்படுத்தும் முகமாக வேண்டுகோள்விடுவதற்கும்.

இ) சுற்றாடலுக்கு கழிவுகளை வெளியேற்றும், வீழ்படிவை தோற்றுவிக்கும் அல்லது வெளியிடும் செயற்பாடுகளை “ பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடுகள்” என வர்த்தமானி அறிவித்தல் விடவும், இச்சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட தரங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்கவும், அதிகாரசபையால் வழங்கிய உரிமத்தின் அடிப்படையிலும் அல்லாத வகையில் பரிந்துரைக்கப்பட்ட எந்தவொரு செயற்பாட்டையும் எந்த நபர் ஒருவரும் நடைமுறைப்படுத்தமாட்டார் என்பதை உறுதிசெய்வதற்கும் உள்ளஅதிகாரங்களாகும்.

## 1.4. அதிகாரசபையின் உறுப்பினர்கள்

அதிமேதகு சனாதிபதி சுற்றாடல் அமைச்சருடன் கலந்தாலோசித்து நியமனம் செய்யும் மூன்று உறுப்பினர்களை இந்த அதிகாரசபை கொண்டுள்ளதுடன் அவர்களில் இரண்டு நபர்கள் சுற்றாடல் விடயத்தில் போதிய நிபுணத்துவத்தையும் தகுதிகளையும் கொண்டிருப்பர். ஏனைய உறுப்பினர்களில் ஒருவர் சுற்றாடல் முகாமைத்துவத்தில் போதிய நிருவாக திறன்களையும் அனுபவத்தையும் கொண்டிருக்க வேண்டும்.மூன்று உறுப்பினர்களில் ஒருவர் அதிகாரசபையின் தலைவராக அதிமேதகு சனாதிபதியால் நியமிக்கப்படுகின்றார்.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைவராக திரு. விமல் ரூபசிங்க 2012.11.21 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வருமாறு அதிமேதகு சனாதிபதியால் நியமிக்கப்பட்டதுடன் அதே திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு திரு. சரித ஹேரத் பொதுசன ஊடக தொடர்பாடல் அமைச்சின் செயலாளராக பதவி உயர்வு பெற்றார். திரு.எம்.லலித்த சில்வா மற்றும் திரு. சமன்த சில்வா மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சபை உறுப்பினர்களாக 2010.05.07 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மேதகு சனாதிபதியால் நியமிக்கப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சபையானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

| | | |
|---|---|---|
| திரு.விமல் ரூபசிங்க | - | தலைவர் ம.சு.அ |
| திரு.எம்.லலித்த சில்வா | - | அதிகாரசபையின் உறுப்பினர் |
| திரு.சமன்த சில்வா | - | அதிகாரசபையின் உறுப்பினர் |

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகமான மருத்துவர் சாரங்க அழகப்பெரும, தே.சு.அ வழங்கியுள்ள தத்துவங்களுக்கிணங்க சபையின் செயலாளராக செயற்படுகின்றார். மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் சபையானது சுற்றாடல் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய சில முக்கிய பிரச்சினைகளுக்கு வழிக்காட்டவும் பணிப்புரை வழங்கவும் 11 கூட்டங்களை சபை நடாத்தியுள்ளது.

## 1.5. சுற்றாடல் பேரவை

### 1.5.1. அறிமுகம்

1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 7ஆம் பிரிவின் கீழ், 1998 ஆண்டின் 53 ஆம் இலக்க மற்றும 2000ஆம்ஆண்டின் இலக்க திருத்தங்களுக்கு உட்பட்ட வகையில் சுற்றாடல் பேரவையானது தாபிக்கப்பட்டது.

**சுற்றாடல் பேரவையின் பிரதான வகிபாகம்**

மேற்குறிப்பிட்ட சட்டத்திற்கிணங்க சுற்றாடல் பேரவையின் முக்கிய பணிகளாவன பின்வருமாறு

(அ) மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பொறுப்புக்கள், அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகள் தொடர்பாக பொதுவாக ஆலோசனை வழங்கள்.

(ஆ) அதிகாரசபையால் பேரவைக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட எதும் விடயம் தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு ஆலொசனை வழங்கல்.

**சுற்றாடல் பேரவையின் கட்டமைப்பு**

1998 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க திருத்தம் மற்றும் 2000 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க திருத்தம் ஆகியவற்றால் திருத்தப்பட்டவாறும் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளதன் பிரகாரம், சுற்றாடல் பேரவையானது சுற்றாடல் அமைச்சினால் நியமிக்கப்பட்ட ஒரு தொகை உறுப்பினர்களை கொண்டுள்ளது. 2013 ஆம் ஆண்டு சுற்றாடல் பேரவையால் 11ஆவது அமர்வு பின்வருமாறு நடாத்தப்பட்டது.

**11வது அமர்வு**

கௌரவ சுற்றாடல் அமைச்சரால் சுற்றாடல் பேரவைக்கு பின்வரும் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்.

**பேரவையின் உறுப்பினர்கள்**

| அரசாங்க உறுப்பினர்கள் | பெயர் |
|---|---|
| உள்நாட்டு அரசாங்கம் மற்றும் மாகாணசபை அமைச்சு | திரு.டபிள்யூ.எம்.பி.ஜி.விக்ரமசிங்கே |
| நிதி திட்டமிடல் அமைச்சு | திரு. டபிள்யூ. எம். பீ. ஜீ விக்கிரமசிங்க |
| நிதி திட்டமிடல் அமைச்சு | திரு. சீ. என். விஜேசேகர |
| காணி காணி அபிவிருத்தி அமைச்சு | திருமதி சாந்தி பர்னாந்து |
| கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு | திரு. ஏ. கே செனவிரத்ன |
| நெடுஞ்சாலைகள் வீதி அபிவிருத்தி அமைச்சு | மிஸ். எஸ். ஏ. டி. எஸ். சுபசிங்க |
| தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சு | திரு. பி. எஸ். குணசேகர |
| அரச வளங்கள் தொழில் முயற்ச்சி அபிவிருத்தி அமைச்சு | திருமதி. எம். ஏ. நளினி |
| கூட்டுறவு உள்நாட்டு வர்த்தக அமைச்சு | மிஸ். டி. சீ. என். ஏ. குமாரசிங்க |
| புகையிரத போக்குவரத்து அமைச்சு | திரு. யூ. என் மல்லவராட்சி |
| மின்வலு எரிசக்தி அமைச்சு | மிஸ். இந்திராணி விதானகே |
| மின்வலு எரிசக்தி அமைச்சு | திரு.ஜெ.ஜி.எல்.எஸ். ஜெயவர்தன |
| சுகாதார போசாக்கு அமைச்சு | கலாநிதி ஆனந்த் ஜயலால் |
| வெளிவிவகார அமைச்சு | மிஸ். சுமன்தா ஜயசூரிய |
| கடற்றொழில், நீரகவளமூலகங்கள் அமைச்சு | திரு.இன்திரா ரணசிங்க |
| கமத்தொழில் அபிவிருத்தி அமைச்சு | மிஸ். எல்.யூ.என் சுமனசேகர |
| பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | மிஸ்.என்.பீ.ஹேமா தர்வவர்தன |
| பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | மிஸ்.எம்.ஏ.எஸ். பெரேரா |

| | |
|---|---|
| கல்வி அமைச்சு | மிஸ்.பி.எல்.டி. பாலசூரிய |
| சுற்றாடல் அதிகாரசபை | மிஸ்.ரமணி எல்லேபொல - செயலாளர் |
| சுற்றாடல் அதிகாரசபை | மருத்துவர் சாரங்க அழகப்பெரும - செயலாளர் |

**சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் பற்றிய வல்லுநர்கள்**

| | |
|---|---|
| சனாதிபதி சட்டத்தரனி | திரு. பாலித குமாரசிங்ஹ. தலைவர் |
| பேராதெனிய பல்கலைக்கழகம் | பேராசிரியர். சான்த ஹென்நாயக்க |
| சிரேட்ட விரிவுரையாளர்,களணிப் பல்கலைக்கழகம் | திரு.ஏ.ஜீ.அமரசிங்ஹ |
| சட்டத்தரனி | திரு. ஜகத் குணவர்தன |
| சமூக மற்றும் சுற்றாடல் நிபுணர் | திரு. நன்தசேன மத்துகொட |
| சட்டத்தரனி | திரு. பன்துசேன லியனகே |

**அ.சா நிறுவனங்களிலிருந்து பிரதிநிதிகள்**

| | |
|---|---|
| இலங்கை சுற்றாடல் பத்திரிகையாளர் மன்றும் | கலாநிதி தர்மன் விக்கிரமரட்ன |
| தலைவர் ITPSL | திரு. ஹேமானந்த கே. ஜயசன்தர |
| சட்டத்தரனி | திரு. இந்திக ஜயதிலகஷ |

**கூட்டங்கள்**

| கூட்ட எண் | மாதம் | திகதி |
|---|---|---|
| 237 | ஜனவரி | 21 |
| 238 | பெப்ரவரி | 18 |
| 239 | ஏப்ரல் | 03 |
| 240 | **ஏப்ரல்** | 29 |

**அக்கறைக்குரிய விடயங்கள்**

- ”சிலி” பைகளைக் நாட்டில் கட்டுப்படுத்துவதற்காக வரி விதித்தல்.
- என்.ஈ.ஏ.விற்கு முன்மொழிந்த திருத்தங்கள்
- மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் பங்கேற்புடன் ஓட்டோமொபைல் சேவை நிலையங்களிலிருந்து கழிவுநீர் பரிகரித்தல்.

- ஓட்டோமொபைல் சேவை நிலையங்களுக்காக ஐடிஐயினால் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட உயிரியல் பரிகரிப்பு முறை
- வட மேல் மாகாண சூழல் சட்டம்
- பொல்கொட சுழல் காப்பு பிரதேசத்தின் எல்லை வரையறையினால் எழுந்த பிரச்சினைகள்
- மண் அகழ்வு சார்ந்த அகழ்வு மற்றும் கனிமங்கள் சட்டத்தின் 61ம் பிரிவை அமுல்படுத்துவதில் உள்ள பிரச்சினைகள்
- ஒத்துழைக்கும் திட்டம் (2014-2018); பிலிசரு செயற்றிட்டம்
- முன்னோடி பிரிகேட்களின் நிகழ்ச்சித்திட்டத்திற்கான புது ஐந்தாண்டுத்திட்டம் (2014-2018)
- பிளாஸ்டிக் கழிவு முகாமைத்துவத்திற்கான உற்பத்திப்பவர் பொறுப்பு எண்ணக்கரு

சுற்றாடல் பேரவையின் 11ம் அமர்வின் 3 ஆண்டு காலம் ஜுன் 2013ல் முடிவடைந்தது. 12ம் அமர்விற்கான உறுப்பினர்கள் சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க அமைச்சின் கௌரவ அமைச்சரால் நியமிக்கப்பட்டது.

## 12வது அமர்வு

கௌரவ சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க அமைச்சின் கௌரவஅமைச்சரால் சுற்றாடல் பேரவையின் 12வது அமர்விற்கு பின்வரும் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்.

| பேரவையின் உறுப்பினர்கள் | பெயர் |
|---|---|
| நிதி திட்டமிடல் அமைச்சு | திரு.கே.ஜி.ஆர்.ஜி.ஆர்.விக்ரமவர்தன |
| துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு | திரு.எம்.சி.எல்.∴.பெனாண்டோ |
| பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | திரு. என்.பி. மோண்டி ரணதுங்க |
| தொழிற்றுறைகள் மற்றும் வர்த்தக விடயங்கள் அமைச்சு | திரு. பி. ஏ.கே.டபிள்யூ, எல். பியரட்ன |
| கடற்றொழில், நீரகவளமூலகங்கள் அமைச்சு | திரு. எச்.எம்.கே.ஜே.பி.குணரத்ன |
| மின்வலு எரிசக்தி அமைச்சு | திரு. ஜே.ஜி.எல். சுலக்ஷன ஜெயவர்தன |
| சுகாதார அமைச்சு | முனைவர் சரத் அமுனுகம |
| பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு | திரு. ஜே.கே.பி. குருகுலசூரிய |
| மத்திய சுற்றாடல் அதிகாரசபை | மருத்துவர் சாரங்க அழகப்பெரும - செயலாளர் |

**சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் பற்றிய வல்லுநர்கள்**

தலைவர், விலங்கியல் துறை, கொழும்புப் பல்கலைக்கழகம் முனைவர் நிர்மலி பலவத்த

சிரேட்ட விரிவுரையாளர், கொழும்புப் முனைவர் சுதீர ரன்வல பல்கலைக்கழகம்

| அ.சா நிறுவனங்களிலிருந்து பிரதிநிதிகள் | |
|---|---|
| சட்டத்தரணி | திரு. ஜகத் குணவர்தன - தலைவர் |
| பேரா. டபிள்யூ.எம்.டி.பி.வன்னிநாயக | சிரேஷ்ட கடல் உயிரியலாளர் |
| ஐயூசிஎன் ஸ்ரீ லங்கா | திரு. ஷாமென் விதானகே |
| ஐடிஎன் இன் முன்னாள் தலைவர் | திரு. நியூட்டன் குணரத்ன |
| சிறுகடற்றொழிலாளர் சங்கம் | திரு. டக்ளஸ் திஸ்ஸெர |
| ருக் ரெககன்னோ | திருமதி இந்ராங்கனி சேரசிங்கே |
| சூழல் காப்பு அறக்கட்டளை | திரு. திலக் காரியவாசம் |

**கூட்டங்கள்**

| கூட்ட எண் | மாதம் | திகதி |
|---|---|---|
| 241 | டிசெம்பர் | 19 |

**அக்கறைக்குரிய விடயங்கள்**

- திண்மக் கழிவு முகாமைத்துவம்
- சதுப்புநில சூழல் முறைமைகள்
- வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள சூழல் பிரச்சனைகள்

## 2. ம.சு.அ.யின் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள்

அதன் குறிக்கோள்களை அடைவதற்கு ம.சு.அ அதன் நிறுவன கட்டமைப்பை நான்கு தொழில்நுட்ப பிரிவுகளுக்கு மையப்படுத்தி ஒழுங்கமைத்த விதம் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

- சுற்றாடல் மாசுக் கட்டுப்பாடு (சு.மா.க)
- சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் மதீப்பீடு (சு.மு. மற்றும் ம)
- சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு (சு.க.மற்றும் வி)
- மனித வள அபிவிருத்தி, நிருவாகம் மற்றும் நீதி (மனிதவள மேம்பாடு, நிர்வாகம் மற்றும் நீதி)

இப்பிரிவுகளாவன சுற்றாடல் முகாமைத்துவ விடயத்தில் கனிசமான வருட அனுபவத்தை கொண்டுள்ள கல்வித் தகுதியுடைய மற்றும் தொழிற்சார் ஆற்றல் வாய்ந்த பணியாட்களால் தலைமை வகிக்கப்படுகின்றன.

**சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு பிரிவு.**

சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு பிரிவின் கீழ் மூன்று பிரிவுகள் காணப்படுவதுடன் ஒவ்வொரு பிரிவுடன் தொடர்புடையவை. கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

**சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு பிரிவு**

I. முதலீட்டுச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களுக்கு உடன்பாட்டு செயற்பாட்டை நடைமுறைபடுத்தல். (புதிய தளம் பற்றிய பரிந்துரைகள்- சு.மா.உ)

II. தொலைதொடர்பு கோபுரங்களுக்கான தளம் தொடர்பான அங்கீகாரங்கள்.

III. தொலைதொடர்பு கோபுரங்களுக்கான சு.பா.உ திட்டம்.

IV. கருத்திட்ட அங்கீகார செயற்பாட்டில் பங்கேற்றல்.

V. சுற்றாடல் மாசடைதல்/தொல்லை பற்றிய பொதுமக்கள் புகார்களை தீர்த்துவைத்தல்.

VI. சுற்றாடல் மாசடைதலை கட்டுப்படுத்துவதற்கான தொழில்நுட்ப அனுசரனை வழங்கள்.

VII. நீதிமன்றங்கள் மற்றும் மனித உரிமை ஆணைக்குழு முன்னால் நிபுணத்துவ சாட்சிகளாக ஆஜராதல் மற்றும் பாராளுமன்ற குழுக்கள், நீதிமன்றங்கள் மற்றும் மனித உரிமை ஆணைக்குழு ஆகியவற்றிற்கு தொழில்நுட்ப அறிக்கைகள் வழங்கல்.

VIII. பயனுறுதியான மாசுக் கட்டுப்பாட்டிற்கான புதிய மூலோபாயங்கள்/கருவிகள் அறிமுகம் செய்தல்.

**கழிவு முகாமைத்துவ பிரிவு**

- தீங்கு விளைவிக்கும் கழிவு முகாமைத்துவ சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் அறிமுகம் செய்தலும் நடைமுறைபடுத்தலும்.
- திண்ம கழிவு முகாமைத்துவ கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தொழில்நுட்ப உதவியை வழங்கல்.

- கழிவு முகாமைத்துவ (க.மு) பற்றிய முன்னோடி கருத்திட்டங்களை திட்டமிடலும் நடைமுறைப்படுத்தலும்
- இணக்கப்பாடு பற்றிய வழமையான கண்காணிப்பு
- கழிவு முகாமைத்துவம் பற்றிய தொழில்நுட்ப வழிகாட்டிகளை விருத்தி செய்தல்.
- பன்நாட்டு சுற்றாடல் உடன்படிக்கைகளை நடைமுறைபடுத்தலும் அதன் கடப்பாடுகளும் (பேசல் உடன்படிக்கை மற்றும் ரொட்டர்டாம் உடன்படிக்கை).
- கைத்தொழில் நெருக்கடி முகாமைத்துவம்.
- கைத்தொழில் இரசாயனப் பொருள் முகாமைத்துவம்.
- கழிவு முகாமைத்துவ கருத்திட்டங்கள்/ செயற்பாடுகளுக்கு சுற்றாடல் அங்கீகாரம் வழங்குவதற்கு உதவியளித்தல்.
- சட்ட நடவடிக்கை தொடர்வதற்கு தொழில்நுட்ப உதவியளித்தல்.
- திண்மக்உ கழிவு முகாமைத்துவ முன்னோடி கருத்திட்டங்கள்.
- பொதுமக்கள் புகார்களை கையாளல்.
- கழிவு முகாமைத்துவம் பற்றிய கல்வி மற்றும் விழிப்புணர்வு திட்டங்களை நடாத்துவதற்கு உதவியளித்தல்.
- கழிவு முகாமைத்துவத்துடன் தொடர்புடைய கருத்திட்டங்களை மேற்பார்வை செய்தல்.
- இணக்கப்பாட்டு கண்காணிப்பு
- ஏனைய நிறுவனங்களுக்கு கழிவு முகாமைத்துவத்துடன் தொடர்புடைய செயற்பாடுகள் பற்றிய தொழில்நுட்ப உள்ளீடுகளை வழங்கல்.

**வளித் தரம் மற்றும் ஆய்வுகூட சேவைகள் பிரிவு**

- ஏனைய பிரிவுகளுக்கு/ ம.சு.அ மாகாண அலுவலகங்கள் ஆகியவற்றுக்கு பகுப்பாய்வு சேவைகள் வழங்கல்.
- சுற்றாடல் தரங்கள் பற்றிய இணக்கப்பாட்டு கண்காணிப்பு
- தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் சுற்றுபுற நீர் மற்றும் வளியை கண்காணித்தல்
- வளி, இரைச்சல், அதிர்வு மற்றும் நீர் தரம் ஆகியவற்றுடன் தொடர்புடைய சுற்றாடல் துறையில் ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகளை மேற்கொள்ளல்.
- வளித் தரம், நீர்த் தரம் மற்றும் இரைச்சல் பற்றிய ஒழுங்குவிதிகளை விருத்திசெய்தல்.

## சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் மதிப்பீட்டு பிரிவு.

சுற்றாடல் முகாமைத்துவ மதிப்பீட்டு பிரிவின் கீழ் மூன்று பிரிவுகள் காணப்படுகின்றன.

**சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு பிரிவு (சு.தா.ம)**

- ஆரம்பக்கட்ட சுற்றாடல் பரிசீலனை செயல்முறை (ஆ.சு.ப.செ) நடைமுறையாக்கம்
- சு.தா.ம செயற்பாட்டை நடைமுறைப்படுத்தலும், இணக்கப்பாட்டை உறுதி செய்தலும்.
- சு.தா.ம /ஆ.சு.ப.செ செயற்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறையாக்கல்.
- சு.தா.ம /ஆ.சு.ப.செ செயற்பாடுகள் பற்றிய வழிக்காட்டிகளை உருவாக்கல்.
- SEAசெயற்பாட்டை அறிமுகம் செய்து நடைமுறையாக்கல்

**இயற்கை வள முகாமைத்துவ பிரிவு**

- சு.தா.ம /ஆ.சு.ப.செ அல்லாத கருத்திட்டங்களுக்கு சுற்றாடல் அனுமதி வழங்கல்.
- இணக்கப்பாட்டு கண்காணிப்பை மேற்கொள்ளல்.
- இயற்கை வளங்களின் தரவீழ்ச்சி பற்றிய பொதுமக்கள் புகார்களை விசாரணை செய்தல்.
- இயற்கை வளங்கள் பாதுகாத்தல் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடைமுறையாக்கல்.
- சுற்றாடல் பாதுகாப்பு பகுதிகளை பிரகடனப்படுத்தல்.
- கொள்கை அமுலாக்கல் தொடர்பான வழிகாட்டிகளை வழங்குதல்.

**புவிசார் தகவலியல் பிரிவு (பு.த.பி)**

- புவிசார் தகவலியல் தள தகவல்கள் தயாரித்தல்.
- சுற்றாடல் ரீதியாக உணர்திறனுள்ள பகுதிகளுக்கான முகாமைத்துவ கருத்திட்டங்கள் நடைமுறையாக்கல்.
- மாமவட்ட பக்கவுரு வரைபடங்கள் தயாரித்தல்.
- சுற்றாடல் ஆராய்சியை ஒருங்கிணைப்பதும் அதன் விளைவுகளை பரப்புவதும்

**சுற்றாடல் கல்வி மற்றும் விழப்பூட்டல் பிரிவு.**

- இலக்குக் குழுக்கள் மத்தியில் சுற்றாடல் கல்வி மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் குழுத் தொடர்பாடல் ஊடாக நடாத்துதல்
- தேசிய மற்றும் பிரதேச மட்டங்களில் பயிற்ச்சி செயலமர்வு மற்றும் கண்காட்சிகளை நடாத்துதல்.
- பொதுமக்களுக்கு சுற்றாடல் தகவல்களை வழங்குதல்
- அரசுசாரா நிறுவனங்களுக்கு ஆதரவு வழங்களும் ஆதரவு பெற்றுக் கொள்ளலும்.
- சுற்றாடல் தினத்தை நினைவுகூறல்.
- இயற்கை தள நிலையங்களை தாபித்து நடைமுறைப்படுத்தல்

**தேசிய சுற்றாடல் தகவல் நிலையம்**

- சுற்றாடல் தகவல்களை சேகரிப்பதும் விருத்தி செய்வதும்.
- நூலக வலையமைப்பையும் ஏனைய நூலகங்களையும் ஒருங்கிணைத்தல்.
- அனைத்து வகுப்புகளையும் சார்ந்த தகவல் பயனாளிகளுக்கு நூலக ஆவணங்கள் மற்றும் தகவல் சேவையை வழங்கல்.

**ஒலி ஒளிப் பிரிவு**

- ஒலி ஒளி உபகரண வசதிகளை நிகழ்ச்சிசிநிரல்களுக்கு வழங்கல்.
- ம.சு.அ மற்றும் சு.இ.வ.அ ஆகியவற்றின் தளப்பணிகளுக்கு ஒளிபரப்பு வசதியை வழங்கல்.
- கல்வி மற்றும் விழிப்புணர்வு நோக்கங்களுக்கான வீடியோ உற்பத்தி
- வீடியோ கிரா.ஃ.பிக் காட்சிகளுக்காக வசதிகள் வழங்கல்

**ம.வ.அ, நிருவாகம் மற்றும் நிதிப்பிரிவு**

மனிதவள அபிவிருத்தி, நிர்வாகம் மற்றும் நிதி பிரிவுகள் இதன் கீழ் வருகின்றன.

**மனிதவள அபிவிருத்திபிரிவு**

- ஒட்டுமொத்த மனிதவள திட்டமிடல்
- தேர்வு, ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு
- தூண்டல் பயிற்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள்
- தனிநபர் செயலாற்றுகை மதிப்பீட்டு முறைமை
- தெரிவு செய்யப்பட்ட ஊழியர்களுக்கு (உள்ளூர் மற்றும் சர்வதேசம்) பயிற்ச்சித் தேவைகளை இனங்கண்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.
- ஊழியர்கள் குறைகளை கையாளல்
- ஒழுங்காற்று செயற்பாடுகள்
- மனித வளம் பற்றிய தரவுத்தளம்

**நிருவாகப் பிரிவு**

- கொள்முதல், சுவீகரிப்பு மற்றும் மூலதன சொத்துக்களின் பேணுகை
- சேவை உடன்படிக்கைகளை வழங்குவதும் புதுப்பித்தலும்
- காப்புறுதி வசதிகள் மற்றும் ஏற்பாட்டு ஆதரவு வழங்கல்
- கைத்தொழில் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் நலவோன்புகை
- பொது நிருவாகம்.

**நிதிப் பிரிவு**

- வருடாந்த வரவு செலவுத்திட்டம் தயாரித்தலும் நிதிக்கணக்குகள் சமர்ப்பித்தலும்.
- இருதியான முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் மாதாந்த வரவு செலவுத்திட்ட கட்டுப்பாட்டு அறிக்கைகள் தயாரித்தல்.
- சம்பளம் மற்றும் சம்பளத்துடன் தொடர்புடைய அறிக்கை மற்றும் கொடுப்பனவு தயாரித்தல்.
- கருத்திட்ட கணக்குகள் பேணுகை.
- பயனுறுதியான கொடுப்பணவுகள்.

**சட்டப்பிரிவு**

- தற்போதைய சட்டத்திற்கு (தேசிய சுற்றாடல் சட்டம்) திருத்தங்கள் தயாரித்தல் மற்றும் புதிய சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகள் வரைவுசெய்தல்.
- தே.சு.ச ஏற்பாடுகளை செயற்படுத்தலும் ஒழுங்குவிதிகளை வர்த்தமானியில் பிரசுரித்தலும்.
- தே.சு.ச பிரிவுகள் 12 மற்றும் 24 பீ இன் கீழ் பணிப்புரைகள் விடுத்தல்.
- சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை இறத்துச் செய்தல், இடைநிறுத்தல் மற்றும் நிராகரித்தல்.
- குப்பை கூளம் பற்றிய 235 ஆம் பிரிவு அறிவித்தள்களை வெளியிடல்
- சு.பா.உ நிபந்தனைகளை அங்கீகரித்தல் மற்றும் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகளை பரீசீலனை செய்தல்.
- ம.சு.அ பதிவு செய்த வழக்குகள், மற்றும் ம.சு.அ எதிரான வழக்குகள் ஆகியவை சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராதல்.
- விசாரணைகள் மற்றும் மேல் முறையீட்டு விசாரணைகளுக்கு அமைச்சிற்கு ஒத்துழைப்பு வழங்கல்.
- சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கும் முகமாக ஆவணங்கள் தயாரித்தல்.
- வளவாளர்களாக சுற்றாடல் சட்டம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் நடாத்துவதும் விழிப்புணர்வு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்றலும்.
- சுற்றாடல் தொடர்பான சட்ட விடயங்கள் பற்றிய ஏனைய பிரிவுகளுக்கும் நிறுவனங்களுக்கும் ஆலோசனை வழங்கல்.
- உடன்படிக்கைகள் வரைவும் அங்கீகாரம் வழங்கலும்.
- புகார்களை கையாள்வது தொடர்பில் பொலிஸ் திணைக்களத்துடன் ஒத்துழைத்தல்.

**திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு**

தளநிலை தரவு சேகரிப்பு, தேவையான தரவுகளின் வகை மற்றும் மூலகங்கள், மற்றும் தரவு சேகரிப்பு முறை ஆகியவற்றை விவரித்தலும் தரவு மூலகங்களுடன் இணைத்தலும்.

- ம.சு.அ கூட்டிணைந்த திட்டத்தை வடிவமைத்தல்.

- ஒவ்வொரு கருத்திட்டப் பகுதி, வெளித்தரப்பு நிதியிடல் கருத்திட்டங்கள் மத்திய தர வேலைத்திட்டம் சார்ந்த ஏனைய ஈடுபாடுகள் மற்றும் மத்திய சுற்றாடல் அமைச்சின் கூட்டிணைந்த மற்றும் வருடாந்த திட்டங்களுக்கு செயற்பாட்டுத் திட்டங்களை தயாரித்தல்.
- கண்காணிப்பு திட்டங்களை விருத்தி செய்தல்.
- பிரிவுகளுக்கு இடையிலும் மத்திய பிராந்தியங்களுக்கு இடையில் ஒருங்கிணைப்பை உறுதி செய்தல்.
- மதிப்பீடுகளை ஏற்பாடு செய்தல்.
- பல்வேறு மேற்பார்வை அமைப்புகளுக்கு உதாரணம் சு.தே.வ.அ, அறிக்கையிடுவதற்காக முன்னேற்ற அறிக்கைகள் தயாரித்தல்.
- ம.சு.அ இன் ஆண்டறிக்கை தயாரித்தல்.
- ம.சு.அ இன் செயற்பாடுகள் தொடர்பான முன்னேற்றம் குறித்து சர்வதேச நன்கொடையாளர்கள், தனியார்துறை அமைப்புகள் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள் ஆகியோருக்கு அறிவித்தல்

**புகார் பிரிவு**

- சுற்றாடல் தொடர்பான பிரச்சினைகள், சிக்கல்கள் மற்றும் அச்சுறுத்தல் மற்றும் சுற்றாடல் பாதிப்படைதல் பற்றிய புகார்களை பொதுமக்கள் நிறுவனங்கள்ஆகியவற்றிடமிருந்து பெற்றுக்கொள்ளல்.
- சம்பந்தப்பட்ட அதிகாரசபைகளுக்கு சிக்கல்களை ஆற்றுப்படுத்தி அவர்களுடன் ஒத்துழைத்தல்.

**உள்ளக கணக்காய்வு பிரிவு**

- கணக்கியல் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகள் என்பவற்றை மீளாய்வு செய்யல்.
- நிதிசார் மற்றும் செயற்பாட்டு தகவல்களை பரீசீலனை செய்தல்.
- தாபனத்தின் நிதிசாரா கட்டுப்பாட்டு உள்ளிட்ட பொருளாதாரம் வினைத்திறன், மற்றும் செயற்பாட்டின் பயனுறுதித் தன்மை ஆகியவற்றை மீளாய்வு செய்யல்.
- சட்டங்கள், ஒழுங்குவிதி மற்றும் ஏனைய வெளித்தரப்பு தேவைகளுடான முகாமைத்துவ கொள்கைகள், மற்றும் பணிப்புரைகள் மற்றும் ஏனைய உள்ளக தேவைகளுடன் செயற்பாட்டு இணக்கப்பாட்டை மீளாய்வு செய்தல்.
- முகாமைத்துவத்தால் வேண்டப்பட்ட ஏதும் விடயங்கள் பற்றிய தற்காலிக விசாரணைகளை மேற்கொள்ளல்.

**மாகாண அலுவலகங்கள்**

- ஓரிடத்திற்கு மட்டுப்பட்ட தாக்கங்களையுடைய அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கான ஆரம்ப சுற்றாடல் பரிசீலனை (ஆ.சு.ப).
- அமர்வு கைத்தொழில்களுக்கான சுற்றாடல் பரிந்துரைகள்.

- உள்ளூர் அதிகார சபைகளுக்கு ஒதுக்கப்பட்டவை தவிர்ந்த குறித்துரைத்த செயற்பாடுகளுக்கான சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்கள் தொடர்பான நடைமுறை.
- உள்ளூர் அதிகாரசபைகளுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை ஒருங்கிணைத்து செயற்பாடுகளை கண்காணித்தலும் தேவையேற்படுமிடத்து தொழில்நுட்ப உதவியை வழங்கலும்.
- இயற்கை வள முகாமைத்துவத்திற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தல்.
- ம.சு.அ அங்கீகாரம் தேவைப்படும் ஆ.சு.ப /சு.தா.ம சாரா கருத்திட்டங்கள் (மாணிக்கங்கள் அகழ்வு, காணி நிரப்பல், மரம் வெட்டல் போன்ற) பற்றிய விடயங்களை தீர்ப்பதற்கு உதவியளித்தல்.
- சுற்றாடல் பற்றிய விழிப்புணர்வு மற்றும் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- பிராந்திய கூட்டங்கள் மற்றும் விலாக்களில் ம.சு.அ சார்பில் பங்கேற்று பிரதிநிதித்துவம் வழங்கல்.
- அரசாங்க நிறுவனங்கள், தொண்டர் அமைப்புகள், கைத்தொழிலதிபர்கள், வர்த்தக சமுதாயம், பாடசாலைகள், இளைஞர் அணிகள், அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் ஆகிபோருடன் உப-தேசிய மட்டங்களில் ஒத்துழைத்தல்.
- மாகாண, பிரதேச மற்றும் கிராமிய மட்ட கருத்திட்டங்கள் மற்றும் பாடசாலை கருத்திட்டங்கள் ஆகியவற்றை நடைமுறை செய்தல், மீளாய்வு செய்தல் மற்றும் கண்காணித்தல்.
- விஷேடமாக குறிப்பிடப்பட்டுள்ள பிராந்திய தரவுத் தளத்தை அபிவிருத்தி செய்து இற்றைப்படுத்தி பேணுதல்.
- ம.சு.அ யின் 5 வருட வேலைத்திட்டத்திற்கு உட்பட்ட வகையில் வருடாந்த வேலைத்திட்டத்தை மாகாண அலுவலகங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கு விருத்தி செய்தல்.

**அதிகாரசபையின் செயலாற்றுகை**

2012 ஆம் ஆண்டில் இப்பிரிவுகள் ஒப்வொன்றினாலும் நிறைவேற்றப்பட்ட பணிகள் பின்வரும் பிரிவில் சுருக்கமாக தரப்பட்டுள்ளன.

# 3. சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு பிரிவு

## 3.1. சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு அலகு

சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு பிரிவினது சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு அலகின் (சு.மா.அ) பிரதான பொருப்பானது மாசடைதலை தடுப்பதும் கட்டுப்படுத்துவதுமாகும். இக்குறிக்கோளை எய்தும் வகையில், சு.மா.அ அதன் வழமையான செயற்பாடுகளை தொடர்கின்றதுடன் மாசடைதலை தடுப்பதற்கான புதிய முன்னெடுப்புக்களில் சில பிரதானமாக கைத்தொழில் நடவடிக்கைகளில் இருந்து ஏற்படும் சுற்றாடல் மாசடைதலை குறைத்து கட்டுப்படுத்துகின்றன. தேசிய பசுமை விருதானது நாட்டில் உள்ள கைத்தொழில்கள் மற்றும் நிறுவனங்களின் பசுமை தொடர்பான அனுகுமுறையை ஊக்குவிக்கும் முகமாக 2012 ஆரம்பிக்கப்பட்ட பிரதான செயற்பாடாகும். கைத்தொழில் வெளியேற்றம் மற்றும் வெளிவீச்சுக்கள் என்பவற்றை கட்டுப்படுத்துவதற்கு ம.சு.அ உபயோகிக்கும் பிரதான சட்டக் கருவியானது சுற்றாடல் பாதுகாப்பு உரிமத் (சு.பா.உ) திட்டமாகும்.

இந்த பரிவின் செயற்பாடுகளானது இலகுவாக நடைமுறைப்படுத்தும் வகையில் 4 பிரதான விடயங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவ்விடய பரப்புக்களானது பின்வருமாறு,

அ. ஒழுங்கமைப்பும் கண்காணிப்பும்.

ஆ. கொள்கை விருத்தியாக்கம்.

இ. தொழில்நுட்ப அனுசரனை

ஈ. மாசுக் கட்டுப்பாட்டிற்கான விஷேட நிகழ்ச்சித்திட்டங்கள்.

### 3.1.1. ஒருங்கமைப்பு மற்றும் கண்காணிப்பு

#### 3.1.1.1. சுற்றாடல் பாதுகாப்பு உரிமத் திட்டம் நடைமுறையாக்கம்

சு.மா.க பரிவானது 2008.01.25 ஆம் திகதி வெளியிடப்பட்ட 1533/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகளுக்காக சுற்றாடல் பாதுகாப்பு உரிமத் திட்டத்தை நடைமுறைபடுத்துகின்றது.

குறித்துரைக்கப்பட்ட அனைத்து செயற்பாடுகளும், சுற்றாடல் எந்தளவிற்கு அவற்றால் மாசடைகின்றது என்பதற்கு இணங்க மூன்று வகையாக வர்த்தமானியில் பட்டியலிடப்பட்டுள்ளன. பட்டியலின் பகுதி ‘‘அ’’ 80, உயர் மாசுபடுத்தும் செயற்பாடுகளையும்பகுதி‘‘பி’’ 33 நடுத்தரமாசுபடுத்தும்செயற்பாடுகளையும் மற்றும் பகுதி ‘‘சீ’’ குறைந்த மாசுபடுத்தல் செயற்பாடுகளையும் கொண்டுள்ளன. ‘‘ஏ’’ மற்றும் ‘‘பீ’’ வகையான கைத்தொழில்களுக்கான சு.பா.உ செயற்பாட்டு நடைமுறையாக்கம் ம.சு.அ மாகாண அலுவலகங்களால் நடாத்தப்படுகின்றதுடன் பட்டியல் ‘‘சீ’’ செயற்பாடுகளின் நடைமுறையாக்க தத்துவமானது உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கு (உ.அ) கொடுக்கப்பட்டுள்ளது.

சு.மா.க அலகானது உயர் மாசுபடுத்தல் செயற்பாடுகளுக்கும் (பகுதி ‘‘அ’’) அவற்றின் உரிமம் பற்றிய விபரஙகளுக்கும் தரவுத்தளத்தை பேணுகின்றது.

| வழங்கப்பட்ட சு.பா.உ | 2013 |
|---|---|
| புதிய சு.பா.உ கள் | 983 |
| புதுப்பிக்கப்பட்ட சு.பா.உகள் | 1753 |

**3.1.1.2. முதலீட்டுச் சபைக்கு (மு.ச) இணக்கப்பாட்டை வழங்கள்**

மு.ச சட்டத்தின் பிரிவு 17 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள மற்றும் பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடுகளுக்கு சு.பா.உ வழங்குவதற்கான அதிகாரத்தை மு.ச கொண்டுள்ளது. சு.பா.உ வழங்குவதற்கு முன்னர் ம.சு.அ யிடமிருந்து இணக்கப்பாட்டை .பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. எனவே, மு.ச யால் சு.பா.உ திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக மு.ச கைத்தொழில்களுக்கு இணக்கப்பாட்டை வழங்குவதில் முக்கியமான வகிபாகமொன்றை சு.மா.க.அ ஏற்கவேண்டியுள்ளது.

**சுற்றாடல் கட்டுப்பாட்டுபிரிவால்சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்திற்காகவும், முதலீட்டுச் சபையில் பதிவுசெய்யப்பட்ட செயற்பாடுகளுக்கான புதிய தளங்களுக்கும் வழங்கப்பட்ட இணக்கப்பாடு.**

| வழங்கப்பட்ட இணக்கப்பாடுகள் | 2013 |
|---|---|
| புதிய சு.பா.உ கள் | 70 |
| புதுப்பித்த சு.பா.உகள் | 236 |
| புதய தள பரிந்துரைகள் ஏனைய கருத்திட்டங்கள் | 95 |
| ரேலிகொம் கோபுரங்களுக்கான புதிய தள பரிந்துரைகள் | 50 |
| ரேலிகொம் கோபுரங்களுக்கான சு.பா.உ | 33 |

**3.1.1.3. புகார்கள் பற்றிய விசாரணை மற்றும் கண்காணிப்பு**

பொது மக்களால் முன்வைக்கப்பட்ட புகார்கள் பற்றிய விசாரணை, கைத்தொழில் நடவடிக்கைகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மாசுக் கட்டுப்பாட்டு முறைமைகள் பற்றிய மதிப்பீடு (கழிவுநீர் பகுப்பாய்வு அறிக்கைகளால், இரைச்சல் மற்றும் அதிர்வு அளவீடுகள் போன்ற) என்பனவும் சு.மா.க **பிரிவால்** மேற்கொள்ளப்படுகின்றன.

ம.சு.அ யின் புகார் பிரிவு, தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகத்தால் நேரடியாக அனுப்பப்பட்டதும், முதலீட்டுச் சபையால் அங்கீகரிக்கப்பட்டதுமான கைத்தொழிற் நடவடிக்கைகள் மற்றும் ஏனைய புகார்கள் பற்றிய விசாரணைகளை ம.சு.அ தொடர்ந்தும் முன்னெடுத்தது. 2013 ஆம் ஆண்டில், மு.ச அங்கீகரித்த கைத்தொழிற்சாலைகளின் நடவடிக்கைகள் பற்றிய 70 புகார்கள் கிடைக்கப் பெற்று அவற்றுள் 37ற்கு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பரிகார நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் ஏனையவை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன. 85 மு.ச. அல்லாத புகார்கள் கிடைக்கப்பெற்றதுடன் 33 புகார்கள் விசாரணைப்படுத்தப் பட்டதுடன் மற்றையவை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**3.1.1.4ஏற்றுமதி பதனிடல் வலயங்களுக்கான (ஏ.ப.வ) சுற்றாடல் பாதுகாப்பு உரிமம்.**

சு.தா.ம செயற்பாட்டின் கீழ் அங்கீகரிக்கப்பட்டதும் முதலீட்டுச் சபையால் முகாமைத்துவம் செய்யப்படுவதுமான 7 ஏற்றுமதி பதனிடல் வலயங்கள் காணப்படுகின்றன. எனவே, ஏ.ப.வகளில் இருந்து ஏற்படும் சுற்றாடல் மாசடைதலை கட்டுப்பாட்டிற்குள் வைக்க வேண்டிய பொறுப்பு மத்திய சுற்றாடல்

அதிகார சபையை சார்ந்தது. இக் கைத்தொழில் வலையங்கள் சுற்றாடலுக்கு வெளியிடும் கழிவுகள் மற்றும் வீச்சுக்களை குறைக்கவும் கட்டுப்படுத்தவும் சு.பா.உ நடைமுறையை சு.மா.க பிரிவு முன்னெடுக்கின்றது. இக்கைத்தொழில் வலயங்களில் மாசுக்கட்டுப்பாட்டு செயல்முறையை செயற்படுத்துவதற்கு முறையான கண்காணிப்பும் அவசியமாகின்றது.

2013 ஆம் ஆண்டில் வதுபிடிவலமற்றும் கட்டுநாயக்க கைத்தொழில் வலயங்களை சு.மா.க பிரிவு பரீசீலணை செய்துள்ளது.

### 3.1.2. கொள்கை விருத்தியாக்கம்.

#### 3.1.2.1குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கான புது விதிமுறை அமைத்தல்

2008.01.25 அன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைப் பட்டியல் இல. 1533.்.16, 2013 காலத்தில், மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டு திருத்தப்பட்டது.

மாசடைதல் பாரத்துடன் பிராந்தியங்களில் வளர்ந்துவரும் மற்றும் பொது தொழிற்றுறைகளை கருத்தில் கொண்டு மாகாண அலுவலகங்களின் அலுவலர்களுடன் ஒரு கூட்டங்களின் தொடர் நடைபெற்றது. குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைப் பட்டியலை மீளாய்வுக்கு உட்படுத்தலானது 2013ல் நிறைவடைந்தது.

#### 3.1.2.2கழிவுகள் வெளியேற்ற தரங்கள் பற்றிய ஒழுங்குவிதிக்கான புதிய திருத்தம்.

மக்களின் பயன்தரும் பயன்பாட்டிற்கு நீர் நிலைகளின் தரத்தை பேணுதல் மிகவும் அவசியமாகின்றது. ஆனால், தொழிற்சாலை கழிவுகளை அகற்றும் நடைமுறையானது, அதிகரித்து வருவதுடன் நீர் வளங்களும் சீர்குலைகின்றது.

கைத்தொழில் கழிவுகளின் வெளியேற்றங்கள் மாசுக் கட்டுப்பாட்டு தரங்கள் மற்றும் அளவைகள் என்பன விதிக்கப்பட்டு சு.பா.உ ஊடாக சீராக்கப்படுகின்றன.

பல்வேறு வெளியேற்று முறைகளின் கீழ் கழிவு வெளியேற்றுவதற்கான தரங்களை ம.சு.அ வரத்தமானி மூலம் வெயிட்டுள்ளது. நடைமுறையிலுள்ள 2008.02.01ஆம் திகதிய 1534/16ஆம் இலக்க ஒழுங்குவிதியை நடைமுறைப்படுத்துவதில் பல சிக்கல்கள் இனங்காணப்பட்டுள்ளன. இச்சிக்கள்களையும் கைத்தொழிற்சாலைகள் மூலம் நீர்வளங்கள் மாசடைதலை கட்டுப்படுத்தவும் நீர் மற்றும் வேறு சம்பந்தப்பட்ட துறைகளைச் சேர்ந்த நிபுணர்களுடன் தற்போதைய தரங்களில் உள்ள குறைபாடுகளை மீளாய்வு செய்யும் முகமாக ம.சு.அ மாநாடொன்றை நடாத்தியது.

மேலதிகமாக சேர்க்கப்பட்ட கழிவு வெளியேற்று முறைகளே தற்போதைய ஒழுங்குவிதியுடன் ஒப்பிடுகையில் முன்மொழியப்பட்ட தரங்களிலுள்ள பிரதான அம்சங்களாகவுள்ளன,. மீளாய்வு செயற்பாட்டின் போது பங்குதாரர்களுக்கு இடையே இடம் பெற்ற தொடர் பேச்சுவார்த்தைகள் காரணமாக ஆய்வுகூட சுற்றாடலில் காணப்படும் நடைமுறை சிரமங்கள் குறைக்கப்பட்டன.

### 3.1.3. தொழில்நுட்ப அனுசரனை

#### 3.1.3.1. ஏற்றுமதி பதனிடல் வலயங்களுக்கு வெளியே உயர் மற்றும் நடுத்தர மாசுப்படுத்தும் கைத்தொழில்களின் அமைவிடம் மற்றும் கைத்தொழில் பேட்டைகள் (உ மற்றும் ந குழு) தொடர்பாக தீர்மாணமெடுக்கும் குழு

கைத்தொழில் பேட்டைகள் மற்றும் ஏற்றுமதி பதனிடல் வலயங்களுக்கு வெளியில் உயர் மற்றும் நடுத்தர மாசுபடுத்தும் கைத்தொழில் அமைவிடங்களை தீர்மானிப்பதற்காக இக்குழு அமைக்கப்பட்டது.

இது சு.மா.க பிரிவால் தாபிக்கப்பட்ட தீர்மானம் மேற்கொள்ளும் முக்கிய குழுக்களில் ஒன்றாகும். இக் குழு மு.ச, தேசிய நீர் விநியோக வடிகாலமைப்புச் சபை, கைத்தொழில் அமைச்சு, நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் ம.சு.அ ஆகியவற்றின் உறுப்பினர்களை கொண்டுள்ளது.

கொழும்பு பெரும்பாக பகுதிக்கான நீர் தேவையின் கிட்டத்தட்ட 75% தை களனி ஆறு அம்பத்தலேயில் இருந்து பெற்று விநியோகிப்பதால், விஷேடமாக களனி ஆற்றில் சேரும் கைத்தொழில் கழிவுகளால் ஏற்படும் நீர் மாசடைதலை குறைப்பதே இக்குழுவின் பிரதான குறிக்கோளாகவுள்ளது. அதற்கு மேலதிகமாக உயர்ந்த அளவு கழிவு நீரை தோற்றுவிக்கும் களனி ஆற்று வடிநிலத்திற்கு வெளியில் உயர் மற்றும் நடுத்தர மாசுபடுத்தல் கைத்தொழில்களை அமைப்பது பற்றிய முன்மொழிவுகளை மதிப்பீடு செய்வதற்கான தொழில்நுட்ப வெளியீடுகளையும் இக் குழு வழங்குகின்றது. 2013ம் ஆண்டில், 14 கூட்டங்கள் நடைபெற்றன, 58 செயற்றிட்ட அறிக்கைகள் மதிப்பிடப்பட்டன, 35 செயற்றிட்டங்கள் பரிந்துரைக்கப்பட்டன, 4 செயற்றிட்டங்கள் நிராகரிக்கப்பட்டன மற்றும் 19 செயற்றிட்டங்கள் வேறுபடுத்தப்பட்டன.

**3.1.3.2 சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு செயற்பாட்டிற்கான தொழில்நுட்ப உதவி**

சு.தா.ம மற்றும் ஆ.சு.மசெயற்பாட்டின் மாசுக் கட்டுப்பாட்டு அம்சங்களை மதிப்பீடு செய்வதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட சு.மா.க பிரிவின் உத்தியோகத்தர்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுக்களின் உறுப்பினர்களாக கடமையாற்றுகின்றனர். 2013 ஆம் ஆண்டில்சு.மா.க பிரிவின் உத்தியோகத்தர்கள் மாசுக்கட்டுப்பாட்டில் தொழில்நுட்ப நிபுணத்துவத்தை வழங்கும் முகமாக19 தொழில்நுட்ப குழுக்களில் பங்குபற்றியதுடன்,4 கூட்டு பரீசீலனைகளும் மேற்கொள்ளப்பட்டன.

**3.1.3.3. கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு தொழில்நுட்ப அனுசரனை வழங்கல்.**

**(அ)சுற்றாடல் பகுப்பாய்வு ஆய்வு கூட்டங்கள் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டு ஆலோசனை சேவைகளின் வருடாந்த பதிவு.**

கைத்தொழில் சமூகத்திற்கு உதவியளிக்கும் விதமாக சுற்றாடல் ஆலோசகர்கள் மற்றும் மாசுக்கட்டுப்பாட்டு பகுப்பாய்வு ஆய்வுகூடங்கள் ஆகியவற்றுக்கு வருடாந்த பதிவுத்திட்ட மொன்றை சு.மா.க பிரிவு ஆரம்பித்துள்ளது.

இந்த துணிகர முயற்சியின் பிரதான நோக்கம் யாதெனில் நாடளாவிய ரீதியில் தொழிலதிபர்களுக்கு குறைந்த செலவில், உண்மையான சேவையை வழங்கி அவர்களை மாசுக்கட்டுப்பாடு மற்றும் இணக்கப்பாட்டு கண்காணிப்பு செயற்பாடுகளில் ஊக்குவிப்பதாகும். அ்தே வேளையில், ஆலோசகர்களும் ஆய்வுகூடங்களும் தமது குறைபாடுகளை சீர்செய்யவும் அறிவை இற்றைப்படுத்தி கிடைக்கக்கூடியதாகவுள்ள சிறந்த போட்டித்தன்மையான சேவையை வழங்கவும் இயலுமாக இருப்பர்.

33ஆய்வுகூடங்களும்45ஆலொசகர்களும் பதிவுக்காக விண்ணப்பித்திருந்தனர். திட்ட அளவைகளின் அடிப்படையில் பரிசீலனை மற்றும் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் 29 ஆய்வுகூடங்களும் 39 ஆலோசகர்களும் ம.சு.அ யால் 2013 ஆம் ஆண்டின் பட்டியலுக்கு இனங்காணப்பட்ட ஆய்வுகூடங்களாகவும் ஆலோசகர்களாகவும் பதியப்பட்டனர். இப்பட்டியல் ம.சு.அ இணயத்தளத்திற்கு பதிவிறக்கம் செய்யப்பட்டதுடன் அச்சிடப்பட்ட பட்டியலும் காணப்படுகின்றது.

2014 ஆம் ஆண்டில் பதிவுகளுக்காக ஆங்கிலம், சிங்களம், மற்றும் தமிழ் மொழிகளில் விண்ணப்பம் கோரும் 03 விளம்பரங்கள் 2013 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டு பகுதியில் பூர்த்தியாக்கப்பட்டது.

**(ஆ) தேர்ச்சி பரீட்சார்ந்த நிகழ்ச்சித்திட்டம்.**

மத்திய சுற்றாடல் அதிகார சபையானது இலங்கை பரிசோதனை ஆய்வுகூடங்களுக்கான சங்கத்தின் ஒத்துழைப்புடன் தேர்ச்சி பரீட்சார்ந்த நிகழ்ச்சித் திட்டமொன்றை ஒழுங்கமைத்துள்ளது, இந் நிகழ்ச்சித் திட்டமானது வருடாந்த ஆய்வுகூட பதிவில் ஒரு பகுதியாகவுள்ளதுடன், ம.சு.அயின் பதிவுசெய்யப்பட்ட ஆய்வுகூடங்கள் மத்தியில் அங்கீகாரத்தையும், ஒத்திசைவையும் கொண்டுவரும் முகமாக ஆரம்பிக்கப்பட்டது.இந் நிகழ்ச்சித் திட்டமானது பங்குபற்றும் ஆய்வுகூடங்களின் தொடர்ச்சியான மேம்பாட்டிற்கு வழி சமைக்கின்றதுடன் கைத்தொழில் சமூகத்திற்கு உண்மையானதும் தகுதிவாய்ந்ததும் வினைத்திறன்மிக்கதுமான சேவையை வழங்குவதற்கும் வழிமுறையை வழங்குகின்றது.

இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கு 10 பதிவு செய்யப்பட்ட ஆய்வுகூடங்கள் தெரிவு செய்யப்பட்டதுடன் திட்ட அளவைகளின் ஒழுங்கமைப்பும் தயாரிப்பும் 2013 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் பூர்த்தியாக்கப்பட்டன.

சு.மா.க பிரிவு மற்றும் ம.சு.அ ஆய்வுகூடங்கள் இலங்கை பரிசோதனை ஆய்வு கூடங்களுக்கான சங்கத்தின் வழிகாட்டலின் கீழ் இந் நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்தியதுடன் இவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்களை ஆண்டுதோறும் நடாத்துவதற்கு எதிர்பார்க்கின்றது.

**3.1.3.4. ஆரோக்கியமான வாழ்விற்கான சுற்றாடல் நேய கால்நடை பண்ணை பற்றிய நிகழ்ச்சிநிரல்.**

கால்நடை பண்ணைகளால் சுற்றாடலுக்கு ஏற்படும் சுற்றாடல் பிரச்சினைகள் நாளாந்தம் அதிகரித்து வருகின்றன. அநேகமான சிறிய அளவு கால்நடைப் பண்ணைகள் வதிவிடங்களுக்கு நெருக்கமாக அமைந்துள்ளதுடன் குடிநீர் வளங்கள் துர்மனம் மற்றும் தூசு உடையதாகவும் மாசடைவதாகவும் புகார்கள் கிடைக்கின்றன.

இந்த பிரச்சினைகளை சமாளிக்கவும் சுற்றாடல் சிநேக பூர்வ கால்நடை பண்ணையை ஊக்குவிக்கவும், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சு.மா.க பிரிவு கால்நடை வளர்ப்பு கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சு, கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், சுகாதார அமைச்சு மற்றும் உள்ளுராட்சி மாகாண சபைகள் அமைச்சு ஆகியவற்றின் உதவியுடன் தேசிய மட்ட ஆலோசனை குழுவொன்றை தாபித்துள்ளது.இக்குழவானது கொள்கை பரிந்துரைகளுக்கு பொறுப்பாக உள்ளதுடன் இயலுமானவரை உயர்ந்த சுற்றாடல் தரங்கள், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார அம்சங்களை பேணும் வகையில் கால்நடை பண்ணை கைத்தொழில், சுற்றாடல் மற்றும் சுகாதாரம் தொழிற்படுவதை உறுதி செய்கின்றது.

தேசிய மட்ட ஆலோசனைக் குழவானது பன்றி, ஆடு, கோழி மற்றும் கால்நடை வளர்ப்பு பற்றிய தற்போதைய வழிமுறைகள் மீளாய்வு செய்யப்பட வேண்டியதன் அவசியத்தை இனங்கண்டுள்ளது. இவ் வழிமுறைகள் காலாவதியானவை ஆதலால், மேலதிக தகவல்கள் மற்றும் திருத்தங்கள் கூட்டிணைக்கப்படல் வேண்டும்.2013 ஆம் ஆண்டில், சுற்றாடல் சிநேகபூர்வ பண்ணைத் தொழிலை தாபிப்பதற்கான வழிமுறைகள் வரைவு பூர்த்தியாக்கப்பட்டதுடன் வழிகாட்டி நூல்கள் அச்சிடத் தயாராக உள்ளன.

**3.1.3.5.சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிக்களுக்கான இணக்கப்பாட்டு உதவி நிலையங்கள் தாபித்தல்.**

2013 ஆம் ஆண்டு நடுத்தர மற்றும் சிறிய அளவு கைத்தொழில்களுக்கு உதவும் வகையில் இணக்கப்பாட்டு உதவி நிலையங்கள் தாபித்தல் பற்றி சு.மா.க பிரிவால் பரீசீலனை செய்யப்பட்டது.

பல சுற்று பேச்சுவார்த்தைகள் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் (கை.தொ.நி) கைத்தொழில் அபிவிருத்தி வங்கி (கை.அ.வ) நெரெட், தேசிய தூய்மை உற்பத்தி நிலையம் (தே.தூ.உ.நி) ஸ்விட்ச் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கைத்தொழில் வாணிப அமைச்சு ஆகியவற்றுடன் இடம்பெற்றது. கைத்தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு மற்றும் வெளிவீச்சுக்கள் ஆகியவற்றிற்கு பரிகாரம் காணும் வகையில் குறைந்த செலவிலான தொழில்நுட்பங்களை காணுமாறு பணியொன்று கை.தொ.நி, நெரெட் மற்றும் கை.அ.வ ஆகியவற்றிடம் ஒப்படைக்கப்பட்டது. கைத்தொழிலதிபர்களுக்கான விழிப்புணர்வு மற்றும் இணங்காணப்பட்ட முறைமைகளின் அறிமுகம் ஆகியவை மத்திய சுற்றாடல் அதிகார சபையால் மேற்கொள்ளப்படும். சேவை நிலையங்கள் மற்றும் உலோக நொறுக்கிகளுக்குமான குறைந்த செலவிலான கழிவு கையாளும் முறைமை ஒன்றை கை.தொ.நி விருத்தி செய்துள்ளது.

2013 ஆம் ஆண்டு,சேவை நிலையங்களை நடாத்தும் கைத்தொழில் சமூகத்திற்கு அபிவிருத்தி செய்யப்பட்ட முறைமையை ஒன்றை அறிமுகம் செய்யும் முகமாக வாகனச் சேவை நிலையங்களிலிருந்து வருகை தந்த 120 பங்கேற்பாளர்களுடன் விழிப்புணர்வு செயலமர்வுகள்2 நடாத்தப்பட்டன. 147 சேவை நிலைய உரிமையாளர்கள் பங்குபற்றினர்.

### 3.1.4. மாசுக்கட்டுப்பாட்டு தொடர்பான விஷேட நிகழ்ச்சி நிரல்

#### 3.1.4.1. இரசாயன விபத்து தடுப்பு மற்றும் தயார்நிலை நிகழ்ச்சித்திட்டம்.

"இலங்கைக்கான இரசாயன விபத்து தடுப்பு மற்றும் தயார்நிலை நிகழ்ச்சித் திட்டம்" (காப் - எஸ்.எல்) ஆனது ஜுலை 2012 ல் இருந்து நவம்பர் 2013 வரை மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சு.மா.க. பிரிவால் முன்னெடுக்கப்பட்டது. இது சர்வதேச இரசாயன முகாமைத்துவதிற்கான உத்திபூர்வ அணுகலின் விரைவு ஆரம்ப நிகழ்ச்சி அறக்கட்டளை நிதியத்தினால் நிதியளிப்புச் செய்யப்பட்டது. யு.என்.இ.பி ஆனது செயற்படுத்தும் முகவரமைப்பு ஆகவும் ஆசிய பேரிடர் தயார்நிலை மையம் ஆனது தொழினுட்ப ஆதரவு பங்காளராகவும் செயற்பட்டன.

இரசாயன விபத்து தடுப்பு மற்றும் தயார்நிலைக்கான முறைமைகளை மேம்படுத்தல் சார்பாக இலங்கையில் சம்பந்தப்பட்ட நிறுவகங்களின் கொள்ளளவை கட்டியெழுப்பல் இத்திட்டத்தின் நோக்கமாகும். இரசாயன விபத்து அபாயம் சார் நாட்டு நிலமையை அடையாளம் காணல், இரசாயன விபத்து அபாயத்திற்கான மேம்படுத்தப்பட்ட முகாமைக்குரிய தேவைகள் முன்னுரிமைகளை வரையறுத்தல் ஆகியவற்றை இந்த செயற்றிட்டம் உள்ளடக்கியது. இந்த செயற்றிட்டத்தின் வெளிப்பாடுகளாக இரசாயன விபத்து சார் நாட்டு நிலமை அறிக்கை, தேவை மதிப்பீடு மற்றும் காப் அமுல்ப்படுத்துகைக்கான வீதி வரைபடம் ஆகியவை உள்ளன.

முதலாவது பயிற்சிப் பாசறை - பிடிடி கிசி நிறுவனம், மப் டா ஃபுட் தொழிற்றுறை எஸ்டேட், தாய்லாந்து, 08 மே 2013



இரண்டாம் பயிற்சிப் பாசறை, கொழும்பு, இலங்கை, 16-18 செப்டெம்பர் 2013

இட வருகைகள் (பயிற்சிப் பாசறைகள்) –



முதலாவது பயிற்சிப் பாசறை - பிடிடி கிசி நிறுவனம், மப் டா ∴புட் தொழிற்றுறை எஸ்டேட், தாய்லாந்து, 08 மே 2013

பின்வரும் ரோட்மப்பில் உள்ளதன்படி காப் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒட்டுமொத்த பார்வையானது தீர்மானிக்கப்பட்டுள்ளது: பூச்சிய நிகழ்வுச் சூழலில் வாழ்வின் தரத்தை அதிகரிப்பதற்காக இரசாயனங்களின் பாதுகாப்பான பாவனை. **யு.என்.இ.பி. ஆல் செயற்படுத்தப்பட்ட பிற காப் செயற்றிட்டங்களின் மத்தியில் இலங்கைக்கான செயற்றிட்டமே சிறந்ததாக அறிவிக்கப்பட்டது.**

**3.1.4.2. மேல்மாகாண தொழிற்றுறைகளுக்கான சூழல், வேலைச் சுகாதாரம், இரசாயன அபாய முகாமைத்துவம் மற்றும் பெருநிறுவன சமூகப் பொறுப்பு ஆகியவற்றின் மீதான விழிப்புணர்வு பட்டறை**

பத்தரமுல்லையில் உள்ள மத்திய சுற்றாடல் அதிகாரசபையில் 28 நவம்பர் 2013 அன்று சுற்றாடல் மாசடைதை கட்டுப்பாட்டு பிரிவால் ஒரு விழிப்புணர்வுப் பட்டறை ஒழுங்குசெய்யப்பட்டது.இந்த பட்டறையானது, மேல்மாகாணத்தின் 125 தொழிற்றுறைகளுக்காக சூழலுக்கு சம்பந்தப்பட்ட தொனிப்பொருட்களான வேலைச் சுகாதாரம், இரசாயன அபாய முகாமைத்துவம் மற்றும் பெருநிறுவன சமூகப் பொறுப்பு ஆகியவற்றின் கீழ் ஒழுங்குசெய்யப்பட்டது. 125 தொழிற்றுறைகளின் பிரதம நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் முகாமையாளர் தர அலுவலர்களுடன் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அலுவலர்களும் பங்குபற்றினர்.

இதன் வளவாளர்களாக, பொது மற்றும் தனியார் நிறுவனங்களில் இருந்து, இரசாயனப் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் சூழல் மாசடைதல் கட்டுப்பாடு ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள உயர் அனுபவம் கொண்ட அலுவலர்கள் பங்குபற்றினர்.

இரசாயன முகாமைத்துவம், சூழல் இணக்கம், தொழிற்றுறைகளில் கையாளப்படும் இரசாயனங்கள் சார் வேலைச் சுகாதாரம் மற்றும் காப்பு, இரசாயன விபத்து தடுப்பு மற்றும் தயார்நிலை, இயந்திரச் செயற்பாட்டின் காணாத பக்கம் மற்றும் காப்பு, சூழலில் நேர்மறையான மாற்றத்திற்கான பெருநிறுவன சமூகப் பொறுப்பு ஆகியன சார்ந்த விடயப்பரப்புகள் பற்றிய முக்கிய கருத்துக்கள் கலந்துரையாடப்பட்டன.இலங்கை முழுவதும் இது போன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஒழுங்கமைக்க சு.மா.க. அலகு காத்திருக்கிறது.



**மேல்மாகாண தொழிற்றுறைகளுக்கான விழிப்புணர்வு பட்டறை**

**3.1.3.3. தேசிய பசுமை விருதுகள் திட்டம்.**

மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் சுற்றாடல் அக்கறைகள் தொடர்பாக நடாத்தப்பட்ட ஒரேயொரு விருதுத் திட்டமே“தேசிய பசுமை விருதுகள்”திட்டமாகும். சுற்றாடலுக்கு உகந்த முறையில் இயங்கும் அரசாங்க மற்றும் தனியார்துறை நிறுவனங்களை இனங்கண்டு விளம்பரம் செய்யும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டதே இத்திட்டமாகும்.

இந்த பசுமை விருது திட்டமானது இலங்கை சுற்றுச்சூழலில் மாசுக் கட்டுப்பாட்டையும் பசுமையாக்கத்தையும் ஏற்படுத்தும் சிறந்த நடைமுறைச் சாத்தியமான தெரிவுகளை பிரயோகிப்பதற்கான போட்டித் தன்மையான மன்றத்தை வெவ்வேறு கைத்தொழில் துறைகளுக்கு இடையில் தோற்றுவிக்கின்றது.

இத்திட்டத்தின் இலக்கானது யாதெனில் கண்காணிப்பு சார்ந்த மாசுக் கட்டுப்பாட்டையும், தரங்கள் ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் இணக்கப்பாடான சுற்றாடல் முகாமைத்துவ முறைமையையும் கைத்தொழிலதிபர்கள் மற்றும் சேவை வழங்குவோர் மத்தியில் ஊக்குவித்து மேம்படுத்தி சுற்றாடல் சிநேகபூர்வ செயற்பாடுகள் மூலம் தூய்மையானதும் பசுமையானதுமான சுற்றாடலை அடைவதற்கு நிலையானதன்மையை பேணுவதாகும். “தேசிய பசுமை விருதுகள் 2013 ற்கான விண்ணப்பங்கள்”, பாரிய கைத்தொழில் துறைகள்,உள்ளூராட்சி அதிகார சபைகள், கருத்திட்டங்கள், பாடசாலைகள் உட்பட்ட 16 பிரிவுகளின் கீழ் கோரப்பட்டன. மொத்தமாக 190 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்று புகழ்பெற்ற நீதிபதிகள் குழாத்தின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டன. தேவையேற்பட்ட பட்சத்தில் உண்மை நிலையை கண்டறிவதற்காக பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன. 190 விண்ணப்பங்களில் இருந்து

கள ஆய்வு உள்ளிட்ட, மேலதிக மதிப்பீடுகள் வெற்றியாளர்களை தேர்வு செய்ய நடைபெற்று, அவர்களுக்கு 12 மே 2014 அன்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற திட்டமிடப்படுள்ள வைபவத்தில் அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களால் விருதளிக்கப்படும்.

### 3.1.5 பயிற்சிகள்: பயிற்சிப்பட்டறை, கூட்டங்கள் மற்றும் முன்னிலைப்படுத்தல்

இப்பிரிவின் பணிகள் மற்றும் பொறுப்புக்களை பயனுறுதியாக நடைமுறைபடுத்துவதற்கு பயிற்சியானது அதி முக்கியமான அங்கமாக விளங்குகின்றது.

பின்வரும் பயிற்சிகள், பயிற்சிப்பட்டறை, கூட்டங்கள் மற்றும் முன்னிலைப்படுத்தல்களை சு.மா.க பிரிவு நடாத்தியது.

- ம.சு.அ. அலுவலர்கள் உள்ளிட்ட உ. அலுவலர்களுக்கான சுபாஉ முறைமை அமுல்படுத்தல் உத்திகள் பற்றிய ஒரு பட்டறை 2013ல் கொழும்பில் நடைபெற்றது.
- தொழிற்றுறைச் சமூகம் மற்றும் பொதுமக்களுக்கான மாசடைதல் சம்பந்தபட்ட விடயங்களில் 8 வெளிப்படுத்தல்கள் அல்லது விரிவுரைகள் 2013ல் நடைபெற்றன.
- சு.மா.க. அலகு ஆனது, மாசடைதல் கட்டுப்பாடு சார் 24 கூட்டங்கள் மற்றும் 7 பட்டறைகளில் வருகைதந்துள்ளது.

**முன்னேற்றத்தின் சுருக்கம். 2013 - சு.மா.க. அலகு**

| செயற்பாடு | முன்னேற்றம் | | குறிப்புகள் |
|---|---|---|---|
| | பௌதீக | நிதிசார் | |
| **1. சுற்றாடல் பாதுகாப்பு உரிம முறைமை நடைமுறையாக்கம் - மு.ச** | | 2013 ஆம் ஆண்டில் சு.மா.க பிரிவுகளுக்கான மொத்த வரவு செலவு திட்ட ஒதுக்கீடு ரூபாய். 1710000.00/=<br><br>இவ் ஒதுக்கீட்டில் மொத்த ஒதுக்கீட்டைசு.மா.க பிரிவு பிரயோகித்தது. | |
| கைத்தொழில்களுக்கான புதிய அமைவிட பரிந்துரைகள் | 92 | | முதலீட்டுச் சபையால் செயலாக்க செலவுகள் ஏற்கப்பட்டன |
| டேலிகொம்மிற்கான புதிய அமைவிட பரிந்துரைகள் | 50 | | |
| புதிய கைத்தொழிலுக்கான இணக்கப்பாடு | 70 | | |
| சு.பா.உ புதுப்பித்தலுக்கான இணக்கப்பாடு | 236 | | |
| **2. சுற்றாடல் பாதுகாப்பு உரிம முறைமை நடைமுறையாக்கம் - மு.சஅல்லாதது** | | | |
| டெலிகொம் டவர்களுக்கான ஆய்வு | 33 | | |
| புகார்கள்<br>மு.ச அல்லாததுபெற்றவை<br>ஆராய்ந்தவை<br>குறித்துரைக்கப்பட்டவை<br><br>மு.சபெற்றவை<br>ஆராய்ந்தவை<br>குறித்துரைக்கப்பட்டவை | <br>85<br>22<br>63<br><br>70<br>37<br>33 | | |
| **3. மீளாய்வும்இற்றைபடுத்தலும்** | | | |
| ஆய்வுக்கூடங்களுக்கான விண்ணப்பங்கள் பெறல் | 33 | | |
| ஆலோசகர்களுக்காண விண்ணப்பங்கள் பெறல் | 45 | | |
| தெரிவு செய்யப்பட்ட ஆய்வுக்கூடங்கள் | 29 | | |
| தெரிவு செய்யப்பட்ட ஆலோசகர்கள் | 39 | | |
| **7. ம.மு குழு** | | | |
| நடாத்தப்பட்ட கூட்டங்கள் | 14 | | |
| மதிப்பிட்ட கருத்திட்ட முன்மொழிவுகள் | 58 | | |
| **8. நீர்த்தர நியமங்கள் மீளாய்வு** | | | |
| நடாத்தப்பட்ட கூட்டங்கள் | 2 | | |
| **9. தரமான ம.பா.உ எண்ணிடல் முறைமை கையாளல்** | | | |
| வழங்கப்பட்ட ஏ வகுப்பு புதிய சு.மா.உ கள் வழங்கல் | 983 | | |

| | | | |
|---|---|---|---|
| வழங்கப்பட்ட ஏ வகுப்பு புதுபித்தவர்கள் | 1753 | | |
| **12. பயிற்சிகள்/ பயிற்சிப்பட்டறை** | | | |
| நடத்தப்பட்ட முன்னிலைப்படுத்தர்கள்/ விரிவுரைகள் | 6 | | |
| நடாத்தப்பட்ட பயிற்சிபட்டறைகள் | 12 | | |
| சு.மா.க பிரிவு கலந்துகொண்ட கூட்டங்கள் | 21 | | |
| **13.சு.தா.ம. தொழில்நுட்ப குழு கூட்டங்கள்** | 22 | | |
| **14.தேசிய பசுமை விருது நிகழ்ச்சித் திட்டம் ீசழபசயஅஅந** | | | |
| **15. இரசாயன விபத்து தவிர்ப்பு** | | | செலவுகள் |
| **Water Environment Partnership in Asia (WEPA) dialogue on Wastewater Management in Sri Lanka** | | | |

## 3.2. ஆய்வுகூட சேவைகள் பிரிவு

### 3.2.1 சுற்றுப்புற வளித் தரக் கண்காணிப்பு

வளி தர கண்காணிப்பு ஆனது கொழும்பு கோட்டை கண்காணிப்பு நிலையத்தில், சல்பர் டை ஒக்சைட் மற்றும் நைட்ரஜன் டை ஒக்சைட் வாயுவடிவ மாசாக்கிகளுக்கான ஈர இரசாயன முறைகள் பாவிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டது.

நகரின் வாகனத்தொகுதி அதிகரிப்பின் போக்கை பகுப்பாய்வு செய்வதற்காக கொழும்பின் பி.எம்.10 (10 மைக்ரோனுக்கு குறைவான துகள்களின் ஏரோடைனமிக் டையமீட்டர்) கூட வாராந்த அடிப்படையில் அளவிடப்பட்டது.

#### 3.2.1.1. இலங்கையில் வளித்தரத்தின் தகுதிநிலை

கொழும்பு கோட்டை கண்காணிப்பு நிலையத்தின் துணிக்கை தலைப் பதார்த்தத்தின் வருடாந்த சராசரி வேறுபாடு கீழே காட்டப்பட்டுள்ளன. கொழும்பு கோட்டை கண்காணிப்பு நிலையத்தில் பீஎம் 10 இன் வருடாந்த சராசரிச் செறிவு ஆகக் கூடுதலாக அனுமதிக்கக்கூடிய அளவைவிட அதிகரித்த நிலையில் இருப்பினும் கடந்த 10 வருடங்களில் குறைந்து செல்லும் ஒரு போக்கையே அது காட்டுகின்றது.



மேற்சொன்ன நடவடிக்கைகளுக்குச் சமாந்தரமாக, நுகேகொடை, அநுராதபுரம் மற்றும் யாழ்ப்பாண நகரங்களின் சுற்றுப்புற வளித்தரம் ஆனது, தொடர்ச்சியான தன்னியக்க நடமாடும் சுற்றுப்புற வளித்தரக் கண்காணிப்பு நிலையத்தால் கண்காணிக்கப்பட்டது. சுற்றுப்புறச் சூழலில், பி.எம்.10 இற்கு மேலாக மற்றும் பிற வளிநிலை மாசாக்கிகள், பிஎம்2.5 மற்றும் மீதேன் அல்லாத மொத்த ஐதரோகாபன் செறிவு ஆனதும் புதிய நடமாடும் வளித்தரக் கண்காணிப்பு நிலையத்தின் மூலம் அளக்கப்பட்டது.




**2013 ஒக்டோபர் 1ம் திகதியில் இருந்து 7ம் திகதி வரை நுகேகொடை நகரப் பிரதேசத்தில் பிஎம் செறிவின் மாறல்**

சில நாட்களில் பிஎம்10 இன் செறிவு ஆனது, 100 மைக்ரோ கிராம்கள் / கன மீட்டர் எனும் தேசிய நியமத்தைத் தாண்டியதோடு இன்னும் சில நாட்களில் பிஎம்2.5 இன் செறிவு ஆனது, 50 மைக்ரோ கிராம்கள் ∴ கன மீட்டர் எனும் தேசிய நியமத்தைத் தாண்டியது.




**2013 நவம்பர் 20ம் திகதியில் இருந்து 28ம் திகதிவரை அநுராதபுர பூஜா பூமியில் பிஎம் செறிவின் மாறல்.**

பிஎம்10 மற்றும் பிஎம் 2.5 ஆகியனவற்றின் 24 மணித்தியால சராசரி செறிவு தேசிய நியமத்தை, அளவு காலத்தினுள் தாண்டவில்லை.




**2013 ஓகஸ்ட் 29ம் திகதியில் இருந்து 5ம் திகதிவரை யாழ்ப்பாண நகர பிரதேசத்தில் பிஎம் செறிவின் மாறல்**

**எல்லைக்கு அப்பாற்பட்ட வளி மாசடைதல் கண்காணிப்பு**

**3.2.1.2 ஆண் அறிவிப்பு செயற்றிட்டம்**

மத்திய சுர்றாடல் அதிகாரசபையின் ஆய்வுகூடமானது, வளிமாசடைதல் கட்டுப்படுத்தல் மற்றும் தடுப்பு மற்றும் அதன் தென்னாசியா மீதான எல்லை தாண்டிய பாதிப்புகள் சார் ஆண் அறிவிப்பு நடவடிக்கைகள் தேசிய அமுல்படுத்தல் முகவரகம் ஆக உள்ளது. பிற தென்னாசிய நாடுகளுக்குச் சமாந்திரமாக ஆய்வுகூடமானது, ஆண் அறிவிப்பின் கீழ் எல்லை தாண்டிய வளி மாசடைதல் கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை மேற்கொள்கின்றது.

**3.2.1.3 அமில மழை கண்காணிப்பு**

எல்லைதாண்டிய வளி மாசடைதலினால் அமில மழை பெய்வதற்குரிய சாத்தியக் கூறுகளை அடையாளம் காண்பதற்காக ஆய்வுகூடமானது அமில மழை கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டதில் இணைந்துள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் டோரமடலவ மிகிந்தல ஆகிய இடங்களில் மாதிரி இடம் அடையாளம் காணப்பட்டது. ஈரம் மட்டும் கொள்கலன்களில் மழைநீர் சேகரிக்கப்பட்டது. அனயன், கற்றயன் மற்றும் மழைநீர் விளும் அளவுகளை தொகுதிச் சேகரிப்பான்கள் பகுத்தாய்ந்தன.

**3.2.1.4 எல்லை தாண்டிய வளி மாசடைதல் கண்காணிப்பு**

செயலற்ற மாதிரிகளின் பயன்பாட்டுடன் துடுவெவ இடத்தில் வளி தர பகுப்பு மேற்கொள்ளப்பட்டது. மற்றும் $NO_2$, $SO_2$ ஆகியவற்றின் ஆரம்ப ஒப்பீட்டுக்கான டொரமடலவ இடம் மற்றும் சுற்றுப்புறத்தில் உள்ள நில மட்ட ஓசோன் மாதாந்த அடிப்படையில் அளக்கப்பட்டது. பிஎம்10 ஆனது இவ்விடத்தில் வாராந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது.



டொரமடலந கண்காணிப்பு இடத்தில் பொருத்தப்பட்டுள்ள கருவிகள்




பிஎம் 10 செறிவு டொரமடலவ இடத்தில் மாறல்




டொரமடலவ இடத்தில் நைட்ரஜன் ஒக்சைட் செறிவு மாறல்




டொரமடலவ இடத்தில்நிலமட்ட ஓசோன் செறிவு மாறல்




டொரமடலவ இடத்தில்சல்பர் டைஒக்சைட் செறிவு மாறல்

3.2.1.5 சூழல் ஒலி மாசுக் கட்டுப்படுத்தல்

இலங்கைச் சமூகத்தில் பொது மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் முக்கிய சூழல் பிரச்சனையாக ஒலி மாசடைதலும் காணப்படுகின்றது. மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சூழல் ஒலி மாசடைதல் நடவடிக்கைகளுடன் வளி வள முகாமை மற்றும் கண்காணிப்பு அலகு இணைந்துள்ளது. தொழிற்றுறை நடவடிக்கைகளாலும் சமூக நடவடிக்கைகளாலும் ஏற்படுத்தப்படும் ஒலி மாசுபடுத்தல் பற்றி ம.சு.அ. ஆனது பல புகார்களைப் பெற்றுள்ளது. ஆய்வுகூடமானது, பொது மக்களிடமிருந்தான புகார்கள் மீதான மீளாய்வு மற்றும் தொழிற்றுறைகளுக்கான சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களின் வழங்கல்கள் அல்லது புதுப்பித்தல்கள் ஆகியவற்றுக்கான ஒலி மட்ட அளவீட்டை நடத்துகின்றது.



**களப்பிரதேசத்தில் ஒலி அளவிடல் நடைபெறல்.**

வாகன ஒலிப்பான்களில் இருந்துவரும் ஒலியை கட்டுப்படுத்துவதற்காக, மசுஅ ஆனது, வாகன ஒலிப்பான்களின் அதி உச்ச அனுமதிக்கப்பட்ட அளை அறிமுகப்படுத்தும் வர்த்தமானி விதிமுறையை வெளியிட்டு உள்ளது. மேற்சொன்ன விதிமுறையை அமுல்ப்படுத்தும் நோக்கில் வளி வள முகாமை மற்றும் கண்காணிப்பு அலகு ஆனது, போக்குவரத்து காவல் துறைப் பிரிவு மற்றும் காவல் துறையின் சுற்றாடல் காவல் துறை பிரிவு ஆகியவற்றுடன் இணைந்து, பல பங்காளர் கூட்டங்கள், தெருவோர விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தியது. பல நகரப் பிரதேசங்களில் இடம்பெற்ற கள வாகன ஒலி மாசு அளவீட்டு நிகழ்வும் புதிய விதிமுறைகள் பற்றி பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த உதவியது.

### 3.2.2. நீர்த் தர கண்காணிப்பு ஆய்வுகூடம்

#### 3.2.2.1 சுற்றாடல் பாதுகாப்பு உரிமத் திட்டம் நடைமுறைப்படுத்தல் மற்றும் அனுசரனை வழங்கல்.

தேசிய சுற்றாடல் அதிகாரசபையின் ஏற்பாடுகளின் கீழ் வரும் ஒழுங்கமைப்பு கருவியே சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் ஆகும். வர்த்ததமானியின் ‘‘ஏ’’,’’பி’’ மற்றும் ‘‘சீ’’ பகுதிகளின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளவை சு.பா.உ தேவைப்படும் குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகள் ஆகும். இவை ம.சு.அ இடமிருந்து சு.மா.உ த்தை பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றன.மத்திய சுற்றாடல் அதிகார சபையின் (ம.சு.அ) சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டு பிரிவின் (சு.மா.க) நீர்த்தர கண்காணிப்பு ஆய்வு கூடத்திற்கு ஒட்டுமொத்த நிறுவனத்திற்கும் அதன் ஆரம்பம் முதல் பகுப்பாய்வு சேவைகளை வழங்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன் பிரதான பணியானது யாதெனில் நாடு பூராகவும் கைத்தொழில் கழிவுகளின் தரத்தை கண்காணிப்பதாகும். 2013 ஆம் ஆண்டில், இவ்வாய்வு கூடத்திற்கு 920 மாதிரிகளை சேகரிக்கவும் பகுப்பாய்வு செய்யவும் இயலுமாக இருந்தது. இவை சு.மா.உ த்திற்காக சேகரிக்கப்பட்ட கைத்தொழில் கழிவுகள், வர்த்தக அடிப்படையிலானவை, வழமையான கண்காணிப்பு மற்றும் சட்டத் தேவைகள் மற்றும் பல்வேறு நீர் நிலைகளிலிருந்து கிடைக்கப் பெற்ற நிலமட்ட நீர் மாதிரிகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

| மாதிரி வகை | நீர்நிலையின் பெயர் / நோக்கம் | சேகரிக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை | நடைபெற்ற சோதனைகளின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|
| **தொழிற்றுறைத் திரவக்கழிவு** | புது சுபாஉ அல்லது புதுப்பித்தலுக்காக | 123 | 738 |
| | சட்டத் தேவைக்காக | 59 | 354 |
| | புகாரை விசாரித்தல் | 75 | 450 |

| மாதிரி வகை | நீர்நிலையின் பெயர் / நோக்கம் | சேகரிக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை | நடைபெற்ற சோதனைகளின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|
| | கண்காணித்தல் | 49 | 294 |
| | சிடிபி | 36 | 216 |
| | வர்த்தக (தொழிற்றுறை) | 89 | 534 |
| | பிற | 13 | 494 |
| **நீர் / நில மேற்பரப்பு** | களனி ஆறு | 142 | 1988 |
| | பொரலஸ்கமுவ | 24 | 336 |
| | மகா ஓயா | 88 | 1232 |
| | வர்த்தக (மேற்பரப்பு) | 79 | 474 |
| | தடுகம் ஓயா | 72 | 720 |
| | பந்தோட்ட கங்கை | 71 | 994 |

அட்டவணை 1 - 2013ல் மாதிரிகளின் முன்னேற்றம்




உரு 1 - 2013 ல் மாதாந்த கண்காணிப்பு முன்னேற்றம் பற்றிய வரைபு வெளிப்பாடு




உரு 2 - 2013 ல்தொழிற்றுறை திரவக்கழிவு கண்காணிப்பு முன்னேற்றம் பற்றிய வரைபு




உரு 3 - 2013 ல் தொழிற்றுறைத் திரவக்கழிவுக்காக சோதிக்கப்பட்ட பராமீட்டரின் எண்ணிக்கையின் வரைபு வெளிப்பாடு




உரு 4 - 2013 ல் மேற்பரப்பு நீர் மாதிரி கண்காணிப்பு முன்னேற்றம் பற்றிய வரைபு வெளிப்பாடு




உரு 5 - 2013 ல்மேற்பரப்பு நீர் மாதிரிகளுக்கான சோதிக்கப்பட்ட பராமீற்றர் எண்ணிக்கை பற்றிய வரைபு வெளிப்பாடு




உரு 6 -வர்த்தக அடிப்படைக்கும் சேவை அடிப்படைக்குமான கண்காணிப்பு பற்றிய வரைபு வெளிப்பாடு

**மசுஅ ஆய்வுகூடத்தினால் தயாரிக்கப்படும் தகவலின் தரத்தை அதிகரித்தருக்கான புதிய கொள்ளளவுக் கட்டியெழுப்பல்**

2013 ல் ஜி இ எம் எஸ் / நீர் ஆல் நடாத்தப்பட்ட சர்வதேச நடத்தை மதிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டத்தில் மசுஅ ஆய்வுகூடமானது பங்கேற்கக் கூடியதாக இருந்தது. இந்த மாதிரியான நிகழ்ச்சித்திட்டத்தின் செலவு மிக உயர்ந்தது. நாம் மேற்பரப்பு நீர்த் தரத் தகவலை ஜி இ எம் எஸ் / நீர் க்கு அளிப்பதனால், இலங்கைச் சுங்கத்திற்கு மாதிரியைக் கொண்டு செல்ல அளிக்கப்பட்ட செலவைத் தவிர வேறு எந்தச் செலவும் இன்றிஆய்வுகூடமானது இந் நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்கக்கூடியதாக இருந்தது. உலகம் முழுவதும் இருந்து வந்த நீர்த் தர ஆய்வு கூடங்கள் இந்த ஜி இ எம் எஸ் / நீர் இல் பங்கு பற்றியமையால் நன்மை அடைந்தன.

**ஆய்வுகூட நடத்தை கற்கைகள்.**

இக் கற்கைகள், அபிவிருத்தியடையும் மற்றும் மாற்றமடையும் நாடுகளின் தேவைகளின் பெறுமதி மிக்க உள்ளடக்கங்களை வெளிப்படுத்தின. தரக்கட்டுப்பாடு மற்றும் நடத்தை மதிப்பீட்டுக்கான சோதனை மாதிரிகள் ஜி இ எம் எஸ் / நீர் ஆல் தரப்பட்டன. ஆய்வுகூடத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் ஜி இ எம் எஸ் ஆல் தரப்பட்ட சோதனை மாதிரிகளை பகுப்பாய்வு செய்வதில் சுறுசுறுப்பாக இணைந்தனர். நுண்ணுயிரியல் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 13 மாதிரிகளில்

டிமாண்ட் சோதனை கனிம நியூற்றியெண்ட்ஸ், பி எச், திண்ம மற்றும் ட்ரேஸ் உலோகங்களான அலுமினியம், பேரியம், போரன், கட்மியம், குரோமியம், கோபோல்ட்ஸ் கொப்பர், நிக்கல், மங்கனீஸ் மற்றும் இரும்பு காணப்பட்டன. 38 பராமீற்றர்களூடாக கிடைத்த 13 மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப் பட்டன. சிறந்த பயிற்சி மற்றும் பரிந்துரை உடன் கொள்ளளவு அடையப் படுதல் பற்றி பயுப்பாய்வும் விளக்கும். இவ்வகையான நிகழ்ச்சித்திட்டமானது அதி நம்பத்தகுந்த தகவல்களை செம்மையாகத் தருவதற்கு எமக்கு உதவும். சோதனை முடிவுகள் இணையத்தில் வெளியிடப்பட்ட அதே வேளை ஜி இ எம் ஸ்டர் பி இ - 8 நிகழ்ச்சித்திட்டத்திற்கு தபாலில் காகிதவடிவிலும் சமர்ப்பிக்கப்பட்டது. அத்துடன், ஏப்ரல் 2014 இல் அறிக்கை வெளியிடப் பட்டவுடன், பகுப்பாய்வுத் தகவலின் செம்மையை நாம் சோதிக்கக் கூடியதாக இருக்கும்.

**பவித்ர கங்கா நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றல்**

மசுஅ இன் ஆய்வுகூடமானது 1998 இலிருந்து தொடர்ச்சியாக களனி கங்கையின் நீர் தர கண்காணிப்பில் பங்கு பற்றியது. 2013ம் ஆண்டு மாதாந்த அடிப்படையில் ஒரு வழமையான கண்காணிப்பு நடத்தப் பட்டது. களனி ஆற்றில் நீர்த் தரக் கண்காணிப்புக்கு மேலாக, 2013 இல் யுஎண்டிபி உடன் இணைந்து சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கதக்க சக்தி அமைச்சானது பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியது. சர்வதேச நீர் தினத்திற்குச் சமாந்தரமாக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டமானது பல உள்ளூராட்சி சபை பிராந்தியங்களில் நடாத்தப்பட்டதோடு, 2013 இல மசுஅ இன் அதிகாரிகள் அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களிலும் விரிவுரையாற்றி, அளிக்கை செய்து மற்றும் ஆய்வுகூட பயிற்சி மூலமாக பங்கேற்றனர்.

**மசுஅ இன் பிற பிரிவுகளுக்குச் செய்யப்பட்ட் உதவி**

**சுற்றாடல் மாசடைதல் கட்டுப்பாட்டு பிரிவு**

சுமாக பிரிவால் நீர்த் தேர்ச்சி பரிசோதனை மற்றும் கழிவு நீர் நிகழ்ச்சித்திட்டம் ஆகியன மேற்கொள்ளப்படன. மசுஅ இல் பதிவு செய்யப்பட்ட ஆய்வுகூடங்களில் பத்து ஆய்வுகூடங்கள் இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்க முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு உள்ளன. மசுஅ இன் கீழ் பதிவு செய்யப்பட்ட ஆய்வுகூடங்களின் பகுப்பாய்வு கொளளவைச் சமப்படுத்துவதே இதன் நோக்கமாகும். ஆய்வு கூட பராமீற்றர்கள் ஆவன பிஎச், மொத்த பொசுப்பேற்று, இரசாயன ஒட்சிசன் டிமாண்ட், உயிர் இரசாயன ஒட்சிசன் டிமாண்ட் மற்றும் டிஎஸ்எஸ்

**மேற்பரப்பு நீரின் தரக்கண்காணிப்பு**

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஆய்வுக்கூடத்தின் மூலம் பல நீர் தரக் கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவை களணி கங்கை, பொரலஸ்கமுவெவ,மற்றும் முன்னரே தெரிவு செய்யப்பட்ட மாதிரி இடங்களிலில் இருந்து பெறப்பட்ட மேற்பரப்பு நீரின் இரசாயன நுண்ணுயிரியல் அளவுருக்கள் பற்றிய, 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்புகளையும் உள்ளடக்குகின்றன.

**களனி ஆற்று நீர்த் தர மதிப்பீடு**

களனி ஆறானது மொத்த நீளமாக 145 கிலோமீற்றரை கொண்டதுடன், 2292 கிலோமீற்றர் பரப்பு கொண்ட ஆற்றுப்படுகையை கொண்டுள்ளது இதுவே இரண்டாவது பாரிய நீர்கொள்ளும் இடமாகும். அத்துடன், ஆற்றில் அருகில் உள்ள நகரில் உள்ள தொழிற்றுறைகளின் துரித வளர்ச்சியாலும் மிகவும்

மாசடைந்த தலைநகரினூடாகச் செல்வதாலும் இதுவே இலங்கையின் மிகவும் மாசடைந்த ஆறாக உள்ளது.

களனி ஆற்று மாசடைதலின் முக்கிய மூலமானது பரிகரிக்கப்பட்ட பரிகரிக்கப்படாத தொழிற்றுறை திரவக் கழிவுகள், விவசாய கழிவுகள், மாநகர திரவக் கழிவுகள் உள்ளிட்ட நிலம் சார் மூலம் ஆகும். நீர் மாசடைதலின் புவியீர்ப்பானது, கொழும்பு மாநகரின் குழாய்க் குடிநீர் ஆதாரமாக உள்ள களனி ஆற்றின் நீர் தர அளவீட்டினை சோதிக்கும் போது வெளிப்படையாக உள்ளது. களனி ஆறு ஆனது கொழும்பு மாவட்டத்தின் முக்கிய குடிநீர் மூலம் ஆகும். அத்தோடு ஆற்றிலிருந்து வடக்கே 14 கிலோமீற்றரில் நீர் விநியோக உள்ளெடுக்கும் முனையம் அம்பதலே இல் உள்ளது. எவ்வாறாயினும் களனி ஆற்றில் குறைந்த வருமானமுள்ள குடியிருப்புகளின் சாக்கடைகள் மற்றும் பல தொழிற்றுறைகள் இலகுவாக வெளியேற்றும் தொழிற்றுறை திரவக் கழிவுகள் ( டன்னிங், உலோக இறுதிப்படுத்தல் மற்றும் செயற்படுத்தல் தொழிற்றுறைகள் ) ஆகியன சேர்கின்றன.

மேலும், கடலில் இருந்து உள் வரும் உவர் நீரால் குடிப்பதற்கு பாவிக்க முடியாத நீராகின்றது களனி ஆற்று நீர். அதீத மணல் அகழ்வாலும் ஆற்றுப் படுகை கீழ் செல்வதாலும் இது நிகழ்கின்றது.பல நேரங்களில் மணல் அகழ்வானது அம்பதலே ல் உள்நோக்கி (வெளியிடும் முனையிலிருந்து 14கிலோமீற்றர்) விரிவடைந்துள்ளது. இது ஒரு முக்கிய விடயமாகும். ஏனெனில் கொழும்புக்கான குடிநீர் விநியோகமானது அம்பதலவில் வைத்து களனி கங்கையில் இருந்து எடுக்கப் படுகின்றது.தொழிற்றுறை நடவடிக்கைகளின் மூலம் சூழலுக்கு வெளிவிடப்படும் கழிவுநீர் ஆனது, தேசிய சுற்றாடல் சட்டம் 1980 இன் கீழ் உள்ள 23 (அ) பிரிவின் கீழ் அமுல்ப்படுத்தப் படுகின்ற சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் (சுபாஉ) முறைமையினால் ஒழுங்குபடுத்தப் படுகின்றது. ஒரு தொழிற்றுறையின் மூலமாக சூழலுக்குள் கழிவு நீர் வெளியேற்றுவதற்கு சட்டத்தில் குறிப்பிட்டபடிசுபாஉ ஒன்றை பெறுதல் கட்டாயமானதாகும். சூழலுக்கு கழிவுநீரை வெளியிடும் தொழிற்றுறைகள் தமது கழிவு நீரை, சுபா உ. பெறுவதற்கான அடிப்படை நியமங்களுக்கு ஏற்ற வண்ணம் பரிகரிக்க வேண்டும். வழங்கப்படும் உரிமம் ஆனது, குறித்த தொழிற்றுறையானது சூழலுக்கு வெளிவிடும் திரவக்கழிவின் நியமம் மற்றும் தேவையான நிலையை குறிப்பிடும்.

தொழிற்றுறைகள், சுற்றாடல் பாதுகாப்பு உரிம முறைமைகளால் சூழப்பட்டிருந்த போதும், அவர்கள் குறித்துரைத்த வெளியீட்டு தேவைநிலைகளை நிறைவு செய்கின்றனரா என்பதையும் களனி ஆற்றில் வெளிவிடப்படும் மாசுத் தொகையை கட்டுப்படுத்துதலையும் கண்காணிக்கும் ஒழுங்கான பொறிமுறையானது இல்லை.

களனி ஆறு மற்றும் அதனுடன் வந்திணையும் பிற நீர்நிலைகளின் மாசடைதல் நிலமையானது 2003 இல் இருந்து ஆராயப்பட்டது. பிஎச், மின் கடத்தும் தன்மை, டேபிடிட்டி, டிஓ, பிஓடி, சிஓடி, குளோரைட், நியூற்றியெண்ட்ஸ் மற்றும் நுண்ணுயிரியியல் பராமீற்றர்கள் இதற்குப் பயன்பட்டன. அத்துடன், பிபி மற்று சிஆர் போன்ற பாரிய உலோகங்களின் கரைந்த நிலைகளும் பகுத்தாயப்பட்டன. அந்த்ரோபோஜெனிக் மூலங்களினாலும் இயற்கை மூலங்களினாலுமான மாசுக்களால் ஆற்று நீரானது எதிர்மறையாகப் பாதிக்க பட்டுள்ளது என்பதை பிரதான உறுப்பு பகுப்பாய்வு வெளிப்படுத்தியது. கடல்நீர் உட்புகுவதால் ஏற்படும் அசுத்தமாக்கல் மற்றும் ஆற்று நீரின் மண்ணரிப்பு ஆகியன இயற்கையாக நீர்த் தரத்தை பாதிக்கின்றன. பிரதான ஆற்றிலிருந்து ஏழு மாதிரி எடுக்கும் இடங்களும் வந்திணையும் நீர்நிலைகளில் இருந்து ஐந்து மாதிரி எடுக்கும் இடங்களும், பல்வேறு நடவடிக்கைகளின் மீதான மாசடைதற் தாக்கத்தை கருத்திற் கொண்டு தெரிவு செய்யப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட மாதிரி எடுக்கும் இடங்கள் ஆனவை ஆற்றுவாயிலிருந்து நிலப்பரப்பு பக்கமாக அவிசாவளை வரை 58 கிலோமீற்றர் தூரம்வரை அமைந்துள்ளன.

| அகலக்கோடு | நில நிரைக்கோடு | மாதிரி எடுக்கும் இடம் |
|---|---|---|
| 6 57 14 | 80 13 12 | தல்டுவ பாலம்(076005) |
| 6 58 37 | 80 11 39 | சீதாவாக்கே படகு(076006) |
| 6 55 02 | 80 05 53 | வக் ஓயா(வந்திணையும் நீர்நிலை) (076011) |
| | | புகொட படகு(076009) |
| 6 56 38 | 80 08 18 | புகொட எல(வந்திணையும் நீர்நிலை) (076010) |
| 6 54 36 | 80 05 00 | ஹன்வெல்ல பாலம்(076007) |
| 6 54 26 | 80 03 57 | புசெலி ஓயா (வந்திணையும் நீர்நிலை) (076012) |
| 6 56 00 | 79 59 32 | மகா எல(வந்திணையும் நீர்நிலை) (076013) |
| | | கடுவெல பாலம்(076008) |
| 6 56 21 | 79 58 09 | ரக்காகாவத்த எல(வந்திணையும் நீர்நிலை) (076001) |
| 6 56 18 | 79 56 50 | வெலிவிட பாலம்(076003) |
| 6 57 37 | 79 52 40 | விக்டொரியா பாலம் (076002) |

அட்டவணை 2 களனி ஆற்றின் மாதிரி எடுக்கும் இடம்

**நீர்த்தர இண்டெக்ஸ் பாவனையூடாக களனி ஆற்றின் நீர்த்தரத்தை மதிப்பிடல்**




உரு 5 - களனி ஆற்றின் மாதிரி எடுக்கும் இடத்தின் வரைபடம்

பிஎச், டேபிடிட்டி, கரைந்த ஒட்சிசன், உயிர் இரசாயன ஒட்சிசன் டிமாண்ட், நைற்றேட், பொசுப்பேட் மறும் கமியம்,ஈயம் போன்ற நீரில் கரைந்துள்ள பாரிய உலகங்கள் ஆகியன 2013ம் ஆண்டில் மாதாந்த அடிப்படையில் கண்காணிக்கப் பட்டன.

**களனி ஆற்று நீர்த் தரத்தின் சுருக்கமான விளக்கம்**

அந்த்ரோபோஜெனிக் நடவடிக்கைகளான இரத்தினக் கல் அகழ்வு, ஆற்றுமணல் அகழ்வு ஆகியன ஆற்றுப் படுகைக்கு கடும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. அத்தோடு மாதிரி சேகரிக்கும் இடங்களில் உள்ள ஆற்று நீரின் டேர்பிடிடியினை அதிகரிக்கச் செய்கின்றன. களனி ஆற்றின் பிரதான மாசுபடுத்தும் காரணிகளாக நுண்ணுயிரியல் அசுத்தமாக்கல் மற்றும் டேபிடிட்டி ஆகியன முக்கிய மூலங்களாக உள்ளன. நீரின் ஒளிகடத்தும் பொருட்களை அளவான டேபிடிட்டி ஆனது நிராகரிக்கபட்ட குறித்த பொருகளை அளவிடுவதோடு, அது துணிக்கைகளின் உறுதித்தன்மையிலும் செறிவிலும் தங்கியுள்ளது. டேபிடிட்டியின் மாறலானது எப்போதும் ஸ்டோம் நீரில் மிதக்கும் நிராகரிக்கப்பட்ட அடையும் துணிக்கைகளுடன் இணைந்திருக்கும். இது அநேகமாக ஆற்றின் மேலோட்டப் பகுதியில் நடைபெறும் அகழ்வு நடவடிக்கைகளாலும் தொடர்ச்சியான மழையாலும் நடைபெறும்.மணல் அகழ்வு, இரத்தினக்கல் அகழ்வு மற்றும் கட்டுப்படுத்த முடியாத நகர வளர்ச்சி ஆகியவற்றைச் சார்ந்திருக்கும் டேபிடிட்டி ஆனது, அனைத்து மாதிரி சேகரிக்கும் இடங்களிலும் முழுக் கண்காணிப்புக் காலத்திலும் குறித்த நியமப் பெறுமானத்தை விடவும் அதிகமாகவே காணப் பட்டது.

பின்வரும் வரைபுகள் 2013ம் ஆண்டு முழுவதும் அடிப்படை நீர்த்தர பராமீற்றர்களின் மாறலைக் காட்டுகின்றது.




ஆற்று நீரின் பிஎச் ஆனது எப்போதும், மசுஅ ஆல் முன்மொழியப்பட்ட அமில நிலமையை நோக்கிய சுற்றுப்புற நீர்த்தரக் கண்காணிப்பு விலகலுக்குள் உள்ளது. இது விக்டோரியா பாலத்தில் இருந்து ஏப்ரல் மற்றும் டிசம்பரில் அவதானிக்கப்பட்டது.



**2013 காலப்பகுதியில் மின்கடத்தும் தன்மையிலான மாறல்**

சீதாவாக்கே பாலம் மற்றும் விக்டோரியா பாலம் ஆகிய மாதிரி எடுக்கும் இடங்களில் ∴பெப்ரவரி மற்றும் மே மாதங்களில் மின் கடத்தும் தன்மையில் உயர் பெறுமானம் அவதானிக்கப் பட்டது. இது உயர் அலையினால் ஏற்பட்ட உவர்நீர் உட்புகலால் நடந்திருக்கலாம். சீதாவக்கேயில் அறிக்கை செய்யப்பட்ட உயர் மட்ட மின் கடத்தும் தன்மையானது, சீதாவாக்கை தொழிற்றுறைப் பூங்காவால் வெளியிடப்பட்ட தொழிற்றுறை கழிவுநீரால் ஏற்பட்டிருக்கலாம்.




2013 காலப்பகுதியில் எப்போதும் போல டேபிடிட்டியின் உயர் பெறுமானம் ஆனது அனைத்து மாதிரி சேகரிப்பு இடங்களிலும் அறிக்கை செய்யப் பட்டு உள்ளது. இது, மண்ணரிப்பு ஆற்றங்கரைகளில் உள்ள தாவரங்கள் அகற்றப்பட்டமை மற்றும் பல வகையான ஆற்றங்கரை மேம்படுத்தல், அகழ்தல் நடவடிக்கை மற்றும்பாரிய மழை வீழ்ச்சி நிலமைகளால் நடைபெற்றிருக்கலாம்.




ஆண்டின் முதல் ஆறு மாதங்களிலும் அனைத்து மாதிரி சேகரிப்பு இடங்களிலும் உயர் பெறுமானம் உள்ள வெப்பநிலை பதிவானது. ஆண்டின் அடுத்த ஆறுமாதங்களிலும் 250 சி இலிருந்து 270 சி வரை பதிவானது.




பொதுவாக அதிக நீரில் கரைந்த ஒட்சிசனானது நீர்த்தரம் அதிகம் என்பதை காண்பிக்கின்றது. மசுஅ இன் நியமத்தை விடவும் நீரில் கரைந்த ஒட்சிசனின் அளவு குடுதலாகக் காணப்பட்டது. ஜூன் மாதத்தில் கரைந்த ஒட்சிசனின் அளவு குறைந்து காணப்பட்டது.




மாதிரி எடுக்கும் இடங்களின் இரசாயன ஒட்சிசனின் ஏற்ற இறக்க டிமாண்ட் ஆனது முழு ஆண்டிலும் அவதானிக்கப்பட்டது. பல நேரங்களில் பதியப்பட்ட பெறுமானங்கள் முன்மொழியப்பட்ட சுற்றுப்புற நீர் தர நியமங்களைவிடக் குறைவாகக் காணப்பட்டது. மார்ச், ஜூன் மற்றும் நவம்பர் மாதங்களில் சில இடங்களில் முன்மொழியப்பட்ட சுற்றுப்புற நீர்த்தரத்தை விட உயர் மாறலானது அவதானிக்கப்பட்டது. (புகொட படகு, தலுடுவ எல மற்றும் ஹன்வெல்ல பாலம்). அநேகமான நேரங்களில் உயர் சிஓடி ஆனது எப்போதும் விக்டோரியா பாலத்தில் பதியப்பட்டது.

## 3.3 கழிவு முகாமைத்துவ பிரிவு.

மத்திய சுற்றாடல் அதிகார சபையினது (ம.சு.அ) சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு பிரிவின் ( சு.மா.க) கழிவு முகாமைத்துவ (க.மு) பிரிவுக்கு பின்வரும் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(அ) அபாயகர கழிவு முகாமைத்துவத்துடன் தொடர்புபட்ட ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்தல்.

(ஆ) சர்வதேச உடன்படிக்கைகளுக்கு இணங்க செயற்படல்.

(இ) 2013 ஆம் ஆண்டின் செயற்திட்டத்தில் இணங்காணப்பட்ட அபாயகர கழிவு மற்றும் திண்மக்கழிவு முகாமைத்துவத்துடன் தொடர்புடைய அவசியமான கருத்திட்டங்கள்/ நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தல்.

**3.3.1 இலங்கையில் அபாயகர கழிவு முகாமைத்துவ ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்தல்.**

அபாயகர கழிவு முகாமைத்துவ ஒழுங்குவிதிகளை (2008.02.01 ஆம் திகதி 1534/18 இலக்க அதிவிஷேட வர்தமானி அறிவித்தலின் மூலம் 2008 ஆம் ஆண்டின் 01 இலக்கம்) நடைமுறைப்படுத்துவதில் ஒரு பகுதியாக 2013 ஆம் ஆண்டில் 90 உரிமங்கள் வழங்கப்பட்டன.

மேற்குறிப்பிட்ட விதிமுறைகளை அமுல்படுத்தலை வசதிப்படுத்தும் முகமாகவும் மற்றும் மருத்துவக் கழிவுகளின் முகாமைத்துவத்தை பாதிக்கும் விடயங்களுக்கு தீர்வு தரல் முகமாகவும் முத்தரப்பு தேசிய செயற்றிட்டம் ஊடாக ஒரு மத்திய எரியுலை வசதியை அமைப்பதற்கான ஆரம்ப முயற்சி எடுக்கப்பட்டது. இம் முயற்சி, சிசிலி ஹனரோ என்கெயார் பிரைவேட் லிமிட்டட், மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் சுகாதார அமைச்சு ஆகியவற்றின் சம்பந்தப்படுதலுடன், முல்லேரியாவில் அமைந்துள்ள கொழும்பு கிழக்கு ஆதார மருத்துவமனையில் அமைக்கப்படவுள்ளது. இந்த வசதியானது ஒரு நாளைக்கு 6 தொன்களை உரமாக்கும் கொள்ளளவு கொண்டது. நாட்டின் பொது மற்றும் தனியார் சுகாதார சேவைகள் இரண்டுக்கும் உதவும் வண்ணம் இது உள்ளது.

இது அவர்களுடைய மருத்துவக் கழிவுகளை சூழலுக்கு உகந்த முறையில் முகாமை செய்வதற்காகும்.

**3.3.2 பேசல் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தல்.**

கைத்தொழில்களுக்கான பேசல் உடன்படிக்கையின் ‘B’ பட்டியலில் பட்டியலிடப்பட்ட கழிவுப்பொருட்களை இறக்குமதி செய்தல்.

எல்லைக்கடந்த அபாயகர கழிவு நகர்வு பற்றிய பேசல் உடன்படிக்கைக்கும் (பே.உ) அவற்றை (அபாயகர கழிவு) அகற்றுவதற்கும் 1992.08.28 இல் இலங்கை ஒப்புதல் அளித்துள்ளது. அதனைத் தொடர்ந்து மத்திய சுற்றாடல் அதிகார சபையானது பே.உ. யின் தகுதிவாய்ந்த அதிகார சபையாக நியமிக்கப்பட்டது. பே.உ நடைமுறைப்படுத்துவதற்கான தேசிய ஒருங்கிணைப்புக் குழு சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சின் கீழ் செயற்படுகின்றதுடன் நாட்டில் அபாயகர கழிவு முகாமைத்துவத்தின் தொழில்நுட்ப அம்சங்களுடன் தொடர்புடைய விடயங்கள் பற்றிய திடமான தீர்மானம் மேற்கொள்வதில் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு உதவியளிப்பதற்காக தொழில் நுட்ப நிபுணத்துவ குழுவை நியமித்துள்ளது (தொ.கு) ம.சு.அ யால் தலைமைவகிக்கப்படும் தொ.கு பேசல் பட்டியல் ‘பீ’ யில் பட்டியலிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களை மூலப் பொருட்களாக இறக்குமதி,செய்வதற்கான பரிந்துரைகளையும் சமர்ப்பிக்கின்றது. (பே.உ பட்டியல் ‘ஏ’ யில் பட்டியலிடப்பட்டுள்ள கழிவுப் பொருட்களின் இறக்குமதி, அமைச்சரவையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மாணத்தின் அடிப்படையில் தடைசெய்யப்பட்டுள்ளது)

நாட்டினுள் தீமையான இரசாயனங்கள் மற்றும் தீமையான கழிவுப் பொருட்கள் ஆகியவற்றின் இறக்குமதி சார் விதிமுறைகள் 5 ஜுன் 2013 அன்று வர்த்தமானி இல 1813∴14 ல் இறக்குமதி ஏற்றுமதிச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டது. இந்த விதிமுறைகளை அமுல்படுத்துவதன் ஒரு பகுதியாக 154 கிளியரன்ஸ்கள் 2013ம் ஆண்டு வழங்கப்பட்டன.

**அபாயகர கழிவுகளின் எல்லைகடந்த நகர்வு**

இலங்கையில் பேசல் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கான தகுதிவாய்ந்த அதிகாரசபை என்ற வகையில், ம.சு.அ யானது 2012 ஆம் ஆண்டில் 15 வழியிடைப்பயணத்திற்கும், பேசல் உடன்படிக்கை பட்டியல் ‘ஏ’ யில் பட்டியலிடப்பட்ட கழிவுப் பொருட்கள் (எல்லைக்கடந்த நகர்வு) ஏற்றுமதிக்கும் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 3.3.3 ரொட்டர்டாம் உடன்படிக்கை

#### 3.3.3.1 இலங்கையின் தேசிய இரசாயனப் பக்கவுரு மேம்படுத்தல் மற்றும் இரசாயன முகாமைத்துவத்திற்கான தேசிய அமுல்படுத்தல் திட்டம் தயாரித்தல்

இலங்கையின் தேசிய இரசாயனப் பக்கவுரு மேம்படுத்தல் மற்றும் இரசாயன முகாமைத்துவத்திற்கான தேசிய அமுல்படுத்தல் திட்டம் ஆகியவற்றின் மீதான இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதோடு இதன் தர மேம்படுத்தற் செயற்பாடு தற்போது நடைபெறுகின்றது.

### 3.3.4 இலத்திரனியல் மற்றும் மின் உபகரண முகாமைத்துவம் (இ.மி.உ.மு)

இலத்திரனியல் கழிவு முகாமைத்துவம் பற்றி பொது மக்களிடையே உள்ள விழிப்புணர்வை அதிகரிக்கும் முகமாக இரு நிகழ்ச்சிகள் கொழும்பு பொது மருத்துவமனை மற்றும் குருநாகல் மாநகரசபை ஆகியவற்றில் ஒழுங்குபடுத்தப்பட்டன.

### 3.3.5 அனுபவம் மற்றும் அறிவுப் பகிர்வு

பின்வரும் முகவர்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் /விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றில் வளவாளர்களாக பங்குபற்றியதன் மூலம் கழிவு முகாமைத்துவ பிரிவு தனது பங்களிப்பை விரிவு படுத்தியுள்ளது.

- நேச்சர் சீக்ரெட்ஸ் (பிரைவேற்) லிமிட்டட், ஹொரண
- எஸ் ஓ எஸ் கிராமம், கெஸ்பாவ

# 4. சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் மதீப்பீட்டு பிரிவு

## 4.1. சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு (சு.தா.ம) செயற்பாட்டை நடைமுறைப்படுத்தல்

இக்கருத்திட்டங்களின் பாதகமான சுற்றாடல் தாக்கங்களை தணிக்கும் முகமாக அனைத்து குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டங்களுக்கான சு.தா.ம செயற்பாட்டை இப்பிரிவு நிர்வாகம் செய்யும். தனது பாரிய ஒழுங்கமைப்பு பணியை சு.தா.ம பிரிவு தொடர்ந்தது. இச்செயற்பாடு பின்வருவனவற்றை உள்ளடக்கியது, நோக்கெல்லை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டு கூட்டங்களை கூட்டுதல், சு.தா.ம அறிக்கை குறிப்பு விதிமுறைகள் வரைவு, சு.தா.ம அறிக்கைகளை மதீப்பீடு செய்தல், மற்றும் பொதுமக்கள் பங்கேற்பு செயற்பாடு மற்றும் பின் தொடர் அங்கீகாரம் மற்றும் கருத்திட்ட கண்காணிப்பு ஆகியவற்றுக்கு அனுசரனை வழங்கல்.

2013 ஆம் ஆண்டில், தேசிய சுற்றாடல் சட்டத்தின் 'சீ' பகுதியின் பகுதி IV இன் கீழ் அங்கீகாரம் தேவைப்பட்ட கருத்திட்டங்கள் மொத்தமாக 87 சு.தா.ம பிரிவால் சு.தா.ம ஒழுங்குவிதிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டன. 28 கருத்திட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.59 கருத்திட்டங்கள் முடிவெடுக்கப்படாத நிலையில் உள்ளன.

சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு (சு.தா.ம) பிரிவால் ஆரம்ப சுற்றாடல் மதிப்பீடு (ஆ.சு.ம) ஒழுங்குவிதிகளுக்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்ட பட்டியல்.

| இல. | கருத்திட்டப் பெயர் | சு.தா.ம /ஆ.சு.ம |
|---|---|---|
| 1 | மாவனன குறும் நீர்ச் சக்தி கருத்திட்டம் (எஸ் ஈ ஐ ஏ) | **சு.தா.ம** |
| 2 | கிரிந்தி ஓயா படுகை அபிவிருத்தி - உமா ஓய பல்நோக்கு அபிவிருத்தி கருத்திட்டம் எஸ் ஈ ஐ ஏ | **சு.தா.ம** |
| 3 | கேரவலபிடியவில் உத்தேசிக்கப்பட்ட கடல் மணல் பிரித்தெடுப்பு கருத்திட்டம் (அனுமதி நீடிக்கப்பட்டுள்ளது) | **சு.தா.ம** |
| 4 | பதுளை மாவட்டத்தில் உல்ஹிடிய ஓயா ஊடாக மொரன நீர்த்தேக்க கருத்திட்டம் | **சு.தா.ம** |
| 5 | இரண்டாவது புதிய களனிப்பால கருத்திட்டம் | **சு.தா.ம** |
| 6 | வெளி வட்ட வேகப்பாதை கருத்திட்டத்திற்கான உத்தேசிக்கப்பட்ட அத்துருகிரிய உள்மாறல் | **சு.தா.ம** |
| 7 | வீரவிலவில் உத்தேசிக்கப்பட்ட ஐந்து நட்சத்திர ஹோட்டல் | **ஆ.சு.ம** |
| 8 | லன்சிகம மகா ஓயாவில் கடல்மணல் சுத்தபடுத்தும் கருத்திட்டம் (அனுமதி நீடிக்கப்பட்டுள்ளது) | **ஆ.சு.ம** |
| 9 | ஹொரொவப்பொத்தான - நில தனிப்படுத்தப்படல் கருத்திட்டம் | **ஆ.சு.ம** |
| 10 | பாதுகாப்பு தலைமை அலுவலக கட்டிடத் தொகுதிக்கான பத்தரமுல்லையிலிருந்து அக்குரேகொடவுக்கான உத்தேசிக்கப்பட்ட அணுகல் வீதி | **ஆ.சு.ம** |
| 11 | தெரணியலகையில் உள்ள நய கங்கா குறு நீர்ச் சக்தி கருத்திட்டம் (அநுமதி நீடிக்கப்பட்டுள்ளது) | **ஆ.சு.ம** |
| 12 | மாஸ் ∴பப்ரிக் பார்க் - துல்கிரிய ( பயோ மாஸ் பொய்லரில் உள்ள உலர் கழிவினை எரிப்பதற்கான உத்தேச கருத்திட்டம்) | **ஆ.சு.ம** |
| 13 | **மீரிகம ஏற்றுமதிச் செயர்பாட்டு வலயத்தில் உத்தேசிக்கப்பட்ட உயர் கல்வி நிறுவகம்** | **ஆ.சு.ம** |

**மசுஅ உடன் இணைந்து பிற கருத்திட்ட அனுமதிக்கும் முகவரகங்களால் அனுமதிக்கப்பட்ட கருத்திட்டப் பட்டியல்**

| இல. | கருத்திட்டத்தின் பெயர் | சு.தா.ம / அ.சு.ம |
|---|---|---|
| 1 | ரோஸ் எஸ்டேட் குறும் நீர்ச்சக்தி கருத்திட்டம் பிஏஏ - மகாவலி அதிகாரசபை, இலங்கை | **சு.தா.ம** |
| 2 | மோரகொல்லநீர்ச்சக்தி கருத்திட்டம் பிஏஏ - மகாவலி அதிகாரசபை, இலங்கை | **சு.தா.ம** |
| 3 | உத்தேசிக்கபட்ட மகாகொனவேவ நீர்த்தேக்க கருத்திட்டம்- மகாவலி அதிகாரசபை, இலங்கை | **சு.தா.ம** |
| 4 | உடவலவ இல் உத்தேசிக்கப்பட்ட செண்டுரியா சூழல் நட்பான மெடிடேஷன் ரீட்ரீட் பிஏஏ - வனக்காப்புத் திணைக்களம் | **சு.தா.ம** |
| 5 | சந்த்திரிகா வெவகுறும் நீர்ச்சக்தி கருத்திட்டம் - எம்பிலிப்பிட்டிய, பிஏஏ -மகாவலி அதிகாரசபை, இலங்கை | **ஆ.சு.ம** |
| 6 | மதுரு ஓயா எல்பி குறும் நீர்ச்சக்தி கருத்திட்டம் (வீழ்ச்சி 24-140)பிஏஏ -மகாவலி அதிகாரசபை, இலங்கை(அநுமதி நீடிக்கப்பட்டுள்ளது) | **ஆ.சு.ம** |
| 7 | மதுரு ஓயா எல்பி குறும் நீர்ச்சக்தி கருத்திட்டம் (வீழ்ச்சி 28-450)பிஏஏ -மகாவலி அதிகாரசபை, இலங்கை(அநுமதி நீடிக்கப்பட்டுள்ளது) | **ஆ.சு.ம** |
| 8 | உத்தேசிக்கப்பட்ட 220 கேவி புத்தளம் - அநுராதபுர ஒலிபரப்பு வரிசை - பிஏஏ - சக்தி மற்றும் வலு அமைச்சு | **ஆ.சு.ம** |
| 9 | கிண்ணியா, மூதூர், சம்பூர் இல் உத்தேசிக்கப்பட்ட கனிம மணல் அகழ்வு கருத்திட்டமும் கடற்கரை விஸ்தரிப்பும். பிஏஏ - கரைப் பாதுகாப்பு திணைக்களம் | **ஆ.சு.ம** |
| 10 | உத்தேசிக்கப்பட்ட நீர் முன்னணி இணைந்த விடுதி - கொழும்பு 2. பிஏஏ - நகர அபிவிருத்தி அதிகாரசபை | **ஆ.சு.ம** |
| 11 | உத்தேசிக்கப்பட்ட தீவழி சிட்டி ஹொட்டேல் - ஹொஸ்பிட்டல் வீதி, கொழும்பு 01. பிஏஏ -நகர அபிவிருத்தி அதிகாரசபை | **ஆ.சு.ம** |
| 12 | ∴பெல்ட்ஸ்பர் குவார்ட்ஸ் அகழ்வு கருத்திட்டம் - சமனலதன்ன, டெஹியத்தகண்டிய. பிஏஏ பிஏஏ - மகாவலி அதிகாரசபை, இலங்கை | **ஆ.சு.ம** |
| 13 | வர்த்தகமயப்பட்ட உலோக குவாரி - இபோலோகம. பிஏஏ - வனத் திணைக்களம் | **ஆ.சு.ம** |
| 14 | உலோக குவாரி - கலஹுகல, பொலன்னருவ. பிஏஏ - வனச்சூழல் பாதுகாப்பு திணைக்களம் | **ஆ.சு.ம** |
| 15 | **குகுலேகன்காவத்த மரம் வெட்டும் கருத்திட்டம் (நீடிப்பு) பிஏஏ - சுற்றாடல் அமைச்சு** | **ஆ.சு.ம** |

சுதாம அலகால் செயற்படுத்தப் பட்டுக் கொண்டிருக்கும் திட்டங்களின் பட்டியல்

| இல. | கருத்திட்டத்தின் பெயர் | சு.தா.ம/ ஆ.சு.ம |
|---|---|---|
| 1. | அம்பாந்தோட்டை துறைமுகத்தில் இருந்து மத்தள விமானநிலையம் வரை உத்தேசிக்கப்பட்ட அதிவேகப்பாதை் | சு.தா.ம |
| 2. | மாத்தறையில் இருந்து மத்தள வரை தென் அதிவேகப்பாதையின் நீட்டிப்பு | சு.தா.ம |
| 3. | வடக்கு அதிவேகப்பாதை | சு.தா.ம |
| 4. | ஹொரணவிலிருந்து கொட்டாவ வரை உத்தேசிக்கப்பட புகையிரதப்பாதை | சு.தா.ம |
| 5. | உத்தேசிக்கப்பட்ட குருநாகல் - தம்புள்ளை - ஹபரணை புகையிரதப்பாதை நீடிப்பு கருத்திட்டம் | சு.தா.ம |
| 6. | பொகஹஹென குறும் நீர்ச்சக்தி கருத்திட்டம் - புலத்சிங்கல | சு.தா.ம |
| 7. | உத்தேசிக்கப்பட்ட யான் ஓயா நீர்த்தேக்க அபி. கருத்திட்டம் | சு.தா.ம |
| 8. | உத்தேசிக்கப்பட்ட கீழ் மல்வத்து ஓயா நீர்த்தேக்க கருத்திட்டம் | சு.தா.ம |
| 9. | உத்தேசிக்கப்பட்ட கிதுல் ஓயா நீர்த்தேக்க செயற்றிட்டம் | சு.தா.ம |
| 10. | மொகரகந்தவின் வடிவமைப்பில் மாற்றம் - உயர் எலஹெர வாய்க்கால் செயற்றிட்டம் உள்ளிட்ட களுகங்கா செயற்றிட்டங்கள் | சு.தா.ம |
| 11. | போவெட்டென்ன தேக்கத்திலிருந்து மகாவலிநீரை உயர் மீஓயாவுக்கு திருப்பல், ஹக்நடுன ஓயா படுகை, குருநாகல் மாவட்டம் இற்கான என்.டபிள்யூ.பி. பாதை மாற்று வாய்க்கால் கட்டுமானம் | சு.தா.ம |
| 12. | உத்தேசிக்கப்பட்ட மதுரு ஓயா இடது படுகை மேம்பாட்டு செயற்றிட்டம் (முறை பி) | சு.தா.ம |
| 13. | உத்தேசிக்கப்பட்ட சிறிய அளவிலான விவசாயி அடிப்படையிலான பிபிலே சீனி - சக்தி - பாற்பண்ணை - வீடுசார் பண்ணை இணைந்த அபிவிருத்தி செயற்றிட்டம் | சு.தா.ம |
| 14. | கொண்டொமொனியம் வகையான வீட்டுத்தொகுதி செயற்றிட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட மாற்றங்கள் , கண்டி - ஜிவிஆர் லங்கா (தனியார்) லிமிட்டட் (எஸ்.இ.ஐ.ஏ) | சு.தா.ம |
| 15. | உத்தெசிக்கப்பட்ட எந்தரமுல்லை பட்டினம் அபிவிருத்தி செயற்றிட்டம் | சு.தா.ம |
| 16. | உத்தெசிக்கப்பட்ட “கிராண்ட் பலஸ்” 200 அறை கொண்ட 5 நட்சத்திர ஹொட்டல், குருதெனியா, கண்டி | சு.தா.ம |
| 17. | உத்தெசிக்கபட்ட 5 நட்சத்திர சிட்டி ஹோட்டல் (பெய்ரா சிட்டி ஹோட்டல்) கொழும்பு | சு.தா.ம |
| 18. | ஹப்புககும்புர குறு நீர்ச்சக்தி செயற்றிட்டம், பலாங்கொடை | சு.தா.ம |
| 19. | யாழ்ப்பாணம் கிளிநொச்சி கழிவு துப்புரவு செயற்றிட்டம் | சு.தா.ப |
| 20. | உத்தேசிக்கப்பட்ட கழிவுநீர் அகற்றம் மற்றும் கட்டமைப்பு செயற்றிட்டம், ஹம்பாந்தோட்டை | சு.தா.ப |
| 21. | உத்தேசிக்கப்பட்ட கழிவுநீர் அகற்றம் மற்றும் கட்டமைப்புஅபிவிருத்தி செயற்றிட்டம்,நீர்கொழும்பு | சு.தா.ப |

| இல. | கருத்திட்டத்தின் பெயர் | சு.தா.ம/ ஆ.சு.ம |
|---|---|---|
| 22. | காலி மாநகரசபை பிரதேசத்திற்கான உத்தேசிக்கப்பட்ட கழிவுநீர் அகற்றம் மற்றும் கட்டமைப்புசெயற்றிட்டம், | ஆ.சு.ம |
| 23. | மெட்ரோ கொழும்பு திண்ம கழிவு முகாமை செயற்றிட்டம் | சு.தா.ம |
| 24. | உத்தேசிக்கப்பட சக்திக்கான கழிவு செயற்றிட்டம், கரடியனா | சு.தா.ம |
| 25. | உத்தேசிக்கப்பட்ட 2 x 250 MW நிலக்கரி சக்தி நிலையம், | சு.தா.ம |
| 26. | மன்னார் மாவட்டம், மிச்சிகட்டியில் லெதர் மற்றும் லெதர் பொருட்கள் உற்பத்தி தொகுதிக்கான உத்தெசிக்கப்பட்ட செயற்றிட்டம். | சு.தா.ம |
| 27. | உத்தெசிக்கப்பட்ட பஸ்னகொட நீர்த்தேக்க செயற்றிட்டம் | சு.தா.ம |
| 28. | உத்தேசிக்கப்பட்ட மாத்தறை4ம் நிலை நீர் வழுங்கல் செயற்றிட்டமும் உவர்ப்பு தடையும். | சு.தா.ம |
| 29. | உத்தெசிக்கப்பட்ட சூரியவெவ ஏற்றுமதி செயற்படும் வலயம் | சு.தா.ம |
| 30. | மிரிஜ்ஜாவில ஏற்றுமதி செயற்படும் வலயம் | சு.தா.ம |
| 31. | அம்பாந்தோட்டை சர்வதேச விமானநிலையம் நிலை 2 | சு.தா.ம |
| 32. | பன்வில, கெலேபொக்க அரச பெருந்தோட்டத்தில் மரம் வெட்டமும் மீள் நடுகையும் | சு.தா.ம |
| 33. | பன்வில,அலகொலேஅரச பெருந்தோட்டத்தில் மரம் வெட்டமும் மீள் நடுகையும் | சு.தா.ம |
| 34. | நுவர, மெதமஹா, வூட்சைட் அரச பெருந்தோட்டத்தில் மரம் வெட்டமும் மீள் நடுகையும் | ஆ.சு.ம |
| 35. | உத்தெசிக்கப்பட்ட மிட்லாண்ட் மரம் வெட்டும் செயற்றிட்டம் | ஆ.சு.ம |
| 36. | உத்தேசிக்கப்பட்ட தலபிட்டிகல நீர்த்தேக்க செயற்றிட்டம் | ஆ.சு.ம |
| 37. | உத்தெசிக்கப்பட்ட மத்தளை சர்வதேச விமானநிலைய ஹொட்டேல், ஹம்பாந்தோட்ட | ஆ.சு.ம |
| 38. | ஹோமாகம மேற்கு கடந்துசெல்லும் வீதி | ஆ.சு.ம |
| 39. | கெலனிசிரி பாலத்திலிருந்து கெல்லனிமுல்ல-முல்லேரியா - கொஸ்வத்த வீதிக்கான அணுகல்வீதி கட்டுமானம் | ஆ.சு.ம |
| 40. | மலிம்பொட குறு நீர்ச்சக்தி செயற்றிட்டம் | ஆ.சு.ம |
| 41. | மனகொல குறு நீர்ச்சக்தி செயற்றிட்டம் | ஆ.சு.ம |
| 42. | களுத்துறை மாவட்டம், ஹொரண, உத்தேசிக்கப்பட்ட சக்திக்கான கழிவு செயற்றிட்டம். | ஆ.சு.ம |
| 43. | வடமாகாணத்திற்கான உத்தேசிக்கப்பட்ட சுகாதாரகவனிப்பு கழிவுமுகாமை செயற்றிட்டம் | ஆ.சு.ம |
| 44. | உத்தேசிக்கப்பட்ட ஃபின்ஃபிஷ் செயற்றிட்டம், திருகோணமலை | ஆ.சு.ம |
| 45. | பொல்பிட்டியவிலிருந்து பன்னிப்பிட்டியவுக்கான உத்தேசிக்கப்பட்ட 132கேவி ட்ரான்ஸ்மிஷன் லைன் செயற்றிட்டம் | ஆ.சு.ம |
| 46. | அநுராதபுரத்திலிருந்து மன்னாருக்கான உத்தேசிக்கப்பட்ட 132கேவி ட்ரான்ஸ்மிஷன் லைன் செயற்றிட்டம் | ஆ.சு.ம |
| 47. | நெடுகுடவிலிருந்து மன்னாருக்கான உத்தேசிக்கப்பட்ட 132கேவி ட்ரான்ஸ்மிஷன் லைன் செயற்றிட்டம் | ஆ.சு.ம |
| 48. | பொல்பிட்டியவிலிருந்து புதிய ஹபரணைக்கான ட்ரான்ஸ்மிஷன் லைன் | ஆ.சு.ம |
| 49. | உத்தேசிக்கப்பட்ட சீனி சுத்திகரிக்கும் செயற்றிட்டம், அம்பாந்தோட்டை | ஆ.சு.ம |

| இல. | கருத்திட்டத்தின் பெயர் | சு.தா.ம/ ஆ.சு.ம |
|---|---|---|
| 50. | உத்தேசிக்கப்பட்ட மகும்புர பட்டினம் அபிவிருத்தி செயற்றிட்டம். | **ஆ.சு.ம** |
| 51. | மனிங் சந்தையை பேலியகொடவுக்கு மாற்றல் | **ஆ.சு.ம** |
| 52. | கழிவு மற்றும் பயன்பாட்டு எண்ணை சுத்திகரிப்பு செயற்றிட்டம், வகவத்த, ஹொரண | **ஆ.சு.ம** |
| 53. | உத்தேசிக்கப்பட்ட பாரிய தொழிற்றுறை வலயம் ஆக்கல் செயற்றிட்டம், சம்பூர், திருகோணமலை | **ஆ.சு.ம** |
| 54. | உத்தேசிக்கப்பட்ட சீமேந்து அரைத்தல், களஞ்சியப்படுத்தல், பொதிசெய்தல் நிலையம், ஹம்பாந்தோட்டை | **ஆ.சு.ம** |
| 55. | கொழும்பு துறைமுக நகர் அபிவிருத்தி செயற்றிட்டத்தின் மீட்புக்கான கடல்மணல் அகழ்தல் | **ஆ.சு.ம** |
| 56. | ஹம்பாந்தோட்ட எம்.ஆர்.எம்.ஆர். துறைக்கான தொழிற்றுறை வலயம். | **ஆ.சு.ம** |
| 57. | உத்தேசிக்கப்பட்ட பெல்லகஸ்வெவ தொழிறுறை பூங்கா செயற்றிட்டம், ஹம்பாந்தோட்டை | **ஆ.சு.ம** |
| 58. | கொழும்பின் மழைநீர் வடிகாலுக்கான நுண் கால்வாய்களின் கட்டுமானம் | **ஆ.சு.ம** |
| 59. | **உத்தேசிக்கப்பட்ட பொது உயிர்-மருத்துவ கழிவி பரிகரித்தல் வசதி, கட்டுநாயக்க** | **ஆ.சு.ம** |

மேற்படி கருத்திட்டங்களுக்கு மேலதிகமாக, சிக்கலான சுற்றாடல் பிரச்சினைகளை தோற்றுவிப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டங்களின் ஆரம்ப சுற்றாடல் மதிப்பீடு ( ஆ.சு.ம) செயற்பாட்டு நடைமுறையாக்கமானது ம.சு.அ மாகாண உத்தியோகத்தர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இக் கருத்திட்டங்களை வழிமுறையாக்கம் செய்யும் செயற்பாட்டில் சு.தா.ம பிரிவு நெருக்கமாக பணியாற்றியதுடன், அவசியமான உதவிகளையும் வழிகாட்டல்களையும் அவசியமான உதவிகளையும் வழிக்காட்டல்களையும் அவசியவேளைகளில் வழங்கியது.

மேலும், ஏனைய கருத்திட்ட அங்கீகாரமளித்தும் முகவராண்மைக்கு அவற்றில் வழங்கப்பட்ட கருத்திட்டங்களுக்கான சு.தா.ம நடைமுறையை நிறைவேற்றுவதற்கான தொழில்நுட்ப உதவியும் வழங்கப்பட்டது.

### 4.1.1 அநுமதிக்கப்பட்ட சு.தா.ம /ஆ.சு.ம செயற்றிட்டங்களை கண்காணித்தல்

சு.தா.ம. அலகானது அனுமதி நிபந்தனைக்கு இணங்குவதை உறுதிப்படுத்துவதற்கான, ஏற்கனவே அனுமதியளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் மீதான தனது வழமையான இணக்க கண்காணிப்பை தொடர்ந்தது. பின்வரும் செயற்றிட்டங்களானவை இருமாதத்திற்கொருமுறையான சந்திப்புகள் மற்றும் இடவருகைகள் மூலம் வழமையாக கண்காணிக்கப்பட்டன.

**2013ல் கண்காணிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் இவை:**

| | |
|---|---|
| 1 | கொழும்புநகர வெளிவட்ட வேக வீதிசெயற்றிட்டம் (நிலை 1,2,3) |
| 2 | தெற்கு போக்குவரத்து அபிவிருத்தி செயற்றிட்டம் |
| 3 | களுகங்கை நீர்த்தேக்கம் மற்றும் விவசாய விரிவாக்க செயற்றிட்டம் |
| 4 | கொழும்பு - கட்டுநாயக்க அதிவேகச்சாலை செயற்றிட்டம் |
| 5 | உமா ஓய பல்நோக்கு அபிவிருத்தி செயற்றிட்டம் |
| 6 | மொரககந்தை விவசாய அபிவிருத்தி செயற்றிட்டம் (பிஏஏ - விவசாய அமைச்சு) |
| 7 | நொச்சியகமவில் உள்ள காட்டு பாறை தோட்ட ஹொட்டேல் செயற்றிட்டம் |

| 1 | கொழும்புநகர வெளிவட்ட வேக வீதிசெயற்றிட்டம் (நிலை 1,2,3) |
|---|---|
| 8 | உத்தேசிக்கப்பட்ட கொகாகொட டம்ப் இடத்தின் புனரமைப்பு மற்றும் கண்டி மாநகரசபைக்கான இணைந்த திண்மக்கழிவு முகாமை முறைமை அமைத்தல் செயற்றிட்டம் |
| 9 | ப்ரோட்லாண்ட் குறுநீர்ச்சக்தி செயற்றிட்டம் |
| 10 | மதுரு ஓயா குறு நீர்ச்சக்தி செயற்றிட்டம் - பிஏஏ - மகாவலி அதிகாரசபை இலங்கை |
| 11 | கிதுல்கல குறுநீர்ச்சக்தி செயற்றிட்டம் |
| 12 | ப்ரோட்லாண்ட் குறுநீர்ச்சக்தி செயற்றிட்டம் - பிஏஏ - மகாவலி அதிகாரசபை இலங்கை |
| 13 | ரொஸ் எஸ்டேட் குறுநீர்ச்சக்தி செயற்றிட்டம் - பிஏஏ - மகாவலி அதிகாரசபை இலங்கை |
| 14 | கொலடெனிய குறுநீர்ச்சக்தி செயற்றிட்டம், நாவலப்பிட்டி - பிஏஏ - மகாவலி அதிகாரசபை இலங்கை |
| 15 | ரஜ்ஜம்மான குறு நீர்ச்சக்தி செயற்றிட்டம் - பிஏஏ - மகாவலி அதிகாரசபை இலங்கை |
| 16 | சியபலாகஸ்தென்ன குறு நீர்ச்சக்தி செயற்றிட்டம் |
| 17 | முல்கம குறு நீர்ச்சக்தி செயற்றிட்டம் |
| 18 | ரன்வல ஓயா குறு நீர்ச்சக்தி செயற்றிட்டம் |
| 19 | புனகல குறு நீர்ச்சக்தி செயற்றிட்டம் |
| 20 | ரக்வனகங்கா குறு நீர்ச்சக்தி செயற்றிட்டம் |
| 21 | மதுகேட் குறு நீர்ச்சக்தி செயற்றிட்டம் - பிஏஏ - வன திணைக்களம் |
| 22 | அம்பேவல காற்றுச் சக்தி செயற்றிட்டம் - பிஏஏ - வனஜீவராசி பாதுகாப்பு திணைக்களம் |
| 23 | கொழும்பு துறை விரிவாக்க செயற்றிட்டம் - பிஏஏ - கரைப் பாதுகாப்பு திணைக்களம் |
| 24 | டொலுந, லொரவத்தையிலுள்ள ஆயுர்வேத விவசாய நில அபிவிருத்தி |
| 25 | தொழிற்றுறையின் கட்டுமான நோக்கிற்கான கடல் மணல் அகழ்வு |

### 4.1.2 சு.தா.ம /ஆ.சு.ம நடைமுறையை ஒழுங்குபடுத்தல்.

- **சு.தா.ம ஒழுங்குவிதிகளின் மீளாய்வு**

1993 யூன் 24 ஆம் திகதிய 772 /22 ஆம் இலக்க அரசாங்க அதிவிஷேட வர்தமானியில் வெளியிடப்பட்ட கருத்திட்டங்கள் மீளாய்வு செய்யப்பட்டதுடன் சம்பந்தப்பட்ட பங்குதாரார்களிடம் கலந்தாலோசிக்கப்பட்டு புதிய கருத்திட்டங்கள் மற்றும் கைத்தொழில் கருத்திட்டங்கள் அடங்கிய பட்டியலொன்றை கூட்டிணைப்பதற்கு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. உலக வங்கி அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகளின்படி சு.தா.ம. ஒழுங்குவிதிகளும் திருத்தபட்டன. செயன்முறையை ஒழுங்குபடுத்துவதற்காக பிஏஏக்களின் பட்டியலும் திருத்தப்பட்டது. திருத்தப்பட்ட குறித்துரைக்கப்ப்ட்ட செயற்றிட்டப்பட்டியல் மற்றும் ஒழுங்குவிதிகள் வர்த்தமானியில் வெளியிடப்படும்.

- **சு.தா.ம. பயிற்சி நிகழ்ச்சிகள்**

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சி, இயற்கையின் பாதுகாப்பிற்கான சர்வதேச ஒன்றியம், சூழல் நீதிக்கான மையம் ஆகியவற்றோடு சு.தா.ம. அலகு இணைந்து, தீவிர சூழல் தாக்க மதிப்பீடு பயிற்சி

நிகழ்ச்சியை ஒழுங்குசெய்தது. இந்தகற்கைநெறியானது கண்டி ட்ரீ ஓ.'.ப் லை.'.ப் ஹொட்டேலில் 2013 டிசெம்பர் 14 - 22ம் திகதிவரை நடைபெற்றது. கற்கைநெறியின் முதலாம் பகுதியானது சு.தா.ம. இன் மேலானபார்வை மற்று எண்ணக்கரு ரீதியான சட்டகவுரு கற்றியும் இரண்டாம் பாதியானது சு.தா.ம. இன் பிரயோகங்கள் சார் கையிலுள்ள அநுபவங்கள் பற்றியும் இருந்தது. இந்நிகழ்ச்சியின் கீழ் முதன்முறையாக தொடர்ச்சியான இருநாள் பட்டறை நடப்பது அறிமுகம் செய்யப்பட்டது.

மத்திய மற்றும் மாகாண மட்ட அலுவலர்கள், செயற்றிட்ட முன்மொழிவாளர்கள், சுதாம தயாரிப்புடன் உடன் இணைந்த ஆலோசகர்கள், கல்வியாளர்கள், ஆய்வாளர்கள், செயற்றிட்ட அனுமதிக்கும் முகவரகங்களின் (பிஏஏ) சூழல் கலங்களின் உறுப்பினர்கள் மற்றும் சுதாம செயற்பாட்டில் சம்பந்தப்பட்ட அரசு சாரா அமைப்புகளின் (என்.ஜி.ஓ) உறுப்பினர்கள் ஆகியோருக்காக இந்தக் கற்கைநெறி வடிவமைக்கப்பட்டது.

இந்த அலகானது திண்ம கழிபு முகாமை, நீர் தாக்க மதிப்பீடு, உயிர்ப்பல்வகைமை தாக்க மதிப்பீடு மற்றும் சூழல் தாக்கங்களுக்கான பொருளாதார மதிப்பீடு ஆகிய அம்சங்களில் 2 நாள் பட்டறைகளை மசுஅ ஊழியர்களுக்காக நடாத்தியது. இந்த பட்டறைகள் ஜுன் மற்றும் நவம்பரில் சி.இ.டி.ஆர்.ஏ.சி. பலவத்தையில் நடைபெற்றன.

மேலதிகமாக சு.தா.ம. செயன்முறை பற்றிய பயிற்சி நிகழ்ச்சியானது வனஜீவராசி பாதுகாப்பு திணைக்கள கனிஷ்ட்ட அலுவலர்களுக்காக நடாத்தப்பட்டது.

- **இலங்கை மற்றும் ஜப்பான் இடையேயான சு.தா.ம. மீதான இரட்டை நிகழ்ச்சி**

ஆசிய சூழல் இணக்கப்பாடு மற்றும் அமலாக்க வலைப்பின்னல் (ஏ.ஈ.சி.ஈ.என்) ஆனது ஏடிபி இன் நிதியளிப்புடன், இலங்கை, ஜப்பானுக்கு இடையிலான சுதாம மீதான இரட்டை நிகழ்ச்சி நடத்துவதற்கான முன்னெடுப்பு நடவடிக்கையை எடுத்தது. இந்த நிகழ்ச்சியின் கீழ் சுதாம உடன் சம்பந்தப்பட்ட அலுவலர்களின் கொள்ளளவு அபிவிருத்தி மற்றும் தேரப்பட்ட துறைகளுக்கான வழிகாட்டல்முறைமைகளை தயாரித்தல் ஆகியவை எதிர்பார்க்கப்பட்டன. இந்த நிகழ்ச்சியின் ஆரம்பம அடிச்சுவடாக, 2013ம் ஆண்டு டிசம்பர் 10ம் திகதியன்று தாஜ் சமுத்ரா ஹோட்டலில் பங்காளர் பட்டறை நடைபெற்றது. இரட்டை நிகழ்ச்சிக்கான பிரச்சனைகளை மற்றும் பயிற்சித்தேவைப்பாடுகளை அடையாளம் காண என்று, ஜப்பான் மற்றும் ஏ.ஈ.சி.ஈ.என் செயலகம் ஆகியவற்றில் இருந்து தலா இரு வளவாளர்கள் இந்தப் பட்டறையில் பங்குபற்றினர். இலங்கையிலுள்ள சுதாம உடன் சம்பந்தப்பட்ட 30 க்கும் அதிகமான நபர்கள் மேற்சொன்ன பட்டறையில் பங்குபற்றினர்.

- **சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரிப்பு ∴ தொழினுட்ப உதவிக்கான ஆலோசனை அமைப்புக்களின் பதிவு**

ஏற்கனவே இரிந்த, சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரிப்பு ∴ தொழினுட்ப உதவிக்கான ஆலோசனை அமைப்புக்களின் பட்டியலானது தரவேற்றப்பட்டது. ஆலோசகர்களின் புதிய பட்டியலானது மசுஅ இணையத்தளத்தினூடாக வெளியிடப்படும்.

### 4.1.3 ஏனைய நடவடிக்கைகள்

மேற்படி நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக,2013 ஆம் ஆண்டில் பின்வரும் கூட்டங்கள் /தள பரிசீலனைகளிலும் சு.தா.ம பிரிவு கலந்து கொண்டது.

- தேசிய நெடுஞ்சாலைதுறை கருத்திட்டம் பற்றிய குழுக் கூட்டங்களை முன்னெடுத்தல்.
- வெளிச்சுற்று நெடுஞ்சாலைதுறை கருத்திட்டம் பற்றிய குழக் கூட்டங்களை முன்னெடுத்தல்.

- வடக்கு வீதி இணைப்பு கருத்திட்டம் பற்றிய குழுக்கூட்டங்களை முன்னெடுத்தல்.
- மாகாண வீதி புணரமைப்பு கருத்திட்டம் பற்றிய குழுக் கூட்டங்களை முன்னெடுத்தல்.
- மொரகஹகந்த மற்றும் களுகங்கை கமத்தொழில் அபிவிருத்தி பற்றிய குழுக்கூட்டங்களை முன்னெடுத்தல்.
- தெற்கு போக்குவரத்து அபிவிருத்தி கருத்திட்டம் பற்றிய கருத்திட்ட ஒழுங்கிணைப்புக் குழு கூட்டங்கள்.
- கொழும்பு – கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை கருத்திட்டம் பற்றிய கருத்திட்ட ஒழுங்கிணைப்பு குழு கூட்டங்கள்.
- வெளிச்சுற்று நெடுஞ்சாலை கருத்திட்டம் பற்றிய கருத்திட்ட ஒருங்கிணைப்புக் குழு.
- யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் கழிவு துப்பரவு செயறிட்டம் மீதான முன்னெடுப்பு குழுக் கூட்டங்கள்

## 4.2. இயற்கை வளங்கள் முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புப் பிரிவு

இப்பிரிவின் முக்கிய பணிகள் உள்ளடக்குவன யாதெனில் இயற்கை வளங்கள் முகாமைத்துவம் (இ.வ.மு) சுற்றாடல் பாதுகாப்பு பகுதிகளை பிரகடணப்படுத்தல் ( சு.பா.ப), பிரகடணப்படுத்தப்பட்ட பகுதிகளையும் மற்றும் நாட்டிலுள்ள ஈரலிப்பான நிலங்களையும் முகாமைத்துவம் செய்தல், ஒழுங்குவிதிகளை வடிவமைத்தல், இ.வ.மு பற்றிய வழிமுறைகளை தயாரித்தல், தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசங்களுக்குள் அனுமதிக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கான கருத்திட்ட அங்கீகார நடைமுறையை மேற்கொள்ளல், தேசிய ஈரநிலக் கொள்கைக்கு இணங்க ஈரநில செயற்திட்டம் பற்றிய தகவல் விடயங்களை தயாரித்தல் மற்றும் மேற்படி பணிகளுடன் சம்பந்தப்பட்ட ஈரநில நடவடிக்கைகளை நிறைவேற்றல் என்பனவாகும். 2013ல் பின்வரும் நடவடிக்கைகள் இயற்கை வளங்கள் முகாமைத்துவம் சார்பாக முன்னெடுக்கப்பட்டன.

**இயற்கை வளங்கள் முகாமைத்துவம்**

**4.2.1. இயற்கை வளங்கள் முகாமைத்துவம் மீதான முகவரமைப்பிற்குள்ளான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்**

அனைத்து இயற்கை வளங்கள் முகாமைத்துவம் சம்பந்தப்பட்ட பங்காளர் முகவரகங்கள் உடனும் இரு கூட்டங்கள் 2013 இல் ஏற்பாடு செய்யப்பட்டன. வர்த்தக தேவைகளுக்காக நிதத்தடி நீரை எடுத்தல் சார்பான ஒழுங்குபடுத்தலுக்கான உடனடித்தேவைப்பாடுக்காக குழுவானது நீர் வளங்கள் சட்டத்தின் பிரிவுகளின் கீழ் ஒழுங்குவிதிகளை தயாரித்து உள்ளது. தயாரித்த ஒழுங்குவிதிகள், சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் நீர் வளங்கள் அமைச்சுக்கு கபினட் ஆவணம் தயாரிப்பதற்காக அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது.

**4,2,2, தகவல் கையேடு தயாரித்தல்**

**கையேட்டு புத்தகம்**

1997 இல் தயாரிக்கப்பட்ட இயற்கை வளங்கள் முகாமை கையேட்டு புத்தகமானது, பங்காளர் முகவரகங்களின் ஆலோசனையுடன் மீள் பார்வைக்குட்படுத்தபட்டு மீளமைக்கப்பட்டு மீள

அச்சிடப்பட்டது. பங்காளர் முகவரகங்கள் மத்தியில் புதிய புத்தகத்தின் பிரதிகள் விநியோகிக்கப்பட்டது.




**துண்டுபிரசுரங்கள்**

மண் அகழ்வு மற்றும் மரகலகந்த ஈபிஏ மீதான துண்டுப்பிரசுரங்கள் தயாரிக்கப்பட்டு, இந்த அதிகாரசபையின் மாகாண மற்றும் மாவட்ட அலுவலகங்கள் மற்றும் பிற சம்பந்தபட்ட முகவரகங்களுக்கு விநியோகிக்கப்பட்டது.







**என்.ஆர்.எம். அறிமுக நூல்கள்**

இயற்கை வளங்கள் முகாமை மீதான் ஒரு நூல் தயாரிக்கப்பட்டது. இது, நிலம், நீர், காற்று, கனிமம், காடுகள், வனவாழ்வு இன்ன பிற போன்ற இயற்கை வளங்கள் பற்றிய தகவல்களை சுருக்கமாகவும் குறிப்புகளுடனான அட்டவணைகளுடனும் உள்ளடக்குகிறது.

### 4.2.3 விழிப்புணர்வு நிகழ்ச்சி

என்.ஆர்.எம். அலகால், மண்ணின் பேண் தகு பயன்பாட்டின் மீதான பயிற்சியாளர் பயிற்சிக் கையேட்டினை அடிப்படையகக் கொண்டு இலங்கை முழுவதும் 7 மாவட்டங்களில் 7 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டன. இலங்கை நீர் கங்காளர் நிறுவகத்தோடு இணைந்து, இயற்கை வளங்களின் பாதுகாப்பு மற்றும் முகாமை மீதான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், பாடசாலை மாணவர்கள், காவல்துறை மற்றும் விசேட இலக்கு ப்படை உள்ளிட்ட அரச அதிகாரிகள் ஆகியோருக்காக நடாத்தப்பட்டது.




### 4.2.4. சூழல் முக்கியத்துவமுள்ள இடங்கள், உயிரியல் அல்லது வரலாற்று ரீதியாக குறிப்பிடத்தக்க மரங்கள் அருகின் குறியீட்டுப்பலகைகள் வைத்தல்.

இந்த நடவடிக்கையானது 2012 இல் ஆரம்பிக்கப்பட்டது. இது பொதுமக்களுக்கு அவ்வகையான இடங்களைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான நோக்கோடு தொடர்ந்தும் 2013ம் ஆண்டிலும் தொடர்ந்தது. குறியீட்டுப்பலகைகள் வைக்கப்பட வேண்டிய அமைவிடங்களின் தேர்வு முடிவுற்றது. நான்கு (4) குறியீட்டுப்பலகைகள் திருகோணமலை டி.எஸ். பிரிவு, கொடபொல டி.எஸ். பிரிவு, நெல்லுவ டி.எஸ். பிரிவு மற்றும் சூரியவெவ டி.எஸ். பிரிவு ஆகிய இடங்களில் வைக்கப்பட்டன.





### 4.2.5. இயற்கை வளங்கள் முகாமைத்துவம் மீதான தொழினுட்ப வழிகாட்டலை அரச மற்றும் அரச சார்பற்ற முகவரகங்களுக்கு வழங்கல்.

இந்த அலகின் அலுவலர்கள் மசுஅ இனை பிரதிநிதித்துவப்படுத்தி, பிற அரச நிறுவகங்களான நகர அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை நில மீட்டெடுத்தல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம், புவியியல் ஆய்வு மற்றும் அகழ்வு நிறுவகம், தேசிய நீரியல் அபிவிருத்தி அதிகாரசபை, சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு, தேசிய விஞ்ஞான மன்றம், ஐயூசிஎன், நாடாளுமன்ற ஆலோசனைக்குழுக்கள் இன்ன பிற ஆகியவற்றின் திட்டமிடல் குழுக்கள், தொழினுட்ப மதிப்பீட்டு குழுக்கள் ஆகிய பல்வேறு குழுக்களுக்கு இயற்கை வளங்கள் முகாமைத்துவம் சார் தொழினுட்ப உதவியை வழங்குவர். இதுபோன்ற நூற்றுக்கும் மேலான கூட்டங்களில் 2013ல் அலுவலர்கள் பங்கு கொண்டனர்.

சூழல் விடயங்களுக்கான பல்வேறு அமைச்சுகள், நிறுவகங்களால் அனுப்பபட்ட கபினட் ஆவணங்கள், அறிக்கைகள், முகாமைத்திட்டங்களின் கருத்துகள், அவதானங்கள் ஆகியன உரிய நிறுவகங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

### 4.2.6 நீர் வளங்கள், மீன்பிடி பிரதேசங்கள் ஆகியவற்றின் பாதுகாப்பு

நீர் வளங்கள், மீன்பிடி பிரதேசங்கள் ஆகியவற்றின் பாதுகாப்பு மற்றும் முகாமைக்கான ஒரு கொள்கை மற்றும் நடவடிக்கைத்திட்டமானது, காணி அமைச்சின் நாடாளுமன்ற ஆலோசனைக் குழுவால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி ஒரு குழுவால் தயாரிக்கப்பட்டு வருகிறது. என்.ஆர்.எம். மற்றும் எம் அலகு ஆனது மசுஅ இனை அக்குழுவில் பிரதிநிதித்துவப்படுத்தி, தேவையான தொழினுட்ப உள்ளீடுகளை தருகிறது.

இங்கிரிய மற்றும் ஹொரண பிரதேச செயலகப் பிரிவுகளில் நீர் வளங்கள் காப்புக்கான ஒரு நிகழ்ச்சியானது, ஆரம்பிக்கப்பட்டு நீர்வளங்களை அடையாளப்படுத்தல் போன்ற முதல்நிலை வேலைகள் முடிவடைந்துள்ளன.

### 4.2.7. நீர்வீழ்ச்சிகளின் காப்பு

இலங்கையின் நீர்வீழ்ச்சிகளின் காப்பிற்காக ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சியின் கீழ், தயாரிக்கப்பட்ட பட்டியலிலுள்ள நீர்வீழ்ச்சிகள் மீதான தேவையான தகவலை சேகரித்தல், ஆய்வின் போது புதிய நீர்வீழ்ச்சிகளை அடையாளம் காணல் ஆகியவற்றுக்காக ஓர் ஆய்வை நடத்துவதற்கு சபையின் அநுமதி பெறப்படு உள்ளது. ஆய்வின்போது பாவிக்கப்பட உள்ள கேள்விப்பத்திரமானது தயாரிக்கப்பட்டுள்ளதுடன், மசுஅ அலுவலர்களுக்கான இவ் ஆய்வு சார் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் ஒழுங்கு செய்யப்படன.

2) சூழல் காப்பு பிரதேசங்களின் அறிவிப்பு மற்றும் முகாமைத்துவம்

| | ஈபிஏ இன் பெயர் | நிலமை |
|---|---|---|
| **01** | வெலெளவெவத்த - வதுரன<br><br>(வர்த்தமானி இல 1598 / 21, திகதி – 2009.04.24) | இடைக்கால முகாமைத்துவ திட்டமானது முடிவடைந்தது. வெலெளவெவத்த - வதுரன<br><br>ல் இரு குறியீட்டுப் பலகைகள் வைக்கப்பட்டன.<br><br>இரு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன |
| **02** | பொல்கொட - (வர்த்தமானி இல - 1634/23 திகதி 2009.12.30) | பொல்கொட ஈபிஏ இன் எல்லைகளை அளவிடுதல் நடைபெறுகிறது. பொல்கொட ஈபிஏ யின் பாதுகாப்பு மீதான 6 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் அரச அதிகாரிகளுக்கு நடாத்தப்பட்டன. 25 குறியீட்டு பலகைகள் வைக்கப்பட்டன. |
| **03** | முத்துராஜவெல - (வர்த்தமானி இல - 1466/26 - திகதி 2006.10.13) | 10 குறியீட்டுப்பலகைகள் ஈபிஏ இன் எல்லைகளில் வைக்கப்பட்டன. ஒரு தகவல் பலகையானது வடிவமைக்கப்பட்டு இறுதிப்படுத்தப் பட்டு உள்ளது. |
| **04** | தலங்கம - (வர்த்தமானி இல. 1487/10 - திகதி - 2007.03.05) | ஆறு குறியீட்டுப் பலகைகள் தலங்கம ஈபிஏ இல் வைக்கப்பட்டன. தலங்கம ஈபிஏ ற்கான தகவல் பலகைகளின் தயார்படுத்தல் ஆரம்பமாகி உள்ளது.<br><br>அரச அதிகாரிகளுக்கு இரு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.<br><br>கோப்பிடல் மற்றும் கட்டிடங்களின் கட்டுமானம் ஆகியவற்றுக்காக, 5 முன்மொழிவுகள் கிடைத்தன.ஆனால் அவை ஈபிஏ இனுள் செய்யத்தகாத நடவடிக்கைகளாதலால் நிராகரிக்கப்பட்டன. |
| **05** | க்ரெகொரி ஏரி (வர்த்தமானி இல - 1487/10 - திகதி 2007.03.05) | ஆறு குறியீட்டுப் பலகைகள் வைக்கப்பட்டன. 2013 ஏப்ரலில் விழாக்காலத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் அச்சிடப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கபட்டன. |
| **06** | ஹந்தான - (வர்த்தமானி இல - 1641/28 - திகதி - 2010.02.17) | இரு ஹந்தான ஈபிஏ முகாமைக்குழு கூட்டங்கள் நிகழ்ந்தன. 38 செயற்றிட்டங்கள் அனுமதிக்கப்பட்டன. 8 செயற்றிட்டங்கள் நிராகரிக்கப்பட்டன.<br><br>சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சைன் கௌரவ அமைச்சர் அவர்களால் ஹந்தான ஈபிஏ முகாமைக்குழுவால் முன்மொழியப்பட்ட,ஈபிஏ இன் எல்லை மறுசீரமைப்புக்கு அநுமதி அளிக்கப்பட்டது. வெளி |

| | ஈபிஏ இன் பெயர் | நிலமை |
|---|---|---|
| | | விற்பன்னர்களின் தொழினுட்பத் துணையோடு ஒருமுகப்படுத்தப்பட்ட முகாமைத்துவத்திட்டம் தயாரித்தல் ஆரம்பமாகியுள்ளது. |
| **07** | நக்கிள்ஸ் மலைத்தொடர் - (வர்த்தமானி இல: 1507/09 திகதி 2007.07.23) | ஈபிஏக்கு உள்ளான தனியார் காணிகளை பெறுதலானது வனத்திணைக்களத்தால் செயற்படுத்தப் படுகிறது. |
| **08** | மரகல மலைத்தொடர்(மொனராகல) (வர்த்தமானி இல: 1560/26 திகதி 2008.08.01 ) | ஈபிஏ மற்றும் மாற்றீடான எல்லைகள்,மொனராகலை பட்டின பிரதேசத்தை ஈபிஏயிலிருந்து வெளியேற்றுவதற்காக அடையாளம் காணப்பட்டது.<br><br>மீளமைக்கப்பட்ட எல்லையை அளவீடு செய்ய அளவீட்டுத்திணைக்களத்தால் நிதி சேர்க்கப்பட்டது. 4 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. சம்பந்தப்பட்ட பங்காளர்களுக்கு ஒரு துண்டுப்பிரசுரம் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டது.<br><br>வெளி விற்பன்னர்களின் தொழினுட்பத் துணையோடு ஒருமுகப்படுத்தப்பட்ட முகாமைத்துவத்திட்டம் தயாரித்தல் ஆரம்பமாகியுள்ளது. |

**முன்மொழியப்பட்ட ஈபிஏக்களின் நிலை (ஜனவரி - ஒக்டோபர் 2013)**

| | | |
|---|---|---|
| **01** | **பெந்தோட்ட கங்கை** | **உத்தேசிக்கப்பட்ட பெந்தோட்ட கங்கா ஈபிஏ இன் பல பகுதிகள் ஆனவை, கடை பாதுகாப்பு மற்றும் கரை வளங்கள் முகாமைத்துவ திணைக்களம் (சிசிமற்றும் சிஆர்.எம்டி) இன் கீழ் மீளமைக்கப்பட்ட கரை வலயத்துள் வருகிறது. அதனால், மசூஅ மற்றும் சிசி மற்றும் சி.ஆர்.எம்.டி இடையே நடந்த கூட்டத்தில் குறித்த இடத்தை முகாமை செய்வது சிசி மற்றும் சி.ஆர்.எம்.டி இன் கிழ் வரும் என தீர்மானிக்கப்பட்டது.** |
| **02** | டெடிகமுவ கங்கை | வர்த்தமானியானது இறுதிப்படுத்தப்பட்டு சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சுக்கு அறிவிப்புக்கான தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்காக அனுப்பப்பட்டு உள்ளது. |
| **03** | கொக்கல கடலேரி | உத்தேசிக்கப்பட்ட கொக்கல கடலேரிஈபிஏ இன் பல பகுதிகள் ஆனவை, கடை பாதுகாப்பு மற்றும் கரை |

| | | |
|---|---|---|
| | | வளங்கள் முகாமைத்துவ திணைக்களம் (சிசிமற்றும் சிஆர்.எம்டி) இன் கீழ் மீளமைக்கப்பட்ட கரை வலயத்துள் வருகிறது. அதனால், மசுஅ மற்றும் சிசி மற்றும் சி.ஆர்.எம்.டி இடையே நடந்த கூட்டத்தில் குறித்த இடத்தை முகாமை செய்வது சிசி மற்றும் சி.ஆர்.எம்.டி இன் கிழ் வரும் என தீர்மானிக்கப்பட்டது |
| **04** | பன்சல்தென்ன, உக்குவெல (மாத்தளை) | உயிர்ப்பல்வகைமை அளவீடு முடிந்துள்ளது. உத்தேசிக்கப்பட்ட ஈபிஏ இன் எல்லைகளை அடையாளப்படுத்தல் சார் பிரச்சனைகளை கலந்துரையாட மாத்தளை மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் கூட்டம் நிகழ்ந்தது. அளவீட்டு திணைக்களத்திற்கு அளவீட்டுக் கோரிக்கை அனுப்புவதற்காக உக்குவல பிரதேச செயலாளர் பணியொதுக்கம் செய்யப்பட்டார். |
| **05** | வரடென்ன - ஹக்கிந்த (கண்டி) | இந்த தனித்தன்மை வாய்ந்த இடத்தை ஈபீஏ ஆக அறிவிக்கும் படி உயிர்ப்பல்வகைமை செயலகம் மசுஅ க்கு பரிந்துரை செய்தது. இந்த இடம் மகாவலி அதிகார சபையின் கீழ் உள்ளதால், மசுஅ ஆனது எம்.ஏ.எஸ்.எல் சட்டத்தின் கீழ், உள்ள பாதுகாப்பிற்கான ஒழுங்கிவிதிகள், சட்டப்பிரிவுகள் பற்றி கேட்டுள்ளது. |
| **06.** | கல்லெல்ல - அத்தொட்ட - தங்கொலகெல்லே (இரத்தினபுரி) | உத்தேசிக்கப்பட்ட ஈபிஏ இன் தகவல் திரட்டும் பணி நடைபெறுகிறது. |

**4.2.8.3. ஈரநில சஞ்சிகை**

ஈரநிலம் பற்றிய ஆக்கங்கள் ஆய்வுக்கட்டுரைகள் அடங்கிய ஒரு ஈரநில சஞ்சிகையானது, தயாரிக்கப்பட்டதோடு முதல் இதழ் ஆனது ஓகஸ்ட் 2013ல் வெளியிடப்பட்டது.



#### 4.2.8.4. "தெத்பிம் அசிரிய" மீதான கையேட்டு நூல்

"தெத்பிம் அசிரிய" கையேட்டு நூல் ஆனது மீள்பார்வைக்குட்படுத்தப் பட்ட ட்ரா.ப்ட் நூல் ஆகும். இது "ரம்சார்" இடங்கள் மற்றும் ஈரநில பெறுமதி போன்ற முக்கிய தகவல்கள் உள்ளடக்கப்படுவதற்காக தயாரிக்கப்பட்டது.

#### 4.2.8.5. உலக ஈரநில தினம்

2013 உலக ஈரநில தினத்தின் தேசிய தின நிகழ்ச்சியானது 01.02.2013 அன்று வோட்டர்ஸ் எட்ஜ்ஸ் வளாகத்தில் நடைபெற்றது. வனஜீவராசிகள் திணைக்களத்துடன் இணைந்து ஒரு சுவரொட்டிப் போட்டி ஒழுங்கு செய்யப்பட்டது. அத்துடன் இப்போட்டியின் அகில இலங்கை ரீதியான மற்றும் மாகாண ரீதியான வெற்றியாளர்களுக்கு பரிசு, கௌரவ சுற்றடல் மற்றும் புதுப்பிக்கக்கூடிய சக்தி அமைச்சராலும் வனஜீவராசி பாதுகாப்பு அமைச்சராலும் வழங்கப்பட்டது. இத் தேசிய தின நிகழ்வுக்குச் சமாந்தரமாக சுவரொட்டிக் கண்காட்சி இடம்பெற்றது. பாடசாலை மாணவர்களை முதன்மையாக இலக்குவைத்து ஒன்பது மாகாண நிகழ்ச்சிகள் மசுஅ இன் மாகாண அலுவலகங்களினால் நடாத்தப்பட்டன.








## 4.3. ஆய்வு மற்றும் மேம்பாட்டு பிரிவு

இப்பிரிவின் பிரதான இலக்கானது யாதெனில் தொலை இயக்கி உணர் தொழில் நுட்பவியல் மற்றும் புவியியற்சார் தகவல் முறைமை ஆகியவற்றை பிரயோகித்து இலங்கையில் தேசிய சுற்றாடல் சட்டத்தின் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி அல்லது நடைமுறைப்படுத்துவதற்கு அனுசரனை வழங்கி சூழல் தாழ்வை தடுத்து, ஆய்வுகள், கற்கைகள், அளவீடுகள் ஆகியவற்றை நடத்தல், முன்னிறுத்தல், வசதிப்படுத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் செய்வதன் மூலமாக சூழலின் காப்பு மற்றும் மேம்பாட்டிற்கான தேவைப்பாட்டினை அபிவிருத்தி செய்து மற்றும் தகவல் பரப்புதல் செய்து மற்றும் புவியியல் தகவல் முறைமை (ஜிஐஎஸ்) மற்றும் ரிமோட் சென்சிங் தொழினுட்பங்களின் பிரயோகங்களுடாக இலங்கையின் இயற்கை வளங்களை பேண் தகு முகாமை செய்தலை உறுதிப்படுத்தல் ஆகும்.

### 4.3.1. இலங்கையின் தொழிற்றுறைகளின் இடம் சார் விநியோகம்

இலங்கையில் மாசாக்கும் தொழிற்றுறைகளின் விநியோகத்தின் தற்போதைய நிலமையை மீளாய்வுக்கு உட்படுத்தி குறித்துரைக்கப்பட்ட தொழிற்றுறைகள் மேல் புவி - இடம் சார் தகவல்தளம் உருவாக்கப்பட்டதோடு தொடர்ச்சியாக அது தரவேற்றம் செய்யப்பட்டுவருகிறது. அதற்கேற்ப (வட மாகாணம் தவிர்ந்த) இலங்கையில் உள்ள அதிக மாசுபடுத்தும் தொழிற்றுறைகளின் மொத்த இலக்கம் 9510 ஆகவும், நடுத்தர மாசாக்கும் தொழிற்றுறைகள் 13939 ஆகவும் உள்ளது. இந்த தகவல்தளமானது மாசு கட்டுப்படுத்தற் பொறிமுறை மற்றும் புதிய தொழிற்றுறைகளை அமைத்தல் ஆகியவற்றை அமுல்படுத்த பெரும் உதவி புரிகிறது.

*இலங்கை கைத்தொழில்களின் இடப்பகிர்வு*




### 4.3.2.டிஜிட்டல் மாவட்ட வளங்கள் பக்கவுரு சீடிக்கள் தயாரிப்பு

மசுஅ இன் ஆ மற்றும் மே அலகானது, இயற்கை வளங்கள், நிர்வாக எல்லைகள், சமூக பொருளாதார, தொல்லியல் தகவல் மற்றும் பிற தகவல்கள் அடிப்படையில், மையநிலைப்படுத்தப்பட்ட இடம் சார் தகவல்தளம் ஒன்றை பேணியும் தரவேற்றியும் வருகிறது. ஏற்கனவே இருந்த தகவல் தளத்தை எளிதான பார்வைக்காக பயன்படுத்துதல் மூலம்டிஜிட்டல் மாவட்ட வளங்கள் பக்கவுருக்கள் தயாரிக்கப்பட்டன. அதற்கமைய, சிடியில் இருந்த வரைபடங்கள் பிரதேச செயலக மட்டங்கள் வரை மேம்படுத்தப்பட்டன. களுத்துறை மற்றும் கேகாலை மாவட்டங்களின் வளங்கள் பக்கவுருக்கள் உள்ள சீடிக்கள் மேம்படுத்தப்பட்டன. அத்துடன் தற்போது அச்சிடத் தயாராக உள்ளன. இலங்கையின் மீதி மாவட்டங்களின் பக்கவுருக்களை மேம்படுத்த தீர்மானிக்கப்பட்டு உள்ளது




***களுத்துறை மாவட்டத்தின் சூழல் வளங்கள் பக்கவுருவின் முகப்புப் பக்கம்***

### 4.3.3 இலங்கை சுற்றாடல் உணர்வுமிக்க பகுதிகள் இறுவட்டு (CD)

இறுவட்டுக்களில் உள்ளடங்கப்பட்டுள்ள சுற்றாடல் உணர்வுமிக்க பகுதிகளின் வரைபடங்கள் 1993 ஆம் ஆண்டின் யூன் 24 ஆம் திகதிய 772/ 22 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் பகுதி II இல் குறித்துரைக்கப்பட்ட பகுதிகள் மற்றும் அதனைத் தொடர்ந்த திருத்தங்கள் ( சு.த.ம ஒழுங்குவிதிகள்) மற்றும் தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இதுவரையில் சுற்றாடல் பாதுகாப்பு பகுதிகளாக ம.சு.அ பிரகடனம் செய்யப்பட்ட பகுதிகள் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளன. இறுவட்டானது, சுற்றாடல் உணர்வுமிக்க பகுதி பற்றிய தரவுகள் /தகவல்களை கொண்டுள்ளதுடன் மும்மொழிகளிலும் ( சிங்களம், தமிழ், ஆங்கிலம்) ஆகிய மொழிகளில் தயாரிக்கப்படுகின்றது.




**சுற்றாடல் உணர்வுமிக்க பகுதிகள் இறுவட்டின் முன்பக்கத் தோற்றம்.**

### 4.3.4. ஒளிசார் மற்றும் பல்சர் ரிமோர் சென்சிங் பயன்படுத்தி, இலங்கையின் தென்கிழக்கு ஆற்றுப் படுகைப் பிராந்தியத்தின் ஈரநிலங்களின் வரைபடப்படுத்தலும் மாற்றங்களை கண்டுபிடித்தலும்.

ஒளிசார் மற்றும் பல்சர் ரிமோர் சென்சிங் பயன்படுத்தி, இலங்கையின் தென்கிழக்கு ஆற்றுப் படுகைப் பிராந்தியத்தின் ஈரநிலங்களின் வரைபடப்படுத்தலும் மாற்றங்களை கண்டுபிடித்தலும் கற்கையானது, ஆய்வு மற்றும் மேம்பாட்டு பிரிவால், ஜப்பானீஸ் ஏரோஸ்பேஸ் முகவரகம் (ஜேஏஎக்ஸ்ஏ) மற்றும் தாய்லாந்தில் உள்ள தொழினுட்பத்திற்கான ஆசிய நிறுவகத்தின் ஜியோ இன்∴பொர்மடிக்ஸ் மையம் ஆகியவற்றில் இணைவோடு நடைபெற்றது. செயற்றிட்ட காலம் 2 வருடங்களாகும்.

இந்த செயற்றிட்டத்தின் முக்கிய நோக்கானது இலங்கையின் தென் கிழக்கு ஆற்றுப்படுகையின் முக்கிய ஈரநிலங்களாஇ அடையாளம் காணல், வரைபடபடுத்தல் மற்றும் மாற்றங்களைக் கண்டு பிடித்தல் ஆகும். இதற்காக, ஏவிஎன்ஜஆர் 2 (உயர் காணக்கூடிய மற்றும் அருகாமையான இன்∴ப்ரா சிவப்பு ரேடியோ மீட்டர் டைப் 2) மற்றும் பல்சர் (பேஸ்ட் அர்ரே டைப் எல் - பாண்ட் சிந்தெட்டிக் அபேசர் ரேடார்) ஆகியவற்றின் அலொஸ் செய்மதி தகவலை அடிப்படை கருவியாகக் கொண்டு தேசிய சூழல் சட்டத்தின் கீழ் சூழல் பாதுகாப்பு பிரதேசங்களை அறிவிக்கப்படும்.

இந்த காலப்பகுதிக்குள், இப்பிராந்தியத்தில் உள்ள 42 ஈரநிலங்கள் செய்மதித்தகவல் மற்றும் வேறான கள சரிபார்த்தல் தகவல் உதவியுடன் கற்கப்பட்டன. ஈரநிலங்களை முன்னுரிமைப்படுத்த பகுப்பாய்வுத் தொடர்கள் முன்னெடுக்கப்பட்டு, 7 ஈரநிலங்கள் உடனடி பாதுகாப்பு சார் வனம் தேவையான முக்கிய சூழற் தொகுதிகளாக அடையாளம் காணப் பட்டு உள்ளன. பனிச்சன்கேணி, மண்முனை, சத்துருக்கொண்டான், ஊரணி கடலேரி சதுப்பு ஈரநிலம், கப்புரெல்ல வெந்நீர் ஊற்று, எறகம தாங்கி

மற்றும் மட்டக்களப்பு கடலேரியின் சில பாகங்கள் ஆகியனதேரப்பட ஈரநிலங்களுக்குள் வருகின்றன. ரிமோட் சென்சிங் மற்றும் ஜிஐஎஸ் தொழினுட்ப உத்திகளின் பயன்பாட்டில், பாதிப்படையக்கூடிய பிரதேச வரைபடங்கள், எதிர்வு கூறக்கூடிய வரைபடங்கள், எதிர்கால அபிவிருத்திகளுக்கான பிராந்திய வரைபடங்கள் ஆகியனைஇரநிலத் தேர்வுக்காக மேம்படுத்தப் பட்டன. இறுதியாக, தேரப்பட்ட ஈரநிலங்களின் சூழல் பாதுகாப்பு பிரதேசங்களின் உத்தேசிக்கப்பட்ட எல்லைகளின் உத்தேச வரைபடங்கள், மசுஅ இன் இயற்கை வளங்கள் முகாமை அலகிடம் தேவையான நடவடிக்கைகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டது.

Possible Threats on Batticaloa Lagoon Area






தென்கிழக்கு ஆற்றுப்படுகையில் அடையாளம் காஅப்பட்ட ஈரநிலங்களின் அமைவிட வரைபடம்

### 4.3.5. வர்த்தக அடிப்படையிலான ஜிஐஎஸ் சேவைகள்

| 2013 ஆம் ஆண்டில் ஈட்டிய வருமானம் | | | |
|---|---|---|---|
| இல | நிறுவகம், திணைக்களம் | வரைபட தகவல் | எல்கேஆர் |
| 1 | சி.இ.சி.பி | உத்தேசிக்கப்பட்ட கலுகல் ஓயா நீர்த்தேக்கம் மற்றும் நீர்ப்பாசன செயற்றிட்டத்திற்கான உணர்ச்சியை தூண்டக்கூடிய பிரதேச வரைபடம் | 5,712.00 |
| 2 | ஜஈபிஎஸ்.எல் | ஹந்தான ஈபிஏ இன் எல்லை வரைபடம் | 1,370.88 |
| 3 | "இலங்கையில் அதிக தேவைப்பாட்டுக்கான உச்ச சக்தி உருவாக்கம் மீதான அபிவிருத்தி திட்டமிடல்" மீதான ஜெ.ஐ.சி.ஏ செயற்றிட்டம் | அம்பாறை, பதுளை, மொனராகலை, இரத்தினபுரி, கேகாலை, நுவர எலியா, கண்டி மற்றும் மாத்தளைக்கான உணர்ச்சியை தூண்டக்கூடிய பிரதேச வரைபடம் | 53,572.85 |
| 4 | சி.இ.சி.பி | பதுளை மாவட்டத்தின் உத்தேசிக்கப்பட்ட மொரன நீர்த்தேக்க செயற்றிட்டத்திற்கான சுதாம கற்கைக்கான உணர்ச்சியை தூண்டக்கூடிய பிரதேச வரைபடம் | 7,996.80 |
| 5 | தனியார் அமைப்பு | அம்பதலேயிலிருந்து ஹன்வெல்ல வரை களனி நதியின் இருபுறமும் 500மீற்றர் தொழிற்றுறை தகவல் | 1,507.97 |
| 6 | மெற்ரோ கொழும்பு நகர அபிவிருத்தி செயற்றிட்டம் | நுண் கால்வாய் வடிவமைப்பு வேலைகளுக்கான உணர்ச்சியை தூண்டக்கூடிய பிரதேச வரைபடம் | 6,854.40 |
| 7 | ஈ.எம்.எல். கன்சல்டண்ட்ஸ் பிரைவேட் லிமிட்டட் | சிகிரியாவில் உத்தேசிக்கப்பட்ட ஹொட்டேல் செயற்றிட்டத்தின் உணர்ச்சியை தூண்டக்கூடிய பிரதேச வரைபடம் | 2,570.00 |
| 8 | இலங்கை மின்சார சபை | உத்தேசிக்கப்பட்ட நிலக்கரி எரிக்கும் அலன் மின்சாரநிலையத்திற்கான சூழல் உணர்ச்சியை தூண்டக்கூடிய பிரதேச வரைபடங்கள் (4) | 34,272.00 |
| 9 | டீசல் மற்றும் மோட்டார் பொறியியல் பி எல் சி | மேல்மாகாண திண்மக்கழிவு முகாமைத்துவ இடங்களின் வரைபடம் | 3,884.16 |
| 10 | புரிடாஸ் பிரைவேட் லிமிட்டட் | இலங்கையின் "ஏ" பிரிவு தொழிற்றுறைகள் (24,31,32,37,59,66 | 20,883.07 |

| 2013 ஆம் ஆண்டில் ஈட்டிய வருமானம் | | | |
|---|---|---|---|
| இல | நிறுவகம், திணைக்களம் | வரைபட தகவல் | எல்கேஆர் |
| | | மற்றும் 80) | |
| 11 | பேராதனைப் பல்கலைக்கழகம் | களுத்துறை மாவட்டத்தின் உணர்ச்சியை தூண்டக்கூடிய பிரதேச வரைபடம் | 456.96 |
| 12 | போருக்குப்பிந்திய இடங்களான யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில், சமூக அடிப்படையிலான நீர் வழங்கல் மற்றும் கழிவுதுப்பரவு மேம்பாட்டு செயற்றிட்டம். | உத்தேசிக்கப்பட்ட நீர் வழங்கல் கோடு மற்றும் சம்பந்தப்பட்ட அமைவிடங்களான மாதகல் கிழக்கு, சந்தை மற்றும் ஊர்காவற்றுரை டி.எஸ்.பிரிவுகள் ஆகியவற்றின் கூகிள் எர்த் அடிப்படையிலான மூன்று நிலப்பயன்பாட்டு வரைபடங்கள் | 19,306.56 |
| 13 | எல்.என்.ஜி. ஐ இலங்கைக்கு அறிமுகப்படுத்தல் முன்மொழிவின் சாத்தியப்பாட்டுக் கற்கைக்கான இலங்கை மின்சார சபையுடன் இணைந்த செயற்றிட்டம் | திரவநிலை நியூற்றல் வாயு முனையம் அமைப்பதற்கான கொழும்புத் துறைமுகத்தின் வடக்கு முடிவிடம் மற்றும் கெரவலபிடிய ஆகியவற்றுக்கான இரு சூழல் உணர்ச்சி தூண்டக்கூடிய பிரதேச வரைபடங்கள் | 17,707.20 |
| 14 | சி.ஐ.சி.பி. | உத்தேசிக்கப்பட்ட பஸ்நாகொட நீர்த்தேக்க செயற்றிட்டத்திற்கான சூழல் உணர்ச்சி தூண்டக்கூடிய பிரதேச வரைபடம் | 8,853.60 |
| 15 | மொரட்டுவைப் பல்கலைக்கழகம் | கண்டி நகர பிரதேசம் - எல்லைப்படுத்தல், கொஹகொட - திகன (கட்டுகஸ்தோட்ட மற்றும் மடுவெல வழியாக) உணர்ச்சி தூண்டக்கூடிய பிரதேச வரைபடம் | 6,568.80 |
| 16 | மொரட்டுவைப் பல்கலைக்கழகம் | கண்டி நகர பிரதேசம் - எல்லைப்படுத்தல், தர்மசோக மாவத்த, கண்டி ஏரி, ரஜபிஹில்ல மாவத்த மற்றும் டுனுமடலவ நீர்த்தேக்கம் - உணர்ச்சி தூண்டக்கூடிய பிரதேச வரைபடம் | 8,853.60 |
| 17 | இலங்கை நீரியல் நிறுவகம் லிமிட்டட் | இலங்கையின் கரையோரத்தில் திண்ம கழிவு முகாமைத்துவ இடங்களின் அமைவிடங்கள் | 10,510.08 |
| 18 | சர்வதேச நீர் முகாமைப்படுத்தல் நிறுவகம் | மேல்மாகாண திண்மக்கழிவு இடும் இடங்களின் அமைவிடங்கள் | 7082.88 |
| **மொத்தம்** | | | **217,963.81** |

கோரிக்கையின் அடிப்படையின் பின்வரும் சேவைகள் வழங்கப்பட்டன.

- சூழல் உணர்ச்சிமிக்க இடங்கள், நிலப்பயன்பாட்டு, தேரப்பட்ட செயற்றிட்ட இடத்தின் சுற்று வட்டார அல்லது உள்ளிட்ட நில அமைவிடம் அடையாளம் காணல்.

- தேரப்பட்ட அமைவிடங்களுக்கான சூழல் உணர்ச்சிமிக்க இட வரைபடங்களை தயாரித்தல்
- நிலப்பயன்பாட்டு அல்லது நிலம் பரந்த வரைபடங்கள்
- செய்மதிப் பட பகுப்பாய்வு
- ஜிபிஎஸ் அமைவிடங்களை பெறல்
- வரைபட டிஜிட்டல்மயப்படுத்தல் மற்றும் பிரித்தல்
- வரைபடங்களை ஸ்கானிங் செய்தல் மற்றும் அச்சிடல்

### 4.3.6. ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகரசபையில் இணைந்த நுளம்புக்கட்டுப்படுத்தல் மீதான மாஸ்டர் திட்ட தயாரிப்பு




கற்குமிடத்தின் வரைபடம்

நுளம்புகள் மனித சுகாதாரத்திற்கு அச்சுறுத்தலாக இருப்பதுடன் பிற விலங்குகளை விட அதிக இருப்புக்காலத்துடனுள்ளன. இன்றும் உலகளாவியரீதியில் மில்லியன் கணக்கான மனிதர்களை கொன்றும் வலுக்குன்றவைக்கும் மலேரியா, மஞ்சள் காய்ச்சல், ∴பிலாரிஅசிஸ் மற்றும் டெங்கு, மஞ்சள் காய்ச்சல், ஜப்பானிய என்செ∴பலிடிஸ் போன்ற பல வைரஸ் காய்ச்சல்கள் போன்ற நோகளுக்கான காவிகளாக இருக்கின்றன.

இலங்கையில் 17 ஜெனரா மற்றும் 140 இன வகையான நுளம்புகள் உள்ளன (எம்.ஆர்.ஐ தகவல்). பெரும்பாலானவை காவிகளாக இல்லாவிடினும் பல இனங்கள் டெங்கு, டெங்கு ஹோமோர்ஹகிக் காய்ச்சல், சிக்கன்குன்யா, மலேரியா, ∴பிலரியா, மங்கள் காய்ச்சல் மற்றும் ஜப்பானிய என்செ∴பலிட்ஸ் போன்ற நோய்களை பரப்புவதோடு, கடந்த தசாப்தத்தில் பல எண்ணிக்கையான மரணங்களுக்கும் காரணமாக உள்ளன.

ஆபத்தான நோய்களுக்கு மேலாக நுளம்புக்கடியானது அவற்றின் கடிக்கும் நடத்தையால் சொறிவையும் எரிச்சலையும் மனித உடலில் தருகிறது. தோல் தொற்று அபாயத்தை அதிகரிக்கிறது. தொலில் பற்றீரியா தொற்றை கொண்டு வருகிறது. கடுமையானதும் மீடிறன் குறைந்ததுமான செல்லுலைட்ஸ், திசுக்களிலான பற்றீரிய தொற்று ஆகியன அண்டிபொடிகளின் பரிகரிப்புக்கு உரியவை.

இது வணிகத்தை பொருளாதார ரீதியில் பாதிக்கலாம் மற்றும் வாழ்வதற்கான வாழ்க்கையின் தரத்தைக் குறைக்கலாம்.

நீர் மாசாக்கல், கொள்கலங்களை நீக்கல், ஒழுங்கீனமாக கழிவு அகற்றல், ஒழுங்கின்றிய கட்டுமானம் மற்றும் பேணுகை, நீர்ப்பாசனம் மற்றும் வடிகாலின் செயற்றிறனற்ற முகாமை,சுத்தப்படுத்தல், தெளிவாக்கலின் போதுமற்ற தன்மை, மனித சுயநலம், மக்களின் வறுமை சார் பாதக நடத்தை, நகர , தொழிற்றுறை மயமாக்கல், முறையற்ற நிலப்பயன்பாட்டு வடிவங்கள், சனத்தொகை அதிகரிப்பு மற்றும் சனத்தொமை அசைவு ஆகிய மனித நடவடிக்கைகளுடன் நேரடியாக மறைமுகமாக இணைந்து நுளம்புகளின் நடத்தைகள் மேம்படுகின்ரன. இந்நிலையை ஒழிக்க ஒரு பேண் தகு பொறிமுறை இல்லை.

இந்நிலையை பரிசீலித்த மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது இந்நிலையை கட்டுப்படுத்த, புதிய மாற்றீடுகள் மற்றும் உத்திகளுக்காக இந்த களத்தில் விற்பன்னர்களும் விஞ்ஞானிகளுக்குமான தளத்தை உருவாக்க தீர்மானித்தது. இதுசார்ந்து பல கலந்துரையாடல்கள் மசுஅ இல் நிகழ்ந்தன. விற்பன்னர் குழுவானது, பைலட் செயற்றிட்டமாக ஸ்ரீ ஜயவர்தன புர கோட்டே இல்நுளம்புக் கட்டுப்பாட்டுக்கான இணைந்த மாஸ்டர் திட்டஹத்தை தயாரிக்க தீர்மானித்தது.

**ஆ மற்றும் மே அலகால் மாஸ்டர் திட்டம் தயாரிக்கப்பட்டது. மற்றும் விற்பன்னர் குழுவால் நியமிக்கப்பட்ட ஆலோசகருக்கு, திருத்தம் செய்ய, மேம்படுத்த மற்றும் ஆவணத்தை இறுதிப்படுத்த ஏற்கனவே தரப்பட்டது.**

**4.3.7 கம்பகா மாவட்டத்தில் உள்ள டண்டுகம் ஓயாவின் நீர் மாசடைதலின் காரணங்களை கற்றல் மற்றும் அப்பிரதேசத்தில் நீர் மாசடைதலை இழிவாக்கும் உத்திகளை மேம்படுத்தல் மீதான ஆய்வு செயற்றிட்டம்.**

கற்கும் இடத்தின் வரைபடம்




நீர்த்தனமானது பல முக்கிய நீர்நிலைகளில் குறிப்பிட்ட கால இடைவெளியில் தரத்தை பேணுவதற்காக மசுஅ இன் ஆய்வுகூடத்தால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இவ் ஆய்வுகூடத்தால் பதியப்பட்ட செய்யப்பட்ட நீர்த்தரத்தகவல் பகுப்பாய்வு செய்து வெளியிடப்பட்டதன்படி கம்பகா மாவட்டத்திலுள்ள டண்டுகம் ஓயா ஆனது முக்கிய மாசடைந்த நீர்நிலைகளுள் ஒன்றாகும்.

மேலதிகமாக இந்த மாசடைந்த நீரானது, நாட்டின் முக்கிய சூழல் உணர்ச்சிமிகு பிரதேசமான முத்துராஜவெல ஊடாக நீர்கொழும்பு கடலேரிக்கு பாய்கிறது. இந்த நீரோர்ரத்தின் மீன்பிடி பிரதேசத்தில் அமைந்துள்ள தொழிற்றுறை வளாகங்கள் முக்கிய மாசாக்கிகளை இந்த நீர்நிலையுள் வெளிவிடுகின்றது. அவை, ஓர்கானிக் மாசாக்கிகள் மற்றும் பல்வேறு செயற்பாட்டு இரசாயனங்கள் அடங்கிய கழிவுநீரைன் பாரிய அளவை உற்பத்திக்குகின்றன. சதுப்பு நிலங்கள், கடலேரிகள், நீர்நிலை ஆகியவற்றின் உயிர்ப்பல்வகைமை மற்றும் சுற்றுப்புறத்திலிருக்கும் மனிதர்கள் ஆகியோர் அந்த முக்கிய மாசாக்கிகளால் பிரதானமாக பாதிக்கப்படுவர்.

ஆய்வு மற்றும் மேம்பாட்டு அலகால் டண்டுகம் ஓயாவில் உள்ள பல்வேறு மாசாக்கிகளைப் பகுப்பாய்வுக்குட்படுத்தி விரிவான கற்கை நடாத்தப்பட்டது அத்துடன், இது பற்றி ஒரு ஆய்வுச்

செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட வேடும் என தீர்மானிக்கப்பட்டது. இந்த ஆய்வின் நோக்கங்களாக,நீர்த்தரத்தரவுகளை கற்றல் மற்றும் பகுப்பாய்வு செய்தல், நீர்மாசடைதலின் நிலைமையை உறுதிசெய்தல், துர்ர்வாருதலால் நீர்த்தரத்தில் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் கற்றல், டண்டுகம் ஓயாவில் நீர்மாசடைதலை இழிவாக்குவதற்கும் கட்டுபடுத்துவதற்குமான உத்திகளை அடையாளம் காணல் ஆகியன உள்ளன.

இரு நிலைகள் உள்ள இந்த செயற்றிட்டத்தின் கால எல்லையானது இரு ஆண்டுகளாகும். ரூ. 3 மில்லியன் ஆனது இதற்காக அனுமதிக்கப்பட்டதுடன் இதன் முதல் நிலை ஆரம்பிக்கப்பட்டு உள்ளது.

### 4.3.8 திண்மக்கழிவு முகாமைக்கான கிஜஎஸ் தகவல்தளத்தை மேம்படுத்தல்

திண்மக் கழிவு முகாமைத்துவம் சார்ந்த தகவல் நாட்டின் 335 உள்ளூராட்சி சபைகளில் சேகரிக்கப்பட்டது. இடம் சார் விநியோக வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு தகவல் தளத்தில் தரவேற்றம் செய்யப்பட்டது. மலமுல்ல, கீரிக்குலம, மொன்ரொவியவத்தை, தொம்பே மற்றும் கொனடிகவத்த ஆகிய அமைவிடங்களின் வரைபடங்கள், கொய்கா மற்றும் இடிசிஎ.ஃப் செயற்றிய்யங்களால் முகாமை செய்யப்படும் உரத்தயாரிப்பு மற்றும் கழிவுத்துப்புரவு நிலநிலம்பல் இடங்கள் ஆகியன மேம்படுத்தப்பட்டன.






# 5. சட்டப்பிரிவு

***செயற்பணி***

***“ஒருவருக்கொருவர் உயிர் வாழ்வதற்கான சுற்றுச் சூழலை மேம்படுத்தும் முகமாக விழிப்புணர்வை ஒழுங்கமைத்து உருவாக்கல்”***

## 5.1. தேசிய சுற்றாடல் மேற்பார்வையின் கீழான சட்ட நடவடிக்கை

சட்டப்பிரிவானது, பணிப்பாளர் நாயத்தின் நேரடியான மேற்பார்வையின் கீழ், 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழான ஏற்பாடுகள் மற்றும் ஒழுங்குவிதிகளை திருத்தப்பட்டவாறு செயற்படுத்துவதில் உதவியளிக்கின்றது. அதன் தன்னிலையான பணியானது யாதெனில் இச் சட்டத்தின் கீழ் வழக்காடல் செயற்பாடுகளுக்கு அனுசரனை வழங்குவதாகும்.

2013 ஆம் ஆண்டில், இச்சட்டப்பிரிவானது பல எண்ணிக்கையான வழக்குகளை தொடுத்தும், இறுதிப்படுத்தியும் உள்ளது. அதற்கிணங்க சட்டப் பிரிவால் 247 வழக்குகள் கையாளப்பட்டுள்ளதுடன் அவை ம.சு.அ க்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்குகளும் ம.சு.அ யால் தொடுக்கப்பட்ட வழக்குகளும் ஆகும். 2013 ஆம் ஆண்டில் 110 வழக்குகளுக்கு அதிகமாக புதிதாக தொடுக்கப்பட்டுள்ளன.

ரூ. 493,750.00 ஆனது இந்த வழக்குகளில் இருந்து தண்டப்பணமாக சேகரிக்கப்பட்டு உள்ளது.

**தேசிய சுற்றாடல் சட்டத்தை (தே.சு.ச) நடை முறைப்படுத்தல் தொடர்பாக மேல்மாகாணத்தில் செயலாற்றுகை.**

2013 ஆண்டில் 48 வழக்குகள் கொழும்பு மாவட்டத்தில் நிலுவையில் உள்ளன அவற்றுள் 3 வழக்குகள் மவுண்ட் லவினியா எம்சி, 9 வழக்குகள் கெஸ்பாவ எம்சி, 6 வழக்குகள் அவிசாவளை எம்சி, 12 வழக்குகள் கங்கொடவில எம்சி, 3 வழக்குகள்மொரட்டுவ எம்சி, 5 வழக்குகள் கடுவல எம்சி, ஒரு வழக்கு ஹோமாகம எம்சி மற்றும் 9 வழக்குகள் கொழும்பு எம்சி ஆகியனவாகும். 14 வழக்குகள் 2013ம் ஆண்டில் முடிக்கப்பட்டன.

36 வழக்குகள் கம்பகா மாவட்டத்தில் நிலுவையிலிருக்க 25 வழக்குகள் புதிதாக பதியப்பட்டன. அவை, எம்சி கம்பகாவில் 6 வழக்குகளும், எம்சி நீர்கொழும்பில் 1 வழக்கும், எம்சி வத்தளையில் 9 வழக்குகளும் எம்சி அத்தனகலவில் 3 வழக்குகளும், எம்சி மகரவில் 1 வழக்கும் எம்சி கன்னுவனவில் 4 வழக்குகளும் ஆகும். 2013ம் ஆண்டில் 5 வழக்குகள் முடிக்கப்பட்டன.

மேலும், 2013ம் ஆண்டு களுத்துறை மாவட்டத்தில் 6 வழக்குகள் நிலுவையில் உள்ளன மற்றும் அவற்றுள் 2 வழக்குகள் எம்சி களுத்துறையிலும் ஒரு வழக்கு எம்சி மத்துகமவிலும், 2 வழக்குகள் எம்சி பாணந்துறையிலும் 1 வழக்கு எம்சி ஹொரணையிலும் உள்ளன.

**தே.சு.ச நடைமுறையாக்கம் தொடர்பில் மத்திய மாகாணத்தின் செயலாற்றுகை**

மத்திய மாகாண நீதவான் நீதிமன்றங்களில் 50 வழக்குகள் நிலுவையில் இருந்தன. ஆவை யாதெனில் கண்டி, மாத்தளை, தம்புள்ளை, கம்பளை, நாவலபிட்டிய, தெல்தெனிய, நுவரெலியா,லக்கல, ஹட்டன், ஹெல்பொட, பன்வில மற்றும் மஹியங்கனை ஆகிய பகுதிகளை சேர்ந்த நீதவான் நீதிமன்றங்களாகும்.

2013 ஆம் ஆண்டில் புதிதாக தொடுக்கப்பட்ட பதினெட்டு (17) வழக்குகளும் அவற்றில் உள்ளடக்குகின்றன.2013ல் 21 வழக்குகள் முடிவடைந்தன.

**தே.சு.ச நடைமுறையாக்கம் தொடர்பில் ஊவா மாகாணத்தின் செயலாற்றுகை.**

2013 ஆம் ஆண்டில் 16 வழக்குகள் ஊவா மாகாணத்தில் நிறுவையில் இருந்தன. அவற்றில் 12 வழக்குகள் புதிதாக தொடுக்கப்பட்டவையாகும். ஒரு வழக்கு எம்சி வெலிமடவிலும், 6 வழக்கு எம்சி மகியங்கனையிலும், 1 வழக்கு எம்சி மொனராகலையிலும், 1 வழக்கு எம்சி பசறையிலும், 2 வழக்கு எம்சி பண்டாரவளையிலும், 3 வழக்கு எம்சி வெல்லவயவிலும் 2 வழக்கு எம்சி பிபிலவிலும் இருந்தன. 2013ல் 6 வழக்குகள் முடிவடைந்தன.

**தே.சு.ச நடைமுறையாக்கம் தொடர்பில் தென் மாகாணசபையின் செயலாற்றுகை.**

21 வழக்குகள் 2013 ல் நிலுவையில் பலப்பிட்டிய, காலி, எல்பிட்டிய, தங்கல்ல, வலஸ்முல்ல மற்றும் மாத்தறை ஆகிய இடங்களில் உள்ளன. இவற்றுள் 18 புதிய வழக்குகளாகும். 2013 ல் 9 வழக்குகள் முடிவடைந்தன.

**தே.சு.ச நடைமுறையாக்கம் தொடர்பில் கிழக்கு மாகாண சபையின் செயலாற்றுகை.**

2 வழக்குகள் அக்கரைப்பற்று எம்சி மற்றும் திருகோணமலையில் 2013ல் நிலுவையில் உள்ளன. அவ்விரண்டும் புதிய வழக்குகளாகும். 2013ல் ஒரு வழக்கு முடிக்கப்பட்டது.

**தே.சு.ச நடைமுறையாக்கம் தொடர்பில் சப்ரகமுவ மாகாணத்தின் செயலாற்றுகை.**

2013 ஆம் ஆண்டில் சப்ரகமுவ மாகாணத்தில் 17 வழக்குகள் நிலுவையில் இருந்தன. அவற்றில், ஏழு வழக்குகள் 2013 இல் புதிதாக தொடுக்கப்பட்டவை ஆகும். 2 வழக்குகள் எம்சி மவநெல்ல, 1 வழக்கு எம்சி பெல்மடுல்ல, 2 வழக்கு எம்சி வரக்கபொல, 2 வழக்கு எம்சி கேகால்ல ஆகும். 8 வழக்குகள் இதே ஆண்டில் முடிவடைந்தன. மேலும் 2 வழக்குகள் உயர்நீதிமன்றில் நிலுவையில் உள்ளன. மற்றும் அவ்விரு வழக்குகளும் இதே ஆண்டு அகற்றப்பட்டன.

**தே.சு.ச நடைமுறையாக்கம் தொடர்பில் வட மத்திய மாகாணத்தின் செயலாற்றுகை.**

2013 ஆம் ஆண்டில் வடமத்திய மாகாணத்தில் 5 வழக்குகள் நிலுவையில் இருந்தன. இது எம்சி அனுராதபுர, எம்சி பொலன்னறுவ மற்றும் எம்சி ஹிங்குராங்கொட ஆகியவற்றை உள்ளடக்குகிறது. இவற்றுள் 2013ல் 2 வழக்குகள் முடிவடைந்தன.

**தே.சு.ச இன் பிரிவுகளை அமுலாக்கல் முன்னேற்றம்**

மசுஅ குறிப்பிட்ட நியமங்களை உறுதிப்படுத்துவதற்காக பல தொழிற்றுறைகள் பரிகரிக்கும் நிலையங்களை கட்டியுள்ளன. பல தொழிற்றுறைகள் தேசுச இன் ஒலி மட்ட நியமங்களோடு இணங்கியுள்ளன. சட்டத்தின் தேவைப்பாட்டுக்கு இணங்கிய பின் சூழல் பாதுகாப்பு உரிமமானது அந்த தொழிற்றுறைகளால் பெறப்பட்டது.தே.சு.ச கீழ் நிர்ணயிக்கப்பட்டிருந்த இரைச்சல் மட்டத்தரங்களுடன் பல் கைத்தொழில்கள் இணக்கப்பாட்டுக்கு வந்தன. சட்டத்தின் தேவைகளுடன் இணக்கப்பாட்டிற்கு வந்ததை தொடர்ந்து, சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை அந்த கைத்தொழில்கள் பெற்றுக் கொண்டன.

## 5.2.ம.சு.அ எதிராக தொடுக்கப்பட்ட வழக்குகள்.

2013 ஆம் ஆண்டில் ம.சு.அ ற்கு எதிராக 40 வழக்குகள் மாவட்ட நீதிமன்றங்கள், உயர் நீதிமன்றங்கள், உச்ச நீதிமன்றங்கள் மற்றும் முறையீட்டு நீதிமன்றங்கள் ஆகியவற்றில் கொழும்பு, மவுண்ட்லவீனியா, கம்பகா, யாழ்ப்பாணம், கடுவல மற்றும் மாத்தறையில் நிலுவையில் இருந்தன.

ம.சு.அ க்கு எதிராக உயர்நீதிமன்றம், மேல் முறையீட்டு நீதிமன்றம், உயர் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம் ஆகியவற்றில் தொடுக்கப்பட்ட வழக்குகளில் சட்டப் பிரிவைச் சேர்ந்த அலுவலர்கள் கலந்து கொள்வர்.

மேலும், சட்டப் பிரிவைச் சேர்ந்த அலுவலர்கள் நீதிமன்றங்களுக்கு சமர்ப்பிக்கப்படவுள்ள ஆவணங்களை வரைவு செய்வதிலும் ஈடுபடுவதுடன் ஆலோசனைகளிலும் பங்குபற்றுவர்.

## 5.3 சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை மறுத்தல், இரத்துச் செய்தல்/ காரணக் கடிதங்களை காண்பித்தல்.

கைத்தொழில்களால் தோற்றுவிக்கப்படும் சுற்றாடல் தொல்லைகளை கருத்திலெடுத்த மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது 18 கைத்தொழில்களுக்கு வழங்கிய சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை இரத்து செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதுடன், சு.பா.உ வழங்குவதற்கு மறுப்பு தெரிவித்து 141 கடிதங்களை அனுப்பியுள்ளதுடன், கைத்தொழில் ஒன்றின் இயக்கச் செயற்பாட்டை நிறுத்தியும் ஒரு கடிதத்தை அனுப்பியுள்ளது.

மேலும்,சட்டப் பிரிவிடமிருந்து அவசியமான அறிவுறுத்தல்களை பெற்று நீர் மாதிரிகளை சேகரிக்கவும், இரைச்சல் அளவீட்டு பரீட்சையை நடாத்தவும், மற்றும் ஆய்வு அறிக்கைகளை மேற்கொள்ளவும் ம.சு.அ் பல கோவைகளை ம.சு.அ யின் சு.மா.க பிரிவு, மாகாண அலுவலகங்கள், மாவட்ட அலுவலகங்கள் மற்றும் ஆய்வுகூடம் ஆகியவற்றிற்கு அனுப்பி வைத்துள்ளது.

## 5.4 சட்ட வலுவற்ற தன்மை பற்றிய கடிதங்கள்.

உள்ளூராட்சி அதிகார சபையால் வழங்கப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் சட்ட வலுவற்றது என்பதை அறிவிக்கும் சட்ட வலுவற்ற தன்மை பற்றிய கடிதமொன்று உள்ளூராட்சி அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

**பிரிவு 24பி டிரெக்டிவ்கள்**

சட்ட அலகு ஆனது ஒரு பிரிவு 24பி டிரெக்டிவ் ஐ அனுப்பி உள்ளது

## 5.5 சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களின் நிபந்தனைகள்.

புதிய சு.பா.உ தொடர்பான சு.பா.உ நிபந்தனைகள் மாகாண அலுவலகங்கள், மாவட்ட அலுவலகங்கள் ஆகியவற்றை சேர்ந்த உதவி சட்ட அலுவலர்களால் சோதனையிடப்பட்டுள்ளன.

அட்டவனைப் படுத்தப்பட்டு வழங்கப்பட்வுள்ள் கழிவு முகாமைத்துவத்திற்கான உரிமங்கள் தலைமை அலுவலகத்தின் சட்டப் பிரிவைச் சேர்ந்த அலுவலர்களால் பரீசீலனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

## 5.6 சுற்றாடல் அமைச்சில் இடம் பெற்ற மேல் முறையீட்டு விசாரனைகள்.

சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்திஅமைச்சின் செயலாளரினால் நடாத்தப்பட்ட 21 மேல் முறையீட்டு விசாரணைகளில் சட்டத்துறை பிரிவின் அலுவலர்கள் கலந்து கொண்டனர். **5.2.7**

## 5.7 நொத்தாரிசு பணி

மாகாண, மாவட்ட அலுவகங்களுக்கான குத்தகை ஒப்பந்தங்கள் மற்றும் செயற்றிட்டங்களை அமுப்படுத்தவென பல்வேறு தொழினுட்ப விடயங்கள் மீது ஆலோசகர்களிடமிருந்து பல்வேறு சேவைகள் பெறுவதற்காக 22 ஒப்பந்தங்களை சட்ட அலகு தயாரித்தது.

## 5.8 கூட்டங்கள்

சூழல் விடயம் சார்பாக இவ்வலகு அலுவலர்கள் 25 கூட்டங்களில் பங்குபற்றினர்.

## 5.9புகார்கள்

பொதுமக்கள், உள்ளூராட்சி அதிகாரசபைகள், பிரதேச செயலக அலுவலகங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் ஆகியவற்றில் இருந்து அனுப்பப்பட்ட மாசு மற்றும் தொல்லைகள் சம்பந்தமான புகார்களை சட்டப்பிரிவு கையாண்டுள்ளது. கைத்தொழில்களால் தோற்றுவிக்கப்பட்ட தொல்லைகளுக்கு நடவடிக்கை எடுக்கும் முகமாக குற்றவியல் நடவடிக்கை கோவை பிரிவு 98 மற்றும் பொலிஸ் கட்டளைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்க ம.சு.அ பொலிஸ் பிரிவின் ஊடாக சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்களுக்கும் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கும் பல புகார்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

## 5.10ஆலோசனைகள்.

ம.சு.அ ற்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்குகள் மற்றும் ம.சு.அ யால் தொடுக்கப்பட்ட வழக்குகளின் நீதிமன்ற விசாரனைகளிலும் ஆட்சேபனைகளை தயாரிக்கும் முகமாக சட்டத்துறை தலைமை அதிபதியின் திணைக்களத்தில் இடம் பெற்ற 36 ஆலோசனை கூட்டங்களில் சட்டப் பிரிவைச் சேர்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## 5.11ஒழுங்குவிதிகள்

புதிதாக பரிந்துரைக்கப்பட்ட கருத்திட்டங்களைஅறிமுகப்படுத்துமாறு சு.தா.ம ஒழுங்குவிதிகளின் வரைவுத் திருத்தங்களைஅமைச்சின் ஊடாக சட்ltiuQUf;F சமர்ப்பிக்க சட்டப்பிரிவானது நடவடிக்கை எடுத்துள்ளது.

மேலும், ம.சு.அ சட்டப் பிரிவானது குழாய் வெளிவீச்சு தரங்களை வரைவு செய்வதற்கு சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப பிரிவுகளுடன் ஒருங்கிணைந்ததுடன் மேற்படி ஒழுங்குவிதியானது சட்டவரைஞர் திணைக்களத்திற்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஔி (காட்சி) மாசடைதல் பற்றிய ஒழுங்குவிதிகளை வரைவு செய்வதற்கான பொறுப்பை ஏனைய அரசாங்க நிறுவனங்களின் உதவியுடன் சட்டப்பிரிவானது ஏற்றுக் கொண்டுள்ளது.

## 5.12 ஆலோசனைகள்.

சுற்றாடல் விடயங்கள் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட விடயங்கள் பற்றிய ஆலோசனைகள் பல உள்ளூராட்சி அதிகாரசபைகள், தனிநபர்கள் மற்றும் ம.சு.அ ஏனைய பிரிவுகள் ஆகியவற்றிற்குக் வழங்கப்பட்டன.

## 5.13 சட்ட அறிவித்தல்கள்.

சுற்றாடல் மாசடைதலுக்கு காரணமாக இருந்த 37 கைத்தொழில்களுக்கு சட்ட அறிவித்தல்கள் அனுப்பப்பட்டன.

## 5.14கண்காணிப்புஅறிக்கைகள்

நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில், ம.சு.அ அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகள் தொடர்பான பல பரிசோதனை அறிக்கைகளை சட்டப் பிரிவைச் சேர்ந்த அலுவலர்கள்

அங்கீகரித்ததுடன் அவை சுற்றாடல் அமைச்சில் இடம் பெறவுள்ள மேல்முறையீட்டு விசாரணைகளுக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளது.

### 5.15 விழிப்புணர்வு

பிற பொது நிறுவன ஊழியர்கள் தேசிய சுற்றாடல் சட்டம் சார்ந்து விழிப்படைவதற்காக இவ்வலகின் அலுவலர்கள் 12 விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர். மேலும் இவ்வலகின் அலுவலர்கள் , மசுஅ ஊழியர்களை இச்சட்டம் பற்றி பயிற்றுவிப்பதற்கு வளவாளராயினர்.

சட்ட, பல்கலைக்கழக மாணவர்களின் கோரிக்கைக்கிணங்கி இவ் அலுவலர்களால் இச் சட்டம் சார்பில் அவர்களுக்கு விழிப்படைய வைக்கப்பட்டனர்.

### 5.16 மனித உரிமைகள் விசாரணைகள்

மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இடம்பெற்ற 5 விசாரணைகளில் சட்டப்பிரிவை சேர்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டதுடன், சுற்றாடல் விடயங்கள் மற்றும் ஊழியர்களின் பிரச்சினைகளை உள்ளடக்கிய அறிக்கைகளை சமர்ப்பித்தனர்.

### 5.17 தேசிய சுற்றாடல் சட்டத்திற்கான திருத்தங்கள்

ம.சு.அ யின் சட்டப் பிரிவானது " மாசுபடுத்துபவர் கொள்கையை விலை பேசுகின்றார்" போன்ற புதிய எண்ணக்கருக்களையும் ஈரநிலம் மற்றும் அபாயகர கழிவுகள் பற்றிய அத்தியாயங்கள் தொடர்பில் தே.சு.ச த்திற்கு முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்களையும் அறிமுகம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்துள்ளது. சட்டவரைஞர் திணைக்களத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள இறுதியான வரைவு தற்போது கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் மசுஅ இன் சட்ட அலகானது பழைய சட்டத்தை நீக்கும் புதிய தேசுச இன் அறிமுகத்தை ஒருங்கிணைத்தது.

# 6. சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பூட்டல் பிரிவு (சு.க.வி.பி)

## செயற்பணி

**ஆரோக்கியமான சுற்றாடலொன்றை பாதுகாக்கவும் பேணவும் பொதுமக்களின் முனைப்பான பங்களிப்பை பெற்றுக் கொள்ளும் முகமாக பொதுமக்களின் பல்வேறு இலக்குக் குழுக்களுக்கு கல்வியை புகட்டி விழிப்பூட்டுவது.**

பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி, மேம்படுத்தி கல்வியை புகட்டி சுற்றாடலை பேணவும் சுற்றாடல் சிநேகபூர்வ முகாமைத்துவ செயற்பாட்டை ஏற்படுத்தும் முகமாக அவர்களின் முனைப்பான பங்களிப்பை பெற்றுக்கொள்ளும் பொறுப்பானது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவை சார்ந்ததாகும். அதன் நோக்கத்தை அடையும் முகமாக சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவானது 2013ல் பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்களை பொது மக்களின் பல்வேறு இலக்கக் குழுக்களுக்கு நடைமுறைப்படுத்தியது. மீண்டெழும் மற்றும் மூலதன நிதிகள் பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு பயன்படுத்தப்பட்டன.

**அ. அமைச்சு நிதியில் அமுல்படுத்தப்பட்ட நடவடிக்கைகள்**

1. ஆசிரியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகள்
2. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஈபிபி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் நியமனம்
3. ஈபிபி ஆணையாளர்களுடன் கடந்துரையாடல்கள் ஏற்பாடு செய்தமை
4. ஈபிபி கல்வி ஒருங்கிணைப்பு அலுவலர்களுடன் கடந்துரையாடல்கள் ஏற்பாடு செய்தமை
5. ஈபிபி பொருட்கள் உற்பத்தி
6. பதக்கதாரிகள் மற்றும் உறுப்புரிமையின் அதிகரிப்பு
7. ஜனாதிபதி பதக்கங்கள் வழங்கல்
8. ஜனாதிபதி பதக்க வெற்றியாளர்களின் பங்களிப்புடன் பசுமை செயற்றிட்டங்களை அமுல்படுத்தல்.
9. பள்ளி மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி நிகழ்ச்சி நடத்தல்
10. தேசிய சுற்றாடல் பாசறை நடத்தல்.
11. மாவட்ட சுற்றாடல் முன்னோடி செய்தித்தாள்
12. தேசிய மர நடுகை நிகழ்ச்சி நடத்தல்
13. பாடசாலை மட்டத்தில் பசுமை செயற்றிட்டங்களை அமுல்படுத்தல்
14. முன்பள்ளி மட்டத்தில் கல்வி வளர்ச்சிக்காக பட்டறைகளை நடத்தல்
15. முன்பள்ளிகளுக்காக கையேட்டு புத்தகங்களை அச்சிடல்

ஆ. திறைசேரி நிதியில் அமுல்ப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள்

1. கல்விப்பொருட்கள் மேம்பாடு (சுவரொட்டிகள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள்) - சூழல் சார் நவீன விடயங்கள் மீதான செய்தியை பரப்புவதற்காக அச்சிடல்
2. இலங்கை முழுதும் சூழல் நிகழ்ச்சிகளை வலுப்படுத்தல்

3. அரச, அரச சார்பற்ற அமைப்புகளுக்காக நிகழ்ச்சி நடத்தல்

4. வீட்டுத்தோட்டத்திற்காக நிகழ்ச்சிநடத்தல்

5. பசுமை கழகங்களை உருவாக்கல் - துருலதா, விஹங்க சான்றிதழ்கள், சோபா பட்ஜ்கள், பசுமை ஆசிரியர் கையேட்டு புத்தகங்கள், துண்டுப்பிரசுரங்களை அச்சிடல்.

6. முன்னிறுத்தல் கண்காட்சிகளை முன்னிறுத்தல்

7. இயற்கை கள மையங்களில் நிகழ்ச்சிகளை நடத்தல் - செய்முறை நிகழ்ச்சிகளை எடுத்தல்

8. கலாசார வைபவங்களில் சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தல்

9. இலங்கை பசுமை இளைஞர் நிகழ்ச்சி நடத்தல்

10. காலாண்டு சூழல் செய்திகடிதம் உற்பத்தி

11. இல்லத்தரசிகளுக்கான நிகழ்ச்சிகள் நடத்தல்

12.“உலக சூழல் தினம்” நிகழ்ச்சி நடத்தல் - குறித்த வருடத்தில் உலக சூழல் தினத்திற்கான தொனிப்பொருளில் பல நடவடிக்கைகளை நடத்தல்

13. மசுஅ கேட்போர் கூடத்தில் பல பங்காளர்கள் மற்றும் பள்ளி மாணவர்களுக்கு நவீன விடயங்கள் பற்றி விழிப்புணர்வு கல்வி நிகழ்ச்சி நடத்தல்

14. சூழல் விடயங்கள் மற்றும் வைபவங்கள் மீதான பிரச்சாரங்கள் நடத்தல்

15. பசுமை நட்புடைய வெசாக் வெளிச்சக்கூடு கண்காட்சிப்போட்டி நடத்தல்

16. இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களின் செயற்றிரன் மிக்க பயன்பாடு

17. மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவு 2013இல் நடத்திய நிகழ்ச்சிகளின் தகவல்கள் பின்வருமாறு:

### 6.1 முன்பள்ளி நிகழ்ச்சி

பல சூழல் அம்சங்களில் முன்பள்ளி சிறுவர்களின் விழிப்புணர்வை அதிகரிக்க, சூழல் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் ஊடாக, சூழல் மீதான முன்பள்ளி நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியின் கீழ், முக்கிய நடவடிக்கையாக முன்பள்லி ஆசிரியர்களை “முன்பள்ளி ஆசிரியர் கையேட்டுப்புத்தகம்” பயன்பாடு மீதான பயிற்சிக்கு உட்படுத்தப்பட்டது.

அமைச்சு நிதியின் கீழ் இது சம்பந்தமாக பின்வரும் நிகழ்ச்சிகள் அமுல்படுத்தப்பட்டன.

1. முன்பள்ளி மட்டத்தில் சூழல் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்த பட்டறைகளை நடத்தல்

2. முன்பள்ளிகளுக்கான கையேட்டு நூலை அச்சிடல்

முன்பள்ளி நிகழ்ச்சியின் கீழ் செய்யப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு:

#### 6.1.1 முன்பள்ளி மட்டத்தில் கல்விநடவடிக்கைகளை மேம்படுத்த பட்டறைகளை நடத்தல்

இந்நிகழ்ச்சியின் கீழ், 350 கையேட்டு நூல்கள் வழங்கப்பட்டதுடன், தேவையான நிதி சம்பந்தப்பட்ட மாகாண மாவட்ட மசுஅ அலுவலகங்களுக்கு மாற்றப்பட்டது. (மாத்தறை, சப்பிரகமூவ, மத்திய, வட மத்திய மற்றும் ஊவா). முன்பள்ளி நிகழ்ச்சி நடத்துவதற்காக கிளிநொச்சி மாவட்டத்திற்கு நிதி விடுவிக்கப்பட்டது.





முன்பள்ளி பட்டறையின் புகைப்படம்

### 6.1.2 முன்பள்ளிகளுக்கான கையேட்டு புத்தகம் அச்சிடல்

முன்பள்ளிகளுக்கு கையேட்டுப்புத்தகம் அச்சிடுவதற்காக, நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டது. முன்பள்ளிகளின் பட்டியலை பெறுவதற்கு சிறுவர்கள் செயலகத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டது. கேகாலை, மாத்தறை, பதுளை, கண்டி, அநுராதபுரம், பொலன்னறுவை, மட்டக்களப்பு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் பட்டறைகளை நடத்துவதற்கு மசுஅ இன் மாகாண, மாவட்ட அலுவலர்களுக்கு சம்பந்தப்பட்ட கடிதங்கள் அனுப்பப்பட்டன. மாத்தறை, கண்டி, பதுளை, கேகாலை, அநுராதபுர மற்றும் பொலன்னறுவை ஆகிய இடங்களில் புத்தக விநியோகம் மீதான நிகழ்ச்சி நடந்தது.

2013ம் ஆண்டிற்கான முன்பள்ளி கையேட்டு புத்தக விநியோகம் நிறைவுபெற்றது.

2013ம் ஆண்டில், இப்புத்தகத்தின் சிங்கள மொழிமூலத்தில் 5000 பிரதிகளும் தமிழ் மொழிமூலத்தில் 1000 பிரதிகளும் அச்சிடப்பட்டன. அவை 2014ம் ஆண்டு விநியோகிக்கப்படும்.

திறைசேரி நிதியில் அமுல்படுத்தப்பட்ட நடவடிக்கைகள்

1. கல்விப்பொருட்கள் மேம்பாடு (சுவரொட்டிகள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள்) - சூழல் சார் நவீன விடயங்கள் மீதான செய்தியை பரப்புவதற்காக அச்சிடல்

ஈஈ மற்றும் ஏ பிரிவால் இலங்கையில் சூழல் சம்பந்தப்பட்ட நவீன விடயங்கள் மீதான செய்திப்பரவலுக்காக, சுவரொட்டிகள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் அச்சிடப்பட்டன. நிலச்சரிவுகள், உயிர்ப்பல்வகைமை,ஈரநிலங்கள், பூகோளவெப்பமாதல், தீங்கான தாவரம், தீங்கான விலங்கு மற்றும் டெங்கு ஆகிய தலைப்புகளில் 7 வகை துண்டுப்பிரசுரங்கள் தயாரிக்கப்பட்டன.

2013ல், சூழல் சார் பொது அறிவு மீதான புத்தகம் அச்சிடத் திட்டமிடப்பட்டது. வளவாளர் குழுவின் வழிகாட்டலின் கீழ் கேள்விகள் எடுக்கப்பட்டு நூலும் வடிவமைக்கப்பட்டது. அதற்கமைய 1250 நூற்

பிரதிகள் சிங்கள மொழிமூலத்திலும், 250 பிரதிகள் ஆங்கிலத்திலும் அச்சிடப்படும் வேலை நடைபெறும் அதே வேளை தமிழ் மொழிபெயர்ப்பு ஆனது மெய்ப்புநோக்கும் பணியின் கீழ் உள்ளது (500 பிரதிகள் அச்சிடப்பட உள்ளன)

2. இலங்கை முழுவதுமான சூழல் நிகழ்ச்சிகளை வலுப்படுத்தல்

மசுஅ இன் சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவானது பல்வேறு நடவடிக்கைகளை நடத்தியும் வளவாளர்களை, கல்விப்பொருட்கள் மற்றும் நிதியை தந்தும் உள்ளது. 2013ல் ஈஈ மற்றும் ஏ பிரிவானது பல்வேறு நடவடிக்கைகளை நடத்தியும் வளவாளர்களை, கல்விப்பொருட்கள் மற்றும் நிதியை பாடசாலைகளுக்கு, சிபிஓக்கள், என்.ஜி.ஓக்கள் மற்றும் பல் நோக்கு குழுக்களுக்கு தந்துள்ளது.

3. அரச மற்றும அரசு சாரா அமைப்புகளுக்கான நிகழ்ச்சிகள் நடத்தல்

இப்பிரிவானது , சூழல் பாதுகாப்பிற்காக அவர்களது துடிப்பான பங்குபற்றலைப்பெற அரச மற்றும் அரசு சாரா அமைப்புகளுக்கு நிகழ்ச்சிகளை நடத்தியது. 2013ல் இதன் பொருட்ட ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது.

4. வீட்டுத் தோட்டத்திற்கான நிகழ்ச்சி நடத்தல்

மசுஅ இன் இப்பிரிவானது இல்லத்தரசிகளிடையே பசுமை நட்புடையவீட்டுத்தோட்ட பயிற்சிகளை பிரபல்யப்படுத்த என வீட்டுத்தோட்டம் சார் நிகழ்ச்சிகளை நடத்தியது.

உள் நாட்டு வீட்டுத்தோட்ட பயிற்சிகள் மீதான நடத்தைகளை மேம்படுத்தலும், அவர்கள்தம் ஊட்டமிக்க நிலையை அவர்களுடைய தோட்டத்தில் விளைந்த மரக்கறிகள் பழங்களை நுகர்வதன் மூலம் மேம்படுத்தலும் இந்த நிகழ்ச்சியின் நோக்காகும். மகிந்த சிந்தனை எண்ணக்கருவில் வெளிச்சமிடப்பட்ட திவிநெகும உடன் இந்த நிகழ்ச்சி தொடுப்புப் பெறுகிறது. அத்துடன் இந்நிகழ்ச்சி மரக்கறி, பழங்களுக்கான வாங்கும் செலவை குறைக்கின்ற அதே வேளை குடும்ப மொத்த வருமானத்தை சுய வேலையான வீட்டுத்தோட்டத்தால் அதிகரிப்பதன் மூலம் அவர்களது பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் செய்கிறது.

2013ல், 12 பிரதேச செயலகப் பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்தி 12 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இவை இல்லத்தரசிகளுக்கு சூழல் நட்புடைய வீட்டுத்தோட்டப் பயிற்சிகளை அறிமுகம் செய்வதற்காக நடந்தன. பின்வருவன மூலமாக ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் பங்குபற்றியவர் நன்மையடைந்தார்.

1. விவசாயத்திணைக்களத்திலிருந்து அழைக்கப்பட்ட விற்பன வளவாளரால் நடத்தப்பட்ட பவர்பொயிண்ட் அளிக்கை மூலமாக வீட்டுத்தோட்டம் பற்றிய விழிப்புணர்வு

2. வீட்டுத்தோட்டம் பற்றிய நூல்

3. கழிவுமுகாமை மற்றும் சூழ்ல் பற்றிய 3 துண்டுப்பிரசுரம்

4. விவசாயத்திணைக்களத்திலிருந்து விநியோகிக்கப்பட்ட மரக்கறி விதைகளின் பொதி

5. விவசாயத்திணைக்களத்திலிருந்து விநியோகிக்கப்பட்ட உரப் பொதி

ஈஈஏ பிரிவு ஆனது 12 ஆக்கத்திறன் வீட்டுத் தோட்ட நிகழ்ச்சிகளை 2013ல் நடத்தியது. இது, பின்வரும் பிரதேச செயலகப் பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்திய 746 இல்லத்தரசிகள் பங்குபற்றிய திவிநெகும நிகழ்ச்சிக்கு சமாந்தரமாக நிகழ்ந்தது.

| இல. | இடம் | பங்காளர் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | எம்டிஎச். ஜயவர்தன வித்யாலய - கொஸ்வத்த | 88 |
| 02 | பிரதேச செயலக அலுவலகம் - மகரகம | 68 |
| 03 | பிரதேச செயலக அலுவலகம் - இரத்மலான | 44 |
| 04 | பிரதேச செயலக அலுவலகம் - கஸ்பேவ | 79 |
| 05 | பிரதேச செயலக அலுவலகம் - கொலன்னாவ | 86 |
| 06 | பிரதேச செயலக அலுவலகம் - ஹன்வெல்ல | 41 |
| 07 | பிரதேச செயலக அலுவலகம் - கொழும்பு | 70 |
| 08 | பிரதேச செயலக அலுவலகம் - ஸ்ரீ ஜயவர்தனபுர | 67 |
| 09 | பிரதேச செயலக அலுவலகம் - மொரட்டுவ | 70 |
| 10 | பிரதேச செயலக அலுவலகம் - திம்பிரிகஸ்யாய | 61 |
| 11 | பிரதேச செயலக அலுவலகம் - பாதுக்க | 32 |
| 12 | பிரதேச செயலக அலுவலகம் - ஹோமாகம | 40 |

## 6.2 பசுமை கழகங்களை உருவாக்கல் - துருலதா, விஹங்க சான்றிதழ்கள், சோபா பட்ஜ்கள், பசுமை ஆசிரியர் கையேட்டு புத்தகங்கள், துண்டுப்பிரசுரங்களை அச்சிடல்.

மசுஅ இன் இப்பிரிவானது முதல்நிலையில் பள்ளிச்சிறுவருக்கு பசுமை கழகங்களை அறிமுகப்படுத்தியது. இதன் மூலமாக சுத்தமான, பசுமையான சூழலை நோக்கிய விழுமிய, நடத்தை, மனப்பாங்கு மாற்றம் எதிர்பார்க்கலாம். முதல்நிலையிலேயே மாணவர்களின் பங்களிப்பை பெருவதற்காகவே இவை தோற்றுவிக்கப்பட்டன. இவை தரம் 1 - 5 வரையான மாணவர்களுக்கு வாய்ப்பளிக்கின்றன. இந்த நடவடிக்கைகளால் சிறிய குழந்தைகள் பசுமை நட்பு முறையில் பயிற்றப்படுவர். அத்துடன் தரம் 6ல் அவர்கள் சூழல் முன்னோடி நிகழ்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்படுவர்.

பின்வரும் நடவடிக்கைகள் இந்நிகழ்ச்சியில் நடத்தப்பட்டன

1. பசுமை கழகங்கள் பதிவு

2. பட்ஜ்கள் மற்றும் சான்றிதழ்களின் உற்பத்தி மற்றும் விநியோகம்

3.நிகழ்ச்சியின் மதிப்பீடு

4. ஆசிரியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சி

5. ஆசிரியர் கையேட்டு புத்தகத்திற்கான விநியோகம்



பசுமை கழக குழந்தைகளின் நடவடிக்கைகளின் புகைப்படம்

2013ல், துருலத, விஹங்க சான்றிதழ்கள், ஆசிரியர் கையேட்டு புத்தகங்கள் ஆகியவற்றின் தயாரிப்பும் துண்டுபிரசுர அச்சிடல் ஆகியன நடைபெற ஒழுங்கிடப்பட்டுள்ளன. அத்துடன் தேவைப்பாடுகள் நிர்வாக அலகிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளன.

## 6.3 முன்னிறுத்தல் கண்காட்சிகளை முன்னிறுத்தல்

இப்பிரிவானது பல்வேறு தொனிப்பொருட்களிலான கண்காட்சிகளில் பங்குபற்றியது. இந்நடவடிக்கைகளின் மூலம் இப்பிரிவானது, விழிப்புணர்வு கட்டியெழுப்பல், சூழல் செய்திகளைப் பரப்பல், சூழல் பிரச்சினைகளை வெளிப்படுத்தும் சக்திமிக்க கருவியான மாதிரிகள், பேப்பர்களை காட்சிப்படுத்தலூடாக பிரச்சினைகளில் சம்பந்தப்படல் போன்றவற்றை செய்தது.

2013ல், இப்பிரிவானது, பல்வேறு இடங்களில் நடைபெற்ற பின்வரும் வைபவங்களில் இருந்த பின்வரும் கண்காட்சிகளில் பங்குபற்றியது. அத்தோடு பிராந்திய அலுவலகங்கள் கண்காட்சிகளை நடாத்தவும் இது உதவியது.

| இல. | இடங்கள் |
|---|---|
| 01 | *பிஎமைசிஎச் ல் "எடெக்ஸ்" கண்காட்சி* |
| 02 | கொழும்பு அசோகா வித்தியாலயத்தில் கண்காட்சி |
| 03 | *"தயட்ட கிருள" கண்காட்சி* |
| 04 | *காலி "சமனல கிரவுண்ட்"ல் "ரிச்மண்ட் ரிதம் 2013"* |
| 05 | *பன்னல தேசிய பாடசாலையில் "விடுபிம உடானி"* |
| 06 | மொரட்டுவ ப்ரின்ஸ் ஓ∴ப் வேல்ஸ் வித்தியாலயம் |

| இல. | இடங்கள் |
|---|---|
| 07 | *பிஎமைசிஎச் - விதுல்க கண்காட்சி* |
| O8 | தேசிய நஞ்சு வார கண்காட்சி - பொது மருத்துவமனை - கொழும்பு |
| 09 | கம்பஹா பண்டாரநாயக்க வித்தியாலயம் கண்காட்சி |
| 10 | *"முதலியன் விடுபிம அடி - உடானி - 2013" லலித் அத்லத்முதலி வித்யாலயம் - மவுண்ட்லவினியா* |




மசுஅ இன் கண்காட்சி காட்சியறையின் புகைப்படம்

இப்பிரிவானது நிர்வாகப்பிரிவுடன் கலந்தாலோசித்து கண்காட்சி அலகிற்கு இலத்திரனியல் பொருட்கள் வாங்கவுள்ளது. பல்வேறு நோக்குகளுக்கு பாவிப்பதற்கு பொது பனர்கள் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## 6.4 இயற்கை கள மையங்களில் நிகழ்ச்சி நடத்தல் - செய்முறை நிகழ்ச்சிகளை எடுத்தல்

இந்த நடவடிக்கையின் கீழ் மசுஅ ந் இப்பிரிவானது இயற்கை கள மையங்களுக்கு (என்.எ.ஃ.ப்.சி) நிதியளித்து, பல நோக்கு குழுக்களிடையே சூழல் உணர்வை மேம்படுத்த பல சூழல் நடவடிக்கைகளை நடத்துகிறது. மசுஅ இன் கீழ் 4 இயற்கை கள மையங்கள் உள்ளன. அவை மசுஅ இன் மாகாண அலுவலகங்களின் கீழ் வேரு வேறு மாகாணங்களில் அமைந்துள்ளன.ரூமஸ்ஸல என்.எ.ஃ.ப்.சி. ஆனது தென் மாகாண அலுவலகத்தின் கீழும், குண்டசாலை என்.எ.ஃ.ப்.சி ஆனது மத்திய மாகாண அலுவலகத்தின் கீழும், கேகாலை என்.எ.ஃ.ப்.சி சப்ரகமுவ மாகாண அலுவலகத்தின் கீழும் அத்திடிய என்.எ.ஃ.ப்.சி ஆனது மசுஅ இன் இப்பிரிவான ஈஈ மற்றும் ஏ பிரிவின் கீழும் செயற்படுகின்றன.



தேசிய கள மையத்தில் மாணவரின் நடவடிக்கையின் புகைப்படங்கள்

2013ல் பின்வரும் நடவடிக்கைகள் அத்திடியய தேசிய கள மையத்தில் நடைபெற்றன:

| இல. | பாடசாலை | பங்காளர் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | மாணவர்கள் | ஆசிரியர்கள் |
| 01 | பௌத்த மகளிர் மகா வித்தியாலயம்<br>லலித் அத்துலத்முதலி மகா வித்தியாலயம்<br>கந்தவல மகா வித்தியாலயம்<br>தர்மராம மகா வித்தியாலயம். | 60 | 08 |
| 02 | பாணந்துறை ஸ்ரீ சுமங்கல பாலிகா வித்தியாலயம் | 55 | 03 |
| 03 | இசிப்பத்தன மகா வித்தியாலயம் - கொழும்பு | 41 | 02 |
| 04 | தாருசலாம் வித்தியாலயம் | 43 | 02 |
| 05 | மகாமத்ய வித்தியாலயம் - அத்துருகிரிய | 44 | 02 |
| 06 | சுபரதி வித்தியாலயம் - கங்கொடவில | 30 | 02 |
| 07 | புவனேகபா மகா வித்தியாலயம் - மகரகம | 58 | 02 |
| 08 | பானகொட - இராணுவ பாடசாலை | 42 | 10 (and 10 Parents) |
| 09 | கிதுலவில சூழல் சங்க மாணவர்கள் | 38 | 06 others |
| 10 | பிலியந்தல விஞ்ஞான கல்லூரி<br>பிலியந்தல உயர் பாடசாலை | 70 | 04 |

| இல. | பாடசாலை | பங்காளர் எண்ணிக்கை மாணவர்கள் | ஆசிரியர்கள் |
|---|---|---|---|
| 11 | சாரண தலைவர்களுக்கான 2 நாள் நிகழ்ச்சி | 80 | 05 |
| 12 | தலைமைத்துவ நிகழ்ச்சி<br>ஜனாதிபதி கல்லூரி - மகரகம | 30 | 02 |
| 13 | ரஜத பதக்க பரீட்சை<br>அனுலா வித்தியாலயம் - நுகேகொட | 18 | 02 (and 06 parents0 |
| 14 | கல்கிசை - விஞ்ஞான கல்லூரி | 63 | 02 |
| 15 | கண்டவல நவோதய வித்தியாலயம் - இரத்மலனை | 56 | 02 |
| 16 | மொரட்டுவை மகா வித்தியாலயம் - மொரட்டுவை | 42 | 02 |
| 17 | மகாமாயா பாலிகா வித்தியாலயம் கங்கொடவில | 31 | 02 |
| 18 | ப்ரின்ஸ் ஒ∴ப் வேல்ஸ் வித்தியாலயம் - மொரட்டுவை | 30 | 02 |
| 19 | வித்யாலோக மகா வித்தியாலயம் - பன்னிப்பிட்டிய | 28 | 02 |
| 20 | பிலியந்தல மகா வித்தியாலயம் - பிலியந்தல | 51 | 02 |
| 21 | மொரட்டுவ மெதடிஸ்ட் உயர் பாடசாலை | 51 | 02 |
| 22 | மகாமாயா பாலிகா வித்தியாலயம் கங்கொடவில | 60 | 02 |
| 23 | மவுண்ட்லவினியா பெண்கள் உயர் பாடசாலை | 25 | 02 |
| 24 | கொத்தலாவலபுர மகா வித்தியாலயம்<br>அத்தடஸ்ஸி வித்தியாலயம் | 55 | 04 |
| 25 | மகிந்த ராஜபக்ஷ வித்தியாலயம் - ஹோமாகம | 44 | 02 (and 02 parents) |
| 26 | கல்கிசை பௌத்த பெண்கள் கல்லூரி | 62 | 02 |
| 27 | தெலவல ஸ்ரீ ராகுல வித்தியாலயம் - தெலவல | 32 | 02 |

| இல. | பாடசாலை | பங்காளர் எண்ணிக்கை மாணவர்கள் | ஆசிரியர்கள் |
|---|---|---|---|
| 28 | நுகேகொடை சமுத்ரா தேவி வித்தியாலயம் | 46 | 02 |
| 29 | மொரட்டுவ ப்ரின்ஸ் ஒ.ஃப் வேல்ஸ் வித்தியாலயம் | 68 | 02 |
| 30 | கொழும்பு மாவட்ட முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி | 30 | Others - 06 |
| 31 | பிலியந்தலை மத்திய கல்லூரி - பிலியந்தலை | 37 | 02 |
| 32 | பிலியந்தலை மத்திய கல்லூரி - பிலியந்தலை | 38 | 02 |
| 33 | களனி பல்கலைக்கழக மாணவர்கள் | 05 | |
| 34 | கொழும்பு பல்கலைக்கழக மாணவர்கள் | 18 | |
| 35 | புண்யகாமி வித்தியாலயம் - பிலியந்தலை<br>ரோமன் கத்தோலிக்க வித்தியாலயம் - பிலியந்தலை<br>மெத் செவன முன்பள்ளி<br>கைட்ரெஸ் முன்பள்ளி<br>ஆனந்த ஸாஸ்த்ராலய - பிட்டகோட்டை | 160 | 10 |
| 36 | புத்தகோஷ வித்தியாலயம் - தெஹிவளை<br>யசசிரி முன்பள்ளி -அத்துருகிரிய<br>அனுலா வித்தியாலயம் - பம்பலப்பிட்டிய<br>விசாக்கா வித்தியாலயம் - பம்பலப்பிட்டிய<br>கோல்டன் கீ முன்பள்ளி | 284 | 06 |
| 37 | மகரகம ஜனாதிபதி கல்லூரி<br>கொழும்பு மியூசியஸ் கல்லூரி<br>கொழும்பு றோயல் கல்லூரி<br>விசாக்கா வித்தியாலயம் - பம்பலப்பிட்டிய<br>அனுலா வித்தியாலயம் - கொழும்பு<br>வித்யாகாரபாலிகா வித்தியாலயம் - மகரகம | 130 | 14 |
| 38 | சிரமதான வேலை - லயன்ஸ் கழகமும் | 33 | |

| இல. | பாடசாலை | பங்காளர் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | மாணவர்கள் | ஆசிரியர்கள் |
| | மாணவர்களும் | | |
| 39 | ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சி - பிலியந்தலை வலயம் | 46 | |

அத்திடிய தேசிய கள மையத்தில், பின்வரும் தலைப்புகள் பாடசாலை நிகழ்ச்சிகளில் கலந்துரையாடப்பட்டன.

திண்ம கழிவு முகாமைத்துவம், மரநடுகை, உயிர்பல்வகைமை,ஈரநிலங்கள், உயிர்ப்பல்வகைமை, தொழிற்றுறை கழிவு முகாமை, சக்தி மற்றும் வலுவிற்கான பாதுகாப்பு, சூழல் முன்னோடி நிகழ்ச்சி, நீரியல் வளங்கள் மற்றும் முகாமைத்துவம், ஓசோன் படை, வண்ணத்துப்பூச்சிகள், சதுப்புநிலங்கள், சூழல் பாதுகாப்பு, நீர்ப்பாதுகாப்பு, பாம்புகள், பருவநிலை மாற்றம், பறவைகள், சுகாதாரமும் சூழல் காப்பும், பூகோள வெப்பமாதல், இன்னபிற.

மேலதிகமாக, ஆய்வுப்பணி செய்ய வசதிகள் தரப்பட்டன.

## 6.5 கலாசார நிகழ்வுகளில் சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தல்

சூழல் முன்னோடிகள், யாத்திரைத்தலங்களில் சுத்தம் பேணல், சூழல் நட்புடைய திண்ம கழிவுப் பயிற்சிகளை மேற்கொள்ளல் மூலமாக சூழலைக்காத்தல் போன்ற சூழல் விழிப்புணர்வை விரிவடைய வைக்க என பல கலாசார வைபவங்களில் கலந்து கொள்வர். கல்வி மற்றும் விழிப்புணர்வுப் பிரிவு ஆனது 2013ல் பின்வரும் நிகழ்வுகளை ஒழுங்கமைத்து நடத்தியது.

1. அநுராதபுரத்திலும் மிகிந்தலையிலும் பொசொன் திருவிழா
2. கதிர்காமத்தில் எசல விழா
3. கண்டியில் எசல விழா
4. தலவிலவில் சமய விழா



கண்டி எசல விழாவின் புகைப்படங்கள்

## 6.6 இலங்கை பசுமை இளைஞர் நிகழ்ச்சி

வடக்கு மற்றும் கிழக்கில் பசுமைப் பூங்கா ஒன்றை அமைப்பதற்கு ஒரு செயற்றிட்ட முன்மொழிவு தயாரிக்கப்பட்டது. அது டிடிஜி இடம் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டது. அனுமதி பெற்ற பின் வழிகாட்டல்கள் மசுஅ இன் மாகாண மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டது. இது சம்பந்தமாக, கிளிநொச்சி மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலிருந்து செயற்றிட்ட முன்மொழிவுகள் பெறப்பட்டன. அதற்கமைய மட்டக்களப்பு இடத்திற்கு விஜயம் செய்யப்பட்டு, இந்நோக்கத்திற்காக புதிய இடம் தேரப்பட்டது.

இந்நடவடிக்கைகாக, கிளிநொச்சி மற்றும் மட்டக்களப்பிலிருந்து முன்மொழிவுகள் பெறப்பட்டதோடு, சம்பந்தபட்ட தரப்பினரிடமிருந்து ஆதரவுக்கடிதமும் பெறப்பட்டது. எம்.ஓ.யூ. தயார்செய்யப்பட்டு கையெழுத்திடுவதற்காக மாவட்ட அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டது.

## 6.7 காலாண்டு சூழல் செய்திக்கடிதம்

சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவானது , இலங்கையின் பல்வேறு குழுக்கள் மத்தியில் விசேடமாக பாடசாலை மாணவர்கள் அம்த்தியில் செய்தியை பரப்புவதற்காக காலாண்டு செய்தி மடலை வெளியிடுகிறது. 2013ல், இம்மடல்களின் முதல் மற்றும் இரண்டாம் இதழ்கள் வெளியிடப்பட்டன. மூன்றாம் நான்காம் இதழ்கள் அச்சகத்திற்கு அச்சிடலுக்காக அனுப்பி வைக்கப்பட்டன. வட கிழக்கை தவிர இலங்கை முழுவதும் அனைத்துப் பாடசாலைகளுக்கு அச்சிடப்பட்ட இதழ்கள் அனுப்பி வைக்கப்பட்டுளன.

2012ன் 3 செய்திக்கடிதங்கள், 2013ன் 5 இதழ்கள் உள்ளிட்ட காலாண்டு சூழல் செய்திக்கடிதங்கள் சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வுப்பிரிவின் ஊடக அலகால் வெளியிடப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன.




சூழல் செய்திக்கடிதங்களின் விநியோகத்திற்கான நடவடிக்கைகளின் புகைப்படம்

## 6.8 இல்லத்தரசிகளுக்கான நிகழ்ச்சி நடத்தல்

வீட்டுத்தோட்ட நிகழ்ச்சிக்கு சமாந்தரமாக, மசுஅ இன் சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவானது சுய வேலையாக இருக்க கூடியதான அவர்களது வருமானத்தை பெருக்ககூடியதும் அவர்களது ஊட்ட நிலையை மேம்படுத்தக்கூடியதுமான பசுமை நட்புடைய விவசாய பயிற்சிகள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இல்லத்தரசிகளுக்கு நிகழ்ச்சி நடாத்துகிறது.

2013ல் 6 பிரதேச செயலக பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்தி இல்லத்தரசிகளுக்காக 6 நிகழ்ச்சிகள் நடத்தப்படன. இவை அவர்களுக்கு சூழல் நட்புடைய விவசாயப்பயிற்சிகளை அறிமுகப்படுத்த செய்யப்பட்டன. பின்வரும் வகையில் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் பங்காளர்கள் நன்மையடைந்தனர்.

1) பயிர் நடுகை, உரத்தயாரிப்பு, விவசாயத்திணைககளத்தை சேர்ந்த விற்பன வளவாளர் நடத்திய பவர்பொயிண்ட் மூலமாக சூழல் நட்புடைய விவசாய முறைமைகள்

2) விடய சம்பந்தமான நூல்

3) கழிவு முகாமைத்துவமும் சூழலும் பற்றிய மூன்று துண்டுப்பிரசுரங்கள்

469 இல்லத்தரசிகள் பின்வரும் பிரதேச செயலகங்களை பிரதிநிதித்துவப்படுத்திப் பங்குபற்றினர்.

| இல. | இடம் | பங்காளர் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | கடுவெல - பிரதேச செயலக அலுவலகம் | 80 |
| 02 | ஸ்ரீ ஜயவர்தனபுர - பிரதேச செயலக அலுவலகம் | 59 |
| 03 | கொலன்னாவ - - பிரதேச செயலக அலுவலகம் | 81 |
| 04 | இரத்மலானை - பிரதேச செயலக அலுவலகம் | 84 |
| 05 | களனிய - பிரதேச செயலக அலுவலகம் | 75 |
| 06 | பாதுக்கை - பிரதேச செயலக அலுவலகம் | 90 |

## 6.9 “உலக சூழல் தினம்” நிகழ்ச்சி நடத்தல்

இந்த நிகழ்ச்சியின் கீழ் இப்பிரிவானது அகுறித்தவருடத்திற்கான உலக சூழல் தினத்திற்கான தொனிப்பொருட்களுக்கு ஏற்ப, பல்வேறு நிகழ்ச்சிகளை நடாத்தி வருகிறது. “சிந்தியுங்கள், உண்ணுங்கள், சேமியுங்கள், உங்களது பாதச்சுவடுகளை குறையுங்கள்” என்ற தொனிப்பொருளின் கீழ், 2013 உலக சூழல் தினம் டெம்பிள்ட்ரீஸில், சூழல் முன்னோடிகள் உள்ளிட்ட 5000 பாடசாலை மாணவர்களின் பங்களிப்புடனும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் பங்குபற்றுதலுடனும் நிகழ்ந்தது.

அழைக்கபட்ட முக்கிய விருந்தினர்களாக, பல்வேறு நாடுகளின், அமைச்சுகளின், சம்பந்தப்பட்ட நிறுவகங்களின் பிரதிநிதிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். 22 பாடசாலைகளை சேர்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள் பெற்றோர், ஊடக ஊழியர்கள் மற்றும் மசுஅ இன் அதிகாரிகள் ஆகியோர் இந்நிகழ்வில் பங்குபற்றினர்.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களிடமிருந்து, ஜனாதிபதிப் பதக்கங்களை பின்வரும் பாடசாலைகளைச் சேர்ந்த சூழல் முன்னோடி மாணவர்கள் பெற்றுக் கொண்டனர்.

1. மகிந்த ராஜபக்ஷ நவோதய வித்தியாலயம் - மாத்தளை

2. கு - சுரடுத பாலிகா மகா வித்தியாலயம் - குளியாப்பிட்டி

3. கு - உடபடலவ சுதர்ஷன மகா வித்தியாலயம் - மஸ்பொத

4. க- ரிச்மண்ட் கல்லூரி - காலி

5. ஹ - தஙல்ல பாலிகா மகா வித்தியாலயம் - தங்கல்ல

6. மர - அக்குருகொட செனானி வித்தியாலயம் - தெலிஜ்ஜவில

7. மஹா - தெல்தெனிய தேசிய பாடசாலை - தெல்தெனிய

8. கொ- விசாகா வித்தியாலயம் - கொழும்பு

9. ம - உக்கு - அலவல வித்தியாலயம் - உக்குவல

10. ம - ஒவிகந்த மகா வித்தியாலயம் - மாத்தளை

11. ஸ்ரீ சுமங்கல பாலிகா வித்தியாலயம் - பாணந்துறை

12. சுமன பாலிகா வித்தியாலயம் - இரத்தினபுரி

13. ஜா - ராமநாதன் வித்தியாலயம் - சுன்னாகம், யாழ்ப்பாணம்

14. டபிள்யூபி - பிலியந்தலை மத்திய கல்லூரி - பிலியந்தலை

15. ர - அம்பி - கல்ல நவோதய பாடசாலை - கல்லொன்ன

16. கா - சவுத் லாண்ட் பாலிகா வித்தியாலயம் - காலி

17. பு - அல் - அக்சா தேசிய பாடசாலை - கல்பிட்டிய

18. ம - முவந்தெனிய வித்தியாலயம் - மாத்தளை

19. டபிள்யூபி - கெ - தர்மாலோக மத்திய கல்லூரி - களனிய

20. சமுத்ராதேவி பாலிகா வித்தியாலயம் - நுகேகொடை

21. கம் - கம்புரகல்ல மகா வித்தியாலயம், ருக்கஹவில

22. ரா - அம்பி - கொடவல மகா வித்தியாலய - ஓமல்பே



2013 ஜனாதிபதி பதக்க வெற்றியாளர்களின் குழு புகைப்படம்

இந்த விசேட வைபவத்தில் பின்வரும் நடவடிக்கைகள் நிகழ்ந்தன

1. சூழல் நட்புடைய செயற்றிட்ட முன்மொழிவு தயாரிப்பு போட்டி மற்றும் சுவரொட்டி போட்டி ஆகியன உலக சூழல் தினம் 2013 இனை அடையாளப்படுத்தும் வண்ணம், வயதிற்குட்பட்ட, திறந்த பிரிவுகளில் நடைபேற்றது.

2. பரிட்சையில் சித்தி எய்திய 92 சூழல் முன்னோடிகள் இலங்கையின் அதிமேதகு ஜனாதிபதியிடமிருந்து ஜனாதிபதி பதக்கங்களை பெற்றனர்.

3. பங்காளர்களிடையே பழமரங்கள், சூழல் நட்பு பைகள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் ஆகியன விநியோகிக்கப்பட்டன.

4. இலங்கை ஜனாதிபதி அதிமேதகு மகிந்த ராஜபக்ச அவர்களால் சிறந்த நடத்தையுடைய ஆசிரியர்கள் மற்றும் சூழல் ஆணையாளர்கள் விருதளிக்கப் பெற்றனர்.






**2013 உலக சூழல் தின வைபவங்களின் புகைப்படங்கள்**

## 6.10 நவீன பிரச்சனைகள் மீதான கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தல்

### 6.10.1. பாடசாலை மாணவர்கள் மற்றும் பல்வேறு பங்காளர்களுக்கு மசுஅ இன் கேட்போர் கூடத்தில் நவீன பிரச்சனைகள் மீதான கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தல்

மசுஅ இன் சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவு ஆனது பாடசாலை மாணவர்கள் மற்றும் பல்வேறு பங்காளர்களுக்கு மசுஅ இன் கேட்போர் கூடத்தில் நவீன பிரச்சனைகள் மீதான கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை, பல்வேறு நோக்கு குழுக்கள் மத்தியில் சூழல் உணர்வு மேம்படுவதற்காக நடத்தியது.

பாடசாலை சிறுவர்களே இந்த நிகழ்ச்சியின் பிரதான பங்கேற்பாளர்கள் ஆவர். இந்நிகழ்ச்சி 4 விரிவுரைகள், ஒரு வீடிடோ மற்றும் கள நடவடிக்கை ஆகியவற்றை உள்ளடக்கியது. விரிவுரைகளின் தலைப்பானது நேரடியாக சூழலுடன் சம்பந்தப்பட்டதாகவும் விடயங்கள் பாடவிதானத்துடன் மிகவும் சம்பந்தப்பட்டதாகவும் இருந்தது. இந்நிகழ்ச்சியில் ஒரு தொகுதி சூழல் விடயம் சார் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்படட்ன.

திண்மக்கழிவு முகாமை, மரநடுகை, உயிர்ப்பல்வகைமை, சூழல் முறைமை பல்வகைமை,ஈரநிலங்கள்,ஈரநில முகாமைத்துவம், சூழல் நட்பு விவசாயம், தொழிற்றுறை கழிஉ முகாமைத்துவம், இயற்கை வள முகாமைத்துவம், சூழல் முன்னோடி நிகழ்ச்சி, உரத்தயாரிப்பு, ஓசோன் படை, வண்ணட்ய்ஹ்துப்பூச்சிகள், சதுப்பு நிலங்கள், சூழற்பாதுகாப்பு, நீர்ப்பாதுகாப்பு, விலங்கு உலகம், பருவநிலை மாற்றம், பறவைகளின் பல்வகைமை, சுகாதார மற்றும் சுழல் காப்பு, பூகோள வெப்பமாதல், விலங்குகளுக்கு உணவளிக்கும் முறை, உணவுச்சங்கிலி மற்றும் உஅவுப்பின்னல், உலக சூழல் பிரச்சினைகள், கதிர்வீச்சை எடுக்கும் பறவைகளின் அலகும் பாதமும், தலங்கம ஏரி, கி.ஐ.எஸ், இலங்கையின் புராதன நீர்ப்பாசன முறைகள், சடுதியான பேரிடர்கள், இயற்கைச் சமநிலை ஆகிய சூழலியல் தலைப்புகள் இந்நிகழ்ச்சியின் விரிவுரைகளுக்கு அமைந்தன.

2013ல், மசுஅ இன் கேட்போர் கூடத்தில் நடந்த இந்த நிகழ்ச்சியில் பின்வரும் செயன்முறை பதிவு செய்யப்பட்டது.

| இல. | பாடசாலையின் பெயர் | பங்கேற்ற மாணவர் எண்ணிக்கை | பங்கேற்ற ஆசிரியர், பிறர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | <u>உலக ஈரநில தின நிகழ்ச்சி</u><br>அனுலா வித்தியாலயம் - நுகேகொடை<br>விதயாகார பாலிகா மகா வித்தியாலயம் - மகரகம<br>ஶ்ரீ சுபுதி வித்தியாலயம் - பத்தரமுல்லை<br>வித்யாராஜ மகா வித்தியாலயம் - ஹோகந்த<br>புவனேகபா வித்தியாலயம் - மகரகம<br>ஆனந்த சாஸ்திராலயா - கோட்டை<br>மகாமத்ய மகா வித்தியாலயம் - அதுருகிரிய<br>ஶ்ரீ ராகுல பாலிகா மகா வித்தியாலயம் - மாலம்பே | 115 | 09 |
| 02 | சங்கமித்தை வித்தியாலயம் - ஹெயந்துடுவ<br>வித்யாதிலக வித்தியாலயம் - திம்பிரிகஸ்யாய | 98 | 04 |
| 03 | கொதலவல மகா வித்தியாலயம் - கடுவெல | 73 | 03 |
| 04 | சி.டபிள்யூ, டபிள்யூ. கன்னங்கர வித்தியாலயம் - மதுகம | 60 | 03 |

| இல. | பாடசாலையின் பெயர் | பங்கேற்ற மாணவர் எண்ணிக்கை | பங்கேற்ற ஆசிரியர், பிறர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 05 | உலக சூழல் தினம், சர்வதேச உயிர்ப்பல்வகைமை தினம் - விசேட நிகழ்ச்சி<br>நாளந்த வித்தியாலயம் - மினுவாங்கொடை<br>ஸ்ரீ சுபுதி வித்தியாலயம் - பத்தரமுல்லை<br>வித்யாகார பாலிகா மகா வித்தியாலயம் - மகரகம<br>முல்லெகம மகா வித்தியாலயம் - ஹோமாகம | 200 | 06 |
| 06 | குருகுல மகா வித்தியாலயம் - களனிய | 58 | 02 |
| 07 | ஆனந்த கல்லூரி - கொழும்பு 10 | 55 | 03 |
| 08 | உலக வசிப்பிட நாள் நிகழ்ச்சி<br>மெதொடிஸ்ட்ட் பாடசாலை - மொரட்டுவை<br>மொரட்டுவ மகா ர்யடிவையவ - மொரட்டுவ<br>புனித ஜோசெப் கல்லூரி - கிராண்ட் பாஸ் | 150 | 06 |
| 09 | உலக மணல் நாள், சர்வதேச மலை நாள் - விசேட நிகழ்ச்சி<br>எம்.டி.எச். ஜயவர்தன வித்தியாலயம் - பத்தரமுல்லை<br>ஸ்ரீ ராகுல மகா வித்தியாலயம் - மடிவெல | 106 | 5 |

பங்குபற்றிய பாடசாலைகளின் எண்ணிக்கை - 22

பங்குபற்றியமாணவர்களின் எண்ணிக்கை - 915

பங்குபற்றிய ஆசிரியர்களின் எண்ணிக்கை -41



மசுஅ இன் கேட்போர்கூடத்தின் விழிப்புணர்வு நிகழ்ச்சியின் புகைப்படம்

### 6.10.2பாடசாலை மாணவர்கள் மற்றும் பல்வேறு நிறுவகங்களைச் சேர்ந்தபல்வேறு பங்காளர்களுக்கு மசுஅ இற்கு வெளியில் நவீன பிரச்சனைகள் மீதான கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தல்

மசுஅ இன் சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவானது, நவீன பிரச்சினைகளைப் பற்றிய கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை, பாடசாலைச் சிறுவர் மற்றும் பல நிறுவகங்களைச் சார்ந்த பல பங்காளர்களுக்கும், அவர்களது இடத்திற்கே சென்று அவர்கள்தம் சூழல் விழிப்புணர்வை அதிகரிப்பதற்காக நடத்தியது.

2013ல், பின்வரும் இடங்களில் விழிப்புணர்வு வெளி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன:

1. பாதுகாப்பு சேவைக் கல்லூரி - கொழும்பு
2. வித்யாதிலக மகா வித்தியாலயம் - திம்பிரிகஸ்யாய
3. பண்டாரநாயக்க வித்தியாலயம் - கம்பகா
4. ஆனந்தா கல்லூரி - கொழும்பு 10
5. ஜனாதிபதி கல்லூரி - மகரகம
6. கலகிட்டியாவ மத்திய கல்லூரி - கனேமுல்லை
7. ஸ்ரீ சுமங்கலா பாலிகா வித்தியாலயம் - பாணந்துறை
8. விதுர கல்லூரி - தலவதுகொட
9. பிலியந்தலை மத்திய கல்லூரி - பிலியந்தலை
10. குருகுல மகா வித்தியாலயம் - களனி
11. பெருந்தோட மற்றும் மனிதவள அபிவிருத்தி நம்பிக்கை நிதியம் - பத்தரமுல்லை
12. ஹைட்ட்ரமினி ஆடைத் தொழிற்சாலை - அவிஸ்ஸாவளை மற்றும் மருத்துவமனை ஊழியர் - அவிஸ்ஸாவளை
13. சமூகம் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான பி.ஏ.எஸ்.எ.ஃப். நிறுவகம் நடத்திய நிகழ்ச்சி - நினமட கடிவில - அரலிய சமூக மண்டபம்.
14. சன்ரோ கிராபிக்ஸ் தனியார் நிறுவனம் - பொல்கஸொவிட்ட




மசுஅ இற்கு வெளியே நடைபெற்ற விழிப்புணர்வ் நிகழ்ச்சியின் புகைப்படங்கள்

### 6.10.3 மசுஅ இன் தேசிய சூழல் கல்வி நிறுவகத்தினால் நடத்தப்பட்ட நிகழ்ச்சிகள்

மசுஅ இன் சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவு ஆனது, அலுவலர்கள், என்.ஜி.ஓக்களின் உறுப்பினர்கள், பல்வெறு நிறுவகங்களின் ஊழியர்களுக்கு அவர்களின் சூழல் விழிப்புணர்வை மேம்படுத்த விசேட விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தியது.

இது சார்ந்து, இப்பிரிவானது, பல்வேறு நிறுவக அதிகாரிகள் மற்றும் மசுஅ அதிகாரிகள் உள்ளிட்ட, 72 பங்குபற்றுநர்களுடன் 2013ல் தேசிய சூழல் கல்வி நிறுவகத்தினை ஆரம்பித்தது. அதன் பின், சட்ட அமலாக்கல் அலுவலர்களுக்காக 2ம் நிகழ்ச்சியை நடத்தியது. இதில் 69 சட்ட அலுவலர்கள் பங்கேற்றனர். மூன்றம் நிகழ்ச்சியானது, சோதிடம், சூழல் மற்றும் ஆயுர்வேதம் மீது, பல்வேறு நிறுவகங்களிலிருந்து அழைக்கப்பட்ட 60 பங்கேற்பாளர்களுடன் நடைபெற்றது.

## 6.11 சூழல் பிரச்சனைகள் மீதான பிரச்சாரம் மற்றும் வைபவங்கள் நடத்தல்

## மசுஅ இன் இப்பிரிவானது இந்த நடவடிக்கைக்காக, சூழல் சார் பிரச்சனைகள், டெங்கு ஆகியவற்றை பூண்டோடு அழிப்பதர்கான நிகழ்ச்சியை ஒழுங்குபடுத்தியது.

பல மாவட்டங்களில் டெங்கு தடுப்பு நிகழ்ச்சிகள், பல்வகைப்பட்ட பங்காளர்களின் பங்குபற்றலுடன் நடைபெற்றன. இது சம்பந்தமாக, பரவும் டெங்குவை தவிர்ப்பதற்கான குழு ஒன்று அமைக்க வேண்டும் என கலந்துரையாடப்பட்டது. டெங்கு கண்காணிப்பு நிகழ்ச்சியின் புதிய அமைப்பு இலங்கை முழுவதும் அனுப்பி வைக்கப்பட்டது.

1) இதன் கீழ் முதலாவது நிகழ்ச்சியானது மசுஅ - மேல்மாகாணம் இன் 30 அலுவலர்களின் பங்களிப்புடன் டென்சில் கொப்பேகடுவ வீதியில் நடைபெற்றது. மசுஅ இன் இப்பிடிவால் ஒருங்கிணைப்பு மற்றும் அமுல்படுத்தல் ஆகியன நடைபெற்றன.

2) இதன் கீழ் இரண்டாவது நிகழ்ச்சியானது, மசுஅ மற்றும் வெளிநாட்டு வெலைவாய்ப்பு முகவரகத்தின் இன் 36 அலுவலர்களின் பங்கேற்புடன் டென்சில் கொப்பேகடுவ வீதி மற்றும் ரொபேர்ட் குணவர்தன வீதி ஆகியவற்றில் நடைபெற்றது. இது மசு அன் இப்பிரிவால் அமுல்ப்படுத்தப்பட்டது.

3) பாடசலை மாணவர்கள், சமூக அடிப்படையான அமைப்புகள் அம்ற்றும் பிற நிறுவகங்களின் பங்கேற்புடன் ஜுலை மாதம் 1 -7ம் திகதி வரை டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சி ஒழுங்கமைக்கபட்டு நடைபெற்றது.





டெங்கு தடுப்பு நிகழ்ச்சியின் புகைப்படங்கள்

மசுஅ நடத்திய டெங்கு தவிர்ப்பு நிகழ்ச்சியில் பின்வரும் நிறுவகங்கள் பங்கெடுத்தன:

1. வெளிநாட்டு வேலைவாய்ப்பு திணைக்களம் - பத்தரமுல்லை
2. தெங்கு உற்பத்தி சபை - பத்தரமுல்லை
3. மேல்மாகாண கூட்டுறவு அமைச்சு
4. வீதி அபிவிருத்தி அதிகார சபை - மேல்மாகாணம்
5. கார்ல்டன் ஸ்போர்ட்ஸ் நெர்வோர்க்ஸ்
6. எம்.ஓ.எச். கடுவெல
7. தலஙம காவல்துறை நிலையம்
8. கடுவெல பிரதேச செயலக அலுவலகம்
9. கடுவெல மாநகர சபை
10. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை
11. பதிவாளர் நாயகம் திணைக்களம்
12. வீதி அபிவிருத்தி அதிகார சபை - மேல்மாகாணம்

## 6.12 சூழல் நட்பு வெசாக் வெளிச்சக்கூடு கண்காட்சிப் போட்டி

**சூழல் நட்பு வெசாக் வெளிச்சக்கூடு கண்காட்சிப் போட்டிக்குப் பதிலாக, வட மத்திய மாகாணத்தில் பொசொன் விழாவையொட்டி நிகழ்ச்சி நடாத்தப்பட்டது.**

## பிற வேலை.

நிதியளிக்கப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு மேலாக, மசுஅ இன் ஈஈ மற்றும் ஏ பிரிவால் 2013ல் பின்வரும் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன:

1. க்ளசிக் ட்ரவலுக்கு செயற்றிட்ட முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டது.

2.எச்.என்.பி. அஷுரன்ஸ் இன் காப்பின் கீழ் பாடசாலை செயற்றிட்டங்கள். இது நடைபெறுகிறது.

3. பெருந்தோட்டத்துறைக்கான பாடசாலை நிகழ்ச்சியானது ஏ.எம்.எல். கன்சல்டண்ட்களுடன் ஒருங்கிணைந்து நடைபெற்றது

4. பாடசாலை செயற்றிட்டங்களை அமுல்படுத்துவதற்காக அக்க்சஸ் சர்வதேச தனியார் நிறுவனத்துடன் கூட்டம் நடத்தப்பட்டது.

5. அயகமவில் நடைபெற்ற பிரதேச முகாமிற்கு நிதி அளிக்கப்பட்டது.

மேலும், பல நிகழ்ச்சிகள் விசேட நிகழ்ச்சிகளாக ஒழுங்கமைக்கப்பட்டன. அவை பின்வருமாறு:

1) உலக பூமி தினத்திற்காக,ஈஈ மற்றும் ஏ பிரிவின் அலுவலர்கள் சூழல் நடையில் பங்கேற்றனர். இதில் ஸ்ரீ ஜயவர்தனபுர வித்தியாலயம், ஜனாதிபதி கல்லூரி - மகரகம, ஸ்ரீ சுபுதி வித்தியாலயம் - பத்தரமுல்லை ஆகியவற்றிலிருந்து 100 மாணவர்கள் பங்கேற்றனர். இந்த நிகழ்ச்சியானது சுற்றாடல் அமைச்சால் நடாத்தப்பட்டது.

2) சர்வதேச உயிர்ப்பல்வகைமை தினத்திற்காக, வித்யாவர்தனே வித்தியாலயம் மற்றும் எம்.டி.எச். ஜயவர்தனே வித்தியாலயம் ஆகியவற்றுடன் அவர்களின் தேசிய வைபவத்தின் சூழல் முன்னோடிகளின் பங்களிப்புக்காக இணைந்து, இப்பிரிவுன் அலுவலர்களும் மத்திய சுற்றாடல் அதிகார சபையை பிரதிநிதித்துவப்படுத்தினர்.

## 6.13 இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களின் செயற்றிறன் மிக்க பயன்பாடு

**இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் ஆகியன சூழல் செய்திகளை பல் நோக்கு குழுக்களிடையே பரப்ப பயன்பட்டன.**

2013ல்,ஈஈ மற்றும் ஏ பிரிவின் ஊடக அலகால் பின்வரும் முன்னேற்றங்கள் பதியப்பட்டன.

ஈஈ மற்றும் ஏ பிரிவின் ஊடக அலகின் முன்னேற்றம் - 2013

| நிகழ்ச்சி | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | பிற தகவல்கள் |
|---|---|---|
| ஊடக வெளியீடு | 56 | மசுஅ இன் முக்கிய நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை உள்ளடக்கியது |
| பத்திரிகை ஆக்கங்கள் | 23 | தர்போதைய சூழல் பிரச்சனைகள் பற்றிய தகவல்கள் மற்றும் மசுஅ சம்பந்தப்பட்ட விடயங்கள் உள்ளடக்கியது. |
| டிவி நிகழ்ச்சிகள் | 4 | சூழல் சார் விடயங்கள் கலந்துரையாடப்படலை டிவி நிகழ்ச்சியூடாக ஔிபரப்பு செய்தல் |
| ஊடக முன்னேற்பாடுகள் | 27 | பல்வேறு பிரிவுகள் மற்றும் முக்கிய செயற்றிட்டங்களை நிரப்பும் ஓடியோ விஷுவல் அலகின் மூலம் ஒட்டுமொத்த ஊடக முன்னெடுப்புகள் நடைபெற்றன. |
| நிகழ்ச்சி கவர் செய்யப்படல் | 84 | மசுஅ இன் பல்வேறு பிரிவுகள் மற்றும் முக்கிய செயற்றிட்டங்களால் செய்யப்பட்ட முக்கிய நடவடிக்கைகளை கவர் செய்தல் |
| ”சோபகெத” வானொலி நிகழ்ச்சி | 38 | பல்நோக்குக்குழுக்கள் மத்தியில் சூழல் விழிப்புணர்வை மேம்படுத்தலை இந்த நிகழ்ச்சி இலக்காக கொண்டுள்ளது. இது ஒவ்வொரு திங்களும் 7.30 பி.ப க்கு எஸ்.எல்.பி.சி. இன் வர்த்தக சேவையில் ஒலிபரப்பாகும். |
| ஊடக மாநாடுகள் | 01 | மசுஅ இன் நடவடிக்கைகளை இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களுக்கு அறிவிப்பதற்காக. கௌரவ சுற்றாடல் அமைச்சர் அழைக்கப்பட்டார் |

| நிகழ்ச்சி | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | பிற தகவல்கள் |
|---|---|---|
| சுழல் செய்திக்கடிதம் | 5 இதழ்கள் வெளியிடப்பட்டன (2012இன் 3 இதழ்கள் மற்றும் 2013இன் 2 இதழ்கள்) | மசுஅ இன் முக்கிய நடவடிக்கைகள் மற்றும் தகவல்களை உள்ளடக்கும் காலாண்டு செய்தி புலட்டின் வெளியிடப்பட்டது. 2013ல், ஆண்டிற்கு இரு முறையான சஞ்சிகைக்கு ஒதுக்கப்பட நிதி சூழல் செய்திக்கடிதத்திகு மாற்றப்பட்டது. |
| சூழல் பாடல் சீடிக்களின் உற்பத்தி | 100 ஏசிடி மற்றும் 900விசிடி உற்பத்திசெய்யப்பட்டது | சுழல் பாடல்களை கொண்ட ஏசிடிக்கள் மற்ரும் விசிடிக்கள், இலங்கை முழுவதும் அனைத்து பாடசாலைகளுக்கும் விநியோகிப்பதற்காக உற்பத்திக்கப்பட்டன. சூழல் காட்டூன் போட்டிக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து இதற்கு நிதி ஒதுக்கப்பட்டது. |
| சூழல் கவிதை, குறும்படம் போட்டி | தேரப்பட்ட வெற்றியாளர்கள் | இந்த நடவடிக்கை ஊடாக, சூழ்ல் நட்பு உளப்பாங்கை கலைவடிவ அணுகலுடாக விரிவாக்கல் |
| மசுஅ இன் படங்கள் பலகையை தரவேற்றல் | 24 | மசுஅ இன் படங்கள் பலகையை தரவேற்றும் முகமாக, சூழல் நடவடிக்கைகளின் புகைப்படங்களை மீளிடும் நடவடிக்கை ஓடியோ விஷுவல் அலகால் செய்யப்பட்டது.. |
| டிவி படம் உற்பத்தி | 3 டிவி படம் உற்பத்தி நடைபெறுகிறது | சூழல் முன்னோடி நிகழ்ச்சி, சூழல் பாதுகாப்பு பிரதேசங்கள் மற்றும் மசுஅ பற்றிய விபரங்களை இப்படங்கள் உள்ளடக்கி உள்ளன. |
| ”விரிந்து” போட்டி | 500சீடிக்கள் மற்றும் 500 விசிடிக்கள் உற்பத்திக்கப்பட்டன. | “விரிந்து”இன் கீழ் பிரிவுகட்கு உட்படுட்தப்பட்ட சூழல் சார் பாடும் போட்டிகள் பாடசாலை மாணவர்களுக்கானதோடு பொதுமக்களுக்குமானது. இது கலை நடவடிக்கையினுடாக சூழல் உணர்வை விரிவாக்கல். |

## 6.14 “விரிந்து” போட்டி

”விரிந்து இன் கீழ் வகைப்படுட்தப்பட்ட, ஒரு சூழல் சார் பாடும் போட்டியானது, பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்காக கலைவடிவ நடவடிக்கையூடாக சூழல் உணர்வை அதிகரிப்பதற்காக நடத்தப்பட்டது. ஈஈ மற்றும் ஏ பிரிவானது மசுஅ தலைவரின் கட்டளைப்படி சம்பந்தப்பட்ட திருத்தங்களைச் செய்துள்ளது. அதற்கமைய, 8 பிரபல்யம் வாய்ந்த பாடகர்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டது. வெற்றியாளர்களின் தேர்விற்குப் பின்னர், 500 சீடிக்கள் மற்றும் 500 வீசிடிக்கள் மக்கள் மற்றும் பள்ளி மாணவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற “விரிந்து” தொடர் உள்ளிட்டு தயாரிக்கப்பட்டது. மாகாண ரீதியான ஊடக பயிற்சி பட்டறையிலிருந்து தேவையான நிதி பெறப்பட்டது.

## 6.15 ஊடக வெளியீடுகள்

ஊடக வெளியீடுகள் இப்பிரிவின் ஊடக அலகினால் செய்யப்படும். இவை மசுஅ இற்கு சம்பந்தமுடைய செய்திகளை, அச்சு ஊடகமூடாக பரப்புவதற்கு உதவுகின்றன. 2013ல் ஊடக அலகால் செய்யப்பட்ட சில ஊடக வெளியீடுகள் பின்வருமாறு:

1. டொம்பே நிலநிரப்பு இடத்திற்கான தலைவரின் வருகை
2. உள்ளூராட்சி சபைகளுக்கான பிலிசரு உழவியந்திரம் கொடை வைபவம்
3. கரடியனா உரத்தயாரிப்பு இடத்திற்கு தலைவர் வருகை
4. தேசிய சூழல் கல்வி நிறுவகத்தின் பட்டறை
5. நகர மற்றும் தொழிற்றுறை கழிவுநீர் பரிகரிப்பு சவால்கள் மற்றும் தீர்வுகள் பயிற்சி நிகழ்ச்சி
6. வெலிகந்த மகா வித்தியாலயத்தின் பாடசாலை நூலகம் திறக்கும் வைபவம்
7. மசுஅ இன் புதிய பணிப்பளர் நாயகத்தின் வருகை
8. இரசாயனங்களின் ஒலி முகாமைத்துவத்திற்கான தேசிய அமுல்படுத்தல் திட்டம் தயாரித்தல் - தேசிய பட்டறை - முன் செய்தி
9. இரசாயனங்களின் ஒலி முகாமைத்துவத்திற்கான தேசிய அமுல்படுத்தல் திட்டம் தயாரித்தல் - தேசிய பட்டறை - பின் செய்தி
10. தேசிய சூழல் கல்வி நிறுவகத்தின் 2வது நிகழ்ச்சி - செய்திக்கு முன்பாக
11. தேசிய சூழல் கல்வி நிறுவகத்தின் 2வது நிகழ்ச்சி - செய்திக்கு பின்
12. “பரிசர மிதுடம அர்தவத் கருமு” - தலைவரின் செய்தி
13. 2013 சுவரொட்டி போட்டி
14. வெசாக் வெளிச்சக்கூடு போட்டி
15. மசுஅ அலுவலர்களுக்கான வாகன புகைவெளிவிடல் சோதனை நிகழ்ச்சி
16. உலக சூழல் தின சுவரொட்டி போட்டி
17. உலக சூழல் தினம் - டி.ஈ.ஓ.க்களின் நிகழ்ச்சி
18. உலக சூழல் தினம் - 2013 நிகழ்ச்சி
19. ஹொரணையில் பொலித்தீன் கழுவும் நிலையம் திறத்தல்
20. டொம்பே கழிவுநிலநிரம்பலுக்கான வருகை
21. பொசன் விழாவில் பிளாஸ்டிக், பொலித்தீன் பாவனையை குறைத்தல்
22. பிளாஸ்டிக் விநியோகம், களுத்துறை மாவட்டத்திற்கான பொலித்தீன் கழுவும் நிலையம்
23. டெங்கு தடுப்பு கிழமை
24. தேசிய பசுமை விருதுகள் - 2013
25. பிளாஸ்டிக் கழிவு மீள்சுழற்சி பட்டறை

26. சூழல் கவிதை, சிறுகதை போட்டி 2013

27. ஒலி கழிவு முகாமைத்துவ கூட்டம்

28. சூழல் அலுவலர்களுக்கான சூழல் பணிகள் விழிப்புணர்வுப் பட்டறை

29. ஓர்கானிக் உர செயற்றிட்டத்திற்காக ஐ.டபிள்யூ.டபிள்யூ. ஐ உடன் எம்.ஓ.யு. ஐ மசுஅ கைச்சாத்திடல்

30. கண்டி அசல பெரகர

31. கதிர்காமம் பெரகர

32. சூழல் கவிதைகள் மற்றும் சிறுகதைகள் நிகழ்ச்சி

33. ஈபிசி விதிமுறைகளுக்கான தேவைபாடுகள் - வடக்கு மாகாண சூழல் கல்வி நிகழ்ச்சி ஆரம்பிப்பதற்கான புதிய தொடக்கம்

34. இரசாயன விபத்துத் தடுப்பு மற்றும் தயார்நிலை நிகழ்ச்சி - செய்திக்கு முன்

35. இரசாயன விபத்துத் தடுப்பு மற்றும் தயார்நிலை நிகழ்ச்சி - செய்திக்கு பின்

36. வாகன புகைவிடல் சோதனை நிகழ்ச்சி

37. மசுஅ இல், தேசிய சூழல் நிறுவகம் ஒரு நாள் பயிற்சி

38. தேசிய சூழல் முன்னோடி முகாம் 2013

39. வாகன புகைவிடல் சோதனை நிகழ்ச்சி

40. வாகன ஒலிப்பான் சோதனை நிகழ்ச்சி, மாலபே

41. இரசாயன விபத்துக்களின் கட்டுப்பாட்டு மட்டங்கள். தொழிற்சாலைகளுக்கான ஒரு சிறப்பு நிகழ்ச்சி

42. தேசிய சூழல் முன்னோடி முகாம் 2013

43. ஈ.ஐ.ஏ. பயிற்சி பட்டறை

44. என்.ஆர்.எம். பட்டறை, களுத்துறை (மணல் அகழ்வு குழுக்கள்)

45. வாகன ஒலிப்பான் சோதனை நிகழ்ச்சி - தலங்கம

46. வாகன ஒலிப்பான் சோதனை நிகழ்ச்சி - கட்டுபத்த

47. இரசாயன விபத்து தவிர்ப்பு மற்றும் தயார்நிலை பட்டறை

48. ஈ.ஐ.ஏ. பயிற்சி பட்டறை

49. தொழிற்றுறைகளுக்கான இரசாயன விபத்து மற்றும் தயார்நிலை விழிப்புணர்வு நிகழ்ச்சி

50. வாகன ஒலிப்பான் சோதனை நிகழ்ச்சி - தலங்கம

51. வாகன ஒலிப்பான் சோதனை நிகழ்ச்சி - கட்டுபத்த

52. ஈ.ஐ.ஏ. பயிற்சி பட்டறை

53. இரசாயன விபத்து தவிர்ப்பு மற்றும் தயார்நிலை பட்டறை

54. தொழிற்றுறைகளுக்கான இரசாயன விபத்து மற்றும் தயார்நிலை விழிப்புணர்வு நிகழ்ச்சி

55. ஈ- கழிவுகள் சேகரிப்பு நிகழ்ச்சி - குருநாகல்

56. உள் ஊராட்சி சபை தலைவர்களுடனான பிளாஸ்டிக் செயற்றிட்ட பட்டறை

6.16 ஓடியோ - விஷுவல் அலகால் 2013ல் கவர் செய்யப்பட்ட வைபவங்கள்

மசுஅ இன் பல்வேறு பிரிவுகாஅலும் சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சாலும் நடத்தப்பட்ட வைபவங்கள்,ஈஈ மற்றும் ஏ பிரிவின் ஓடியோ - விஷுவல் அலகால் கவர் செய்யப்பட்டன.

2013ல் அவ் அலகால் கவர் செய்யப்பட்ட சில வைபவங்கள் பின்வருமாறு:

1. ரத்தோட்டை, நிசொல ஓயா மண்சரிவு

2. மசுஅ 2013 புத்தாண்டை கொண்டாடியமை

3. டொம்பே நிலநிரப்பல் இடத்திற்கு தலைவரின் வருகௌ

4. வேட்டெர்ஸ் எட்ஜ்ஜில் "இரசாயன விபத்துகள் தவிர்ப்பு மற்றும் தயார்நிலை நிகழ்ச்சி"

5. உடபடலவ மற்றும்மாலம்பே இல் அமைச்சு நிகழ்ச்சி

6. மசுஅ இல் உள் ஊராட்சி சபைகளுக்கு உழவியந்திரம் வழங்கல்

7. மசுஅ இல் நலன்புரி வருடாந்த பொதுக்கூட்டம்

8. அம்பிலிப்பிட்டியவில் ஜனாதிபதி பதக்க முன்னோடியின் நேர்காணல்

9. மசுஅ இற்கு புதிய சுற்றாடல் மற்றும் புதுபிக்கத்தக்க சக்தி அமைச்சரின் வருகை

10. உலக ஈரநிலை நாள் வைபவம்

11. கரடியனா உரத்தயாரிப்பு இடத்திற்கு மசுஅ இன் தலைவர் வருகை

12. மசுஅ இல் மாவட்ட சூழல் அலுவலரின் பொதுக்கூட்டம்

13. மசுஅ இல் தேசிய சூழல் கல்வி நிறுவகத்தின் ஆரம்ப வைபவம்

14. மாத்தறையில் அமைச்சு நிகழ்ச்சி

15. ஹார்டி - கொழும்பு 7 இல் நகர மற்றும் தொழிற்றுறை கழிவு நீர் பரிகரித்தல் சவால்களும் தீர்வு பயிற்சி நிகழ்ச்சி

16. மசுஅ இன் புதிய பணிப்பளர் நாயகத்தின் வருகை

17. மசுஅ இல் நலன்புரி நிகழ்ச்சி

18. இரசாயன ஒலி முகாமைத்துவத்திற்கான தேசிய அமுல்படுத்தல் திட்டம் தயாரித்தல் - தேசிய பட்டறை, மசுஅ

19. "தயட்ட கிருள" அம்பாறையில் தேசிய கண்காட்சி

20. மசுஅ இல் திண்மக் கழிவு முகாமைத்துவம்

21. தேசிய சூழல் கல்வி நிறுவகத்தின் 2வது நிகழ்ச்சி

22. மசுஅ இல உலக ஈரநில நாள் பரிசு வழங்கல் வைபவம்

23. மசுஅ, பத்தரமுல்லையில் நலன்புரி புத்தாண்டு கொண்டாட்டமும் மரநடுகை நிகழ்ச்சியும்

24. மசுஅ கேட்போர் கூடத்தில் மாணவர்களின் விழிப்புணர்வு நிகழ்ச்சி

25. உலக பூமி தினம் - பசுமை நடை ஊடக மாநாடு மற்றும் மசுஅ இல் நில இட ஆய்வு

26. உலக பூமி தினம் - 2013, பத்தரமுல்லை

27. “பரிசரபக்மஹாஉலெலா” - மசுஅ

28. உலக பூமி தினம் - டி.இ.ஓ.க்கள் நிகழ்ச்சி, மசுஅ

29.மசுஅ கேட்போர் கூடத்தில் மாணவர்களின் விழிப்புணர்வு நிகழ்ச்சி

30. அத்திடியவில் கால்வாய் ஆய்வு

31. இலங்கையின் தென்கிழக்கு ஆற்றுப்படுகை பிராந்தியத்தில் ஈரநிலத்தின் வரைபடப்படுத்தல், மற்றும் மாற்றம் கண்டுபிடித்தலுக்கான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்

32. மசுஅ இல்முகாமைத்துவ கூட்டம்

33. ஹொரணையில் உள்ள பொலித்தீன் கழுவும் நிலையத்தின் ஆய்வு

34. மசுஅ அலுவலர்களுக்கான வாகன புகைவிடல் சோதனை பயிற்சி நிகழ்ச்சி

35. மேல்மாகாண சூழல் முன்னோடி நிகழ்ச்சி மதிப்பீடு

36. உலக சூழல் தினம் - டெம்பிள் ட்ரீஸில் தேசிய நிகழ்ச்சி நடத்தியமை

37. ஹொரணையில் ப்ளாஸ்டிக் பொலித்தீன் மீள்சுழற்சி மையத்தின் ஆரம்ப வைபவம்

38. சி.ஈ.டி.ஆர்.ஏ.சி. இல் ஈ.ஐ.ஏ. பயிற்சி நிகழ்ச்சி

39. மசுஅ கேட்போர் கூடத்தின் மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி

40. கழிவுப்பொதியிடலின் போதான ஒலி முகாமைத்துவத்திற்கான கூட்டம்

41. யு.என்.ஈ.எஸ்.சி.ஏ.பி. பிரதிநிதிகளுடனான கூட்டம்

42. முன்பள்லிகளுக்கான கழிவு பிரிப்பு கூடை விநியோகம்

43. மசுஅ இல் யோகர்ட், ஐஸ்கிரீம் கப் கழிவு பொதிசெய்தலின் ஒலி முகாமைத்துவம் பற்றிய கலந்துரையாடல்

44. கூட்டுறவு திட்டத்தின் கூட்டம்

45. மசுஅ இல் டெங்கு பேரழிவை கட்டுப்படுத்துவதற்கான புதிய மாற்றீட்டை காண்பதற்கான கூட்டம்

46. மசுஅ ல் ஊடக மாநாடு

47. பிளாஸ்டிக் கழிவு சேர்க்கும் மீள்சுழற்சியாளர்களுக்கான பட்டறை

48. ஐ.டபிள்யு.டபிள்யு.ஐ க்கும் மசுஅ இற்குமான எம்.ஓ.யூ கைச்சாத்து.

49. மசுஅ இல் புதிதாய் பணிக்குச் சேர்ந்த சூழல் அலுவலர்களுக்கான வதிவிட நிகழ்ச்சி

50. மசுஅ இல் முன்பள்ளி நூல் விநியோகம்

51. மசுஅ இன் மொபைல் வளி தர கண்காணிப்பு அலகு கையளிப்பு வைபவம்

52. மசுஅ இல் ஈ- கழிவு கூட்டம்

53. மசுஅ இல் கொய்க மற்றும் மசுஅ முன்னேற்ற கூட்டம்

54. மேல்மாகாண டி.இ.ஓ கூட்டம்

55. மசுஅ இல் வாகன ஒலிப்பான் ஒழுங்குவிதிக்கூட்டம்

56. கடுவெல இல் பிளாஸ்டிக், பொலித்தீன் கழிவு மீள்சுழற்சி மாதிரி நிலையம்

57. மசுஅ இல் கூட்டுறவு திட்டம்

58. “டலட சிரிதட பரிசர பதி புட” கண்டி நிகழ்ச்சி

59. மசுஅ இல் இலங்கை காபன் நிதிய நிகழ்ச்சி

60. நலன்புரி சங்க கிரிக்கட் போட்டி

61. சினமன் லேக்சைட் ஹொட்டேலில் இரசாயன விபத்து தவிர்ப்பு மற்றும் தயார்நிலை நிகழ்ச்சி

62. மசுஅ இல் தேசிய சூழல் நிறுவகம் ஒரு நாள் பயிற்சி

63. மாலபேயில் வாகன புகைவிடல் சோதனை

64. தொழினுட்ப அலுவலர் சங்க பொதுக்கூட்டம்

65. மாணவர் விழிப்புணர்வு நிகழ்ச்சி

66. தொம்பே கழிவு நிலநியப்பலில் நடந்த பாதுகாப்பு அமைச்சு நிகழ்ச்சி

67. 2013 சூழல் முன்னோடிகள் தேசிய மாநாடு

68. களனிய பி.எஸ். க்கு குப்பை அடைப்பானை கையளித்தல்

69. தேசிய நச்சு தவிர்ப்பு கிழமை நிகழ்ச்சி

70. டெங்கு நடவடிக்கைத்திட்டம்

71. ஒலிமாசடைதல் நிகழ்ச்சி - தலங்கம வாகன ஒலிப்பான்கள்

72. அனுராதபுர எம்.சி.க்கு பிளாஸ்டிக் அழுத்தும் இயந்திரம், பொலித்தீன் அடைக்கும் இயந்திரம் வழங்கல்

73. கட்டுபத்த இல் ஒலி மாசடைதல் நிகழ்ச்சி

74. ஒப்டிக்கல் மற்றும் பல்சர் ரிமோட் சென்சிங்

75. சூழல் சிறுகதைகளின் தீர்ப்பு

76. “டெயட்ட செவன” மரநடுகை தினம்

77. வோட்டர்ஸ் எட்ஜ்ஜில் இரசாயன விபத்து தவிர்ப்பு மற்றும் தயார்நிலை பட்டறை

78. மடிவல ஸ்ரீராகுல வித்தியாலயத்தில் மரநடுகை நிகழ்ச்சி

79. மசுஅ கேட்போர் கூடத்தில் மாணவர்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சி

80. கல்கமுவவில் பிளாஸ்டிங் மீள்சுழற்சி திறப்பு

81.கொழும்பு நகரத்தில் கழிவு உரத்தயாரிப்பு மேம்பாட்டுக்கான பங்காளர்கள் கூட்டம்

82. ஈபிபி ஆணையாளர்கள் கூட்டம்

83. இலங்கை மற்றும் ஜப்பானுக்கு இடையில் ஈ.ஐ.ஏ. மீதான ஷொப் ட்வின்னிங் கூட்டுமுயற்சி நிகழ்ச்சி

84. கண்டியில் 10 நாள் ஈ.ஐ.ஏ பட்டறை

85. அதுருகிரியவில் சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சி

86. இலங்கைக்கான இரசாயன விபத்து தவிர்ப்பு மற்றும் தயார்நிலை நிகழ்ச்சி - சிஏபிபி நிகழ்ச்சியின் ஆரம்பம்

87. வாகன ஒலிப்பான் சோதனை - தலங்கம

88. மேல்மாகாணத்திற்கான தொழிற்றுறைகளுக்கான சூழல் சுகாதார மற்றும் இரசாயன அபாய முகாமைத்துவ விழிப்புணர்வு நிகழ்ச்சி

## 6.17 சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவின் சூழல் கல்வி மையம்

சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவின் சூழல் கல்வி மையமானது சூழல் மீதான அறிவை மேம்படுத்துவதற்காக பல்வேறு வளங்கள் மற்றும் முறைகளை பாவிக்கும் சமூகங்களுக்கு வசதிகளை அளிக்கிறது. சூழல் கல்விமையத்தின் 2013ம் ஆண்டுக்கான முன்னேற்றமானது தனியான ஆவணமாக இதனுடன் உள்ளது.




சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவின் சூழல் கல்வி மையத்தின் புகைப்படங்கள்

மேற்கூறிய நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்காக, மசூஅ இன் சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவாவது, பொதுமக்களிடையே, ஆரோக்கியமான சூழலுக்கான காப்பு மற்றும் பாதுகாப்புக்கான அவர்களுடைய துடிப்பான பங்குபற்றலை பெறுவதற்காக பல்நோக்கு குழுக்களுக்கு கல்வி மற்றும் விழிப்புணர்வை உருவாக்க நம்பிக்கை கொண்டுள்ளது.

# 7. திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு பிரிவு

சம்பந்தப்பட்ட பிரிவுகள், அலகுகள், மாகாண அலுவலகங்கள் ஆகியவற்றின் ஆலொசனைகளை பெற்று தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கடமைகள் பொறுப்புகளுக்குள் பல்வேறு இயக்கத்திட்டங்களை உருவாக்குவதும் அவற்றை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மத்திய சுற்றாடல் அதிகாரசபையை தாபித்ததன் நோக்கங்களை அடைவதுமே திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு பிரிவின் முக்கிய பொறுப்பாக உள்ளது. இச்செயற்பாடானது அரசாங்கத்திலுள்ள சுற்றாடல் துறைக்கு முன்னுரிமையளிக்க உதவியதுடன் வரவு செலவு திட்டத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு தனியார் துறையில் முதலீட்டு திட்டங்களை விருத்தி செய்வதற்கு அல்லது வழிநடத்துவதற்கு வழிசமைத்தது. அத்துடன் சர்வதேச நிதி மற்றும் அபிவிருத்தி ஆதரவை முறையாக அணிதிரட்டவும் வழிவகுத்தது.

சுற்றாடல் துறைக்கான ஒவ்வொரு தொணிப் பொருள் பரப்பிற்கும் பல்வேறு இயக்கத்திட்டங்கள், வெளிதரப்பு மூலம் நிதியிடப்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் ம.சு.அ வருடாந்த திட்டங்கள் பற்றிய ஏனைய தலையீடுகள் என்பன தயாரிக்கப்பட்டதுடன், அவை மத்திய அரசாங்கத்தின் அமைப்பு என்ற வகையில் தலைமை அலுவலகத்தாலும், பிராந்திய மட்டத்தில் மாகாண அலுவலகங்களையும் நடைமுறைப்படுத்தப்பட்டன.

திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு பிரிவானது பல்வேறு செயற்திட்டங்கள் உருவாக்கப்படும் திட்டமிடல் செயற்பாடு, கண்காணிப்பு திட்டங்கள் மற்றும் ம.சு.அ யின் 2008-2012 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான கூட்டிணைத் திட்டங்களின் அடிப்படையிலான நேரம் தவறாக இயக்கத்திட்டங்களுக்கும் தலைமை வகித்தது. இப்பிரிவானது மேற்சொன்ன திட்டங்களின் ஒருங்கிணைப்புக்கும், அனுசரனைக்கும், நடைமுறைப்படுத்துவதற்கும் பொறுப்பாக இருப்பதுடன், சம்பந்தப்பட்ட அதிகார சபைகளுக்கு நேரகாலத்திற்கு வெளியீடுகளை வழங்கி அவற்றின் ஒழுங்கான அறிக்கைகளுடன் இப்பரிவின் செயற்பாடுகளின் ஒவ்வொரு அம்சங்கள் பற்றிய முன்னேற்ற அறிக்கையிடலுக்கும் பொறுப்பாகவுள்ளது.

அதிகாரசபையின் செயற்பாடுகளை ஒருங்கிணைக்கவும் கண்காணிப்பதற்குமான ஒழுங்கான முறைமை

ஒன்றுக்கு இணங்க தனித்தனியான கூட்டங்கள் மாதத்திற்கு ஒருமுறை ம.சு.அ யின் முகாமைத்துவம் மற்றும் மாகாண அலுவலகங்கள் ஆகியவற்றுடன் ஒழுங்கமைக்கப்பட்டதுடன் பிரதான விடயங்கள் பற்றிய பிரச்சினைகளை பிராந்திய மட்டத்தில் ஒரே மேடையில் கலந்துரையாடப்பட்டது. அதனைத் தொடர்ந்து திட்டங்களை நடைமுறை கட்டத்திற்கு கொண்டுவரவும் நடைமுறையாக்கலுக்கான ஆதரவை இணங்காணவும் எம்மால் முடிந்தது.

## 7.1 கூட்டிணைத்திட்டத்தை இற்றைப்படுத்தல் 2014 - 2018

குறைசேரியால் வெளியிடப்பட்ட நல்லாட்சி வழிகாட்டல்களுக்கு இணங்க, அனைத்து அரசாங்க தொழில் முயற்சிகளும் அவற்றின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பான மூலோபாயங்களை உள்ளடக்கிய கூட்டினைத் திட்டங்களை கொண்டிருத்தல் வேண்டும்.அதற்கிணங்க, மத்திய சுற்றாடல் அதிகார சபையானது, இலங்கையில் ஒழுங்கமைப்பு மற்றும் அமுலாக்கல் அமைப்பு என்ற வகையில் தனது 2014– 2018ஆம் ஆண்டிற்குறிய கூட்டிணைத்திட்டத்தை பயனுறுதியான உள்ளீடுகளை சுற்றாடல் துறைக்கு செலுத்தும் வகையில் இலக்குகளையும் மூலோபாயங்களையும் கூட்டிணைத்து இற்றைப்படுத்தியது. தே.சு.அ யால் வழங்கப்பட்ட ஆணையின் மேலதிக பரப்புக்களை உள்ளடக்கும் வகையில் அடுத்த ஐந்து வருடங்களில் ம.சு.அ யை யதார்த்தமாக இட்டுச்செல்லும் வகையில் தனது

கூட்டிணைத்திட்டத்தை இற்றைப்படுத்தியது. இவ்வாறு இற்றைப்படுத்தப்பட்ட கூட்டிணைத்திட்டமானது ம.சு.அ யின சபையால் அங்கீகரிக்கப்பட்டது.

## 7.2 மாகாண அலுவலகங்களுடன் ஒருங்கிணைவு

மாகாண அலுவலகங்கள் தாபித்ததை தொடர்ந்து, நிர்வாகம் மற்றும் சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பில் தலைமையகம் மற்றும் மாகாண அலுவல்கள் ஆகியவற்றுக்கு இடையேயான பிரச்சினைகளை ஒத்திசைவாக்குவதற்கு ஒருங்கிணைப்பு பொறிமுறையொன்று இருக்க வேண்டும். மேலும் இப்பிரச்சிணையானது திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு பிரிவின் அனுசரனையை வேண்டியும் இருத்தல் வேண்டும். மேலும் திட்டமிடல் கண்காணிப்பு பிரிவானது செயற்திட்டங்களை அபிவிருத்தி செய்தல், சுற்றாடல் பெறுதல் ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைப்பு செய்தல் வேண்டும்.

கம்பஹா, நுவரெலியா, களுத்துறை, இரத்தினபுரி, அம்பாறை, மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை, மொனராகலை (புத்தல) மாத்தளை,பொலன்னறுவை, வவுனியா, மன்னார்,கிளிநொச்சி மற்றும் மாத்தறை ( இவை 2013 இல் இருந்து இயங்குகின்றன) உள்ளடங்களாக 14 மாவட்ட அலுவலகங்கள் காணப்படுகின்றன.

## 7.3 பாராளுமன்ற ஆலோசனைக் குழு

2013 ஆம் ஆண்டில் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் இருந்து பல்வேறு பிரச்சினைகள் பற்றிய ஏராளமான புகார்கள் ம.சு.அ க்கு கிடைத்தன. அத்தகைய புகார்கள் சம்பந்தப்பட்ட பிரிவுகள்/ மாகாண அலுவலகங்கள் ஆகியவற்றுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டதுடன் பரிசீலனையும் செய்யப்பட்டது. அறிக்கைகள் சுற்றாடல் அமைச்சின் ஊடாக பாராளுமன்ற ஆலோசனைக்கு குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டன. இந்த அறிக்கைகள் பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றலுடன் கௌரவ சுற்றாடல் அமைச்சர் தலைமை வகித்த பாராமன்ற ஆலோசனைக் குழுவில் கலந்துரையாடப்பட்டன.

2013 ஆம் ஆண்டில் 3 குழுக் கூட்டங்கள் இடம் பெற்றன.

## 7.4 சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்திற்காக தரவுத்தன்மை பேணப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டது (பி வகை)

கைத்தொழில் நடவடிக்கைகள் காரணமாக சுற்றாடல் மாசடைவதை கட்டுப்படுத்துவதற்கு தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழுள்ள ஒழுங்கமைப்பு கருவியே சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் ஆகும். 2008.01.25 ஆம் திகதியிடப்பட்டதும் 1533/ 16 ஆம் இலக்கமிடப்பட்டதுமான அதிவிஷேட வர்த்தமானியின் கீழ் வெளியிடப்பட்டதும்,'ஏ' உயர் மாசடைதல்,'பீ' நடுத்தர மாசடைதல் மற்றும் 'சீ' குறைவாக மாசடைதல் என பட்டியலிடப்பட்ட அனைத்து நடவடிக்கைகளுக்கும் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்கவேண்டியது, தவிர்க்க முடியாத விடயமாகும்.

ம.சு.அ யின் சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு பிரிவானது சு.பா.உ ற்கான தரவுக்தளமொன்றை பேணிவருகின்றது (ஏ வகை). சு.பா.உ திக்கும் பேண வேண்டியுள்ளது. எனவே, ம.சு.அ யின் மாகாண அலுவலகத்தால் வழங்கப்பட்ட பீ வகையின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் (பி வகை) ஒன்றின் பிரதிமை திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு பிரிவு சேகரித்ததுடன் ( பீ வகை) சு.பா.உ ற்கான தரவுக்தளத்தை பேணி மாதாந்தம் இற்றைப்படுத்தியது. மேலும், தேவைக்கேற்ப சுருக்க புள்ளிவிபர அறிக்கைகளை மாதாந்தம் காலாண்டு மற்றும் வருடந்தோரும் உருவாக்குகின்றது. இத்தரவுத்தளமானது எதிர்காலத்தில் தீமானம் எடுப்பதற்கும் சு.பா.உ களை வழங்குதல் மற்றும்

புதுப்பித்தல் பற்றிய எதிர்வு கூறவும் மிகவும் உபயோகமாகவுள்ளது. 2013 ஆம் ஆண்டின் டிசம்பர் இறுதிவரை,6647 சு.பா.உ ( ஏ வகை) தரவுகள் மற்றும் 1777 சு.பா.உ (பி வகை) தரவுகள

2012 ஆம் ஆண்டு தரவுத்தளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 7.5 மேற்பார்வை குழு

ம.சு.அ தனது ஒழுங்கமைப்பு அதிகாரத்தை தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டை (சு.தா.ம) நடைமுறைப்படுத்தியும், கைத்தொழில்களுக்கு சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை (சு.பா.உ) வழங்கியும் பயன்படுத்துகின்றது. மேலும், சு.தா.ம அல்லது ஆ.சு.ப அவசியமற்ற புதிய கைத்தொழில் அமைவிடங்கள் மற்றும் இயற்கை வளங்கள் சம்பந்தப்பட்ட கருத்திட்டங்களுக்கு புதிய அமைவிட செயல்முறையின் ஊடாக ம.சு.அ விடுவித்தது.

பாரிய அளவிலான கருத்திட்டங்களுக்கான சு.தா.ம மற்றும் 'ஏ' வகை கைத்தொழில்களுக்கான சு.பா.உ ஆகியவற்றை தவிர மேற்குறிப்பிட்ட அனைத்து நடைமுறைகளும் சம்பந்தப்பட்ட மாகாண மற்றும் மாவட்ட அலுவலகங்களால் வழிமுறையாக்கம் செய்யப்படுகின்றன.

தலைமையகம் மற்றும் மாகாண மற்றும் மாவட்ட அலுவலகங்களால் ஒரே சீரான நடைமுறையை பின்பற்ற வேண்டும் என்பது மிகவும் முக்கியமாக கருதப்படுகின்றது. தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமையவே சு.தா.ம மற்றும் சு.பா.உ நடைமுறைகள் நடைமுறைப்படுத்தப்படுவதால் விண்ணப்பங்களை பதனிடுவதற்கான நேரகாலம், கருத்திட்ட முன்மொழிவாளரினால் சமர்ப்பிக்கப்படவேண்டிய ஆவணங்களின் தேவை, கருத்திட்ட முன்மொழிவாளர்களினால் செலுத்தப்படவேண்டிய கட்டணம் ஆகியவை நாடு பூராகவும் ஒரே விதமாக அமையவேண்டும்.

இதனை கருத்திற் கொண்டுதான், மேற்பார்வைக் குழவானது ஓர் தலைவரின் கீழ், பணிப்பாளர் நாயகம் மற்றும் சு.மா.க மற்றும் சு.மு.பி ஆகியவற்றின் பிரதி பணிப்பாளர் நாயகங்கள் சு.மா.க, தே.ஆ.மு, சு.தா.ம ஆகியவற்றின் பணிப்பாளர்கள், க.மு பிரிவுகள், மேல், மத்திய, சப்ரகமுவ, தென், கிழக்கு மாகாணங்களின் மாகாண பணிப்பாளர்கள்/ ஊவா, வடமத்திய மற்றும் வட மாகாணங்களின் ஓ.ஐ.சீ கள் ஆகியோரை உள்ளடக்கி ம.சு.அ யில் தாபிக்கப்பட்டது.

இக்குழுவானது இரண்டு கிழமைகளுக்கு ஒருமுறை கூடியதுடன் அனைத்து சு.தா.ம, ஆ.சு.ம அங்கீகாரங்கள்,'ஏ' வகை கைத்தொழில்களை தாபிப்பதற்கான புதிய அமைவிட பரிந்துரைகள், புதிய 'ஏ' வகை சு.பா.உ கள் முதலீட்டுச் சபைக்கான புதிய சு.பா.உ கள் மற்றும் அமைவிட பரிந்துரைகள் என்பன தலைமையக பிரதிப் பணிப்பாளர் நாயகம் அல்லது தலைமையக பணியை ஒருங்கிணைப்பு

மற்றும் செயலக பணியை ஆற்றியது.

இவ்வாண்டில் அவ்வகை கூட்டங்கள் 14 இடம்பெற்றதுடன் இவ்விலக்கிற்காக திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு அலகானது அனைத்து ஒருங்கிணைப்பு மற்றும் செயலாளர் வேலைகளை செய்தது.

## 7.6 கூட்டங்கள்.

திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு குழுவானது பல்வேறு கூட்டங்களை ஒருங்கிணைப்பு செய்ததுடன் முக்கிய வகிபாகத்தையும் வழங்கியது. அநுராதபுரம் மாவட்டத்தில் ஒயமடுவவில் இடம்பெற்ற " தேசத்திற்கு மகுடம்" நிகழ்ச்சியில், அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களையும் தாபித்ததுடன் கண்காட்சியிலும் பங்குபற்றியது.

குருணாகல் மாவட்டம் குளியாப்பிட்டிய இல் 2014 ∴பெப்ரவரி இல் நடைபெறவுள்ள ”தயட்ட கிருள” நிகழ்ச்சியானது அபிவிருத்தி நிகழ்ச்சிகளை அமைத்தல் மற்றும் கண்காட்சியில் பங்கேற்றல் போன்றவற்றுக்காக ஒருங்கிணைக்கப்படுகிறது.

## 7.7 கருத்திட்ட ஒருங்கிணைப்பு, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு

திரைசேரியின் நிதியுதவி நிகழ்ச்சித்திட்டங்களுடன் பின்வரும் இயக்கச் செயற்பாடுகள், நிகழ்ச்சித் திட்டத்தின் நிதியின் உச்ச பயனை பெறும் வகையில் ஒருங்கிணைப்பு செய்யப்பட்டு அனுசரனையும் வழங்கப்பட்டது.

### 7.7.1 திறைசேரி நிதியளித்த நிகழ்சித்திட்டங்கள்

- பிலிசரு நிகழ்ச்சித்திட்டம் ( ரூபாய் 490 மி)
- நுகர்வுக்கு பின்னரான பிலாஸ்டிக் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் (ரூபாய் 80 மி).
- ம.சு.அ ஆய்வுகூடங்களின் மேம்பாடு (ரூபாய் 25 மி)
- பாடசாலை முன்னோடி நிகழ்ச்சித்திட்டம் (ரூபாய் 7.8 மி)
- தேசிய சுற்றாடல் தகவல் நிலையம் (ரூபாய் 3 மி)
- இலங்கையின் சுற்றுச் சூழல் வளியின் தர முகாமைத்துவம் (ரூபாய் 10 மி).

### 7.7.2 வெளிநாட்டு நிதியுதவி திட்டம்

- கொய்கா
- ஈ.டி.சீ.எப்

கொய்கா என்பது கொரியா சர்வதேச ஒத்துழைப்பு முகவரைக் குறிக்கின்றதுடன் இதன் நிதி ஒதுக்கீடானது(60 மில்லியன் - வெளிநாடு, 40 மில்லியன் உள்நாடு)ரூபாய் 100 மில்லியனான அதேவேளை ஈ.டி.சீ.எப் என்பது பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்புக்கான நிதியுதவி என்பதை குறிக்கின்றது.இது ரூபாய் 145 மில்லியனை (60 மில்லியன் - வெளிநாடு,65 மில்லியன் உள்நாடு)இக் கருத்திட்டத்திற்கு ஒதுக்கியுள்ளது.

# 8. முறைப்பாட்டு பிரிவு

**அறிமுகம்**

மத்திய சுற்றாடல் அதிகார சபைக்குக் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளைக் கையாளுவதற்கென 2007 நொவெம்பர் மாதத்தில் முறைப்பாட்டு பிரிவு தாபிக்கப்பட்டது. இற்றைவரை, இப்பிரிவு தனது பங்களிப்பை ஐந்து வருடங்களுக்கும் மேலாக செய்துள்ளது.

முறைப்பாட்டுப் பிரிவுக்கு நாளாந்தம் பின்வரும் தோற்றுவாய்களிலிருந்து (ஆதாரங்களிலிருந்து) பெருமளவில் முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுவதோடு அனேகமான கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தீர்த்து வைக்கப்படுவதுடன் எஞ்சியவை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தப்படுகின்றன.

- சனாதிபதி செயலகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள்
- துரித தொலைபேசி மார்க்கத்தின் மூலம் சுற்றாடல் அமைச்சிடமிருந்து அனுப்பி வைக்கப்பட்ட முறைப்பாடுகள்
- துரித தொலைபேசி மார்க்கத்தின் மூலம் மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்குக் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள்
- தலைவரின் அலுவலகத்திலிருந்து கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள்
- பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்திலிருந்து கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள்
- பிரிவுகள் / பகுதித் தலைவர்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள்
- மின்னஞ்சல் மூலமாக கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள்
- பொதுமக்களுக்கான தினங்களில் கௌரவ சுற்றாடல் அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்ட முறைப்பாடுகள்
- பொதுமக்களால் செய்யப்பட்ட முறைப்பாடுகள்
- தபால் மூலம் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள்
- மாகாண / மாவட்ட அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள்

அனேகமான முறைப்பாடுகள் தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவுகளுக்கெதிரான மீறுகின்ற செயற்பாடுகளிலிருந்து கிடைக்கப் பெறுகின்றன.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையுடன் சம்பந்தப்பட்ட முறைப்பாடுகளாயின், அவை மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மாகாண அலுவலகங்களின் அலுவலர்களால் அல்லது எமது சம்பந்தப்பட்ட பிரிவுகளுடன் இணைக்கப்பட்டிருக்கும் அலுவலர்களினால் விசாரணை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையுடன் சம்பந்தப்படாத முறைப்பாடுகள், தேவையான நடவடிக்கைகளுக்கென தொடர்புடைய பிரதேசங்களில் உள்ள உள்ளுர் அதிகாரசபைகளுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன். எஞ்சியுள்ள முறைப்பாடுகள் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென சம்பந்தப்பட்ட தாபனங்களுக்கு (உ+ம்: புவிச் சரிதவியல், சுரங்கங்கள் பணியகம் - GSMB, தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழு – TRC போன்றவை) ஆற்றுப்படுத்தப்பட்டன.

2012 ஜுலை மாதத்திலிருந்து இப்பிரிவுக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் கணனி மென்பொருள் மூலமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. இற்றை வரை, இந்த கணனி மென்பொருளினால் பதிவு செய்யப்பட்டுள்ள இம்முறைப்பபாடுகள் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அதிகாரிக்கும் சம்பந்தப்பட்ட மாகாணசபைகளுக்கும் இடமாற்றம் செய்யப்படுகின்றன. மேலும், தொடர் நடவடிக்கைகள் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் முறைப்பாட்டுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது.

இப்பிரிவிற்கு 2013ஆம் ஆண்டு காலப் பகுதியின்போது 2335 கிடைக்கப் பெற்றுள்ளன.

2013 ஆம் ஆண்டு காலப் பகுதியின் போது கிடைக்கப்பெறற் முறைப்பாடுகளைத் தீர்த்து வைப்பதற்குப் பொறுப்பாகவுள்ள நிறுவனங்களைப் பின்வரும் பை-வரைவு (pie chart) எடுத்துக் காட்டுகிறது.

**மத்திய சுற்றாடல் அதிகாரசபை கடந்த ஆண்டின் போது 2335 முறைப்பாடுகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தியது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.**




**சம்பந்தப்பட்ட நிறவனங்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட முறைப்பாடுகளின் சாரம்சம் பின்வருமாறு:**

| | சம்பந்தப்பட்ட அலுவலகங்களும் பிரிவுகளும் | முறைப்பாடுகளின் எண்ணிக்கை | சதவீதம்(%) |
|---|---|---|---|
மசுஅ இன் இப்பிரிவானது, மாவட்ட சூழல் முன்னோடி செய்திக்கடிதத்திற்கான அச்சிடல் மற்றும் விநியோகத்திற்காக நிதி தந்தது. அந்தந்த மாவட்டத்தின் முன்னோடி மாணவர்களின் நடவடிக்கைகள் அச்சிடப்படுவதோடு, பிற ஆர்வமுடைய குழுக்களுக்கு தகவலுக்காக விநியோகிக்கப்படும். 2013ல், இந்த கடிதம் (சிங்கள மொழிமூலம்) அச்சிடல், கம்பகா, காலி, அம்பாந்தோட்டை, மாத்தறை, களுத்துறை, மொனராகலை, மாத்தளை, கண்டி ஆகிய 8 மாவட்டங்களில் முடிவடைந்தது. அம்பாறை, புத்தளம் மற்றும் நுவரெலியா ஆகியவற்றின் செய்திக்கடிதம் அச்சிடுவதற்கு இரண்டாவது கொடுப்பனவு செய்யப்பட்டது. கொழும்பு மாவட்டத்திற்கு இச் செய்திக்கடிதத்திற்காக முதலாவதி கொடுப்பனவு செய்யப்ப்ட்டது.

மாவட்ட சூழல் முன்னோடிகள் செய்திக்கடிதம் ஆனது தமிழிலும் அச்சிடப்பட்டது. கிளிநொச்சி, முல்லைதீவு, யாழ்ப்பாண மாவட்டங்கலில் அச்சிட்டு முடிந்தது. அத்துடன் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பில் இரண்டாம் கொடுப்பனவு இதற்காக செலுத்தப்பட்டது.



மாவட்ட சூழல் முன்னோடி செய்திக்கடிதம்

### 11.2.12 தேசிய மர நடுகை தின நிகழ்ச்சி நடத்தல்

இத்தினத்தை முன்னிட்டு ஈஈ மற்றும் ஏ பிரிவானது விசேட மர நடுகை நிகழ்ச்சியை, ஸ்ரீ ராகுல மகா வித்தியாலயம், மடிவெல வில் நடத்தியது. நா மரங்கள்(ஆநளரயகநசசநய) 20 பள்ளி வளாகத்தில் நாட்டப்பட்டன. அதிபர், ஆசிரியர்கள், சூழல் முன்னோடிகள் மற்றி பிற மாணவர்கள், மசுஅ இன் இப்பிரிவின் ஊழியர்களது பங்கேற்புடன் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

இத்தினத்தை ஒட்டி இப்பிரிவானது 25 மாவட்டங்களை சேர்ந்த 25 பாடசாலைகள் "தயட்ட கிருள"இற்காக ஒருங்கிணைக்க திட்டமிடப்பட்டது.



மரநடுகை நடவடிக்கையின் புகைப்படம்

### 11.2.13 பாடசாலை மட்டத்தில் பசுமை செயற்றிட்டங்களின் அமுல்படுத்தல் (ஒரு மாவட்டத்திற்கு ஒரு பாடசாலை)

இதன் கீழ், குருநாகல், இரத்தினபுரி, காலி, அம்பாந்தோட்டை, மன்னார், கண்டி, மட்டக்களப்பு, கொழும்பு, மாத்தறை, புத்தளம், கேகாலை, நுவரெலியா மாவட்டங்களில் இருந்து பாடசாலைகள், பழமரநடுகைக்காக தெரிவு செய்யப்பட்டன.

பின்வரும் பாடசாலைகளுக்கு முதலாவது தவணை செயற்றிட்ட அமுல்படுத்துகைக்காக தரப்பட்டது:

1. பின்னவல மத்திய கல்லூரி - கேகாலை
2. குளியாப்பிட்டிய மத்திய கல்லூரி - குருநாகல்
3. வெலஸ்முல்ல தேசிய பாடசாலை - அம்பாந்தோட்டை

4. மரிதோமாவின் பெண்கள் உயர் பாடசாலை - மாத்தறை

2013ல், வத்தேகம மகா வித்தியாலயம் - கண்டி, ராஜசிங்க மத்திய கல்லூரி - ஹன்வெல்ல, அல் - அக்ஷா தேசிய பாடசாலை - புத்தளம், ஞானானந்தன் மகா வித்தியாலயம் - மன்னார் ஆகியவற்றிற்கு முதலாவது தவணை செலுத்தப்பட்டது.

3ம் காலாண்டின் இறுதியில் 7 செயற்றிட்டங்கள் முடிக்கப்பட்டதுடன், 4 செயற்றிட்டங்கள் 2வது கொடுப்பனவுக்காக காத்திருந்தன. 2ம் கொடுப்பனவானது பரிதோமாவின் பெண்கள் உயர் பாடசாலை - மாத்தறை, பின்னவல மத்திய கல்லூரி - கேகாலை, கல்பிட்டிய அல்- அக்சா தேசிய பாடசாலை - புத்தளம் ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டது.

## 11.3. மசுஅ ஆய்வுகூடங்களை வலுப்படுத்தலும் இலங்கையில் கண்காணிப்பு கொள்ளளவை மேம்படுத்தலும்

தற்போது மசுஅ ஆனது ஒரு மத்திய ஆய்வு கூடமும் மத்திய மற்றும் கிழக்கில் இரு மாகாண ஆய்வு கூடங்களும் கொண்டுள்ளது. மசுஅ ஆனது மாசடைதல் கட்டுப்பாட்டிற்கான தேவைப்பாட்டை கருத்தில் கொண்டு, மாகாண மட்டத்தில் ஆய்வு கூடங்கள் விரிவாக்க செயற்றிட்ட முன்மொழிவை அனுபியுள்ளது. இதன் முக்கிய நோக்கானது மாகாண மட்டத்தில் ஆய்வுகூடச்சேவையை தரல் மற்றும் விரிவுபடுத்தல் ஆகும். நாடுமுழுவதும் ஏற்கனவே உள்ள ஆய்வுகூடங்கள் இதே வசதியை பகுப்பாய்வு தேவைப்பாட்டிற்காக தந்தன. ரூ 25 மில்லியன் ஆனது இதற்காக 2013ல் ஒதுக்கப்பட்டது.

மத்திய மாகாண ஆய்வுகூடமானது, நுண்ணுயிரியல் பகுப்பாய்வுக்கான நீர் சோதனைக்காக பகுப்பாய்வு வசதி தரப்பட்டுள்ளது.

மேலதிகமாக, 2013ல் நாட்டின் பல நீர்நிலைகளின் நீர்த்தரமும் ப்ரிசோதிக்கப்பட்டது.

### 11.3.1 நீர் மேற்பரப்பு தர கண்காணிப்பு

பல நீர்த்தர கண்காணிப்பு நிகழ்ச்சிகள் மசுஅ இன் மத்திய ஆய்வுகூடத்தால் நடாத்தப்பட்டன. இவை, மகா ஓயா, டடுகம் ஓயா, பெந்தோட்டை ஆறு ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. இந்த செயற்றிட்டத்தின் கீழ், முன் தெரியப்பட்ட மாதிரி அமைவிடங்களின் மேற்பரப்பு நீரின் பௌதிக, இரசாயன நுண்ணுயிரியல் பராமீட்டர்கள் வழமைபோல் 2013 இலும் கண்காணிக்கப்பட்டன.

| நீர்நிலையின் பெயர் | மாதிரி அமைவிடங்களின் எண்ணிக்கை | 2013ல் எடுக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| மகா ஓயா | 06 | 48 |
| டடுகம் ஓயா | 08 | 108 |
| பெந்தோட்டை ஆறு | 06 | 72 |

களனி நதி, மகா ஓயா மற்றும் டடுகம் ஓயா ஆகிய மூன்றிலும் நீர்த்தரமானது வெவ்வேறாக மதிப்பிடப்பட்டது. இதர்கு மசுஅ ஆய்வுகூடத்தின் நீர்த்தர கண்காணிப்பு நிகழ்ச்சியிலிருந்து எடுக்கப்பட்ட தகவல் பயன்படுத்தப்பட்டது.

**2013ல் மகா ஓயாவில் நீர்த்தர நிலைமை**

2013ல் மகா ஓயாவின் நீர்த்தரம், பௌதிக, இரசாயன மற்றும் நுண்ணுயிரியியல் பராமீட்டர்களுடன் மதிப்பிடப்பட்டது. முழு வருடமும் அவதானிக்கப்பட்ட படி, மகா ஓயாவின் நீர் சாக்கடையால் மாசுபடுத்தப்பட்டுள்ளது. உயர் மீன்பிடி பகுதியில் கலங்கல் தன்மையில் அதிக மட்டம் காட்டப்பட்டுள்ளது. இரத்தினக்கல், மணல் அகழ்வு நடவடிக்கைகள், படுகை அரிப்பு, நகர செயற்பாடுகள் ஆகியன மகா ஓய நீர்த்தரத்தை குறைத்துள்ளன. பல்வேறு அமைவிடங்களில் சி.ஓ.டொ மின்சார கடத்தல் மாறலின் உயர் மட்டம் அவதானிக்கப்ப்ட்டது.




வரைபு 1 - பிஎச் மாறல் - மகா ஓயா நீர் – 2013

2013ல் மகா ஓயாவின் தேரப்பட்ட அமைவிடங்களின் சேர்க்கப்பட்ட நீரின் பிஎச், முன்மொழியப்பட்ட சுற்றுப்புற நீர் தர நியமங்களின் உயர் தாழ் மட்டங்களுக்கு மாறவில்லை. அத்துடன் முன்மொழியப்பட்ட நியமங்களிற்கிடையே தான் இருந்துள்ளது.




வரைபு 2 - மகா ஓய நீரின் மாறல் - 2013

நீரில் உள்ள ஐயனிக் சேர்மானங்களை மின்சார கடத்தற்றிறன் காட்டும். ஈசியின் காணக்கூடிய மாரல் அல்லது ஃப்லக்சுவேசன் ஆனது 2013ல் அனைத்து அமைவிடங்களிலும் காணப்படவில்லை. ஒரு அமைவிடத்திம் மட்டும் குறிப்பிடத்தகுந்த மாரல் இருந்தது. அது உயர் இறுக்கத்தால் அவ்வாறிருந்திருக்கலாம்.




வரைபு 3 - மகா ஓயாவின் டேர்பிடிட்டி மாறல் - 2013

நீரின் டேர்பிடிட்டியானது எப்போதும் முழு வருடமும் அனைத்து மாதிரி அமைவிடங்களிலும் முன்மொழியப்பட்ட சுற்றுப்புற நீர்த்தர நியமங்களை விடத் தாண்டியது மற்றும் உயர்வானது. இதன் உயர் மட்டாஅனது உயர் மீன்பிடி பிரதேசங்களின் அரிப்பு, நகர செயற்பாடுகள் மண் அகழ்வு ஆகியவற்றை காட்டும் இது குடிக்கும் நீர் எடுத்தலை நேரடியாக பாதிக்கும்.




வரைபு 4 - மகா ஓயா நீரில் கரைந்துள்ள ஒக்சிஜன் - 2013

கரைந்த ஒட்சிசனின் மட்டமானது நீர்நிலையின் ஆரோக்கிய நிலையை காட்டும். அது உயர்வென்றால் தரம் நல்லது. மகாஓயாவின் தேரப்பட்ட அமைவிடங்களில் எடுத்த நீரின் கரைந்த ஒட்சிசன் மட்டம் எப்போதும் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தினுள் தான் இருக்கிறது. குறை மட்ட கரைந்த ஒட்சிசன் சில இடங்களில் மே, மார்ச் மாதங்களில் அவதானிக்கப்பட்டு உள்ளது.




வரைபு 5 - மகாஓயா நீரில் இரசாயன ஒட்சிசன் தேவைப்பாடு – 2013

பல அமைவிடங்களில் மகா ஓயா நீரின் இரசாயன ஒட்சிசனின்சிக்சக் மாறல் அவதானிக்கப்பட்டது. கொட்டதெனியாய பாலம், கொச்சிகடை மற்றும் மவனெல்ல பாலம் ஆகிய இடங்களில் எதிர்பார்த்ததை விட உயர் பெறுமானம் காட்டப்பெற்றது. (பிரிவு 3 (குடித்தல்) 4(குளித்தல்)




வரைபு 6 - மகா ஓய நீரில் குளோரைட் உள்ளீடு 2013

2013ல் நீரில் குளோரைட் உள்ளீடு இருப்பது காணப்பட்டாலும் நியமத்திற்கு கீழேயே அது இருக்கிறது.(பிரிவு 3 (குடித்தல்) 4(குளித்தல்)

**டடுகம் ஓயாவின் நீர்த்தர நிலமை**

டடுகமோயாவில் நீர்த்தர மதிப்பீட்டுக்காக ஜனவரி - டிசம்பர் 2013 ல் ஆறு மாதிரி அமைவிடங்கள் தேரப்பட்டன.

| மாதிரி அமைவிடங்கள் | ஜிபிஎஸ் ஒருங்கிணைப்புகள்: |
|---|---|
| **மாதிரி அமைவிடம் 1 (கிரிந்திவிட்ட பாலம்)** | (44386380E, 0784148N) |
| **மாதிரி அமைவிடம் 2 (கொடுகொட பாலம்)** | (44381229E, 0787535N) |

| | |
|---|---|
| மாதிரி அமைவிடம் 3 (ஓபத பாலம்) | (44380612E, 0789277N) |
| மாதிரி அமைவிடம் 4 (முதுவடிய பாலம்) | (44377962E, 0791871N) |
| மாதிரி அமைவிடம் 5 (பல்லிய சந்திப்பு பாலம்) | (44377454E, 0788598N) |
| மாதிரி அமைவிடம் 6 (கிந்திகொட பாலம்) | (44376592E, 0786017N) |




டடுகம் ஓயா மாதிரி அமைவிடங்களின் வரைபடம்

நீர்த்தர டிட்டேரிஏட்டிங் பாணியின் விசேட வடிவம், உயர் ஓட்டத்திலிருந்து தாழ் ஓட்டத்திற்கு டடுகம் ஓயாவில் பதியப்பட்டு உள்ளது. தாழ் ஓட்டம் நோக்கி மாசாக்கிகளின் மூலங்கள் உள் நாட்டிலிருந்து தொழிற்றுறை வரை வேறுபடும்.




Variation of pH in water during 2013
pH
9
8.5
8
7.5
7
6.5
6
5.5
5
1 2 3 4 5 6 7 8 9 10 11 12
Month of Sampling
Kirindivita Bridge
Kotugoda Bridge
Opatha Bridge
Muthuwadiya Bridge
Palliya Junction Bridge
Kindigoda Bridge
SD LOwer for Drinking Purposes
SD Upper for Drinking Purposes
SD LOwer fo rBathing Purposes
SD Upper for Bathing Purposes


Variation of EC of the Water during 2013
EC in mS/cm
4
3.5
3
2.5
2
1.5
1
0.5
0
1 2 3 4 5 6 7 8 9 10 11 12
Month of Sampling
Kirindivita Bridge
Kotugoda Bridge
Opatha Bridge
Muthuwadiya Bridge
Palliya Junction Bridge
Kindigoda Bridge


Variation Of COD in water during 2013
COD mg/l
40
35
30
25
20
15
10
5
0
1
2
3
4
5
6
7
8
9
10
11
12
Month of Sampling
Kirindivita Bridge
Kotugoda Bridge
Opatha Bridge
Muthuwadiya Bridge
Palliya Junction Bridge
Kindigoda Bridge
SD1 for Drinking
SD2 for Bathing


Variation of Chloride in water during 2013
Chloride mg/l
900
800
700
600
500
400
300
200
100
0
Jan
Feb
Mar
Apr
May
Jun
July
August
Sep
Oct
Nov
Dec
Month of Sampling
Kirindivita Bridge
Kotugoda Bridge
Opatha Bridge
Muthuwadiya Bridge
Palliya Junction Bridge
Kindigoda Bridge
SD1 for Drinking


Variation of Nitrate in water during 2013
Nitrate mg/l
1.8
1.6
1.4
1.2
1
0.8
0.6
0.4
0.2
0
1
2
3
4
5
6
7
8
9
10
11
12
Month of Sampling
Kirindivita Bridge
Kotugoda Bridge
Opatha Bridge
Muthuwadiya Bridge
Palliya Junction Bridge
Kindigoda Bridge
SD1

2013ல் அனைத்து பரா மீட்டர்களினடிப்படையிலும் டடுகம் ஓயாவின் நீரின் தரமானது திருப்தி அளிக்கவில்லை என தெரியவந்தது. டேர்பிடிட்டி மற்றும் நுண்ணுரிரி மாசாக்கமானது கணகாணிப்பு காலத்தில் அதிகரித்துள்ளது.

இந்த ஓயாவின் உயர்நீரோட்ட நீரானது(கிரிடிவிட, கொட்டுகொட), தொழிற்றுறை மாசாக்கத்தின் ஆதாரத்தை காட்டவே இல்லை.உயர்நீரோட்டத்தின் பாதிப்புக்கான மூலம் குறைவானது. டேர்பிடிட்டி மற்றும் நுண்ணுரிரி மாசாக்கம் மட்டுமே உயர்வடைந்துள்ளது.

நடுத்தர நீரோட்டத்திலிருந்து தாழ் நீரோட்ட நிர்த்தரமானது, உள்நாட்டு, பொயிண்ட் இல்லாத மூலங்களோடு ஒப்பிட்டால், தொழிற்றுறை மாசாக்கத்தின் ஆதாரம் காட்டுகிறது. அது ஒப்தா இலிருது தாழ் நீரோட்டம் வரை தெளிவாக காட்டுகிறது. கரைந்த ஒட்சிசன் குறைந்துள்ளது. பார உலோக நியமங்களுக்கு உள்ளேயே பார உலோக அளவீடுகள் உள்ளன. சுற்றுப்புற நீர்த்தர நியமங்களுக்கு உள்ளேயே பொசுப்பேற்றும் நைட்ரிஜனும் உள்ளன. (பிரிவு 3 - குடுத்தல், பிரிவு 4 - குளித்தல்) சி.ஓ.டிக்கான பெறுமானங்களை ஆற்றில் பார்க்கும் போது நியம அளவை விர ஒப்பீட்டளவில் உயர்ந்துள்ளது. உயர் மற்றும் தாழ் வீழ்ச்சி வீதத்தில் முழு வருடத்திலும் அனைத்து மாசாக்க காட்டிகளுக்கும் குறிப்பிடத்தக்க அளவு வேறுபாடு உள்ளது

நீர்த்தரமானது தாழ் நீரோட்டம் நோக்கி தடுகம் ஓயாவில் குறைந்து செல்கிறது. ஒப்தா ஐ உயர் நீரோட்டத்தோடு ஒப்பிட்டால் நுண்ணுயிரி மாசாக்கம் குறைந்துள்ளது.

உயர் நீரோட்டமான கிரிடிவிட்ட ஆனது, உள்நாட்டு மூலங்கள் முன்னிற்கின்றன என்பதை காட்டுகிறது. கழிவு வசதி மற்றும் உள்நாட்டு கழிவு வெளியேற்றுகை மற்று நகர செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்பட்டதால், நீர்த்தரம் அதிகரித்து உள்ளது. நீர்த்தரத்திற்கான மொத்த டீடேரியோரேஷனின் பங்களிப்பு ஆனது தொழிற்றுறை மாசாக்கம் ஆகும்.

### பெந்தோட்டை ஆற்றில் நீர்த்தர நிலமை

பௌதிக, இரசாயன நுண்ணுயிரியல் பராமீட்டர்களில் 2013ல் பெந்தோட்டை ஆற்றின் நீர்த்தரம் மதிப்பிடப்பட்டது. முன் தேரப்பட்ட 6 மாதிரி அமைவிடங்களில் கண்காணிப்பு மாதாந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. பிஎச், மின்கடத்துகை, டேர்பிடிட்டி மற்றும் வெப்பநிலை ஆகியன அளவிடப்பட்டன.

முழுவருடத்திலும் நீரானது சாக்கடையால் மாசு படுத்தப்பட்டு இருப்பதை நீரில் அதிகரித்துள்ள நுண்ணுயிரிகள் மாசாக்கத்தின் மூலம் அறிய முடிகிறது.

இரசாயன மாசாக்கிகள் மற்றும் பிற உள்நாட்டு மற்றும் நகர கழிவு மற்றும் சாக்கடையால் ஆற்று நீர், பிற நீர்நிலைகளோடு ஒப்பிடுகையில் பெரிதும் மாசடையவில்லை.




2013ல் இந்நீரின் பிஎச் ஆனது, செப்டெம்பர் மாதத்தில் நியம அளவை விட பெரிதும் வேறுபடவில்லை. அறிக்கையிடப்பட்ட பிஎச் பெறுமானம் ஆனது உத்தேசிக்கப்பட்ட நியமத்தை விட கீழ் உள்ளது.




நியம அளவை விட, அனைத்து அமைவிடங்களிலும் இந்த நீரின் டேர்பிடிடி ஆனது உயர்வாகவே உள்ளது. பிற நீர்நிலைகளோடு ஒப்பிடுகையில் டேர்பிடிட்டி குறைவு. ஒரே ஒரு அமைவிடம் தவிர, ∴பெப்ரவரி மாதத்தில் நியம அளவை விடவும் இது குறைந்திருந்தது. மசுஅ ஆய்வு கூடத்தின் கண்காணிப்பு படி பிற பெறுமானங்கள் ஆக உயர்வாகவில்லை.




மின்கடத்துகை பாரிய வேறுபாட்டை காட்டவில்லை. ஒரே ஒரு இடத்தில் மட்டும் உயர் பெறுமானம் காட்டப்பட்டது. ஆனால் அதுவும் நியம அளவை விட குறைவானதே ஆகும்.




நீர்நிலையின் ஆரோக்கியத்தை நீரில் கரைந்த ஒட்சிசன் காட்டும். அது உயர்வாயின் நீர் நன்னிலையில் உள்ளதாம். மசுஅ கண்காணித்தபடி இவ் ஆற்று நீரில் ஒப்பீட்டளவில் இது குறைவாக உள்ளது. நியம அளவை விட் மே மாதத்தில் குறைந்தது. மருவநிலை மாறலானது அவதானிக்கபடலாம் மேலும் அது நேரத்திற்கு நேரம் வேறுபடும்.




இரசாயன ஒட்சிசனின் தேவைப்பாடு இந்த நீரில் பல அமைவிடங்களில் சிக்சக் வடிவம் காட்டியது. உயர் மட்டத்திலான விலகல் (பிரிவு 3 - குடித்தல், பிரிவு 4 - குளித்தல்) ஆனது கண்காணிப்பு காலத்தில் அவதானிக்கப்பட்டது. பெரும்பாலான பெறுமானங்கள் நியம அளவை விட குறைந்தே உள்ளன. நியம அளவை விட சில தருணங்களிலேயே உயர்வாக உள்ளது.

## 11.4. தேசிய சூழல் தகவல் மையம் அல்லது நூலகத்தை வலுப்படுத்தல்

தேசிய சூழல் தகவல் மையம் ஆனதுஇலங்கையில் சூழலியல் தகவலுக்கான ஒருமுகப்பட்ட மையம் ஆகும்.

இதன் நோக்கங்கள் பின்வருமாறு

- பயனாளர்களின் தகவல் தேவையை திருப்திப்படுத்தும் வண்ணம் சூழல் தகவல்களை ஆக்கல் மற்றும் மேம்படுத்தல்

- சூழல் தகவல்களை பகுப்பாய்தல் மற்றும் ஒன்றிணைத்தல்

- தகவல் பரவல் மற்றும் உள் நாட்டு வெளிநாட்டு தகவல்மையம், நூலகங்களுடன் ஒருங்கிணைத்தல்

2013ல் இதன் முன்னேற்றம் பின்வருமாறு:

- 11.4.1 சேர்க்கை மேம்பாடு
- 733 சூழல் நூல்கள் மற்றும் 16 சூழல் சஞ்சிகைகள் வாங்கப்பட்டன
- 4850 நூல்கள் பெற்று பிரிக்கப்பட்டன.

### 11.4.2. ஆவணப்படுத்த சேவைகள் மற்றும் செயற்பாட்டு வேலைகள்

#### 11.4.2.1. தேசிய சூழல் தகவல் மையமானது பின்வரும் தரவுத்தளங்களை பேணுவதுடன் 1000 தகவல்களை இட்டுள்ளது

- மசூஅ தரவுத்தளம் - நூலக புத்தக கட்லொக்
- ஐ.என்.டி தரவுத்தளம் - பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள்
- ஈஐஏ, ஐஈஈ தரவுத்தளம் - ஈ.ஐ.ஏ, ஐஈஈ அறிக்கைகள்

#### 11.4.2.2. நூலக நூல்களுக்கு பார் குறியீடு முறை ஆக்கல்

- 14,000 நூல்கள் லேபிள் ஒட்டப்பட்டன.
- பார் குறியீடு வாசிப்பான் செயற்படுத்தப்பட்டதுடன் 175 புதிய உறுப்புரிமை வழங்கப்பட்டது.

### 11.4.3. நூலக வெளியீடுகள்

சூழல் வெளியீடுகள் மீதான ''கரண்ட் கொண்டெண்ட்ஸ்" இன் 5 இதழ்கள்,''என்வயாமெண்ட் நியூஸ்பேப்பர் இண்டெக்ஸ்" இன் 4 இதழ்கள் ஆகியன கம்பைல் செய்யப்பட்டு மின்னஞ்சல் மூனம் 2013ல் பரப்பப்பட்டன.

### 11.4.4 சூழலியல் தகவல்களின் பரிமாறல்

சர்வதேச மற்றும் உள்நாட்டு நூலகங்கள் மற்றும் அமைப்புகளுக்கு 1400 சூழல் தகவல்கள் பரிமாறப்படன.

675 பயனாளர்கள் இங்கிருந்து நூலக வசதிகள் பெற்றனர்.

இயற்கை கள மயங்களிலிருந்து பின்வரும் எண்ணிக்கையிலான பயனாளர்கள் நூலக வசதிகள் பெற்றனர்.

அத்திடிய - 678,ரூமஸ்ஸல - 1417, கேகாலை - 126

3950 நூல்கள் இரவல் கொடுக்கப்பட்டு மீள் நினைவுறுத்தல் செய்யபட்டது.

### 11.4.5. நூலக வலைப்பின்னல் நடவடிக்கைகள்

ஹெல்லிஸ்.ஃ. எஸ்.எல்.எல்.ஏ.ஃ. எஸ்.எல்.எஸ்.டி.ஐ.சி.ஃ. ஏஜிஆர்.ஐநெட்.ஃ.எஸ்.எல்.எல்.ஏ. - ஏஜி.எம் நூலக வலைப்பின்னல்களுடனான தகவல் கோரிக்கைகள் கையாளப்பட்டது

13 நூலக கூட்டங்கள் மற்றும் பட்டறைகளில் பங்கேற்றல்

ஏஜிஆர்.ஐநெட் பாவனையாளர்களுக்காக 40 உள்ளடக்க பக்கங்கள் தரப்பட்டன

வலைப்பின்னல் நூலகங்களுக்கு 425 தகவல்கள் தரப்பட்டன

### 11.4.6 பிற நடவடிக்கைகள்

11.4.6.1. 2013,2014க்கான பிரிட்டிஷ் கவுன்சிலின் அமைப்பு உறுப்புரிமை மீளமைக்கப்பட்டது. அத்துடன் மசுஅ உறுப்பினர்களுக்கு அட்டை வழங்கப்பட்டது.

#### 11.4.6.2 உலக சூழல் தின நடவடிக்கைகள் 2013

மண்டப ஏற்பாடுகள், இருத்தல் வழிகாட்டல் வரவேற்பு அணி

#### 11.4.6.3 தேசிய சூழல் முன்னோடிகள் முகாம் 2013

- நிகழ்ச்சி, நிகழ்ச்சிநிரல், பணிப்பட்டியல், ஐடி அட்டைகள் மற்றும் மெனுக்களுக்கான தயார்ப்படுத்தல்
- மாணவர் பதிவு வேலை
- கலாசார வைபவங்களுக்கான பரிசு வாங்கல்
- மாணவர்கள் மற்றும் அலுவலக ஊழியர்களுக்காக தங்குமிட வசதி வழங்கல்

#### 11.4.6.4 தேசிய டிஜிட்டல் மயமாக்கும் செயற்றிட்டத்தின் கீழ் 35,700 பக்கங்கள் ஸ்கான் செய்யத்தரப்பட்டுள்ளன

#### 11.4.6.5 மாதாந்த, காலாண்டு அறிக்கை தயாரித்தல்

#### 11.4.6.6. 411 நாவல்களை உள்ளீடு செய்து அடுக்கல்

#### 11.4.6.7 3 என்.எ.ஃ.ப்.சி மற்றும் 4 நிறுவகங்களுக்கு 104 நூல்கள் விநியோகம் செய்யப்பட்டன

#### 11.4.6.8. நூலக சேகரத்திற்கு 2025 பத்திரிகை வெட்டுக்கள் சேர்க்கப்பட்டன

### 11.4.7 வருமானம்

மசுஅ வெளியீடுகளின் விற்பனை - எண்ணிக்கை :1262 ரூ. 56,025.00 (நுத்தகங்கள், சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள் மற்றும் சீடிக்கள்)

போட்டோகொப்பி எடுத்தல் கட்டணங்கள் - எண்ணிக்கை 16761 ரூ. 80,180.00

## 11.5 கொரிய சர்வதேச கூட்டுறவு முகவராண்மை (KOICA)

### 11.5.1 அறிமுகம்

இலங்கையில் சுத்தமான முறையில் கழிவுகளை இடும் வசதிகளைத் தாபிப்பதற்கென நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளைக் கோருகின்ற விதத்தில் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் கருத்திட்ட முன்மொழிவு ஒன்று 2007 மே 16 ஆம் திகதி கொரிய சர்வதேச கூட்டுறவு முகவராண்மைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

அதன் பிரகாரம் KOICA அதிகாரிகள் 2007 செப்ரெம்பர் 17 ஆம் திகதியன்று இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சுத்தமான முறையில் கழிவுகளை இடும் மாதிரியுரு ஒன்றைத் தாபிப்பதற்கான நிதியங்களை ஒதுக்கீடு செய்வதற்கென இணங்கியிருந்தனர். அதற்கென அவர்கள் 04 உள்ளூர் அதிகாரசபைகளுக்கு (மகரகம நகர சபை, சீதாவாக்க புர நகர சபை, ஹொமகம பிரதேச சபை மற்றும் சீதாவாக்க பிரதேச சபை) வசதியளிக்குமுகமாக வகா எனும் இடத்தில் காணியொன்றையும் தெரிவு செய்தனர்.

2008 ஏப்றல் 24 ஆம் திகதி சுற்றாடல் மற்றம் இயற்கை வளங்கள் அமைச்சின் செயலாளர் மற்றும் KOICA வதிவிடப் பிரதிநிதி ஆகியோருக்கிடையில் கைச்சாத்திட்ட கலந்துரையாடலின் பதிவு (ROD) எனப்படும் உடன்படிக்கையொன்றில் கொரிய அரசாங்கம் (GOK) ஒப்பமிட்டது. அந்த உடன்படிக்கையின் பிரகாரம், இக்கருத்திட்டத்திற்கென கொரிய அரசாங்கம் 4.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கீடு செய்வதற்கு இணங்கியதுனட வகா எனுமிடத்தில் உள்ள பெல்பொலவில் தூய்மையான முறையில் கழிவுகளை இடும் முறைமையை மேம்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் 1.5 மில்லியன் டொலரை வழங்கியது.

வகா எனுமிடத்தில் முன்மொழியப்பட்ட கழிவுகளை இடுதல் கருத்திட்டத்திற்கு எதிராக பொதுமக்களின் பலத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் விளைவாக. அரசாங்கம் அக்கருத்திட்டத்தை இடைநிறுத்தி வைப்பதற்கு தீர்மானித்து அதன்படி, வகா எனுமிடத்தில் பல்பொலவில் முன்மொழியப்பட்ட கருத்திட்டத்திற்கான அங்கீகாரத்திற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை அனுமதியளிக்கவில்லை. மாறாக, இலங்கைக்கு கிடைக்கவிருக்கும் KOICA நிதியத்தைப் பிரயோசனப்படுத்தும் நோக்கில், பெல்பொல வகா எனுமிடத்திலிருந்து தொம்பே எனுமிடத்திற்கு கருத்திட்ட களத்தை மாற்றுவதற்கான சாத்தியக்கூற்றை ஆராயும் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டன. ம.சு.அ. இனால் மேற்கொள்ளப்பட்ட பிரச்சாரம் தொடர்பான பல்வேறு முயற்சிகளின் பின்னர், கருத்திட்ட களத்தை தொம்பே எனுமிடத்திற்கு மாற்றுவதற்கு KOICA இணங்கியது.

இந்த கழிவுகளை இடும் பகுதியானது தொம்பே பிரதேச சபைக்கான இறுதியான கழிவுகளை அகற்றும் இடமாக நாளொன்றிற்கு 10 தொன் கழிவு எனும் விதத்தில் செயற்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இந்த தூய்மையான கழிவுகள் இடும் கருத்திட்டதிற்கு மேலதிகமாக, பிலிசறு கருத்திட்டத்தின் நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவுடன் அதே இடத்தில் கூட்டுப்பசளையாக்கும் பொறியொன்றை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் இப்பகுதி காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு (LRC) சொந்தமாக இருந்ததுடன் வர்த்தக காடு வளர்த்தலை ஏற்படுவதற்கு வன இலாகாவிற்கு (காட்டுத் திணைக்களத்துக்கு) குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது.

கழிவுகளை இடும் பகுதி ஒன்றை அமைப்பதற்க பிரதான பிரதேசமாக ஏறத்தாழ 6 ஹெக்டயர் அளவிலான காணி ஒன்றை ம.சு.அ. க்கு விடுவிப்பதற்கு (நீண்ட கால அடிப்படையிலான குத்தகைக்கு விடுதல்) LRC நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

### 11.5.2 குறிக்கோள்கள்:

கருத்திட்டத்தின் குறிக்கோள்களாவன:

கழிவு முகாமைத்துவத்திற்குப் பொறுப்பாயுள்ள கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகளின் இயலளவை முன்னேற்றுதல்;

ஒன்றிணைந்த கழிவு முகாமைத்துவ முறையை தாபித்து ஆதரவுடனான கொள்கை நடவடிக்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுடன் அம்முறைமையை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துதல்;

தோற்றுவாய்கள் பற்றிய ஆய்வு, உற்பத்தியின் அளவு, சேகரிப்பு மற்றும் அல்லது வீட்டுக் கழிவுகளின் பரிகரிப்பு;

மேற்படி பிராந்தியத்தில் உற்பத்தியாகும் வீட்டுக் கழிவுகளை பாதுகாப்புமிக்க மற்றும் பயனுறுதிமிக்கதாக சேகரிப்பதற்கான முறைமையை வடிவமைத்து நடைமுறைப்படுத்தல்;

தூய முறையில் கழிவுகள் இடுவதற்கான களத்தையும் ஏனைய சம்பந்தப்பட்ட உட்கட்டமைப்புகளையும் நிர்மாணித்தல்.

### 11.5.3 நடைமுறைப்படுத்தும் முகவராண்மைகள்

கொரிய அரசாங்கத்தின் சார்பாக கொரிய சர்வதேச கூட்டுறவு முகவராண்மை மற்றும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் சார்பாக சுற்றாடல் அமைச்சின் மத்திய சுற்றாடல் அதிகார சபை ஆகியவை இக்கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் முகவராண்மைகளாகும்.

#### 11.5.3.1 சம்பந்தப்பட்ட அரசாங்கங்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்டவைகள்

### 1. கொரிய குடியரசு அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டவை

கொரிய குடியரசில் அமுலில் இருக்கும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் மற்றும் உறுப்புரை 5.1 காட்டப்பட்டுள்ளவாறான அதன் வரவு-செலவுத்திட்ட வரையறைகளின் பிரகாரம், கொரிய குடியரசு அரசாங்கத்தின் சார்பில் முழுஐஊயு இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கத்திற்கு உதவி புரியும். தேவைப்படின், பின்வரும் விபரங்கள் சமரச உடன்படிக்கையொன்றினால் திருத்தியமைக்கப்படலாம்.

**அ. பயிற்சி நிகழச்சித்திட்டங்களுக்கான அழைப்பு -**

i) கொள்கையாக்கம், மத்திய மற்றும் உள்ளுர் ஆட்சிகளினால் மேற்கொள்ளப்படும் கழிவுப் பொருட்கள் அகற்றுதல் பற்றிய நிருவாகம், கழிவுப் பொருட்கள் இடப்படுமு் பகுதிகளின் முகாமைத்துவம் மற்றும் செயற்பாடுகள் பற்றிய பயிற்சிநெறிகளுக்கு இலங்கை அதிகாரிகள் அழைக்கப்பட வேண்டும்.

- கழிவுப் பொருள் கொள்கை: 1 வாரத்திற்கு 10 நபர்கள் வீதம்
- கழிவுப் பொருள் முகாமைத்துவம்: 2 வாரங்களிற்கு 15 நபர்கள் வீதம்

- கழிவுப் பொருட்களுக்கு வசதியளிக்கும் முகாமைத்துவம்: 2 வாரங்களிற்கு 15 நபர்கள் வீதம்
- கூட்டுப் பசளையாக்குவதற்கான வசதியளித்தல்
- கழிவுப் பொருட்கள் இடப்படும் பகுதியில் நடவடிக்கைகள் மற்றும் முகாமைத்துவம்: 02 மாதங்களுற்கு 5 நபர்கள் வீதம்

ii) ம.சு.அ. யின் சிபார்சின் பேரில் பங்குபற்றுபவர்கள் KOICA னால் தெரிவு செய்யப்படுகின்றனர். கருத்திட்டத்தின் முன்னேற்றத்திற்கு இணங்க, பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை மற்றும பயிற்சிக்கால எல்லை மாற்றமடையலாம். இரு தரப்புகளினதும் ஏகோபித்த சம்மத்துடன் மேலதிக விபரங்கள் முடிவு செய்யப்பட வேண்டும்.

**ஆ. கொரிய நாட்டு வல்லுநர்களின் (நிபுணர்களின்) வருகை:**

i) இக்கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆராய்ச்சி மற்றும் கலந்தாலோசனைகள் ஆகியவற்றை வழங்கவென கொரிய நாட்டு நிபுணர்கள் ம.சு.அ. க்கு அனுப்பி வைத்தல். அவர்களின் விசேடத்துவம் மற்றும் தங்கியிருக்கும் கால எல்லை பின்வருமாறு:

- கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்பு: 20 மனித மாதங்கள்
- கழிவுப் பொருட்களின் பதிவேடு மற்றும் கள ஆய்வு கலந்தாலோசனை: 2 மனித மாதங்கள்
- கழிவுப் பொருட்கள் பற்றிய கொள்கை மற்றும் முகாமைத்துவம்: 3 மனித மாதங்கள்
- கழிவுப் பொருட்களின் சேகரிப்பு முறைமை முகாமைத்துவம்: 2 மனித மாதங்கள்
- கூட்டுப் பசளையாக்குதலுக்கு வசதியளித்தலுக்கான முகாமைத்துவம்: 1 மனித மாதங்கள்
- கழிவுப்பொருள் இடப்படும் பகுதிக்கான நிர்மாண முகாமைத்துவம்: 12 மனித மாதங்கள்

ii) கருத்திட்டத்தின் முன்னேற்றத்திற்கு இணங்க, தங்கியிருக்கும் கால எல்லை, விசேடத்துவம், நிபுணர்களின் எண்ணிக்கை ஆகியவை மாற்றத்திற்கு உட்படும். KOICA மற்றும் CEA ஆகியவற்றிற்கிடையிலான மேலதிக கலந்தாலோசனைகள் மூலமாக ஏனைய விபரங்கள் தீர்மானிக்கப்பட வேண்டும்.

**இ. கழிவுப் பொருட்கள் இடப்படும் பகுதியை நிர்மாணித்தல்**

ய) அடிப்படையான மற்றும் விபரமான வடிவமைப்புகளுக்கென கழிவுப் பொருட்கள் இடப்படும் பகுதி பற்றிய சாத்தியக்கூற்று ஆய்வு KOICA இனால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

டி) ஊநுயு யினால் மேற்கொள்ளப்படும் நில வேலைகள் தொடர்பில் அடிப்படையான மற்றும் விபரமான வடிவமைப்புகளை KOICA,CEA யிற்கு வழங்க வேண்டும்.

உ) கருத்திட்டப் பிரதேசத்தில் சேகரிக்கப்படும் வீட்டுக் கழிவுப் பொருட்களுக்கான ஊநுயு யினால் மேற்கொள்ளப்படவிருக்கும் நில வேலைகள் தவிர, சீதாவாக்க பிரதேச சபைக்குரிய பகுதியில் ஆகக்குறைந்தது 2 ஹெக்டயர் அளவில் சுத்தமான முறையில் கழிவுப் பொருட்கள் இடப்படும் பகுதியை KOICA நிர்மாணிக்க வேண்டும். கழிவுப் பொருள் இடப்படும் பகுதியின் தொடர்ச்சி, சாம்பல் சேகரிப்பு மற்றும் பரிகரிப்பிற்கு வசதியளித்தல், வெள்ளப் பெருக்கத்திற்கான வடிகாலமைப்பு, தரைக்கீழ் தரத்தைக் கண்காணிக்கும் கிணறுகள், நிறுவைப் பாலம், ரயர்களைக் கழுவும் வசதி, கண்காணிப்பு முறைமை,

முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாட்டு அலுவலகம், நில வடிவமைப்பு வேலியிடல், படலை, வெளியகற்றும் முறைமையை வடிவமைத்தல் ஆகியன KOICAனால் மேற்கொள்ளப்பட வேண்டிய நிர்மாணப் பணிகளாகும்.

ன) சாத்தியக்கூற்று ஆய்வின் பெறுபேறுகளினடிப்படையில் நடைமுறைப்படுத்தும் இரு தரப்பினர்களுக்கிடையில் ஏகோபித்த கலந்துரையாடல்கள் மூலம் அமைவிடம் மற்றும் அளவு ஆகியவை மாற்றமடையும்.

**ஈ. உபகரணங்கள் மற்றும் சாதனங்கள் ஆகியவற்றை வழங்குதல்**

i) கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு அவசியமான சம்பந்தப்பட்ட உபகரணங்கள் மற்றும் சாதனங்களை KOICA வழங்க வேண்டும். உபகரணங்கள் மற்றும் சாதனங்கள் ஆகியவற்றின் தற்காலிக பட்டியல் பின்னிணைப்பு – 1 இல் காட்டப்பட்டுள்ளது.

ii) நடைமுறைப்படுத்தும் இரு முகவராண்மைகளுக்குமிடையிலான ஏகோபித்த, கலந்துரையாடல்களின் அடிப்படையில் கருத்திட்டத்தின் உண்மையான நடைமுறைப்படுத்தல் கட்டத்தின் போது உபகரணங்கள் மற்றும் சாதனங்களின் அளவுகளும் விபரங்களும் மாற்றமடையும்.

**2. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டவை**

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம் அதன் உள்நாட்டு சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க, கருத்திட்டத்தின் வெற்றிகரமான நடைமுறைப்படுத்தலுக்கு பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்:

**அ. நிருவாக நடவடிக்கைகள்**

i) கருத்திட்டத்தை தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்பு வாய்ந்த நிறுவனம் மற்றும் ஆளணியை நியமித்தல்

ii) கருத்திட்ட களத்தின்போது மற்றும் அதன் பின்னர் கருத்திட்டத்தின் சுயமான நடவடிக்கைகளில் தங்கியிருப்பதற்காக போதுமான அளவு வரவு செலவுத்திட்டம் மற்றும் பொறியியலாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள், நிருவாக அதிகாரிகள் ஆகிய மனிதவலுவையும் தக்க வைத்துக் கொள்ள வேண்டும்;

iii) இலங்கையில் அமுலில் இருக்கும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் ஆகியவற்றினால் வேண்டறிபாலதான சம்பந்தப்பட்ட அதிகாரசபைகளிடமிருந்து சுற்றாடல் தாக்கம் பற்றிய மதிப்பீடு உட்பட சகல அவசியமான அங்கீகாரங்கள் மற்றும் அனுமதிப்பத்திரங்கள் பெறப்படுதல்;

iv) கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான தகவல்கள், ஆவணங்கள் ஆகியவற்றை வழங்குதல். அத்தகைய தகவல்கள் மற்றும் ஆவணங்கள் ஆங்கிலத்தில் எழுதப்பட வேண்டும், அவை மொழி பெயர்க்கப்படவும் வேண்டும்;

v) கழிவுகள் இடப்படும் பகுதியின் நடவடிக்கைகளுக்காக கருத்திட்ட பகுதிகளில் உள்ள உட்கட்டமைப்புகள் மற்றும் முறையான சேகரித்தல் முறைமை ஆகியவற்றை மேம்படுத்தி நடைமுறைப்படுத்துதல்;

vi) கருத்திட்டப் பகுதியில் உள்ள உள்ளுர் அதிகார சபைகளின் நிருவாக பணியாளர்களுக்கான கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் குடியிருப்பாளர்கள் பொருத்தமான முறையில் கழிவுப் பொருட்கள் அகற்றும் நடைமுறை ஆகியன பற்றி பொது விழிப்புணர்வு பிரச்சாரத்தைத் திட்டமிட்டு அமுல்படுத்துதல்;

vii) கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக கொண்டுவரப்படும் குடியியல் மேன்முறையீடு உட்பட சகல சட்டவிடயக் கோரிக்கைகளைத் தீர்த்து வைத்தல்.

**ஆ. கழிவுப் பொருட்கள் இடப்படும் பகுதியை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள்**

i) கழிவுப் பொருட்கள் இடப்படும் பகுதியை நிர்மாணிப்பதற்கென சட்டரீதியான பிணக்கு அற்ற காணியை வழங்குவதோடு எழுத்து மூல ஏகோபித்த உடன்படிக்கையின்றி கருத்திட்டப் பகுதியின் அமைவிடம் மற்றும் இடவசதி மாற்றப்பட மாட்டாது என்பதையும் உறுதி செய்தல்;

ii) அகழ்தல், அணைகட்டுதல், நில மட்டப்படுத்துதல் போன்ற இதர விடயங்கள் உட்பட நிலவேலைகளை மேற்கொள்ளுதல்;

iii) சென்றடையக்கூடிய முறையிலான வீதி, மின்சாரம், நீர் வழங்கல், சாக்கடை நீர், வடிகால், தொலைத் தொடர்பு வசதி மற்றும் இணைய இணைப்புகள் உட்பட கழிவுப் பொருள் இடப்படும் பகுதியின் நிர்மாண வேலைகளுக்கு தேவைப்படும் உட்கட்டமைப்புகளை கருத்திட்டம் ஆரம்பிப்பதற்கு முன் வழங்குதல்;

iv) நிர்மாண வேலைகளுக்கு அத்தியாவசியமெனில், சம்பந்தப்பட்ட ஆவணங்கள், தகவல்கள், வரைபடங்கள் ஆகியவற்றை வழங்குதல்;

v) நிர்மாண வேலைகளுக்கு அத்தியாவசியமான ஏதேனும் உபகரணங்கள், சாதனங்கள் மற்றும் வழங்கல்கள் ஆகியவற்றை கொள்வனவு செய்து இலங்கை ஆள் புலத்தினுள் கொண்டு வருவதற்கு பிரயோகிக்கப்படும் இறக்குமதி வரிகள், தீர்வைகள், அறவீடுகள் மற்றும் பகிரங்க கட்டணங்கள் ஆகியவற்றிலிருந்து விலக்களித்தல்

vi) நிர்மாண வேலைகள் உட்பட கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவைப்படும் அனுதிப்பத்திரங்களை வழங்குதல் மற்றும் அங்கீகாரமளித்தல் ஆகியவற்றிற்கான சம்பந்தப்பட்ட முகவராண்மைகள் மற்றும் உள்ளுராட்சி சபைகளுடன் தேவையான ஒழுங்குகளை மேற்கொள்ளுதல். மேலும் மேற்சொன்ன அனுமதிப்பத்திரங்கள் மற்றும் அங்கீகாரமளித்தவை பெற்றுக் கொள்ளுதல் தொடர்பில அன் செலவைப் பொறுப்பேற்க வேண்டும்.

vii) நிர்மாண வேலைக் காலத்தின்போது நிர்மாணப் பகுதிக்கென முழு நேர காவலாளிகள் வழங்க வேண்டும்.

**இ. உபகரணங்கள் மற்றும் சாதனங்கள் தொடர்பில் நடவடிக்கைகள்**

ய) உபகரணத்தைப் பொருத்துவதற்கென கருத்திட்டப் பகுதியில் போதியளவு இடவசதி மற்றும் வசதிகள் வழங்கப்படுதல்;

டி) கருத்திட்டத்திற்கென வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சாதனங்கள் மற்றும் உபகரணங்களுக்கான சுங்க தீர்வைகள் முறையாக நிறைவேற்றி, உபகரணங்கள் மற்றும்

சாதனங்களுக்கான துறைமுகத் தீர்வைகள, ஏனைய வரிகள் அல்லது பகிரங்க கட்டணங்கள் ஆகியவை ஏதுமிருப்பின், அவற்றிற்கு விலக்களிக்கப்பட வேண்டும்.

உ) இலங்கையில் உள்ள கருத்திட்டப் பகுதிக்கு துறைமுகத்திலிருந்து அனுப்பிவைப்பது தொடர்பில், பொருட்களை இறக்குதல், உள்ளூரில் போக்குவரத்து ஆகியவற்றுக்கான செலவுகள், உபகரணங்கள் மற்றும் சாதனங்களுக்கான காப்புறுதிச் செலவுகள் ஆகியவற்றைப் பொறுப்பேற்றல்.

ன) உபகரணத்தின் முறையான மற்றும் மானுறுதிமிக்க செயற்பாடு, பராமரிப்பு ஆகியவற்றை உறுதி செய்தல்;

ந) கருத்திட்டம் நிறைவேறிய பின்னர் உபகரணங்கள் மற்றும் சாதனங்களுக்கான களஞ்சியப்படுத்துதல் செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகளுக்கான செலவை பொறுப்பேற்றல்.

க) கருத்திட்ட நிறைவேற்றத்திற்கு தேவைப்படும் ஆனால் கொரிய அரசாங்கத்தினால் வழங்கப்பட்டவை தவிர்ந்த உபகரணங்கள், கருவிகள். தளபாடங்கள், வாகனங்கள், உதிரிப் பாகங்கள் மற்றும் ஏனைய சாதனங்கள் ஆகியவற்றை வழங்குதல் அல்லது பிரதியீடு செய்தல்.

ப) கொரிய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உபகரணம் மற்றும் சாதனங்களை பிரத்தியேகமாக கருத்திட்டத்திற்கென உபயோகித்தல்.

**ஈ. கொரிய நிபுணர்கள் தொடர்பில் நடவடிக்கைகள்**

ய) நிபுணர்களின் பாதுகாப்பிற்கு உறுதி அளித்து அவசர தேவைகளின் போது அவர்களுக்கு மருத்துவ உதவி வழங்குதல்;

டி) ஒத்த நோக்கங்களையுடைய ஏனைய நாடுகளின் நிபுணர்கள் செயலாற்றுவது போன்று அவர்களுடைய சிறப்புரிமைகள், விதிவிலக்குகள், மற்றும் பயன்கள் யாவும் கொரிய நிபுணர்களுக்கும் வழங்குதல்;

உ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் ஆள் புலத்தினுள் கொரிய நிபுணர்களினால் கொண்டுவரப்பட்ட உபகரணங்கள், சாதனங்கள், வாகனங்கள், ஆகியவை தொடர்பாக இலங்கையில் உள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் கீழ் விதிக்கப்படும் வரிகள், தீர்வைகள், அறவீடுகள் மற்றும் ஏனைய கட்டணங்கள் ஆகியவற்றிலிருந்து விலக்களிக்கப்படுதல்;

ன) கொரிய நிபுணர்களின் பயனுறுதிமிக்க நடவடிக்கைகளுக்கென தேவைப்படும் உதவி ஆளணி மற்றும் / அல்லது தேவையான துணை பணியாளரை வழங்குதல்;

ந) இலங்கையில் உள்ள சம்பந்தப்பட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க, தமது நோக்கங்களை நிறைவேற்றத் தேவைப்படும் அத்தியாவசிய படங்கள், சம்பந்தப்பட்ட தரவுகள், புள்ளிவிபரங்கள் மற்றும் ஆவணங்களை வழங்குதல்;

க) கருத்திட்டப் பகுதிகளில் அவர்களது கடமைகளை நிறைவேற்றத் தேவைப்படும் ஏற்புடைய அலுவலகம், தளபாடங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களை வழங்குதல்;

ப) இலங்கையில் அவர்கள் தங்கியிருப்பதற்குத் தேவையான அனுமதிப் பத்திரங்கள், அங்கீகாரங்கள் மற்றும் பிரயாண ஆவணங்கள் போன்றவற்றை வழங்குதல்;

ா) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் கொரிய நிபுணர்களுக்கென ஒப்படைக்கப்பட்ட பணிகள் தவிர்ந்த அவர்களின் துர்நடத்தை, ஒட்டுமொத்த புறக்கணிப்பு தொடர்பாக எழும் விடயங்களுடன் சம்பந்தப்பட்டு அல்லது அவை நடைபெற்றிருப்பின் அவற்றிற்கெதிராக ஏதேனும் கோரிக்கைகளிலிருந்து கொரிய ஆளணியை பாதுகாக்க முடியாது.

**உ. பயிற்சிகளுக்கான நடவடிக்கைகள்**

i) பயிற்சிநெறிகள் ஆரம்பிப்பதற்கு ஒரு மாதத்திற்கு பிந்தாமல் முன்கூட்டியே கொரியாவில் நடைபெறவிருக்கும் பயிற்சிகளை ஆங்கிலத்தில் நல்ல புலமையுடைய அபேட்சகர்களை சிபார்சு செய்தல்;

ii) கொரியாவில் பயிற்சி முடிவடைந்த பின்னர் கருத்திட்டத்துடன் தொடர்புடைய வேலை வாய்ப்புகளில் ஈடுபடக்கூடியதாகவும் பயிலுநர்கள் கருத்திட்டத்தில் பணியாற்றுவதையும் உறுதி செய்தல்.

### 11.5.3. பௌதிக முன்னேற்றம்

#### 11.5.3.1. நிலநிரப்பலுக்கான சுப்பர் கட்டமைப்புக்கு வெளிநாட்டு பொருள் - கட்டுமானம்

கொய்கா ஆல் பணிக்கமர்த்தப்பட்ட சம்ஹீ கொன்ஸ்ட்ரக்ஷன் கோ லிமிட்டட் ஆனது, ஜியோ டெக்ஸ்டைல், பெண்டோனைட், நிலநிரப்பலின் பக்க கரைகளில் எச்.டி.பி.ஈ ஷீட் பொருத்தப்பட்டு கழிவு நிலநிரப்புகை பிரதேச கட்டுமானம் முடிக்கப்படது.




உரு 3.1: பூமிவேலைகள் முடிந்த பின் நிலநிரப்பல் பிரதேசம்




உரு 3.2: நில நிரம்பலின் பக்க கரையில் லைனர்களை இடல்

அடியில் நிலத்தடி சாக்கடை வடிகால்கள் பொருத்தப்பட்டா மற்றும் அதன் மேல் 30 சி.எம் தடித்த கிரவல் லேயர் இடப்பட்டது. அதன் மேல் பெண்டொனைட் அல்லாத மற்றவை விரிக்கப்பட்டது. பெண்டொனைட் பாய்க்கு பதிலாக பெண்டொனைட் மிக்ஸ்ட் மணல் லேயர் இடப்பட்டது. இதன் மூலம் 110-7உஅ.்.ள அல்லது அத்ற்கு குறைவாக பெர்மீஅபிலிடி கோ எ.்.பிசிஎண்ட் ஐ சந்திக்கலாம். பெர்.்.பொரடெட் லீசட் சேர்க்கை குழாய்கள் மற்றும் வாயு சேர்க்கை குழாய்கள் ஆகியன இப்பிரதேசத்தின் ஆக உயர்ந்த இடத்தில் பொருத்தப்பட்டன



உரு 3.3 : நிலத்தடி சாக்கடை வடிகால் இடல்



உரு 3.4: நிலத்தடி சாக்கடை வடிகாலின் மேல் ஜியோ டெக்ச்டைல் மற்றும் 30 சி எம் தடித்த உலோக லேயர் இடல்

லைனர்கள் இடப்பட்டது ஏனெனில் டீ:.போர்மேஷன் அல்லது மணல் மாசாக்கம், நிலத்தடி நீர் நிலநிரப்பல் பிரதேசத்தில் கலத்தலை தடுப்பதர்காகும்.



உரு 3.5: நிலநிரம்பலின் அடியில் லைனர்கள் பதித்தல்

மழைநீர்ரானது லீசட் ஆக மாறுவதை தடுக்கவும் இப்பிரதேச பயன்பாடு கழிவு அளவுடன் இலகுவாக இருப்பதற்கும் என, இப்பிரதேசம் திட்டத்தின் கீழ் பல எண்ணிக்கையான வலயங்களக பிரிக்கப்பட்டு உள்ளது. நிலை -1 செயற்றிட்ட இடமானது 6 வலயங்களாக பிரிக்கப்பட்டு உள்ளது.

### வாயு ஓட்ட முறைமை

செங்குத்தான நிலநிரம்பல் வாயு சேர்க்கை குழாய்கள் நிலநிரம்பலின் உயர் பகுதியில் பொருத்தப்பட்டன. செயற்பாட்டு நிலையின் போது வாயுவானது இக்குழாய்களில் சேர்க்கப்படும்.



உரு 3.6: வாயு ஓட்ட முறை

### லீசட் கிணறு

லீச்சட் சேர்க்கை வலைப்பின்னல் முறைமை ஆனது தூக்கக்கூடிய கிணற்றில் சேர்க்கப்படும் வண்ணம் அமைக்கப்பட்டு உள்ளது. செயற்பாட்டு வேளையில் இது சேகரிக்கப்படும். தர பகுப்பாய்வுக்கு பயன்படும் பின்னர் லீடர் பரிகரிப்பு நிலையத்தில் வெளியகற்றப்படும்.



உரு.3.7: லீச்சட் கிணறு

### 11.5.3.1.2. நிலநிரம்பல் லைனர் காப்பாளர்

ஒப்பந்தக்காரரான சம்ஹீ கொன்ஸ்ட்ரக்ஷன் கோ லிமிட்டட் பாவிக்கப்பட்ட டயர்கள் 31,000 பயன்படுத்தி லைனர் பாதுகாப்பாளரை அமைத்தது. எவ்வாறாயினும் இலங்கையில்கொய்கா எதிர்பார்த்தபடி பாவித்த டயர்கள் குறித்த நேரத்தினுள் இருப்பில் இருக்கைகல்லை. அதனால் வதிவிட கண்காணிப்பளர் திரு ஹீ முன் லீ பிபி பைகளை இதற்கு பதிலாக பாவிக்க முன்மொழிந்தார்.



உரு 3.8: நிலநிரம்பல் லைனர் காப்பாளர்

### 11.5.3.1.3. மழைநீர் வழிகால்

பொருத்தப்பட்ட மழை நிர் வடிகால் உள், வெளி மழை நீர் இரண்டையும் பிரதேசத்திலிருந்து அகற்றும். நிர்வாக கட்டிடத்தின் மழைநீர் யூ வடிவ கட்டர்களால் வடிகாலிடப்பட்டு பிறிதாக்கப்படும்.



உரு 3.9: மழை நீர் வடிகால் லைன்

### 11.5.3.1.4 லீசட் சேர்க்கை குழாய்கள்

நிலநிரம்பலானது நில டைலிடப்பட்டே வடிவமைக்கப்பட்டு உள்ளது. அதனால் உள்ளே உருவாகும் லிசட் அதை வெளியேற்றும் குழாயூடாக அகன்றுவிடும். அந்த குழய்கள் 30 சிஎம் - தடிப்பு 25-40 எமெம் கிரவல் ஆக உள்ளது. இது தடை ஏற்படலை தடுக்கிறது. குழாய் 2 வீதமாக இன்க்ளெய்ன் பண்னப்பட்டுள்ளது. இவை லிசட்டை அகற்ற வசதிப்படுத்தப்பட்டு உள்ளது.

### 11.5.3.1.5 லீசர் பரிகரிப்பு நிலையம்.

லிசட் மற்றும் கழிவு நீர் (உரத்தயாரிப்பு நிலையத்திருந்து லிசட்; வாகன கழுவலில் இருந்து கழிவுநீர்) ரிடென்ஷன் தேக்கம் அல்லது செப்டிக் தாங்கிக்கு, பைப்லைன்களால் மாற்றப்படும். ஈரநிலத்திற்கு வெளிவிட முன்னர் அவை உயிரியல் ரியாக்சன் சீக்கென்ஷல் பட்ச் ரியாக்டர் மூலம் பரிகரிக்கப்படும். இறுதியாக அது வெளி நீரோட்டத்திற்கு விடப்படும். ரீடென்ஷன் தேக்கத்தின் கட்டுமானம், செப்டிக்

தாங்கி, கலவை தாங்கி, எஸ்.பி.ஆர் 1, எஸ்.பி.ஆர் 2, செட்டிலிங் தாங்கி மற்றும் ஈரநிலம் ஆகியன ஏற்கனவே முடிந்தன. நீர் புகா பொருள் இடல் நடைபெறுகிறது.



உரு 3.10: லீசட் பரிகரிப்பு நிலைய கட்டுமானம்

### 11.5.3.1.6 நிர்வாகக்கட்டிடம் கட்டுமானம்

இதே ஒப்பந்தக்காரரால் 2 மாடி கட்டிடம் நிலநிரம்பல் செயற்பாடு மற்றும் முகாமை நடவடிக்கைகளுக்காக கட்டப்பட்டது.



உரு 3.11: நிர்வாகக்கட்டிடத்தின் கட்டுமானம்

### 11.5.3.1.7 அளக்கும் பாலம் பொருத்துகை

ஏ 30 தொன் கொள்ளலவு உடைய அளக்கும் பாலம் பொருத்தப்பட்டது. நிலநிரமுகைக்கு கழிவுகள் கொண்டு வரும் வாகன எடை அளப்பதற்காக இது பொருத்தப்பட்டது. இது, செயற்பாடில் பாவிக்கப்படும் இலக்கு ளவு மற்றும் உண்மை அளவு என்பவற்றை அறிய உதவும்.

ட்ரக் ஆனது இதில் கிடையாக நிற்கும் போது எடை அறியப்படும். அளந்த எடையானது உடனேயே இலத்திரனியல் ப்ரிண்டரினால் அச்சிட்ப்பட்டு பதிவிடப்படும். இவை அனைத்தினதும் பொருத்துகை நிறைவடைந்தது.



உரு 3.12: அளவைப்பாலம்

#### 11.5.3.1.8 ஓட்டோமேட்டிக் டயர் கழுவி

இது ஓட்டோமட்டிக் மற்றும் வாகனங்களின் கீழ் சக்கரங்களை கழுவும். இதனால் பிரதான பாதையானது அழுக்கடையாது. இது வாயிலுக்கு அருகில் உள்ளது. இது அனைத்து வாகனங்களுக்கும் கட்டாயமானதாகும். பாவிக்கப்பட்ட நீரானது நேரத்திற்கு நேரம் மாற்றப்படும். சுத்தமான நீர் தரப்படும். அசுத்த நீர் லீசட் பரிகரிப்பு நிலையத்திர்கு சுத்தபடுத்தலுக்காக அனுப்பப்படும்.



உரு 3.13: டயர் கழுவுமிடம்

#### 11.5.3.1.9 சிசிடிவி கமெராக்களின் பொருத்துகை

இச்செயற்பாடு முடிவடைந்துள்ளது. இது உள்வரும் வெளிப்போகும் அனைத்து வாகனங்களையும் கண்காணிக்க உதவும்.




உரு 3.14: சிசிடிவி கமெராக்களின் பொருத்துகை

**11.5.3.1.10 நிலத்தடி நீர் கண்காணிப்பு கிணறு**

இந்நீர் கண்காணிப்பு சோதனையானது நீர்த்தரத்தை சோதிப்பதர்காகும்.




உரு 3.15: நிலத்தடி நீர் கண்காணிப்பு கிணறு

**11.5.3.1.11 வாகனத்தரிப்பிடம்**

இந்த கட்டுமானம் முடிந்தது. வாகன நெருக்கடி ஏற்படுகையில் இது பாவிக்கப்படும். இது இப்பிரதேசத்தினுள்ளேயே வேறான அமைவிடத்தில் கட்டப்பட்டுள்ளது.



உரு 3.16: வாகனத்தரிப்பிடம்

### 11.5.3.1.12 இட உள்வரவு படலை கட்டுமானம்

இரும்புப் படலையானது, நுளைவாயிலில் கட்டப்பட்டு உள்ளது. இதை இன்னும் விரிவாக்குவதை பற்றி பின்னர் தீர்மானிக்கப்படும்.



உரு 3.17: இட உள்வரவு படலை கட்டுமானம்

### 11.5.3.1.13 நிலவடிவ வேலை

செயற்றிட்ட இடத்தின் எல்லைகளில் பின்வரும் மரங்கள் நடப்பட்டன. இவை தூசி மற்றும் பிற துகள்கள் வெளியேறலை தவிர்க்கும்.

1. ருக் அட்டன - *Alastonia scholaris*
2. அரலிய - *Plumeria acuminata*
3. கொபொலேலா - *Bauhinia variegata*
4. பிஹிம்பிய - *Filicium decipiens*
5. ரம்புட்டான் - *Nephelium lappaceum*

லிசட் பரிகரிக்கு நிலையத்தின் பக்கங்களில் இவை நடப்பட்டன. இதனால் மண்ணரிப்பு இழிந்தளவாக்கப்படும்



உரு 3.189: நிலவடிவ வேலை

### 11.5.3.2.14 நீர்த்தாங்கியின் கட்டுமானம்

ஒப்பந்தக்காரரால் இக்கட்டுமானம் முடிக்கப்பட்டது.



உரு 3.19 - நீர்த்தாங்கி கட்டுமானம்

### 11.5.3.1.15 நீரகற்றல் குழாய்கள் பொருத்துகை

இவை பரிகரித்த நீர்ரை ஈர நிலத்திலிருந்து வெளி ஓட்டத்திற்கு அகற்றும்.



உரு 3.20: நீரகற்றல் குழாய்கள் பொருத்துகை

### 11.5.3.1.16 உள்வீதிகளின் கட்டுமானம்

ஒப்பந்தக்காரரால் இக்கட்டுமானம் முடிக்கப்பட்டது. இது செயர்பாட்டுக்காலத்தில் வாகன நெருக்கடியை தவிர்க்க உதவும். வாகன நெருக்கடி ஏற்படும் வேளையில் பிரதான சாலையின் போக்குவரத்தை குழப்பாமல் இங்கே வாகனங்களை தரிக்கலாம். வீதி வலையமைப்பின் , வாகன எண்ணிக்கையின் அடிப்படையில் வாகன நெருக்கடி ் திட்டம் மேமபடுத்தப்பட்டு அமுல்படுத்தப்படும்.



உரு 3.21: உள்ளக வீதி வலையமைப்பின் கட்டுமானம்

### 11.5.3.1.17 பயிற்றுவித்தல் மற்றும் கொள்ளளவு வளர்ச்சி

ஆ மற்றும் மே இல் சொன்னபடி, இலங்கை அதிகாரிகள் கொரியாவிற்கு கொள்கை ஆக்கம், மத்திய மற்றும் உள் அரச கழிவு நிர்வாகம், நில நிரம்பல் இடங்களின் முகாமை,செயற்பாடு ஆகியவை மீதான பயிற்சிக்கு அழைத்தது. 4 பயிற்சிகள் முடிந்தன. இறுதி பயிற்சி நிலநிரம்பல் இடம் செயற்பாடு மற்றும் முகாமை. இது 2 மாதங்களுக்கு 5 நபர்களுக்கு நடைபெறும்.

எவ்வாறாயினும் பயிற்சியின் எண்ணிக்கை மற்றும் காலம் மாற்றத்திற்குரியவை. இருதரப்பினருடைய ஒருமித்த கருத்தின் பால் இறுதியாக்கப்படும். தொம்பேயில் 12 ஜூன் 2013ல் நடந்த முன்னேற்ற கூட்டத்தில் இறுதி பயிற்சியில் 10 நபர்கள் ஒரு மாதத்திற்கு என மாற்றும் படி கோரப்பட்டது. அதற்கிணங்கிய கொய்கா, அறிவுரை குழுவை பிரதிநிதித்துவப்படுத்தும் உயர் தர அலுவலர்களுக்கு

(6 இடம்) ஒரு வார பயிற்சியும் மற்றும் செயற்பாட்டு அலுவலர்களுக்கு (4 இடம்) 1மாத பயிற்சியும் தர இணங்கியது.

இதற்கிடையில் மசுஅ ஆனது, நிலநிரம்பல் செயற்பாட்டு அலகை அமைக்கும் வேலைகளை தொடங்கியது. இது விசேடகாம தொம்பே, மலிகாவத்தையில் உள்ள கழிவு நிலநிரம்பல் பேணுகை மற்றும் செயற்பாடு சார்ந்ததாகும். அமைச்சினூடாக மசுஅ விடுத்த கோரிக்கையின்படி, முகாமைத்துவ சேவைகள் திணைக்களமானது இவ்வலகு தாபிப்பதற்கு பல கார்டர் இடங்களுக்கு அனுமதி வழங்கியது. கொழும்பு மாநகரசபை மற்றும் தொம்பே பிரதேச சபை இலிருந்து முறையே 2 தொழினுட்ப அலுவலர்கள் மேற்சொன்ன அலகிற்கு தொழினுட்ப அலுவலர்களாக தேரப்பட்டும் மசுஅ இன் ஒரு ஊழியர் இட முகாமையாளராக தேரப்பட்டும் உள்ளனர்.

இவ்வலகிற்கு தர மற்றும் இணக்கப்பாடு அலுவலராக மசுஅ இன் ஒரு சிரேஷ்ட சூழக் அலுவலர் தேரப்பட்டார். மேலும், இயந்திர மற்றும் பம்ப் செயறடுத்துநர்கள் புதிதாய் அமர்த்தப்பட்டனர். மசுஅ இற்கு தெரிவு செய்யப்பட்ட முழுநேர தொழினுட்ப உத்தியோகத்தர்கள் 3 ஆண்டுகளுக்கு டொம்பே கழிவு இடத்தில் வேலைசெய்ய உடன்பட்டனர்.

பயிற்சி அட்டவணையின் படி, மசுஅ ஒரு இட முகாமையாளர், 3 தொழினுட்ப அலுவலர்களை ஒரு மாத பயிர்சிக்கு முன்மொழிந்தது. தர இணக்கப்பாடு அலுவலரால் சில சூழ்நிலைகளால் வர முடியவிலை. அதனால் இவ்வலகின் 3 நபர்கள் ஒரு மாத பயிற்சியை 4-11-2013 இலிருந்து 30-11-2013 வரை மேர்கொண்டனர்.எவ்வாறாயினும், அரச கட்டளைக்கிணங்க சோகம் நிகழ்ச்சியால் வெளிநாட்டு பயனங்கள் கட்டுப்படுத்தப்பட்டு இருந்தமையால் உயர் அதிகாரிகள் (மசுஅ தலைவர், பணிப்பாளர் நாயகம், உள் நாட்டு அரசாங்க ஆணையாளர் மற்றும் செயலாளர், தொம்பே பிரதேச சபை) ஆகியொல் செல்ல முடியவில்லை. மசுஅ இல் கெய்கா செயற்றிட்டத்தின் 4 அதிகாரிகள் மட்டும் இவ்வாய்ப்பை பயன்படுத்தி 1 வாரத்திற்கு 24 - 30 நவம்பர் 2013 ல் கொரியாவிற்கு சென்றனர். இயந்திர, பம்ப் செயர்பாட்டாளர்களும் ஒருவார பயிற்சியை கொரியாவில் மேற்கொண்டனர்.




உரு: 3.22: கொய்கா பயிற்சி

**11.5.3.1.18 மாதாந்த முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள்**

இவ்வொரு மாதமும் இக்கூட்டங்கள்கொய்கா, மசுஅ மற்றும் ஒப்பந்தக்காரர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பங்குபற்றலோடு முன்னேற்றங்கள் பிரச்சினைகள் அதற்கான தீர்வுகள், கட்டுமான வேலையை சுமுக அமுல்ப்படுத்தல் போன்றவற்றிற்காக நிகழ்ந்தது.




உரு. 3.23:மாதாந்த முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள்

**11.5.3.1.19 நடுக்கால மதிப்பீடு**

ஓகஸ்ட் 2013ல், கொரியா சூழல் நிறுவகத்தின் விர்பன்னர் அணி மற்றும் சுடோக்வொன் லாண்ட்.ஃ.பில் சைட் மனேஜ்மெண்ட் கோப்பிரேஷன் அணி ஆகியவை இலங்கைக்கு வந்து நடுக்கால மதிப்பீட்டை தொம்பேயில் உள்ள இச்செயற்றிட்டத்தின் மீது நடத்தின. இதன் முக்கிய நோக்கமானது திட்டத்தின் முன்னேற்றத்தை மதிப்பிடல் ஆகும். பேண்தகு தன்மையை எதிர்காலத்திலும் உறுதிப்படுத்தலும் இதன் ஒரு காரணம் ஆகும்.

ஓகஸ்ட் 2013ல் செயற்றிட்ட முன்னேற்றமானது 68 வீதம், எதிர்பார்த்த வீதம் 86. மே, ஜூலை மாதங்களின் பருவநிலையால் இத்தாமதம் நடந்தது.



உரு 3.24: நடுக்கால மதிப்பீடு

**11.5.3.2: இலங்கை அரசால் செய்யப்பட்ட நடவடிக்கைகள்**

**11.5.3.2.1. பூமி வேலை**

கட்டுமான வேலையின் போது கொரிய ஒப்பந்தக்காரர்கள் மேலதிக பூமிவேலையும் செய்யுமாறு கேட்கப்பட்டனர்.

அதற்கமைய,திட்ட பொறியியல் அலுவலர்களாலும் பொரியியலாளர்களாலும் இதற்கான இலக்கு ரூ 580,000 என தீர்மானிக்கப்பட்டது. இக்டாட் பதிவாளரான 7 தரப்பினரிடம் விலைமனு கோரப்பட்டது. 3 தரப்பு பதிலளித்தது.

ஏற்கனவே சம்ஹீ கொன்ஸ்ட்ரக்ஷன் இருந்ததால் அதனிடம் இவ்வேலையை ஒப்படைப்பது ஒருங்கிணைப்பிற்கு எளிது என தீர்மானிக்கப்பட்டது.

பிபிசி ஆனது டி.இ.சி இன் பரிந்துரைக்கு அனுமதி அளித்தது. மொத்த தொகையான ரூ 567000.00 ,, 12 வீத வட் இற்கு அதே ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்டார். இறுதியாக அதே ஒப்பந்தக்காரருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு வேலையானது உரிய காலத்தில் முடிக்கப்பட்டது.

**11.5.3.2.2 உர்கட்டமைப்பு மேம்பாடு (வீதி, மின்சாரம், வேலி, தொலைபேசி மற்றும் தொடர்பாடல், நீர் வழங்கல், அலுவலக வசதி, இன்னபிற)**

ஒப்பந்தபடி, அரசானது மின்சாரம், நீர், தொலைபேசி, அணுகலுக்கான வீதி அபிவிருத்தி ஆகியவற்றை வழங்கல் மற்றும் பொருத்தலுக்கு முன் செய்து தருவதாக கூறியது. மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆனதுஅணுகல் வீதிக்கான தேவைப்படும் செயல்களை செய்தது. தர்போது அஸ்ஃபல்ட் பேஸ் கார்பெர் போடுதல் நடைபெறுகிறது.

தொலபேசி வசதி, தர்காலிக மின்சார வழங்கல், நீர் வழங்கல், ஆகியன ஏற்கனவே வழங்கப்பட்டன. ஒப்பந்தப்படி அரசு இடத்திற்கு பாதுகாப்பளிக்க வேண்டும். தொம்பே பிரதேச சபை ஒரு பொருத்தமான ஒப்பந்தகாரர் மூலம் இடம் சுற்றி வேலி யிட்டது.



**11.5.3.2.3 கழிவு ஆய்வு**

இவ்வாய்வு மசுஅ அலுவலர்கள் மற்றும் தொம்பே பிரதேச சபை அலுவலர்கள் ஆகியோரால், செயற்றிட்டத்தின் உண்மையான தேவைகளை அறிய நடத்தப்பட்டது. இதன்படி கருவிகள், வாகனங்களின் பட்டியல், இதற்கு பொருத்தமாகும் வண்ணம் மீளமைக்கபட்டு, கொய்கா, மற்றும்

சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தகக் சக்தி அமைச்சிற்கு மேலதிக நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டது.




உரு 3.26: கழிவு ஆய்வு

**11.5.3.2.4 இடத்திற்கான காப்பு, அலுவலக இடம், பொறியியல் கருவிகள், தளபாடம், காகிதாதிகள் பிற தொழினுட்ப கருவிகள் வழங்கல்**

ஒப்பந்தப்படி, அரசாங்கம் இடத்திர்உ காப்பளிக்க வெண்டியிருந்தமையால், டபிள்யு. ஈ செக்கியூரிட்டி சேவிசஸ் தனியார் நிறுவனத்திரமிருந்து, மசுஅ சபை பணிப்பாளர்களின் அனுமதியோடு (போர் பேப்பர் 2-3-2012ல்) பெறப்பட்டது.

தளபாடம் (3 மேசை , 8 கதிரை) தரப்பட்டது

**11.5.3.2.5 போக்குவரத்து**

கலந்துரையாடல் பதிவின் படி திரு. ஹீ முன் லீ, வதிவிட கண்காணிப்பாளர் மசுஅ இற்கு ஆய்வு, ஒட்டுமொத்த செயற்றிட்ட அமுல்படுத்த செயன்முறை ஆலோசனைக்காக அனுப்பப்பட்டார். மசுஅ 4டபிள்யூ டி ஜீப்பை கொய்கா விற்றன்னர்கள் இலங்கையில் பாவிக்க வழங்கியது. எரிபொருள் ஒதுக்கீடு மசுஅ இன் பணிப்பாளருக்கு இணையானதாகும்.

**11.5.3.2.6 வரி, பணிகள், பிற**

ஒப்பந்தப்படி, பொருட்கள், இயந்திரங்கள் இறக்குமதிக்கு சுங்க விலக்கு அளிக்கப்பட் வேண்டும். இவை இச்செயற்றிட்டத்திற்கு உபயோகப்படும்.

**11.5.3.2.7 இட வருகைகள்**

இவ்வகையான அனுபவம் இலங்கைக்கு புதியது என்பதால், ஆர்வமுடைய எத்தரப்பினரையும் இவ்விடத்திற்கு வருகை தந்து கற்க வாய்ப்பளிக்க மசுஅ முடிவு செய்தது. குறிப்பிட்ட காலப்பகுதியில் பின்வரும் நிருவகங்களை சேர்ந்தோர் வந்தனர்.

| திகதி | நிறுவனம் | எண்ணிக்கை |
|---|---|---|
| **10/1/2013** | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் | 11 |
| **11/1/2013** | முதலீட்டுச் சபை | 3 |
| **11/1/2013** | ஹோல்சிம் (ஜியோசைக்கிள்) | 7 |
| **15/01/2013** | மசுஅ, மாவட்ட அலுவலகம், கம்பகா | 15 |
| **18/01/2013** | திட்ட மேலாண்மை மற்றும் கண்காணிப்பு திணைக்களம், திறைசேரி | 13 |
| **29/01/2013** | தேசிய திட்டமிடல் திணைக்களம் | 5 |
| **30/01/2013** | மசுஅ - ஈஜஏ பிரிவு | 7 |
| **30/01/2013** | கால்நடை கடற்றொழில் மற்றும் ஊட்டச்சத்து பீடம் , வயம்ப பல்கலைக்கழகம் | 15 |
| **8/2/2013** | கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களம் | 4 |
| **12/2/2013** | மத்திய சுற்றாடல் அதிகாரசபை மேலாண்மை குழு உறுப்பினர்கள் | 12 |
| **15/02/2013** | கழிவு மேலாண்மை பிரிவு, மத்திய சுற்றாடல் அதிகாரசபை | 10 |
| | களனி பல்கலைக்கழகம் | 3 |
| **27/02/2013** | விஞ்ஞான பீடம், களனி பல்கலைக்கழகம் | 5 |
| **4/3/2013** | கட்டிடக்கலை பீடம், மொரட்டுவபல்கலைக்கழகம் | 140 |
| **22/03/2013** | வன, சூழல் விஞ்ஞான விசேட பட்ட மாணவர்கள், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 9 |
| **15/05/2013** | நாடு பிரதிநிதி, பிரஞ்சு மேம்பாட்டு முகமை | 2 |
| **10/7/2013** | விவசாய பீடம் ருகுணு பல்கலைக்கழகம் | 10 |
| **15/07/2013** | சீன வடக்கு தொழிற்றுறைகள் கோப் | 6 |
| **16/07/2013** | சி.ஏ.பிசிசி ,ஈடிசிஎ.ஃ.ப் உறுப்பினர்கள் | 5 |
| **30/07/2013** | எஸ்.எல்.ஐ.டி.ஏ | 10 |

| திகதி | நிறுவனம் | எண்ணிக்கை |
|---|---|---|
| **9/8/2013** | கொய்கா நடுக்கால மதிப்பீட்டு குழு | 5 |
| **4/9/2013** | சியோல் ஒலிபரப்பு முறைமை | 6 |
| **25/09/2013** | கொரிய அரசு அதிகாரிகள் | 18 |
| **14/10/2013** | பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு | 120 |
| **27/10/2013** | விலங்கியல் பிரிவு, களனி பல்கலைக்கழகம் | 52 |




உரு 3.27: புத்தள மாவட்ட மக்கள் மற்றும் பாதுகாப்பு நகர அபிவிருத்தி அமைச்சு அதிகாரிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி

## 11.5.4 நிதி முன்னேற்றம்

சுருக்கம்

| | ஒதுக்கீடு /Rs | பெறப்பட்டது /Rs | செலவினம்/Rs |
|---|---|---|---|
| **வெளிநாட்டு உபகரணம்** | 60,000,000 | | 215,740,800** |
| **உள்ளுர் உபகரணம்** | 40,000,000 | | 40,000,000 |
| **கூடுதல்** | 12,500,000 | | 7,088,583.02 |
| **மொத்தம்** | **112,500,000** | | **47,088,583.02** |

** கட்டுமான பணிகளில் மட்டும்

| | | |
|---|---|---|
| பெறப்பட்டது | Rs.47,100,000.00 | |
| திட்ட செலவினம் | Rs. | |
| ஆண்டு 2013 | கொய்கா | ஒதுக்கீடு /2013 |
| செலவினம் | | |
| A1.1 · கழிவு மேலாண்மை ஊக்குவிப்பு | 542,313.00 | 550,000 |
| A1.2 · பூமியில் வேலை | 196,401.50 | 210,000 |
| B · உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 21,355,467.02 | 21,725,000 |
| B1.1 · நில அளவையியல், ஓ ரூ எம் உபகரணங்கள் | 859,413.82 | 875,000 |
| C1.2 · தள பாதுகாப்பு வழங்கவும் | 452,046.06 | 510,000 |
| D1.1 போக்குவரத்து (எரிபொருள், பராமரிப்பு போன்றவை | 506,785.38* | 450,000 |
| D1.2 · வரி, தீர்வைகள் தீர்வைகள் மற்றும் மற்றவை | 22,922,775.24 | 27,930,000 |
| D1.3 · திட்ட ஒருங்கிணைப்பும் முகாமையும் | 113,227.00 | 110,000 |
| D1.4 · நிச்சயமின்மைகள் | 140,154.00 | 140,000 |
| மொத்த செலவு | 47,088,583.02 | 52,500,000 |
| | | |

* வாக்கு ஒதுக்கீடு பின்வரும் காரணங்களால் மீறுகிறது.

## 11.6 இலங்கையில் திண்மக்கழிவு அகற்றலுக்கான வசதிகளை நிர்மாணிப்பதற்கான கருத்திட்டம் (EDCFகருத்திட்டம்)

### 11.6.1 அறிமுகம்

#### 11.6.1.1 மேலோட்டப் பார்வை

பல்வேறு சுற்றாடல் மற்றும் சுகாதாரப் பிரச்சினைகளை ஏற்படுத்தும் முறையில் தற்போது மாநகர சபை திண்மக் கழிவுகள் அகற்றப்டுவதற்கான இறுதித் தீர்வாக விஞ்ஞான ரீதியில் நிரூபிக்கப்பட்ட சுகாதார சீர்கேடற்ற கழிவுப் பொருள் இடப்படும் பகுதிகளை ம.சு.அ. பல ஒன்றிணைந்த கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்கான தீர்வுகளாக அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தினால் பல்வேறு வழிமுறைகளைப் பின்பற்றுவதுடன், இலங்கையில் 04 சுகாதார சீர்கேடு அற்ற கழிவுப் பொருள் இடப்படும் பகுதிகைள அமைப்பதற்கு CEA, திறைசேரிக்கு விடுத்த கோரிக்கையின் பேரில் கொரிய அரசாங்கத்தின் Export-Import Bank (Eximbank) வங்கி இடமிருந்து EDFC இன் கீழ் கடன் வசதி பெறப்படுகிறது. சொல்லப்பட்ட நான்கு கருத்திட்டப் பகுதிகளும் அநுராதபுரத்தில் உள்ள கீரிகுக்குலம, கிக்கடுவயில் உள்ள மொன்ரோவியாவத்த, பாணந்துறையில் உள்ள பல்முல்ல, உடுநுவரவில் உள்ள கோணாடிகாவத்த ஆகிய இடங்களில் நிறுவப்படும். இறுதியில் இவை நான்கும் கொத்தணி முறையில் சம்பந்தப்பட்ட உள்ளூர் அதிகாரசபைகளில் உருவாகும் திண்மக் கழிவுகளை வெளியேற்றுவதற்கான பொதுவான தீர்வாக அமையும்.

இக்கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த செலவு அமெரிக்க டொலர் 38.2 மில்லியனாகும். அதில் அமெரிக்க டொலர் 33.536 மில்லியன் EDCF இலிருந்து பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுவதோடு மீதி அமெரிக்க டொலர் 4.664 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும். உதவி பெறும் நாடுகளின் வசதிகளினால் EDCF கடன்களுக்கு பிரயோகிக்கக்கூடிய நியமங்களும் நிபந்தனைகளும் தீர்மானிக்கப்படுகின்றன.

#### 11.6.1.2 கருத்திட்டத்தின் நோக்கெல்லை

- 04 அமைவிடங்களில் ஒவ்வொரு சுகாதார சீர்கேடு அற்ற முறையில் கழிவுப் பொருள் இடப்படும் பகுதிகளை அமைத்தல்:
  - பாணந்துறை
  - கிழக்கு நுவரகம் பலாத்த, அநுராதபுரம்
  - உடுநுவர
  - ஹிக்கடுவ
- வெளியேற்றுகைகளுக்கான முகாமைத்துவத்திற்கான திட்டங்களை ஆரம்பித்தல்.
- கழிவுப்பொருள் இடப்படும் பகுதியிலிருந்து வெளியேறும் வாயுவை முகாமைத்துவம் செய்வதற்கான திட்டங்களை ஆரம்பித்தல்

- கழிவுப் பொருட்களின் மதிப்பீடு
- கழிவுப் பொருள் அகற்றும் முறைகள், வசதிகளின் இயலளவு/ பரிமாணங்கள் ஆகியவற்றை மதிப்பிடல்

**11.6.1.3 எதிர்பார்க்கப்படும் நன்மைகளும் முடிவுகளும்**

இக்கருத்திட்டத்தின் திண்மக் கழிவு முகாமைத்துவ வசதிகளினால் இலங்கையில் உள்ள நகரங்களைத் துப்பரவாக வைத்திருப்பதற்குரிய உட்கட்டமைப்பை கட்டியெழுப்ப முடிகிறது. இதன் மூலம் தேசியத்தின் நல்ல அபிப்பிராயம், தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்துதல், மற்றும் பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவித்தல் என்பன சாத்தியமாகும். முறையாக கழிவுகளை அகற்றி, மாநகர திண்மக் கழிவுகளை முகாமைத்துவம் செய்வதன் மூலம் சிறப்பான பொதுச் சுகாதாரம், உடல் நலம் அதன் விளைவாக நோய்கள் ஏற்படுதல் மற்றும் வைத்தியசாலைகளில் சிகிச்சை ஆகியவற்றைக் குறைத்து மனிதவலுவின் வேலை நாட்கள், உற்பத்தித் திறன் மற்றும் வருமானங்களை அதிகரிப்பதற்கும் இக்கருத்திட்டம் உறுதியளிக்கிறது.
இறுதியாக, இக்கருத்திட்டத்தினால் எதிர்பார்க்கப்படுவது யாதெனில்:

- கருத்திட்டப் பகுதியைச் சூழவுள்ள சுற்றாடல் நிபந்தனைகளை மேம்படுத்துதல்
- பிரதேச வாழ் மக்களின் பொதுச் சுகாதாரம், உடல் நலம் ஆகியவற்றை அதிகரித்தல்
- கழிவு நீர் பரிகரித்தல் முறைகளின் சுகாதார நிலைமையை மேம்படுத்துதல்
- மண், நீர் மற்றும் காற்று ஆகியன மாசடைதலைக் குறைத்தல், ஏனைய சுற்றாடல், சமூக-பொருளாதார பிரச்சினைகளையும் தணித்தல்
- ஒன்றிணைந்த திண்மக் கழிவு பரிகரிப்பு வசதிக்கான செயற்பாடுகளில் தொழில்நுட்ப அறிவைப் பிரயோகித்தல்

இக்கருத்திட்ட அமுலாக்கலினால் எதிர்பார்க்கப்படும் குறித்த சுற்றாடல், தொழில்நுட்ப, சமூக பொருளாதார நன்மைகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன:

- சுற்றாடல் நன்மைகள்:
  - மீள்சுழற்சி செய்யக்கூடிய மூலவளங்களின் பாவணையை அதிகரித்தல்
  - சுகாதார முறையில் பரிகரிக்கும் முறையினூடாக பிரதேச வாழ் மக்களுக்கு இன்பகரமான வாழ்க்கைச் சூழலை வழங்குதல்
  - சுகாதார முறையில் பரிகரிக்கும் முறையினூடாக பிரதேச வாழ் மக்களின் பொதுச் சுகாதார நிபந்தனைகளுக்கு உதவியளித்து பங்களிப்புச் செய்தல்
  - இரண்டாம் நிலை சுற்றாடல் தொடர்புடைய பிரச்சினைகளை குறைந்த முறையான. விஞ்ஞான ரீதியான பரிகரிப்பு செயன்முறையைப் பின்பற்றுவதன் மூலம் நில வடிவமைப்பு தொடர்பான அழகுபடுத்துதலில் உதவுதல்
  - ஆங்காங்கே மற்றும் அதிகாரமளிக்கப்படாத கழிவுகற்றலால் ஏற்படும் மாசடைதலிலிருந்து ஆளுகைப் பிரதேசத்தைப் பாதுகாத்தல்
  - சிவில் முறைப்பாடுகளின் பல்வேறு பிரச்சினைகளைத் தடுத்து வைத்தல்/ தீர்த்து விடல், சுற்றாடலைப் பாதுகாத்தல், பிரசைகளின் பொதுச் சுகாதாரத்தைப் பாதுகாத்தல்

- அரசாங்கத்தினது தேசிய காணிப் பயன்பாட்டுத் திட்டத்தில் உள்ளவாறு களியாட்ட நடவடிக்கைகள், ஓய்வெடுத்தல் ஆகியவற்றுக்கென போதியளவு இடவசதியை ஏற்படுத்திக் கெடுத்தலை உறுதி செய்தல்

- தொழில்நுட்ப நன்மைகள்:
  - விரிவான முகாமைத்துவத்தினூடாக நம்பத்தகு மற்றும் சிக்கனமான கழிவு முகாமைத்துவ முறையை ஏற்படுத்துதல்
  - நீண்டகால அடிப்படையில் சுகாதார முறையிலமைந்த கழிவுப் பொருள் அகற்றுகை
  - கழிவுப் பொருள் இடப்படும் பகுதியின் நடவடிக்கைகள் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றில் தொழில்நுட்ப அறிவு அதிகரித்தல்
  - வெளியேற்றுகைகளைப் பரிகரித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் தொடர்பில் தொழில்நுட்ப அறிவு அதிகரித்தல்

- பொருளாதார நன்மைகள்:
  - யதார்த்தமான நிலப் பயன்பாடு
  - பிரதேச வாழ் மக்களுக்கான கழிவுப் பொருள் பரிகரிப்பிற்கான செலவைக் குறைத்தல்
  - நிர்மாணித்தல், இயக்குதல் பணிகள் தொடர்பாக வேலை வாய்ப்புகளை அதிகரித்தல்
  - சூழவுள்ள சுற்றாடலுடன் இணைந்த வசதிகளுடன் அமைதியான இடைவினையுடனான தொழிற்பாடுகளை ஏற்படுத்துவதன் மூலும் பொருளாதார நன்மைகளைவழங்குதல்
  - வீட்டுக் கழிவுப் பொருட்களை முகாமைத்துவம் மற்றும் அகற்றுதல் தொடர்பான நடவடிக்கைகளில் செலவைக் குறைத்தல்
  - மூலப் பொருட்களின் மீள் சுழற்சி மூலம் செலவினைத்திறனை ஏற்படுத்துதல்

- சமூக நன்மைகள்:
  - நம்பிக்கையுடைய சுகாதார ரீதியான கழிவுப்பொருள் பரிகரிப்பு வசதிகளை வழங்குதல்
  - சூழவுள்ள நிபந்தனைகளுக்கு மிகப் பொருத்தமானதொரு கழிவுப்பொருள் இடப்படும் பகுதியை அமைப்பதன் மூலும் அபாயகரமான வசதிகளுக்கெதிரான அனுகூலமான மனப்பாங்கை அதிகரித்தல்
  - சுற்றாடல் நேய எண்ணக்கருவின் பிரயோகத்தின் மூலம் சுற்றாடல் மற்றும் பிரயோசனமற்ற கழிவுப் பொருள் பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்துவதற்கு உதவுதல்
  - கழிவுப் பொருள் பரிகரிப்பு வசதிகைள ஏற்படுத்துவதன் மூலம் கழிவுப் பொருள் இடப்படும் நிலப் பகுதிக்கான இடப் பற்றாக்குறைவு ஏற்படுதலை தீர்த்து வைத்தல்
  - நீண்டகாலப் போக்கில் சுகாதார முறையிலான கழிவுப் பொருள் இடப்படும் பகுதியை ஏற்படுத்துதல்
  - பிராந்திய அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்தல்

### 11.6.2 கருத்திட்ட அமைவிடங்கள்




#### 11.6.2.1. மலமுல்ல இடம், பாணந்துறை:

(பாஅந்துறை யுசி, களுத்துறை யுசி, பாணந்துறை பிஎஸ், களுத்துறை பிஎஸ்) ஆகிய 4 எல்.ஏக்களின் கழிவுகளும் இங்கு கொட்டப்படுகின்றன.




மலமுல்லவில் உள்ள உத்தேசக் கருத்திட்டப் பகுதி






**பாவப்பட்ட அணுகல் வீதி இடத்திற்கான அணுகல் வீதி இடத்தின் பின்னால் முன்பக்கம்**

**11.6.2.1.1. சட்டவிரோத ஆக்கிரமிப்பு மதிப்பீடு**

மலமுல்ல பகுதியைப் பொறுத்தவரையில், பல்வேறு குடும்பங்கள் சட்டவிரோத முறையில் அத்துமீறி அப்பபகுதிக்குச் செல்வதனால் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. எனவே கொரிய Eximbank வங்கி CEA யிற்கு இது பற்றித் தெரியப்படுத்தியதோடு இப்பிரச்சினைத் தீர்ப்பதற்கென CEA மேற்கொள்ளும் நடவடிக்கை பற்றிய தமக்கு அறிக்கையிடும் படியும் கோரியுள்ளது.

சட்டரீதியான காணி உரிமயாளரான பாணந்துறை, பிரதேச செயலாளர் சட்டத்திற்கு எதிராக அத்துமீறிச் செல்பவர்களுக்கு எதிராக வழக்கொன்றை பாணந்துறை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். அதே வேளையில், முன்பு இப்பகுதியில் குடியேறியிருந்த 73 ற்கும் அதிகமான சட்டத்திற்கெதிரான அத்துமீறிச் செல்பவர்களில் தற்போது ஒரு சிலரே அங்கு குடியேறியுள்ளனர் என அவர் தெரிவித்தார். நீதிமன்ற நடைமுறைக்கு நீண்ட காலம் தேவைப்படுவதனால், பாணந்துறை பிரதேச சபைக்கும் (PPS), பாணந்துறை பிரதேச செயலாளருக்கும் (PDS) இடையில் சுமூகமான முறையில் ஏகோபித்த தீர்வைக் காண்பதன் மூலம் நில அளவையை மீண்டும் மேற்கொண்டு மலமுல்ல பகுதிக்குத் தேவையான நிலப் பகுதியை EDCF கருத்திட்டத்திற்கெனப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

CEA, தவிசாளரின் நேரடி தலையீட்டின் மூலம், சம்பந்தப்பட்ட தரப்புகளுடனான பல பிரயோசனமான கலந்துரையாடல்கள் மூலம் இப்பிரச்சினை முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. இவ்விடயத்தில் PDS,PPS, கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகாரசபை- மேல் மாகாணம் (WP), உள்ளூராட்சி ஆணையாளர்(ஶ்ரீ) மற்றும் CEA ஆகியோர் பங்கேற்றனர். சகல தரப்பினரும் இக்கருத்திட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து சட்டரீதியில் அல்லாது ஏகமானதாக மனம் ஒத்த முறையில் தீர்வு காணலாம் என பிரேரித்தனர். 73 சட்ட ரீதியற்ற முறையில் அத்துமீறி குடியேறியவர்களில், 07 அத்துமீறிக் குடியேறியவர்களைத் தவிர ஏனையோர் மலமுல்ல பகுதியை விட்டு வெளியேறி விட்டனர். இந்நிலையை ஏற்படுவதற்குக் ஏகோபித்த அணுகுமுறையேயாகும்.

**11.6.2.1.2. சுற்றுச்சூழல் அனுமதி**

03-04-2013 அன்று மசுஅ இன் களுத்துறை அலுவலகத்திற்கு இந்த கழிவு நிலநிரப்பலுக்கு சூழல் பரிந்துரை வேண்டி ஒரு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டது அதர்கமைய 29-05-2013 அன்று திரு.ஓ.எஸ்.பி. குமாரசிரி அவர்களால் அளவிடப்பட்ட மலமுல்லயிலுள்ள கழிவு நிலநிரப்புகைக்கு பரிந்துரை வழங்கப்பட்டது.

### 11.6.2.2 கொனடிகவத்த இடம், உடுநுவர

உடுநுவர பிரதேச சபைக்குட்பட்ட கொனடிகவத்த என அழைக்கப்படும் ஓரிடத்தில் கழிவு நிலநிரப்பல் கட்டப்பட்டது. இந்த இடம் மத்திய மாகாணத்தில் 11 உள் ஊராட்சி சபைகளுக்கு சேவையாற்றக்கூடியது. சூழல்நட்பு ரீதியில் அவர்களது கழிவுகளை இங்கே வெளியேற்ற முடியும்.




உரு 2.2: கொனடிகவத்த இடம்,

#### 11.6.2.2.1 நில அனுமதி

உத்தேசிக்கப்பட்ட உடுநுவர இடத்தின் விடயத்தில், மசுஅ ஆனது, நில மீளமைப்பு ஆணைக்குழுவிலிருந்து நிலத்தை பெறுவதற்கான நடவடிக்கையை ஏற்கனவே எடுத்துள்ளது. இது உடுநுவரவின் கோணடிகவத்தையில் 25 ஏக்கரில் அமைந்துள்ளது. இணைந்த கழிவு முகாமை வசதியை அபிவிருத்தி செய்வதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இவ்வசதியானது கழிவு நிலநிரம்பலுடன் கூடியது. இக்கழிவு நிலநிரம்பலுக்கு கொரியா எகிம்பாங்க் இனால் நிர்வகிக்கப்படும் பொருளாதார அபிவிருத்தி கூட்டுத்தாபன நிதியத்திலிருந்து தொழினுட்ப நிதி உதவி தரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலதிக விரிவாக்கத்திற்கான 3 ஏக்கரை எடுப்பதற்கான ஏற்பாடுகள் நடப்பதோடு, எல்.ஆர்.சி உடன் பேரம்பேசல் நடைபெறுகிறது.

#### 11.6.2.2.2 கோணடிகவத்தையின் சூழல் தாக்க மதிப்பீடு

உத்தேசிக்கப்பட்ட கழிவு நிலநிரப்பலுக்கு மேலதிகமாக, அதே அமைவிடத்தில் உரத்தயாரிப்பு நிலையம் ஒன்றை, மத்திய மாகாணத்தின் சில உள் ஊராட்சிசபைகளில் இருந்து கொணரப்படும் மாநகர திண்மக்கழிவின் ஓர்கானிக் பகுதியை மாற்றுவதற்காக அமைக்க திட்டமிடப்பட்டது.

22 மே 2008 ஆம் திகதி உடைய 1330∴9 இல. வர்த்தமானியின் பிரிவுகளின் கீழ், செயற்றிட்டங்களுக்கு உள்ளான இட ஒதுக்கப்பட்ட வீழ்ச்சிகள் மற்றும் பொறுப்பேற்புகள் ஆகியவற்றுக்கு அனுமதியானது கட்டாயமானதாக இருக்கலாம். இலங்கையின் அரிப்படையக்கூடிய வலயத்துள் இச் செயற்றிட்ட இடம் உள்ளதால், சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கையானது செயற்றிட்ட முன்மொழிவாளரால் தயாரிக்கப்பட வேண்டியது தேவையாகவுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகாரசபையானது செயற்றிட்ட அனுமதிக்கும் முகவரகமாக (பிஏஏ) செயற்படுகிறது. ஈஐஏ அறிக்கை தயார் செய்வதற்கு, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சூழல் கற்கைகள் மையத்தை (சி.ஈ.எஸ்) மசுஅ தேர்ந்தது. யூடிஏ சமர்ப்பித்த விதி ஒழுங்கு முறைகளின் படி, சி.ஈ.எஸ் ஆனது வரைபு ஏஐஏ அறிக்கையை தயாரித்தது மற்றும் அதை யூடிஏக்கு மதிப்பீட்டுக்காக அனுப்பி வைத்தது. இவ்வறிக்கையை மீளாய்வு செய்வதற்காக, சம்பந்தப்பட்ட பங்காளர்களுடன் டி.ஈ.சி சந்திப்புகளின் தொடர் நடத்தப்பட்டது.

அதற்கிடையில், மசுஅ அதிகாரிகளுக்கும் ஈஐஏ தயாரிப்பு அணியின் உறுப்பினர்களுக்கும் 11ம் திகதி ஜனவரி 2013 அன்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஈஐஏ இன் முன்னேற்ற மீளாய்வுக்காக கூட்டம் நடந்தது.

டி.ஈ.சி தந்த கருத்துக்களை கருத்திற்கொண்டு, சி.ஈ.எஸ் ஆனது திருத்தப்பட்ட ஈ.ஐ.ஏ இனை தயாரித்து யுடிஏக்கு மதிப்பீட்டுக்காக சமர்ப்பித்தது. விசேட டி.ஈ.சி ஆனது 2, ஒகஸ்ட் 2013 அன்று யுடிஏ இல், வரைபு ஈஐஏ அறிக்கையின் போதுமான தன்மையின் மீதான கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகளைப் பெறுவதற்காக நடத்தப்பட்டது.

டி.ஈ.சி. இன் பரிந்துரைகளை இறுதிப்படுத்திய பின்னர், சி.இ.எஸ் ஆனது இறுதி அறிக்கையை தயாரித்து, பொதுமக்கள் கருத்தறிவதற்காக 21 பிரதிகள் மும்மொழிகளில் 10 செப்டெம்பர் 2013 அன்று யுடிஏ இடம் சமர்ப்பித்தது. இதேவேளை யூடிஏ ஆனது பத்திரிகை விளம்பரங்களை மும்மொழியிலும் அரச பத்திரிகைகளில் வெளிவர நடவடிக்கைகள் எடுத்ததோடு அவை 31 ஒக்டோபர் 2013 அன்று வெளியாயின. பொதுமக்களின் கருத்திற்காக ஒரு மாதம் திறந்து வைக்கப்பட்டது. ஒரு மாதத்தின் பின், டி.ஈ.சி கூட்டமானது 23 டிசம்பர் 2013 அன்று யுடிஏ இல் மேற்சொன்ன செயற்றிட்டத்திற்கான இறுதி அனுமதி பற்றி கலந்துரையாடுவதற்காக நடைபெற்றது.

தேரப்பட்ட 11 உள் ய்ய்ராட்சி சபைகளாலும் உத்தேசிக்கப்பட்ட நிலநிரப்பலான உடுநுவர இடத்தில், சமர்ப்பிக்கப்படும் மொத்த கழிவு அளவின் மீது சம்மதம் தெரிவிக்க அதிக நேரம் பிடித்தது. உடுநுவர இடத்தில், சமர்ப்பிக்கப்படும் மொத்த கழிவு அளவை தீர்மானிக்க என, உயர் மட்ட அரச அதிகார சபையின் பங்கேற்போடு கடந்த வருடம் பல கூட்டங்கள் நடைபெற்றன. எவ்வாறாயினும், 17, ஜூன் 2013 அன்று கண்டியின் மாவட்ட செயலகத்தில் நடந்த உயர் மட்ட அரசியல் கூட்டத்தில், இது உறுதியானது. அதனால், இறுதி ஈஐஏ அறிக்கையின் தயாரிப்பானது கணிசமான காலத்தை எடுத்துக்கொண்டது.

**11.6.2.2.3 கூட்டங்கள்**

உயர்கல்வி அமைச்சரான கௌரவ. எஸ்.பி. திசாநாயக்க, சுர்றாடல் அமைச்சரான கௌரவ. அநுர பிரியதர்ஷன யாப்பா, மத்திய மாகாண முதலமைச்சரான கௌரவ சரத் ஏகநாயக்க மற்றும் உள் ஊராட்சிசபை தலைவர்களின் பங்களிப்போடு இந்த பிரச்சனை உள்ளிட்ட கண்டி மாநகர சபை பிரச்சனைகளுக்கு தீர்வு காண, பல கூட்டங்கள் 2012 ல் நடைபெற்றன. இவ்வாண்டும் பின்வரும் கூட்டங்கள், ஒவ்வொரு உள் ஊராட்சி சபையாலும் வழங்கப்படும் கழிவுகளின் அளவினை தீர்மானிக்கவும் கலந்துரையாடவும் கூட்டப்பட்டன.

- 1 ஏப்ரல் 2013 - உயர்கல்வி அமைச்சரான கௌரவ. எஸ்.பி. திசாநாயக்க, சுற்றாடல் அமைச்சரான கௌரவ. அநுர பிரியதர்ஷன யாப்பா, மத்திய மாகாண முதலமைச்சரான கௌரவ சரத் ஏகநாயக்க மற்றும் உள் ஊராட்சிசபை தலைவர்கள் மசுஅ தலைவர், மசுஅ அதிகாரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட பிற நிறுவகங்களின் அதிகாரிகள் பங்கேற்ற கூட்டம்.

- 17 ஜுன் 2013 - மாவட்ட செயலாளர் - கண்டி, கண்டிமாவட்ட உள் ஊராட்சி சபைத்தலைவர்கள், மசுஅ பணிப்பாளர் நாயகம், மசுஅ அலுவலர்கள் பிற சம்பந்தப்பட்ட நிறுவக அதிகாரிகள் பங்கேற்ற கூட்டம் கண்டி மாவட்ட செயலக அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், ஒரு நாளுக்கு 76 தொன் கொள்ளளவுள்ள கழிவு நிலநிரப்பலை கட்டுவதற்கு இறுதியாக முடிவு செய்யப்பட்டது.

### 11.6.2.3 கீரிக்குலம இடம், அனுராதபுரம்

மேற்கூறிய நிலநிரப்பலானது, உரத்தயாரிப்பு நிலையத்தொகுதியுடன் கூடியதாக கீரிக்குளம இடம், நுவரகம்பலத, அனுராதபுர இல் பிலிசரு செயற்றிட்டத்தின் நிதி மற்றும் தொழினுட்ப உதவியோடு கட்டப்பட்டது. அனுராதபுர யுசி, கிழக்கு நுவரகம்பலத பிஎஸ், மத்திய நுவரகம்பலத பிஎஸ் ஆகியவற்றுக்கு சேவையளிக்கும் முகமாக இந்த நிலநிரப்பலானது முழுமையான பொறியியல் கழிவு நிலநிரம்பலாக மேம்படுத்தப்படும். உரத்தயாரிப்புக்குப்பின்னனான எஞ்சிய கழிவு இறுதி வெளியேற்றுகைக்காக இந்த நிலநிரம்பலுக்கு விடப்படும்.




உரு 2.3: கீரிக்குளமவின் உத்தேசிக்கப்பட்ட இடம்

#### 11.6.2.3.1 நில அனுமதி

மொத்த இட அளவானது 10 எச்.ஏ மற்றும் இந்நிலமானது நுவரகம்பலத்த கிழக்கு பிரதேச சபை இடத்தில் அமைந்துள்ளது. மேலதிகமாக 12 ஏக்கர் நிலத்தை பெறுவதற்கான ஏற்பாடுகள், அனுராதபுர, காணி அரசு ஆணையாளர் மற்றும் வடமத்திய மாகாண அரசின் அரசியல் தலைமைத்துவம் ஆகியோருடனான பேரம்பேசலூடாக நடைபெறுகிறது.

#### 11.6.2.3.2 கூட்டங்கள்

அநுராதபுர உள்நாட்டு அரசாங்கம் மற்றும் மாகாணசபை அலுவலகத்தில் ஒரு கூட்டம் நிகழ்ந்தது. உள் நாட்டு அரசாங்க ஆணையாளர், உள் ஊராட்சி சபைகளின் தலைவர்கள், மசு அ அதிகாரிகள், சம்பந்தப்பட்ட அரசாங்க அமைப்புகளின் அதிகாரிகள் பங்கேற்ற இக்கூட்டம், 13 செப்டெம்பர் 2013 அன்று நிகழ்ந்தது. உத்தேசிக்கப்பட்ட இடத்துடன் இணைப்பதற்கு 12 ஏக்கர் மேலதிக காணியை பெறுவதே இக்கூட்டத்தின் நோக்கம். இக்கூட்டத்தின் பின்வரும் கண்காணிப்புக்குழு உருவாக்கப்படவேண்டும் என தீர்மானிக்கப்பட்டது;

1. நகரபிதா, அனுராதபுர மாநகரசபை
2. தலைவர், கிழக்கு நுவெரகம்பலத்த பிரதேச சபை
3. உள் நாட்டு அரசாங்க ஆணையாளர்
4. சுகாதார மருத்துவ அலுவலர்

5. அனுராதபுர பிரதேச செயலாளர்
6. மசுஅ இன் வடமத்திய மாகாண அலுவலக உத்தியோகத்தர்
7. அநுராதபுர மாநகரசபையின் பொது சுகாதார உத்தியோகத்தர்
8. நுவரகம்பலத பிரதேச சபையின் பொது சுகாதார உத்தியோகத்தர்
9. கிராம சேவகர்

#### 11.6.2.3.3 சூழல் அனுமதி

6 ஜனவரி 2008 அன்றுமசுஅ இன் அனுராதபுர மாகாண அலுவலகத்திற்கு இந்த கழிவு நில நிரப்பல் மற்றும் உரத்தயாரிப்பு நிலையத்திற்கு சூழல் பரிந்துரை நாடி ஒரு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டது. அநுராதபுரவின் கீரிக்குளம பகுதியில் கழிவு நிலநிரப்பல் மற்றும் உரத்தயாரிப்பு கட்டுமானத்திற்கு மசுஅ ஆல் சூழல் பரிந்துரை வழங்கப்பட்டது.

2010 இல் பொது திறைசேரியின் நிதி உதவி கொண்டு பிலிசரு செயற்றிட்டத்தால் இச்செயற்றிட்டத்தின் முதலாம் பாகமான உரத்தயாரிப்பு நிலையம் கட்டி முடிக்கப்பட்டது.

2ம் பாகம்; கொரிய எக்சிம் வங்கியின் நிதி மற்றும் தொழினுட்ப உதவிமூலம், கழிவு நிலநிரம்பல் கட்டுமான நடவடிக்கைகள் நடத்தப்படும். செயற்றிட்டத்தின் மூலம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு ஏற்ப சூழல் அனுமதியானது இன்னுமொரு வருடத்திற்கு அதிகரிக்கப்படும்.

### 11.6.2.4 ஹிக்கடுவ ரஜ்கமவில், மொன்ரொவியாவத்தை இடம்

காலி மாவட்டத்தின் 18 ஊராட்சிகளில், 7 ஊராட்சிகளின் (காலி எம்சி, அம்பலாங்கொட யுசி, ஹிக்கடுவ யுசி, அம்பலாங்கொட பிஎஸ், பொபே - பொட்டல பிஎஸ், பலபிட்டிய பிஎஸ், ஹிக்கடுவ பிஎஸ்)கழிவுகள், மொன்ரொவியாவத்தை இடத்திற்கு இறுதி வெளியேற்றுகைக்காக கொண்டுவரப்படும்.

#### 11.6.2.4.1 நில அனுமதி

நில சொந்தக்காரரான நில மீளமைப்பு ஆணைக்குழு பிலிசரு செயற்றிட்டத்திற்கு 8 எச்.ஏ இடத்தை, ஏ.டி.சி.எ.ஃப் செயற்றிட்டத்தின் கீழ், காலி மாவட்டத்தின் பல ஊராட்சிகளுக்கு சேவையளைக்கும் வண்ணம், உரத்தயாரிப்பு நிலையம் மற்றும் கழிவு நிலநிரம்பலுக்காக வழங்கியது. மேலதிக 5 எச்.ஏ நிலத்தை பெறுவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. எல்.ஆர்.சி உடன் பேரம்பேசல்கள் நடைபெறுகின்றன.




உரு 2.4: மொன்ரொவியவத்தை, ரஜ்கமயில் உள்ள உத்தேசிக்கப்பட்ட இடம்

#### 11.6.2.4.2 சூழல் அனுமதி

மொன்ரோவியவத்தை, ரஜ்கம இல் கழிவு நிலநிரப்பல் கட்டுமானத்திற்கு சூழல் பரிந்துரையானது 31 ஜனவரி 2013 அன்று வழங்கப்பட்டது.

### 11.6.3. விரிவான வடிவமைப்பிற்கான ஆலோசனை சேவை மற்றும் கடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல்

#### 11.6.3.1 4 கழிவு நில நிரம்பல்களின் விரிவான வடிவமைப்பிற்கான ஆலோசனை சேவை

2012 ல் கழிவு நிலநிரம்பலுக்கான விரிவான வடிவமைப்பிற்கான ஆலோசனை சேவைக்கான ஆர்வ வெளிப்பாட்டுக்கான அழைப்பு விடுக்கப்பட்டது. அதற்கு பதிலளித்த 7 கொரியன் ஆலோசனை நிறுவனங்களில் 3 நிறுவனங்கள் குறும்பட்டியலிடப்பட்டு, அதற்கேற்ப, எக்சிம் வங்கியால் அந்த குறும்பட்டியலிடப்பட்ட நிறுவகங்கள் அனுமதிக்கப்பட்டன. பொது திறைசேரியின் வெளி வளங்கள் திணைக்களத்தின் ஆலோசனையுடன் கபினட் நியமித்த ஆலோசனையாளர்கள் கொள்முதல் குழுவால் கொள்முதல் முன்மொழிவு கோரிக்கை இறுதியாக்கப்பட்டது. சி.பி.சிசி இன் தலைவரின் பரிந்துரையின்படி பொதுதிறை சேரியின் பொதுமக்கள் நிதிய திணைக்களத்தால் தொழினுட்ப மதிப்பீட்டு குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இது ஆர்.எ.ஃப்.பியின் மதிப்பீட்டு பிரமாணத்தை மேம்படுத்துவதற்கும், ஆலோசனை நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்படும் தொழினுட்ப, நிதி முன்மொழிவுகளின் மதிப்பீட்டை நடத்தவும் சிபிசிசிக்கு உதவி செய்யும்.

இறுதி ஆர்.எ.ஃப்.பி ஆவணத்திற்கான கொரிய எக்சிம் வங்கியின் சம்மதத்துடன், ஆர்.எ.ஃப்.பி ஆனது, குறும்பட்டியற்படுத்தப்பட்ட 3 நிறுவனங்களில் இருந்து கோரப்பட்டது. பிடர்கள் அவர்கள் தம் முன்மொழிவுகளை சமர்ப்பிக்க வேண்டிய கடைசிநாள் 18 செப்டெம்பர் 2013 ஆகும்.

3 கொரியன் ஆலோசனை நிறுவனங்களில் 2 நிறுவனங்கள் ஆர்.எ.ஃப்.பிக்கு பதிலளித்தன மற்றும் எக்சிம் வங்கியின் உடன்பாட்டுடன் சிபிசிசி ஆனது மதிப்பீட்டு செயன்முறையை 4 ஒக்டோபர் 2013 அன்று ஆரம்பித்தது மற்றும் 18 நவெம்பர் 2013 அன்று நிறைவு செய்தது. மொத்தமாக 4 டி.ஈ.சி கூட்டங்கள் மற்றும் 4 சிபிசிசி கூட்டங்கள் ஆ.எ.ஃப்.பி இன் மதிப்பீட்டுக்காக நடத்தப்ப்ட்டன.

தேரப்பட்ட பிடருக்கான எக்சிம் வங்கியின் அனுமதி நிதி முன்மொழிவு திறக்கப்பட முன் பெறப்பட்டது. எக்சிம் வங்கியின் உடன்பாட்டுடன், சிபிசிசிச் ஆனது, டி.இ.சி இன் உதவியுடன் நிதி முன்மொழிவை மதிப்பிட ஆரம்பித்தது. அத்துடன் அது பேரம்பேசலுக்காக (தொழினுட்ப மற்றும் நிதியியல்) அறிக்கையின் இறுதிப்படுத்தல் செயன்முறையை செய்கிறது.

2013இன் இறுதியில் நிதி பேரம்பேசல் செயன்முறைக்காலத்தில் டி.இ.சி இன் 4 கூட்டங்கள், சிபிசிசி இன் 3 கூட்டங்கள் நடந்தன.

#### 11.6.3.2 கடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல்

திண்ம கழிவு வெளியேற்றுகை வசதிச் செயற்றிட்டத்தின் கட்டுமானத்திற்கான அமுல்படுத்தலுக்காக கொரியன் வொன்னில் உள்ளதும் முப்பத்து மூன்று மில்லியன் ஐந்நூற்று முப்பத்தாறு ஆயிரம் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் (ருளு கூ 33,536,000) கடனுக்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல், 23 ஜூலை 2013 அன்ரு நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சில் நடைபெற்றது. ஈடிசிஎ.ஃப் இன் உயர் பணிப்பாளரான திரு செயோங் - ஹ்யொக் யிம் மற்றும் கலாநிதி பி.பி. ஜயசுந்தர, செயலாளர், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு அவர்களும், முறையே கொரிய ஏற்றுமதி இறக்குமதி வங்கி மற்றும் இலங்கை அரசாங்கம் ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். கொரியாவின் எக்சிம் வங்கியானது, 19 நவம்பர் 2013 அன்றிலிருந்து கடன் ஒப்பந்தம் அமுலுக்கு வரும் என அறிவுறுத்தியது.




உரு 3.1: கொரியா எக்சிம் வங்கியின் உயர் பணிப்பாளர் திரு செயோங் - ஹ்யொக் யிம அவர்களும் திறைசேரியின் செயலாளர் கலாநிதி பி.பி. ஜயசுந்தர அவர்களும் ஈடிசிஎ.ஃப் கடன் ஒப்பந்ததில் கைச்சாத்திருகின்றனர்.

### 11.6.4 நிதியியல் முன்னேற்றம் - 2013ம் ஆண்டு

சுருக்கம்

| | ஒதுக்கீடு /Rs | பெறப்பட்டது/Rs | செலவினம்/Rs |
|---|---|---|---|
| வெளிநாட்டு உபகரணம் | 80,000,000 | 0 | 0 |
| உள்நாடு (வெளிநாட்டு உபகரணம்) | 25,000,000 | 0 | 0 |
| உள்நாட்டு உபகரணம் | 40,000,000 | 14,100,000 | 14,089,193.54 |
| **மொத்தம்** | **145,000,000** | **14,100,000** | **14,089,193.54** |

<u>செலவுகளின் தகவல்கள்</u>

| செலவுகள் | செலவுகள் | ஒதுக்கீடு/ 2013 |
|---|---|---|
| 2.01 வரி | | **25,000,000.00** |
| 3.01 போக்குவரத்து (வாடகை மற்றும் சம்பந்தப்பட்டது) | 1,388,731.00 | 3,600,000 |
| 3.02 அலுவலக உபகரணம் | 1,865,654.04 | 6,000,000 |
| 3.03 அலுவலக வழங்கல்கள் | 266,952.44 | 1,000,000 |

| | | |
|---|---|---|
| 3.04 செயற்றிட்ட ஊழியர் சம்பளம் | | |
| 3.04ஏ ஓவர்டைம், போக்குவரத்து, விசே.கொடுப்பனவு | | |
| 3.04ஏஏ மொத்த சம்பளம் | | |
| 3.04 பி பி.ஏ.வை.இ வரி | | |
| 3.04 சி - ஈபிஎ.ஃ.ப் | | |
| 3.04டி - ஈடிஎ.ஃ.ப் | | |
| மொத்த 3.04 - செயற்றிட்ட ஊழியர் சம்பளம் | 7,989,744.38 | |
| 3.05 - தொடர்பாடல், தபால் | 207,873.67 | 100,000 |
| 3.06 - பயிற்சி, கொள்ளளவு வளர்த்தல் | 75,270.00 | 2,900,000 |
| 3.07 வாடகை, குத்தகை | 1,471,262.24 | 6,000,000 |
| 3.08 செயற்றிட்ட ஒருங்கிணைப்பு, முகாமைத்துவம் | 364,909.95 | 2,000,000 |
| 3.09 நிச்சயமின்மை, இதரசெலவு | 458,795.82 | 8,400,000 |
| **மொத்த செலவு** | **14,089,193.54** | |

## 11.7 சூழல் பாதுகாப்பு மற்றும் காப்பு செயற்றிட்டம்

சூழல் பாதுகாப்பு பிரதேசங்களுக்கான முகாமைத்திட்டங்களை தயாரித்தல், அவற்றின் முக்கிய நடவடிக்கைகளான எல்லை அடையாளப்படுத்தல், குறியீடு எழுப்பல், மக்களுக்கானதும் பிற பங்காளர்களுக்கானதுமான விழிப்புணர்வு போன்றவற்றிற்காக இது விசேட செயற்றிட்டமாக உருவாக்கப்பட்டது.

### 11.7.1 முகாமைத்துவ திட்டங்களின் தயாரிப்பு

மேல்மாகாணத்தின் பொல்கொட ஏரி, கண்டி மாவட்டத்தின் ஹந்தான மலை, மொனராகலை மாவட்டத்தின் மரகல மலை எனும் மூன்று சூழல் பாதுகாப்பு பிரதேசங்களுக்காக மூன்று முகாமைத்துவ திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தின் தொழினுட்ப உதவியுடன் பொல்கொட ஏரியின் ஈபிஏ முகாமைத்துவ திட்டமானது தயாரிக்கப்பட்டது. ஐயுசிஎன் இன் தொழினுட்ப உதவியுடன் மரகல மலைக்கான ஈபிஏ முகாமைத்துவ திட்டமானது தயாரிக்கப்பட்டது. என்பிஆர்ஓ மற்றும் ஐயுசிஎன் ஆகியவற்றின் தொழினுட்ப உதவியுடன் ஹந்தான மலையின் ஈபிஏ முகாமைத்துவ திட்டமானது தயாரிக்கப்பட்டது.அனுமதிக்கப்பட்ட நடவடிக்கைகள், நியப்பயன்பாட்டு மற்றும் பிராந்திய திட்டங்கள்,ஈபிஏ இனுள் உள்ள பிரதேசங்கள் மற்றும் உணர்வுமிக்க சூழற்

தொகுதிகளுக்கான பரிந்துரைகள் ஆகியவற்றை அமுல்படுத்துவதற்காக, இந்த முகாமைத்திட்டங்கள் வழிகாட்டற் கோடுகளை உள்ளடக்கியுள்ளன.

### 11.7.2 சூழல் காப்பு பிரதேசங்களில் (ஈபிஏ) எல்லை அடையாளப்படுத்தல்

தலங்கம சூழல் காப்பு பிரதேசத்தின் எல்லையோடு 100 எல்லைக்கம்பங்கள் நடப்பட்டன. மொனராகலை மாவட்ட செயலாளரால் தலைமை தாங்கப்படும் மரகல முகாமைக்குழுவால் அடையாளம் காணப்பட்ட எல்லை மீளாய்வுக்கான மரகல ஈபிஏ இல் எல்லை அளவீடு ஆரம்பிக்கப்பட்டது.



### 11.7.3 குறியீட்டுப்பலகைகள்

15 குறியீட்டு பலகைகள் பொல்கொட ஈபிஏ எல்லையோடு எழுப்பப்பட்டன

# 12.0 கூட்டாண்மை ஆட்சி அறிக்கை

மத்திய சுற்றாடல் அதிகார சபையானது 1981 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் மூலம் 1981 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டதுடன் அதன் ஒழுங்கமைப்பு சேவைகளின் செலவினங்களை ஈடுசெய்யும் முகமாக திறைசேரியால் வருடாந்த மானியமாக வழங்கப்படும் மீண்டெழும் (சம்பளங்கள்) மற்றும் மூலதன செலவினங்களை பெறுகின்றது.

2013.12.31 இல் உள்ளவாறு ம.சு.அ யின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி947 ஆகவும், காணப்படும் பணியாட்களின் தொகை 715 ஆகவும் இருந்தது.

## 12.1 சபை உறுப்பினர்கள்

இச்சபையானது அதிமேதகு சனாதிபதியால் நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்களை கொண்டுள்ளது. ம.சு.அ யினுடைய சபை கூட்டங்கள் உயர் தீர்மானங்களை மேற்கொள்ளும் பொறிமுறையை உருவாக்குகின்றன. அதிகார சபையின் அலுவல்கள் மற்றும் செயலாற்றுகைக்கான இறுதி பொறுப்பை சபை ஏற்கின்றதால், அவற்றின் செயற்பாடுகளை சபை உறுப்பினர்கள் மிகவும் உண்ணிப்பாக கண்காணிக்கின்றனர்.

இச் சபையானது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடுவதுடன் அதனைத் தொடர்ந்து மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் சுற்றாடல் முகாமைத்துவம் தொடர்பான மிக முக்கியமான பிரச்சினைகளுக்கு வழிகாட்டியும் பணிப்புரை வழங்கியும் 12 கூட்டங்களை நடாத்தியுள்ளதுடன் சிரேஷ்ட முகாமையாளர்கள் மத்தியில் பொறுப்புக்களை பகிர்ந்து கொண்டு பயனுறுதியான வலுப்பிரிவினை மற்றும் சமநிலைக் கட்டுப்பாட்டை தாபித்து ம.சு.அ யின் ஒட்டு மொத்த முகாமைத்துவத்திற்கும் பொறுப்பை ஏற்றது.

## 12.2 கணக்காய்வுக் குழு கூட்டங்கள்

கணக்காய்வுக் குழுவானது 1999.11.19 ஆம் திகதிய PF/PE 03 ஆம் இலக்க அரசாங்க நிதிசார் சுற்றறிக்கை, 2000.10.30 ஆம் திகதிய PF/PE 10 ஆம் இலக்க அரசாங்க நிதிசார் சுற்றறிக்கை மற்றும் 2003 யூன் மாதத்தின் நல்லாட்சிக்கான அரசாங்க பொது முயற்சிகள் பற்றிய வழிகாட்டிகள் ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கு அமைய அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டி முறைகள் ஆகியவற்றுக்கு இணங்க, கணக்காய்வு குழுவானது உள்ளக கணக்காய்வு பிரிவின் பரப்பு எல்லையை தீர்மானிக்கவும், உள்ளக கணக்காய்வு அறிக்கைகளை பரிசீலனை செய்யவும் உள்ளக கட்டுப்பாட்டு முறையின் ஏற்ற அளவையும் பயனுறுதித்தன்மையையும் பரிசீலனைக்கு உட்படுத்தவும், நியதிச் சட்ட கணக்குகளை மீளாய்வு செய்யவும், நிதிசார் கூற்றுக்களை வெளியிடவும் செயலாற்றுகையில் ஒழுங்கான கால இடைவெளியில் மீளாய்வு செய்யவும் அதிகாரத்தை கொண்டுள்ளது.

திறைசேரியின் பிரதிநிதியாகவுள்ள நிதித் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளரின் தலைமையில் இயங்கும் இக் குழுவானது பணிப்பாளர் நாயகம், பிரதி பணிப்பாளர் நாயகம் (ம.வ.அ நீர்வாகம், நிதி) பணிப்பாளர் (நிதி) பணிப்பாளர் (நிர்வாகம்) பணிப்பாளர் (திட்டமிடல் கண்காணிப்பு) மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் கணக்காய்வு அதிகாரியின் பங்குபற்றலுடன் ஏனைய கருத்திட்ட பணிப்பாளர்கள் மற்றும் சுற்றாடல் அமைச்சின் பிரதம உள்ளக கணக்காய்வாளர் ஆகியோரையும் உள்ளடக்குகின்றது.

கணக்காய்வு குழுவானது ஒழுங்கான முறையில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடியது. உள்ளக கணக்காய்வாளர், செயலாளராகவும் குழுவை கூட்டி கண்டுபிடிப்புக்களின் அறிக்கைகளை சமர்ப்பிப்பவராகவும் செயற்படுகின்றார். கணக்காய்வு குழுவின் அவதானிப்புக்கள் மற்றும் தீர்மானங்கள் அவசியமான நடவடிக்கைகளுக்காக பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.

2012 ஆம் நிதியாண்டில் நான்கு கணக்காய்வு குழுக் கூட்டங்கள் இடம்பெற்றன.

குழுவானது

- கணக்காய்வு மீளாய்வு மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை.
- நிதிசார் மற்றும் இயக்க தகவல்களை பரிசீலனை செய்தல்.
- பொருளாதாரம், வினைத்திறன், மற்றும் தாபனத்தின் நிதிசாரா கட்டுபாடு உட்பட இயக்க பயனுறுதித்தன்மை ஆகியவற்றின் மீளாய்வு.
- சட்டங்கள், ஒழுங்குவிதிகள், மற்றும் ஏனைய உள்ளகத் தேவைகள் ஆகியவற்றுடன் இயக்க இணக்கப்பாட்டை மீளாய்வு செய்தல்.
- முகாமைத்துவத்தினால் கோரப்படும் ஏதும் விடயம் சம்பந்தமாக தற்காலிக விசாரணைகளை நடாத்தல்.

ஆகியவற்றுக்கு பொறுப்பாகவுள்ளது.

## 12.3 ம.சு.அ இன் செயலாற்றுகை கண்காணிப்பும் மதீப்பீடும்.

கூட்டிணைத் திட்டத்தின் அடிப்படையில் வரவு செலவுத் திட்டத்துடன் தயாரித்த, வருடாந்த செயற்திட்டமானது அவற்றின் குறிக்கோள்கள், இலக்குகள் ஆகியவற்றின் நம்பகத்தன்மை மற்றும் உச்ச இயலுமையை எய்த முடியுமா என்பதை உறுதி செய்யவும் நடைமுறையாக்கல் தொடர்பாக அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளும் வகையில் மதிப்பீட்டிற்கு உட்படுத்துவதற்காகவும் சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டன. சபையின் அங்கீகாரத்தை பெற்றதை தொடர்ந்து உண்மையான் செயலாற்றுகை திட்டத்துடன் இணங்குகின்றதா என்பதை உறுதிசெய்யவும், தேவைப்படும் பட்சத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான ஆலோசனை பெற்றுக்கொள்வதை உறுதி செய்துகொள்வதற்காகவும் செயற்றிட்டத்தின் பிரிவுவாரியான முன்னேற்றங்கள் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டன. இவ்வாறே, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட சாதனங்களின் விபரங்கள் மற்றும் பதவியணி தரங்கள் உட்பட்ட மனித வளங்கள் பற்றிய கூற்று, புதிய ஆட்சேர்ப்புக்கள் உட்பட்ட மாதாந்த காலாண்டு மற்றும் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள் ஒழுங்கான நேர இடைவெளியில் சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன. இச்செயற்பாட்டின் மூலம் சிரேஷ்ட முகாமையாளர்கள் அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட பணிக்கான பொறுப்பை ஏற்கச் செய்வதுடன் வெளிப்படைத் தன்மையும் உறுதிசெய்யப்படுகின்றது.

மா.சு.அ.இன் ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கான ஒழுங்கான முறைமை ஒன்றை ஏற்படுத்தும் முகமாக சுற்றாடல் அமைச்சின் கௌரவ அமைச்சரின் தலைமையில், அமைச்சின் கீழான ஏனைய முகவர்களின் பங்கேற்புடன் செயலாற்றுகையினை உறுதி செய்து, முக்கிய விடயங்கள் தொடர்பான சிக்கல்கள் மற்றும் பிரச்சினைகளை கலந்துரையாடி, அதிகார சபையால் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தி செயற்பாடுகளை மீளாய்வு செய்யும் முகமாக தனித்தனியான முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் ஒவ்வொரு மாதமும் ஒழுங்கு செய்யப்பட்டன.

இலக்குகள் சார்பான உண்மையான செயலாற்றுகை, விலகியிருப்பின் அதற்கான காரணங்களை இனங்காணல், மூலதன செலவினங்களின் முன்னேற்றம் மற்றும் கொள்வனவு தாமதங்கள், நிர்வாகம் மற்றும் தாபனம் தொடர்பான அனைத்து விடயங்களை கலந்தாலோசித்தல் ஆகியவற்றை மீளாய்வு செய்வதற்காக ம.சு.அ. முகாமைத்துவ குழுக் கூட்டம் மாதாந்தம் இடம்பெற்றது. இக்குழுக் கூட்டம், ம.சு.அ. தலைவரின் தலைமையில் சிரேஷ்ட முகாமைத்துவ அலுவலர்களுடன் இடம்பெற்றது.

## 12.4 செயலாற்றுகை மதிப்பீடு

அனைத்து பணியாட்களினதும் செயலாற்றுகையை மதிப்பீடு செய்வதற்கு ம.சு.அ. பயன்படுத்தும் செயலாற்றுகை மதிப்பீட்டு முறைமையானது ஒவ்வொரு பணியாளரின் வருடாந்த சம்பள அதிகரிப்பை உரிய திகதியில் வழங்குவதற்கான அங்கீகாரத்தை வழங்கும் நோக்கத்தை முக்கியமாக கொண்டுள்ளது. தனித்தனியா பிரிவுகளுக்கு பொறுப்பாக இருக்கும் பணிப்பாளர்கள் வருடாந்த சம்பள அதிகரிப்பை அங்கீகரிப்பதற்கு அவசியமான அறிவு, திறன்கள், அணுகுமுறை, இலக்கு, சாதனைகள், துல்லியம், மக்கள் தொடர்பு, நேர்மை, வருவு, எடுக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கை மற்றும் ஏனைய விடயங்களை உள்ளடக்கிய விபரமான அறிக்கை ஒன்றை தயாரிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

செயலாற்றுகை மதிப்பீட்டு முறைமையை பிரயோகிக்கும் முக்கிய நோக்கமானது யாதெனில் நிறுவனத்தின் வினைத்திறன் மற்றும் பயனுறுதியை நிறுவனத்தின் மனித வள அபிவிருத்தியுடன் மேம்படுத்துவதற்கே ஆகும்.

## 12.5 கூட்டிணை திட்டம்

கூட்டிணை திட்டமானது அதிகாரசபையின் எதிர்கால செயற்பாடு தொடர்பான மூலோபாயங்களை கூட்டிணைக்கின்றது. மேலும், இந்த கூட்டிணை திட்டமானது நிறுவனத்தின் எதிர்கால வாய்ப்புக்களை எய்தவுள்ள சபை பணிப்பாளர்கள் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவம் ஆகியவற்றின் அர்ப்பணிப்பின் பிரதிபளிப்பாகும். மேலும், கூட்டிணை திட்டமொன்றாது, தூர நோக்கு, செயற்பணிக்கூற்று மற்றும் அதிகாரசபையின் நோக்கங்கள், தற்போது கிடைக்கக்கூடியதாகவுள்ள வளங்கள், தாபனக்கட்டமைப்பு, தாபனத்தின் பலம், பலவீனங்கள் வெளி அச்சுறுத்தல் மற்றும் சந்தர்ப்பங்கள், (SWOT), முன்னைய மூன்று வருடங்களின் செயற்பாட்டு விளைவுகளின் மீளாய்வு, மீளாய்வுக்குட்பட்ட வருடத்தின் மூலோபாய திட்டங்கள் என்பவற்றை கூறுகின்றது.

உண்மையான வருமானங்கள் ,மீண்டெழும் மற்றும் மூலதன செலவினங்களின் வெளிப்படுத்தல் ஆகியவற்றையும் அவற்றின் செயற்பாடுகள் மீது செல்வாக்கை செலுத்தும் வெளியக மற்றும் உள்ளக காரணிகள் பற்றிய கரிசனைகள் ஆகியவற்றையும் வரவு செலவு திட்டம் உள்ளடக்குகின்றது. படிவம் மற்றும் உள்ளடக்கமானது வருடாந்த கணக்குகளை சமர்ப்பிக்க பயன்படுத்தும் வடிவமைப்புடன் ஒருங்கிணைகின்றன.

அதற்கிணங்க 2013 ஆண்டில் நிறுவனத்தின் கூட்டிணை திட்டமானது 2012-2016 காலத்திற்காக தயாரிக்கப்பட்டுள்ளதுடன் தே.சு.அ. ஆல் வழங்கப்பட்ட ஆணையின் அதிகமான பரப்புக்களை பயனுறுதியாகவும் வினைத்திறனுடன் உள்ளடக்கும் வகையில் ம.சு.அ.யை இட்டுச் செல்வதற்காக வருடாந்த இற்றைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுகின்றது. இத்திட்டமானது ஏனைய திட்டங்களுடன் நிலைமை பகுப்பாய்வு, செயற்பாடுகள் மற்றும் வருடாந்த செயற்றிட்டங்களுக்கான மூலோபாயங்கள், மனித மற்றும் நிதிசார் வளங்கள் ஆகியவற்றை கூட்டிணைக்கின்றது.

2013 ஆண்டில், வருடாந்த செயற்றிட்டங்கள் விலகல்களை பரிசீலனைக்கு எடுத்து கூட்டிணைத்திட்டத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டதுடன், ம.சு.அ.யின் சபையால் நடைமுறையாக்கலுக்காக அங்கீகரிக்கப்பட்டது.

## 12.6 ஆண்டறிக்கை

ம.சு.அ.இன் ஆண்டறிக்கையானது அதிகாரசபையின் செயற்பாடுகள் மற்றும் நிதிசார் நிலைப்புத் தன்மை ஆகியவற்றுக்கு பயனுள்ள முடிவுகளை பங்களிப்பு செய்யும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆண்டறிக்கையின் வரைவு மற்றும் கணக்குகள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து, 30 நாட்களுக்குள், கணக்குகள் பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்படும். இறுதி அறிக்கையானது, கணக்காய்வாய்க்குட்பட்ட கணக்குகள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை உட்பட் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள், மூன்று மொழிகளிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# 13.0 மனிதவள அபிவிருத்தி, நிர்வாகம் மற்றும் நிதிப்பிரிவு

## 13.1 மனிதவளங்கள் அபிவிருத்திப் பிரிவு (ம.அ.பி)

ம.அ.பி.வின் முக்கிய பணிகளில் ஒன்றானது பயிற்சி மற்றும் அபிவிருத்தியாகும். அதற்கு புறம்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் கையாள்வதும் இப்பிரிவின் கீழ் வரும் ஒரு பணியாகும்.

2013 ஆண்டில் பின்வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புகள் பணியாட்களுக்கு வழங்கப்பட்டன.

1. **உள்ளூர் பயிற்சி**

- சிரேஷ்ட முகாமையாளர்கள், மத்திமதர முகாமையாளர்கள், சி.நி.உ (SEO), பி.நி.உ (DEO) முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் நூலக,சட்ட மற்றும் உள்ளக கணக்காய்வு பிரிவு பணியாளர்கள் உள்ளடங்களாக ம.சு.அ யின் பணியாளர்களுக்கு 2013 ஆம் ஆண்டில் 53 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஒருங்கமைத்து அனுசரணையும் வழங்கப்பட்டது.
- அவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் பின்வரும் குழுப் பயிற்சிகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகள் 2013 ஆம் ஆண்டில் ஏற்பாடு செய்யப்பட்டன.

| பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின்.'. பயிற்சிப் பட்டறையின் பெயர் | பங்குபெற்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1. புதிதாய் பணிக்கமர்த்திய முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் அலுவலக முகாமை முறைமை மீதான ஒரு நாள் பட்டறை | 06 |
| 2. சிஎஸ்.இ, இந்தியாவுடன் இணைந்து, மசுஅ அலுவலர்களுக்கான கழிவு நீர் பரிகரிப்பு தொழினுட்பம் மீதான 4 நாள் பயிற்சி நிகழ்ச்சி | 50 |
| 3. ஈஐஏ உடன் தொடர்புடைய உயிர்ப்பல்வகைமை மற்றும் சூழல் பொருளாதாரத்தின் அம்சங்கள் மீதான பயிற்சி கற்கைநெறி - மசுஅ இன் ஈஐஏ பிரிவுடன் இணைந்தது | 42 |
| 4. பாதுகாப்பான விஞ்ஞானபூர்வமான மற்றும் பொருளாதார வாகனமோட்டல் மீதான பட்டறை | 09 |
| 5. புதிதாய் சேர்ந்த சூழல் அலுவலர்களுக்கான வதிவிட 4 நாள் பயிற்சி நிகழ்ச்சி | 58 |
| 6. தென் மாகாண அலுவலர்களுக்கான ஆங்கில கற்கைநெறி | 22 |
| 7. சூழல் சட்டம் மீதான கருத்தரங்கு | 08 |
| 8. மசுஅ இன் சிரேஷ்ட முகாமை ஊழியர்கட்கான 2 நாள் பட்டறை | 25 |
| 9.சிஎஸ்.இ, இந்தியாவுடன் இணைந்து, மசுஅ அலுவலர்களுக்கான "நகர தொழிற்றுறை கழிவுநீர் பரிகரிப்பு தொழினுட்பம்"மீதான 4 நாள் பயிற்சி நிகழ்ச்சி | 60 |
| 10. மசுஅ இன் ஈஐஏ அலகு உடனிணைந்த, திண்ம கழிவு முகாமை மற்றும் நீரியல் தாக்க மதிப்பீடு மீதான பயிற்சி நெறி | 43 |
| 11. மசுஅ இன் ஈஐஏ, ஐடி அலகுகளின் இணைவுடன்,ஈஐஏ தகவல் முறைமை மீதான 1 நாள் பட்டறை | 70 |
| 12. மசுஅ இன் ஐடி அலகின் இணைவுடன் முறைப்பாட்டு முகாமை முறைமை மீதான பயிற்சி நெறி (ஈஐஏ அலகின் நிதியளிப்பு) | 45 |

மேற்படி குழுப் பயிற்சி மற்றும் தனிநபர் பயிற்சி என்பன திறைசேரியின் நிதியுதவியின் கீழ் வழங்கப்பட்டன.

2. வெளிநாட்டு பயிற்சி

சுற்றாடல் முகாமைத்துவம், சுற்றாடல் மாசுக் கட்டுப்பாடு, அபாயகர கழிவு முகாமைத்துவம், திண்மக் கழிவு முகாமைத்துவம், வளித் தரம் கண்காணிப்பு, சுற்றுச்சூழல் நீர் தரம் கண்காணிப்பு, புவியியல் தகவல் முறைமை மற்றும் காலநிலை மாற்றம் ஆகிய துறைகளில் விஷேட பயிற்சிக்காக 104 உத்தியோகத்தர்களுக்கு வாய்ப்புக்கள் வழங்கி குறகிய கால வெளிநாட்டு பயிற்சிக்காக 77 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

2013 ஆம் ஆண்டில், ம.வ.சு பிரிவால் **15**பூர்வாங்க விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

## 13.2 மனிதவளங்கள் முகாமைத்துவ பிரிவு

*01.01.2013 அன்று மசுஅ இன் மொத்த ஊழியரின் எண்ணிக்கை 803.*

*19.07.2013 அன்று முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் செல்லுபடியாகும் அனுமதியுடன் சுற்றாடல் அமலாக்கல் அலுவலர் "உதவி சட்ட அலுவலர்" எனவும், உதவி சட்ட அலுவலர் "சட்ட அலுவலர்" எனவும் சேலையாளர் "அலுவலக உதவியாளர்" எனவும் பதவிகள் திருத்தப்பட்டன.*

*2013ல், பின்வரும் புதிய பதவிகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியுடன் ஆக்கப்பட்டன.*

| பதவிகள் | இல. |
|---|---|
| வாகனச்சாரதி | 03 |
| சுற்றாடல் அலுவலர் | 131 |
| முகாமையாளர் | 01 |
| தொழினுட்ப அலுவலர் | 03 |
| நிர்வாக அலுவலர் | 01 |
| முகாமைத்துவ உதவியாளர் | 01 |
| இலத்திரனியல் இயந்திரவியல் உதவியாளர் | 01 |
| இயந்திர செயற்படுத்துநர் | 01 |
| பம்ப் செயற்படுத்துநர் | 01 |
| வாகனச்சாரதி | 01 |

அதற்கேற்ப, 31.12.2013 அன்று அனுமதிக்கப்பட்ட பதவிகள் மசுஅ இல், 947 ஆகவும் அவற்றில் ஏற்கனவேயிருந்தவை 715 ஆகவும் இருந்தன.

28.02.2013 அன்று மசுஅ இன் பணிப்பாளர் நாயகமான திருமதி ரமணி எல்லேபொல இராஜினாமா செய்தார்.

13.03.2013 அன்று மருத்துவர் சாரங்க அழகப்பெரும மசுஅ இன் பணிப்பாளர் நாயகமாக பதவி ஏற்றார்.

பணிக்கமர்த்தல், பதவியுயர்வு, இராஜினாமா, பதவியின் தொழில், ஓய்வுபெறல் 2013 – மசுஅ

| | பதவி | 2013 | | | |
|---|---|---|---|---|---|
| | | பணிக்கமர். | பதவியுயர்வு | **Resig/VOP/Tr.** | ஓய்வுபெறல் |
| 1 | சிரேஷ்ட முகாமையாளர் | | | | |
| | பணிப்பாளர் | | 1 | | |
| 2 | நடு முகாமையாளர் | | | | |
| | பிரதிப்பணிப்பாளர் | | 4 | | |
| | உதவிப்பணிப்பாளர் | 1 | | 1 | |
| 3 | கனிஷ்டமுகாமையாளர் | | | | |
| | தொழினுட்ப அலுவலர் | 2 | | | |
| | இரசாயனவியலாளர் | | | 2 | |
| 4 | அமலாக்கல், விரிவாக்க, நடவடி. | | | | |
| | சிரேஷ்ட சூழல் அலுவலர் | | 8 | 5 | |
| | மாவட். சூழல் அலுவல், சூழல் அலுவலர் | 63 | | 19 | |
| 5 | முகாமைத்துவ உதவியாளர் (தொழின்) | | | | |
| | ஆய்வுகூட உதவியாளர் | | | 1 | |
| 6 | முகாமைத்துவ உதவியாளர் (தொழின். இல்லை) | 4 | 2 | 2 | 2 |
| 7 | முதனிலை (திறன்) | | | | |
| | வாகனச்சாரதி | 5 | | | |
| 8 | முதனிலை (திறன்குறை) | | | | |
| | இயந்திர செயற்படுத்துநர் | 1 | | | |

| | பதவி | 2013 | | | |
|---|---|---|---|---|---|
| | | பணிக்கமர். | பதவியுயர்வு | **Resig/VOP/Tr.** | ஓய்வுபெறல் |
| | பம்ப் செயற்படுத்துநர் | 1 | | | |
| 9 | முதனிலை (திறனற்ற) | | | | |
| | அலுவலக உதவியாளர் | 5 | 0 | 1 | |
| | | **82** | **15** | **31** | **2** |

## பணிக்கமர்த்தல், பதவியுயர்வு, இராஜினாமா மற்றும் பதவிவிலக்கல் - 2013 - “பிலிசரு” தேசிய திண்மக்கழிவு முகாமை நிகழ்ச்சி

| | பதவி | 2013 | | |
|---|---|---|---|---|
| | | பணிக்கமர். | **Resig /Tr.** | ஓய்வுபெறல் |
| 1. | செயற்றிட்ட பணிப்பாளர் | | 1 | |
| 2. | எழுதுவினைஞர் | 03 | | |
| 3. | அலுவலக உதவியாளர் | 01 | | |
| | ஊழியர்களின் ஒப்பந்தக்காலம் நீடிக்கப்படாததால் அனைத்து ஊழியர்களும் விலக்கப்பட்டனர். | | 26 * | |
| | | **04** | **27** | |

## தேசிய நுகர்விற்குப்பின்னான பிளாஸ்டிக் கழிவு முகாமை செயற்றிட்டம்

| | பதவி | 2013 | | |
|---|---|---|---|---|
| | | பணிக்கமர். | **Resig /Tr.** | ஓய்வுபெறல் |
| 1. | செயற்றிட்ட செயலாளர் | 01 | | |
| 2. | செயற்றிட்ட உதவியாளர் | 01 | 01 | |
| 3. | அலுவலக உதவியாளர் | 01 | | |

| | பதவி | 2013 | | |
|---|---|---|---|---|
| | | 03 | 01 | |

## திண்ம கழிவு வெளியேற்றுகை வசதி செயற்றிட்டம்

| | பதவி | 2013 | | |
|---|---|---|---|---|
| | | பணிக்கமர். | Resig /Tr. | ஓய்வுபெறல் |
| 1. | கொள்முதல் அலுவலர் | | 01 | |
| 2. | பொது எழுதுவினைஞர் | 01 | 01 | |
| 3. | அலுவலக உதவியாளர் | 01 | | |
| | | 02 | 02 | |

## 13.3 நிதிப் பிரிவு

**2012.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான நிதிசார் கூற்றுக்களின் குறிப்பு**

**கணக்கீட்டுக் கொள்கைகள்**

1.கூட்டாண்மை தகவல்

நிலையக் மற்றும் சட்டவடிவம்

மத்திய சுற்றாடல் அதிகார சபையானது ஓர் நியதிச்சட்ட அமைப்பாகும். அதன் தலைமையகம் இல 104,"பரிசரபியச" டெண்சில் கொப்கேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல, இலங்கை யில் அமைந்துள்ளது.

1.2 **பிரதான செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளின் இயல்பு**

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பிரதான நடவடிக்கைகள் யாதெனில், மாசுக்கட்டுப்பாடு, இயற்கை வளங்களின் முகாமைத்துவம் மற்றும் எமது தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் அற்பணிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த சுற்றாடல் கல்வி என்பனவற்றின் ஊடாக சுற்றாடலை பாதுகாத்து அதன் தரத்தை மேம்படுத்தல் என்பனவாகும்.

1.3 **ஊழியர்களின் எண்ணிக்கை**

இவ்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ஊழியர்களின் எண்ணிக்கையானது 715 ஆகும்.

2 **தயாரிப்பின் அடிப்படை**

**2.1 இணக்கப்பாட்டு கூற்று**

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் நிதிசார் கூற்றுக்கள் உள்ளடக்குபவை யாதெனில் ஐந்தொகை, வருமானம் மற்றும் செலவினக்கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிசார் கூற்றுக்களின் குறிப்பு

என்பனவாகும். இக் கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தால் விதிக்கப்பட்டுள்ள இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

**2.2. அளவீட்டு அடிப்படை**

நிதிசார் கூற்றுக்கள் வரலாற்றுச் செலவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

**2.3 நாணய வழங்கல் மற்றும் செயற்பாடு**

இந்த நிதிசார் கூற்றுக்கள் இலங்கை ரூபாய்களில் வழங்கப்படுவதுடன் இதுவே ம.சு.அ யின் செயற்பாட்டு நாணயம் ஆகும்.

**3 குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகள்**

கீழே கொடுக்கப்பட்டுள்ள கணக்கியல் கொள்கைகளானது, இந்த நிதிக் கூற்றுக்களில் உள்ள அனைத்து கால அளவுக்கும் சீரான முறையில் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

**3.1.ஆதணம், பொறி மற்றும் உபகரணம்**

ஆதணம், பொறி மற்றும் உபகரணங்களின் கொள்விலையானது அவற்றை பயன்படுத்தும் நோக்கத்திற்காக தொழில்படுநிலைக்கு கொண்டு வருவதாக ஏற்பட்ட செலவுகளுடான கொள்வனவு செலவுகளையும் கொண்டிருக்கும். ஒரு சொத்தை ஆரம்பத்தில் கிரயத்தில் அங்கீகரித்ததன் பின்னர், மீள் மதிப்பிடப்பட்ட சொத்துக்கள் அவற்றுக்கு பின்னர் ஏற்படும் தேய்மானத்தை கழித்து மீள் மதிப்பிப்படும்.

கிரயத்தில் அல்லது மதிப்பீட்டிலிருந்து திரண்ட தேய்மானத்தை கழித்த பின்னரே அனைத்து ஆதனங்கள், பொறி மற்றும் உபகரணங்கள் பதிவு செய்யப்படுகின்றன. ஆதனம், அல்லது உபகரணமொன்று பல்வேறு பயன்பாட்டு ஆயுலை கொண்டிருக்குமாயின் அவை தனியான ஆதனம், பொறி அல்லது உபகரணங்களாக கணக்கெடுக்கப்படும். ஆதனத்தின் எஞ்சிய பெறுமானம், பயன்படு ஆயுட் காலம் மற்றும் தேய்மான முறைகள் என்பன மீளாய்வு செய்யப்பட்டு ஒவ்வொரு நிதியாண்டின் முடிவில் பொறுத்தமாயின் சீராக்கப்படுகின்றன.

**ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - மானியமாக கிடைக்கப்பெற்றவை**

ஏதும் மானியத்தின் கீழ் பெறப்படும் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பவை கிரயத்தில் மூலதனமாக்கப்படுகின்றன.

கிரயத்திலிருந்து திரண்ட பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்ட பின்னரே ஆதனம், பொறி, உபகரணம் மற்றும் ஏனைய இறையிலி காணிகள் கிரயத்தில் பதியப்படுகின்றன. இறையிலி காணிகள் கிரயத்தில் பதியப்படுகின்றன.

ஆயட் காலத்திற்கேற்ப குறிப்பிட்ட தொகைகளை பதிவளிப்பதற்காக இறையிலிகாணி தவிர்ந்த சகல ஆதனங்கள் பொறி மற்றும் உபகரணங்களின் கிரயத்திற்கு நேர்கோட்டு முறையை பயன்படுத்தி பெறுமானத்தேய்வு ஏற்பாடுகள் கணக்கிடப்படுகின்றன. கொள்முதல் ஆண்டிற்கு தேய்மானம் வழங்கப்பட்டுள்ளதுடன், அகற்றுதலை பொறுத்தவரை, அகற்றுதல் இடம் பெறும் ஆண்டில் தேய்மானம் வழங்கப்படமாட்டாது.

மேல் குறிப்பிட்டதை போன்று ஆதனம், பொறி, உபகரணங்கள் என்பன நேர்கோட்டு முறையில் மதிப்பிறக்கம் செய்யப்படுகின்றது மேலும் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பன எஸ்.எல்.எஸ்.ஏ.எஸ் - 7 இல் குறித்துரைக்கப்பட்டவாறு, கிரயத்தின் முறையில் கணக்கிடப்படுகின்றது

**எஸ்.எல்.பி.எஸ்.ஏ.எஸ் 7 - சொத்து, ப்ளாண்ட் & கருவி**

1. மோட்டர் வாகனங்கள் வருடமொன்றுக்கு 25%
2. தளபாடம், அலுவலக உபகரணங்கள் வருடமொன்றுக்கு 10%
3. ஆய்வுகூட உபகரணங்கள் வருடமொன்றுக்கு 10%
4. நூலகம் புத்தகங்கள் வருடமொன்றுக்கு 2.5%
5. கட்டிடங்கள் வருடமொன்றுக்கு 2.5%

ஆதனம், பொறி மற்றும் உபகரணமொன்று கையுதிர்தல் வேலையில் அல்லது பயன்பாடு அல்லது கையுதிர்தல் மூலம் எதிர்கால பொருளாதார பயன்கள் எதிர்பார்க்கப்படாத வேலையில் ஏற்றங்கரீக்கப்படாத நிலைக்கு உள்ளாகின்றது. ஏற்றங்கீகரிக்கபடாமை காரணமாக தவறவிடப்படும் யாதேனும் ஒரு ஆதாயயீட்டல் அல்லது இழப்பு (நிகர கையுதிர்தல் வருமானம் மற்றும் சொத்தின் காவுத்தொகை ஆகியவற்றுக்கு இடையிலான வித்தியாசம் கணக்கிடப்படுகின்றது) ஏற்றங்கீகரிக்கப்படாத வருடத்தின் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றது.

செயலாற்றுகை தரத்தின் ஆரம்ப மதிப்பிட்டிலிருந்து எதிர்பார்க்கப்படும் எதிர்கால பொருளாதார பயன்களை மீள் நிறுவல் அல்லது பேனும் முகமாக ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் பழுதுபார்த்தல் அல்லது பேனுகை தொடர்பாக ஏற்படும் செலவினமானது ஒரு செலவாக ஏற்றங்கரீக்கப்படுகின்றது.

**3.2 பொருட் பட்டியல்கள்**

நிதியாண்டில் உபயோகித்த கையிருப்புக்கள் வருமானம் மற்றும் செலவினத்தின் கிரயத்தில் அறவிடப்படுகின்றது. எஞ்சிய கையிருப்பானது கிரயத்தில், விற்பனை விலையில் அல்லது நிகர காசு மதிப்பு இவற்றில் எது குறைவாகவுள்ளதோ அதன் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுகின்றது.

இரசாயனப் பொருட்கள் மற்றும் கண்ணாடிப் பொருட்களை பொருத்த மட்டில் ஆணடில் இடம்பெற்ற ஒட்டுமொத்த கொள்வனவும் உபயோக பொருட்களாக கருதப்படும். இவ்வகையான பொருட்களை அளவீடு செய்வதில் உள்ள சிரமம் காரணமாகவும் இந்த முறை பின்பற்றுப்பட்டது. பயன்பாடானது ஒப்பீட்டளவில் குறைவான செலவினத்தை கொண்டதாலும் இந்த முறை பின்பற்றப்பட்டது.

**3.4. குறுகிய தவனை முதலீடு**

மூன்று வருடங்களுக்கு மேலான முதிர்வடைவு காலத்தை கொண்ட நிதிச்சந்தை சாதனங்களில் செய்யும் முதலீடுகளானது குறுகிய தவணை முதலீடுகளாக கருதப்பட்டு கிரயத்தில் பதியப்படும்.

**3.5. காசும் காசிற்கு சமனாவைகளும்**

காசும் காசிற்கு சமானவைகளும் கையிலுள்ள காசையும் வங்கி வைப்புக்களையும் உள்ளடக்குகின்றது.

**3.5. காசுப்பாய்ச்சல் கூற்று**

காசுப்பாய்ச்சல் கூற்றானது மறைமுக முறையை பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளன.

**3.6. பொறுப்புகளும் ஏற்பாடுகளும்**

கடந்த கால சம்பவங்களின் விலைவாக ஏற்றபட்டுள்ள தற்போதைய கடப்பாடு ஒன்று இருக்கும் வேளையிலும், அதன் தீர்வானது பொருளாதார பயன்களை உள்ளடக்கிய வளங்களின் வெளிப்பாயச்சல் ஒன்றின் விளைவக்கு இட்டுச் செல்வதாக எதிர்பாக்கப்படும் வேளையில் பொறுப்புக்கள் ஐந்தொகையில் ஏற்று அங்கீகரிக்கப்படுகின்றன. கடனாளிகளின் கோரிக்கையின் பேரில் அல்லது ஐந்தொகை திகதியில் இருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்த வேண்டிய கடப்பாடுகள் நடைமுறை பொறுப்புகளாக ஐந்தொகையில் கருதப்படுகின்றன. நம்பத்தக்க வகையில் மதிப்பீடு செய்யக்கூடிய தற்போதய சட்ட அல்லது ஆக்கப்பூர்வமான கடப்பாடொன்று கடந்த கால நிகழ்வொன்றின் விளைவாக ம.சு.அ கொண்டிருக்குமானல், ஏற்பாடு ஏற்று அங்கீகரிக்கப்படுகின்றதுடன், கடப்பாட்டை தீர்ப்பதற்காக பொருளாதார பயன்களின் வெளிப்பாய்ச்சல் அவசியப்படும் என்தும் சாத்தியமே.

### 3.7. வரியிடல்

வரி செலவுகள் நிதிசார் கூற்றில் அறிக்கையிடப்படுவதுடன் 2006 ஆண்டில் 1ம் இலக்க இறைவரி வருமான ஏற்பாடு மற்றும் அதன் திருத்தங்களுக்கு இணங்க கணக்கிடப்பட்டுள்ளது.

### 3.8 ஊழியர் பயன்கள்

### I. வரையறுத்த பங்களிப்பு திட்டம்

வரையறுத்த பங்களிப்பு திட்டத்திற்கான கடப்பாடானது ஏற்பட்டவொரு செலவாக வருமான கூற்றில் ஏற்றங்கீகரிக்கப்படுகின்றது. ம.சு.சு யானது ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றுக்கு முறையே ஊழியர்களின் மொத்த சம்பளத்தின் 15% மற்றும் 3%ஐ பங்களிப்பு செய்கின்றது.

### II. வரையறுத்த பயன்திட்டம்

பணிக்கொடையானது நிலையான பயன்திட்டம் ஒன்றாகும். ம.சு.சு சபையானது சம்பந்தப்பட்ட நியதிச்சட்டத்திற்கு இணங்க பணிக்கொடையை வழங்க கடமைப்பட்டுள்ளது.

சகல ஊழியர்களுக்கும் அவர்களின் ஆரம்ப வருட சேவையிலிருந்து தொடங்கும் ஒவ்வோர் ஆண்டுக்காகவும் நிதி ஆண்டில் இறுதி மாத சம்பளத்தில் அரைவாசியின் மீதமைத்து ஐந்தொகையில் ஏற்பாடொன்றுக்கு முன்கொணரப்படுகின்றது.

### 3.9. வருமான அங்கீகாரம்

செலவினம் மற்றும் வருமானம் அட்டுறு அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளன. மூன்று வருடங்களுக்கு வழங்கப்பட்ட உரிமங்கள் மூலம் ஈட்டிய வருமானம் 2011 ஆம் ஆண்டில் ஈட்டிய வருமானத்திற்கும் 1/3 பகுதியாகும். எனவே முன்னைய இரண்டு வருடங்கள் சார்பாக சீராக்கல் இடம்பெற்றது. மேலும் ஒரு வருடத்தில் வழங்கிய உரிமங்கள் மூலம் ஈட்டிய வருமானம், பற்றுச்சீட்டு திகதியை பொருட்படுத்தாது, அதே ஆண்டில் ஈட்டிய வருமானமாக கணக்கிடப்பட்டுள்ளது.

### 3.10. ஒப்பீட்டு தகவல்கள்

நடப்பு ஆண்டில் சமர்பணங்களைக் காண்பிக்கும் பொருட்டு ஒப்பீட்டு தொகைகள் அவசியமான இடங்களில் மீளமைக்கப்பட்டுள்ளன.

### 3.11. ஐந்தொகை திகதிக்கு பிந்திய நிகழ்வுகள்

ஐந்தொகை திகதிக்கு பிந்திய அனைத்து பொருட்களும் பரீசிழினை செய்யப்பட்டதுடன், அவசியமான இடங்களில் நிதிசார் கூற்றின் குறிப்புகளில் சீராக்கங்கள் அல்லது வெளிப்பாடுகள் இடம்பெற்றன.

### 3.12. பொறுப்புகளும் நிகழ்சாத்தியங்களும்

நிகழ்சாத்தியங்களானது கடந்த கால நிகழ்ச்சியில் இருந்து தோன்றும் சாத்தியமான சொத்துக்கள் அல்லது கடப்பாடுகள் ஆகும். இவை, ம.சு.சு யின் கட்டுப்பாட்டிற்கு அற்பாட்பட்டதும் நிகழ்கின்ற அல்லது நிகழலாத சூழல்நிலையில் உறுதிசெய்யப்படும்.

### 3.13. கொடைகளின் (மானியங்கள்) கணக்கீடு

**ை. அரசாங்க கொடைகள்**

அரசாங்க கொடைகள் தொடர்பாக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கையானது டில். கே. ஏ. எஸ் 20 – அரசாங்க கொடைகள் மற்றும் அரசாங்க பதவிக்கான கணக்கீட்டு முறையையும் உள்ளடக்குகின்றது.

அ.சொத்துக்கள் கொள்வனவு செய்வதற்கான அரசாங்க கொடைகளானது அச்சொத்துக்களின் பயன்படு ஆயட் காலத்தின் அடிப்படையில் வருமானமாக ஏற்றங்கீகரிக்கப்படுகின்றது.

ஆ.வெளிநாட்டு முகவாரண்மைகளிடம் இருந்து பெற்றுக்கொண்ட ஏனைய மீண்டெழும் மானியங்கள் மற்றும் செலவினங்கள் 2012 கணக்கின் இலாப மற்றும் இழப்பீட்டில் கூட்டிணைக்கப்பட்டுள்ளது .

இ.பாடசாலை நிகழ்ச்சித்திட்டங்ளுக்குகான அரசாங்க கொடைகள், அவற்றில் இருந்து ஏதேனும் உறுதியான சொத்துகள் தோன்றாமை கராணமாக செலவினங்களாக கருதப்படுகின்றன.

**ைை. ஏனைய முகவரான்மைகளிடமிருந்து பெற்ற முலதன கொடைகள்**

ஏனைய முகவராண்மைகள் இடமிருந்து பெற்ற மூலதன கொடைகளுக்கும் அரசாங்க கொடையை கணக்கீடு செய்வதற்கு பின்மற்றப்பட்ட முறையே பின்பற்றப்பட்டது.

**2013 ஆம் ஆண்டில் ம.சு.சு பின்வரும் கொடைகளை பெற்றுள்ளது.**

**ரூபா.**

| | |
|---|---|
| இறைசேரி – மீண்டெழும் | 327,507,000 |
| திறைசேரி - மூலதனம் - காசாக | 36,063,120 |
| பிலிசரு செயற்றிட்டம் | 3,497,700 |
| எண்டிபி (மோட்டாட் வாகனம்) | 3,700,000 |
| மசுஅ ஆய்வுகூட வலுப்படுத்தல் 2012 | 365,834 |
| மசுஅ ஆய்வுகூட வலுப்படுத்தல் 2013 | 13,779,821 |
| நூலக தகவல் மையம் | 578,909 |

**மூலதன கொடைகள் பின்வருமாறு உபயோகிக்கப்பட்டுள்ளது.**

**ரூபா.**

| | |
|---|---|
| பாடசாலை மட்ட சுற்றாடல் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்துதல் | **5,986,880** |
| **சூழல் பாதுகாப்பு செயற்றிட்டம்** | **238,808** |
| **எஸ்.ஏ.ஐ.சி.எம். அபாயகர கழிவு முகாமை** | **542,890** |
| **எஸ்.ஏ.ஐ.சி.எம். சூழல் மாசடைதல் கட்டுப்பாடு** | **332,400** |
| **ஈடிசிஎ.ஃ.ப் கட்டிட நிதி** | **1,678,738** |
| **நூகல நூல்கள் - நன்கொடை** | **29,495** |

**3.14 பலவகை கடனாளிகள்**

2006 ஆம் ஆண்டில் திரு சிரிலால் கல்தேரா காலஞ்சென்றார். நீதிமன்ற தீர்ப்பு கிடைக்கப்பெற்றதும் அவருக்கு வழங்கப்பட்ட முற்பணத்தை பதிவழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**3.15. முதலீடுகள்**

நிலையான வைப்பு மற்றும் குறுங்கால வைப்புக்கள் மீதான முதலீடுகள் கிரயத்தில் பதியப்பட்டுள்ளன. அவ்வாறான முதலீடுகள் வாயிலாக கிடைக்கப்பெறும் வருமானப் அட்டுறு அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளன.

**<u>3.16.</u>நிகழ் சாத்தியங்களும் பொறுப்புகளும்**

மத்திய சுற்றாடல் சபைக்கு எதிராக ஐந்து வழக்குகள் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளனதுடன் அவற்றுக்கு நிதிப் பொறுப்புக்கள் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது

ம.சு.அ(60%) பங்களிப்புடனும், மொறுடுவை பல்கழைக் கழகத்தின்(10%) பங்களிப்புடனும் மற்றும் திரு என். வீ. ஆனந்த் விதானகே(கண்டுபிடிப்பாளர் – 30%) பங்களிப்புடனும் கூட்டாக ஆரம்பிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட பொலிப்போ லங்கா(தனியார்) நிறுவனமானது 2010 ஒக்டோபர் 04 ஆம் திகதி அதிவிஷேட வாந்தமான பத்திரிகையின் ஊடாக மின்வலு எரிசக்தி அமைச்சின் ஆளுகைக்குக் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. திறைசேரியிடம் இருந்து நிதியை பெற்றவுடன் ரூபா 22,790,683.26 வை ஈடுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனமின்வலு எரிசக்தி அமைச்சுகூறியுள்ளது.

| 2013 டிசம்பரில் முடிவடைந்த வருடத்திற்கான | | | | | |
|---|---|---|---|---|---|
| மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் | | | | | |
| நிதி சார் செயலாற்று கூற்று | | | | | |
| | | | குறிப்பு | 2013 | 2012 |
| | | | | ரூபா | ரூபா |
| | **இயக்க வருமானம்** | _ | | | |
| | மீண்டெழும் கொடை | திறைசேரி | | 327,507,000.00 | 277,671,000.00 |
| | | - ஏனையவை | 4 | 91,692,233.73 | 69,785,098.70 |
| | பிற்போட்ட வருமானம் | | | 34,928,236.33 | 39,439,503.56 |
| | ஏனைய வருமானம் | | 4 | 167,787,119.84 | 165,094,317.59 |
| | பாடசலை நிகழ்ச்சி திட்டம் | - திறைசேரி | | 5,986,880.07 | 3,067,070.33 |
| | **மொத்த வருமானம்** | | | **627,901,469.97** | **555,056,990.18** |
| | | | | | |
| | **இயக்க செலவுகள்** | _ | | | |
| | பணியாள் ஊதியம் | | 5 | 363,502,514.36 | 332,554,266.21 |
| | போக்குவரத்து | | 6 | 16,844,802.19 | 16,417,781.18 |
| | வழங்கள் மற்றும் உபயோகித்த பொருட்கள் | | 7 | 44,977,334.62 | 35,202,449.11 |
| | பேனுகை | | 8 | 20,256,931.28 | 15,321,897.38 |
| | ஓப்பந்த சேவைகள் | | 9 | 44,567,734.39 | 38,903,563.39 |
| | ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் | | 10 | 32,860,915.97 | 14,314,197.56 |
| | தேய்மானமும் இலதாக்கலும் | | 11 | 34,928,236.33 | 39,439,503.56 |
| | ஏனைய இயக்கச் செலவுகள் | | 12 | 4,517,274.98 | 3,767,653.39 |
| | கருத்திட்ட செயற்பாடுகள் | | 13 | 93,840,198.60 | 89,569,455.04 |
| | **மொத்த இயக்க செலவுகள்** | | | **656,295,942.72** | **585,490,766.82** |
| | | | | | |
சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டில் அதிகாரசபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவுகள் ரூபா 28.6 மில்லியன் பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 30.6 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது பற்றாக்குறையில் ரூபா 2 மில்லியன் குறைவைக் காட்டியது. மீளாய்வாண்டில் திறைசேரி மானியம் மற்றும் ஏனைய செயற்பாட்டு வருமானம் ரூபா 77.4 மில்லியனால் அதிகரித்திருந்த போதிலும், செயற்பாட்டுச் செலவினம் ரூபா 77.9 மில்லியனால் அதிகரித்திருந்தமை மற்றும் பிற்போட்ட மிகைக் கட்டண வருமானம் ரூபா 4.5 மில்லியனால் குறைவடைந்தமை இதற்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன.

### 3.2 அதிகாரசபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட வழக்குகள்

அதிகாரசபையினால் சுற்றாடல் மாசுபடல் மற்றும் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்படாமை தொடர்பாக வெளி நிறுவனம் மற்றும் தனிப்பட்ட நபர்களுக்கு எதிராக மீளாய்வாண்டின் இறுதியளவில் நீதிமன்றங்களில் 110 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

7

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சுற்றாடல் விடயங்கள் மீதான முறைப்பாடுகள்

(i) முறைப்பாடுகள் தொடர்பாக அதிகாரசபையினால் பின்பற்றப்படுகின்ற நடைமுறைகளின் பிரகாரம் சுற்றாடல் முறைப்பாடுகள் தொடர்பாக 14 தினங்களுக்குள் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய போதிலும் தலைமை அலுவலகத்தின் முறைப்பாட்டுப் பிரிவினால் மாத்தறை மாவட்ட அலுவலகத்திற்கு 2013 மார்ச் மாதம் அனுப்பப்பட்ட 03 சுற்றாடல் முறைப்பாடுகள் தொடர்பாக 2013 மே இறுதி வரையிலும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சுற்றாடல் முறைப்பாடு தொடர்பான தரவுக் களஞ்சியம் (Date Base) பேணப்படாதிருந்ததுடன் முறைப்பாடுகள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் செயல்முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் விநியோகித்தல்

(i) நிபந்தனை இலக்கம் 22 இன் படி, அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடிக்காலத்தின் போது 03 மாதங்களுக்கு ஒரு தடவை கழிவு நீர் பகுப்பாய்வு அறிக்கை சமர்ப்பிக்கும் போது காண்பிக்கப்பட்டிருந்த போதும் அச் செயற்பாட்டை நிறைவேற்றுதல் தொடர்பாக அதிகார சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் 23 "ஆ" பிரிவு மற்றும் 2008 ஜனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் என்பவற்றின் பிரகாரம், கைத்தொழில்களுக்கான சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய போதிலும் முதலீட்டுச் சபைக்குரிய 201 கைத்தொழில்சலைகளும் முதலீட்டுச் சபைக்குரித்தற்ற 5298 கைத்தொழில்சலைகளும் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றிருக்கவில்லை.

8

(iii) 2008 பெப்ரவரி 01 ஆந் திகதிய 1534/08 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் கழிவுப்பொருளின் வாயுவை அகற்றுவதற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறப்பட வேண்டிய போதிலும் முதலீட்டுச் சபையின் கீழான கைத்தொழில்களுக்கு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்கும் போது மேற்கூறப்பட்ட அனுமதிப்பத்திரம் பெறப்பட்டதா என பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கவில்லை. தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் கழிவுப் பொருள் வாயுவை அல்லது அகற்றுவதற்காக அனுமதிப்பத்திரம் பெறப்படாத 15 கைத்தொழில்களுக்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் இந்த நிலைமை சுற்றாடல் பிரச்சினை உக்கிரமடைவதற்கு நேரடியாகப் பங்களிக்கின்றமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(iv) அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்ட கைத்தொழில்களுக்கு எதிராக கிடைக்கப்பெற்ற சுற்றாடல் முறைப்பாடுகளை தனியாக இனங்கண்டு தீர்ப்பதற்கான முறையொன்று அறிமுகப்படுத்தப்படாதிருந்ததுடன் கைத்தொழில்களுக்காக கிடைக்கின்ற முறைப்பாடுகள் தொடர்பாக பரிசோதனை செய்யப்படாமல் சுற்றாடல் இணக்கப்பாடு வழங்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது மேலும் அவதானிக்கப்பட்டது.

### 4.2 முகாமைத்துவ தகவல் முறைமையினைப் பேணுதல்

அதிகாரசபையினால் பேணப்படுகின்ற கணனிமயப்படுத்திய முகாமைத்துவ தகவல் முறைமைக்காக ஆபத்தை தவிர்க்கும் முகாமைத் திட்டம் (Disaster Recovery Management System) அதிகார சபையினால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பிரதேச மற்றும் மாவட்டச் செயலகங்களுக்கு நியமிக்கப்பட்ட சுற்றாடல் உத்தியோகத்தர்களில் சிரேஷ்ட சுற்றாடல் உத்தியோகத்தர், பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர் மற்றும் சுற்றாடல் உத்தியோகத்தராக 03 மட்டங்களின் கீழ் கடமைகளைச் செய்த போதிலும் இந்த மட்டங்கள் தனித்தனியாக இனங்கண்டு

9

கடமைகள் கையளிக்கப்பட்டிராததுடன் மேற்பார்வை செய்யும் முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது உத்தியோகத்தர்களினால் செய்யப்பட்ட வேலைகள் தொடர்பாக உறுதிப்படுத்திக்கொள்வதற்காக எதிர்கால நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயல்முன்னேற்ற அறிக்கையின்றி சுற்றாடல் உத்தியோகத்தர்களின் பிரயாணச் செலவுகள் மற்றும் இணைந்த படிகளாக ரூபா 7,200,431 தொகை செலுத்தப்பட்டிருந்தன.

4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

20 மைக்ரோனுக்கு குறைவான பொலித்தீன் உற்பத்தி பரிசோதனைக்காக 2007 ஆம் ஆண்டின் போது ரூபா 452,660 தொகையான செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 10 பரிசோதனை உபகரணங்கள் 2014 ஆகஸ்ட் இறுதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.5 இணங்காணப்பட்ட நட்டங்கள்

முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ரூபா 104,083 தொகையான நானாவித முற்பணம், கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.6 வெளிப்படையான மோசடிகள்

தொம்பே சுகாதார கழிவுப்பொருள் நிலத்தை நிரப்பும் செயற்திட்டத்தின் நிர்மாண பணிகளுக்குரியதாக ஏற்பட்ட ரூபா 49,623,542 தொகையான நட்டத்தை அறவிடுவது தொடர்பாக 2014 ஆகஸ்ட் இறுதிவரையிலும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.7 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தென்மாகாண அலுவலகத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்திற்காக ரூபா 48 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) 2008 ஆம் ஆண்டின் போது இந்த கட்டிட நிர்மாணத்திற்காக ரூபா 380,721 தொகை செலவில் கட்டிட வரைபடம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த வரைபடம் அகற்றப்பட்டு ஆலோசனைச் சபையினால் தயாரிக்கப்பட்ட புதிய வரைபடத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், ஆலோசனைச் கம்பனியினால் கட்டிடம் உரிய நியமங்களின் பிரகாரம் திட்டம் தயாரிக்கப்படாமையின் காரணமாக தேவையற்ற வேலைப்பகுதிக்காக ரூபா 4,619,082 தொகையான மேலதிக கிரயமொன்றைச் செய்ய வேண்டியிருந்தது.

(ii) நிர்மாண நடவடிக்கைகள் குறிப்பிடப்பட்ட திகதியில் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக அறவிட வேண்டிய ரூபா 4,735,738 தொகையான தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iii) கட்டிடத்தின் ஒரு பகுதியில் தங்குமிட வசதிகளுக்காக இடமொன்றை நிர்மாணிப்பதற்கு II ஆம் கட்டத்திற்கான மொத்த ஒப்பந்த கிரயமான ரூபா 23,926,797 தொகையிலிருந்து 25 சதவீதம் அல்லது ரூபா 6,036,897 தொகையாக மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் 120 சதுர அடியான இரண்டு அறைகள் மற்றும் விறாந்தையுடனான தங்குமிட வசதிகளுக்காக நிர்மாணிக்கப்பட்ட பகுதிக்காக ரூபா 5,480,517 தொகை செலவிடப்பட்டிருந்தது. இவ்வாறான மேலதிக செலவினங்களைச் செய்வதற்கு திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(iv) கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகளுக்கான மேலதிக செலவின மதிப்பீட்டின் அடிப்படையில் ரூபா 816,032 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் இச் செயற்பாடுகளை நிறைவேற்றும் போது ஒப்பந்தக்காரருக்கு ரூபா 861,000 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(v) ஒப்பந்தக் கம்பனியால் பொறியியலாளருக்கு மாதாந்தம் ரூபா 75,000 படி 13 மாதங்களுக்காக ரூபா 975,000 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக அதிகாரசபையின் இன்னுமொரு பொறியியலாளருக்கு மாதத்திற்கு ரூபா 50,000 படி 11 மாதங்களிற்காக ரூபா 550,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

11

(ஆ) தொம்பே சுகாதார கழிவுப்பொருள் போடப்படுகின்ற நிலத்தை நிரப்பும் செயற்திட்ட வளவின் நுளைவு வீதியை நிர்மாணிப்பதற்கு ரூபா 69.5 மில்லியன் தொகையான ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்ததுடன் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது ரூபா 22.26 மில்லியன் தொகையான மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தமையும் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 8.15 மில்லியன் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

வீதி நிர்மாணிக்கும் செயற்பாடுகள் உரிய நியமங்களில் மேற்கொள்ளப்படாதிருந்தமை 05 ஆய்வுகூட அறிக்கைகளின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தும் அதிகாரசபை இது தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(இ) கழிவுப்பொருள் அகற்றல் செயற்திட்டம் 2013 ஆம் ஆண்டின் இறுதியில் பூர்த்தி செய்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் நிர்மாணச் செயற்பாடுகள் 2014 மே மாதத்தின் போதே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2014 செப்தெம்பர் வரையிலும் அதனைப் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.8 தாமதமான செயற்திட்டம்

----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய இரசாயன பொருட் கழிவுகளை நாளதுவனையாக்கும் செயற்திட்டம் மீளாய்வாண்டின் சனவரி மாதத்தின் போது பூர்த்தியாக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டடிருந்த போதிலும் செயற்திட்டத்தை அமுல்படுத்தும் திட்டத்தைத் தயாரித்தல் 2014 மார்ச் 10 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிராததுடன் செயற்திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட சந்தர்ப்பத்தின் போது ரூபா 336,000 தொகையான முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. தேவை இனங்காண்பதற்கு முன் ரூபா 558,840 தொகை செலவில் செயற்திட்டத்திற்காக அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டமையினால் அந்த உபகரணங்கள் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக பயனற்றிருந்தது.

12

(ஆ) பொருளாதார ஒத்துழைப்பு நிதியத்தின் கடன் வசதிகளின் அடிப்படையில் கழிவுப்பொருள் அகற்றும் வசதிகளை நிர்மாணிக்கும் செயற்திட்டம் (EDCF)

செயற்திட்டப் பதவியணியினர் 2012 ஆம் ஆண்டின் போது சேர்க்கப்பட்டு செயற்திட்ட உடன்படிக்கை 2013 யூலை 23 இல் கையொப்பமிடப்பட்டு 02 வருட காலம் கடந்திருந்த போதிலும் உத்தேச 04 காணிகளை நிரப்புதல் நிர்மாண செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதியளவில் செயற்திட்டத்தின் திரண்ட செலவினத்தில் 64 சதவீதமான ரூபா 11,028,095 தொகையான கிரயம் செயற்திட்ட பதவியணியினருக்காக ஏற்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் கீழ் உத்தேசிக்கப்பட்ட 04 நிலங்களை நிரப்பும் நிர்மாண நடவடிக்கைகள் 02 வருட காலமாக ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2008 – 2010 வரையான 03 வருட காலப்பகுதியில் பூர்த்தி செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட "பிளிசறு செயற்திட்டம்" இற்காக திறைசேரியினால் ரூபா 5.633 பில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) செயற்திட்டம் 2010 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2014 ஆகஸ்ட் இறுதி வரையும் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 5.633 பில்லியன் தொகையிலிருந்து மீளாய்வாண்டின் இறுதிவரை ரூபா 1.965 பில்லியன் தொகை அல்லது 35 சதவீதம் மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது.

(ii) செயற்திட்டத்தின் கீழ் சிறிய அளவிலான 103 தளங்களை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதில் 69 மாத்திரமே நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அந்த நிர்மாணங்களிலிருந்து 31 தளங்களை நிர்மாணிப்பதற்காக 31 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு ரூபா 66.73 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும் அதில் 13 நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் 03 தளங்கள் கைவிடப்பட்டிருந்தது. நிர்மாணிக்கப்பட்ட 14 தளங்களில் கூட்டுப்பசளை உற்பத்தி ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் மற்றைய தளம் ஆகக்கூடிய இயலளவில் பசளை உற்பத்தி செய்வதற்கு முடியாதிருந்தது.

Auditor General's Department

13

(iii) நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்ட பாரியளவான 14 கூட்டுப்பசளைத் தளங்களில் 06 தளங்கள் நிர்மாணிக்கபட்டிருந்த போதிலும், ரூபா 248.7 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட பாரியளவிலான 03 கூட்டுப்பசளைத் தளங்களில் பின்தொடர் நடவடிக்கை எடுக்காமையினாலும் செயற்பாட்டு செயற்திறமையின்மையாலும் வெற்றியடையாதிருந்தது.

(iv) உக்காத கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக 10 நிலத்தை நிரப்புதல் இடங்களை உருவாக்க திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதில் ஒரு இடமேனும் நிரப்பப்பட்டிருக்காததுடன் ஒதுக்கப்பட்ட பணத்தில் ரூபா 163 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தற்காலிக நில நிரப்புதல்களுக்காக செலவிடப்பட்டிருந்தது.

(v) செயற்திட்டத்தின் சிரேஷ்ட பொறியியலாளர் மற்றும் பிரதி முகாமையாளர் (பொதுசனத் தொடர்பு) போன்ற பதவிகளுக்காக தேவையான தகைமைகளை கொண்டிராத உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டு சம்பளம் மற்றும் படிகளாக 2008 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை ரூபா 6,403,600 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தர்களின் சேவை மீளாய்வாண்டின் போது முடிவடைந்திருந்த போதிலும் அவர்களின் பணிக்கொடை படியாக ரூபா 524,825 தொகையும் செலுத்தப்பட்டிருந்தன. செயற்திட்டத்தின் தோல்விக்கு தகைமையுடைய செயற்திறனான உத்தியோகத்தர்கள் இருக்காமை ஒரு காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(vi) செயற்திட்டத்தின் உடன்படிக்கையின்படி, கூட்டுப்பசளைத் தளங்களின் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறப்பட வேண்டிய போதிலும் எந்தவொரு கூட்டுப்பசளைத் தளத்திற்காகவும் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், செயற்திட்டத்தின் நிலைத்திருத்தலுக்காக உற்பத்தி செய்யப்படுகின்ற பசளைகளின் தரத்தினை உயர்த்துவதற்காக நைதரசன் கலந்த பயிர்ச்செய்கை செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி முதல் செயற்திட்ட காணியில் தொடர்ச்சியாகப் பேணுதல் மற்றும் பராமரித்தல் அந்த கலவை கூட்டுப்பசளை உற்பத்தியில் முலப்பொருளாக ஈடுபடுத்த வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும்

14

தற்போது அமுல்படுத்தப்படுகின்ற 91 கூட்டுப்பசனை தளங்களிலும் நிலைமை பரிசோதனை அறிக்கை உரிய உடன்படிக்கையின் படி 03 மாதங்களுக்கு ஒரு தடவை பெறப்பட்டிருக்கவில்லை.

(vii) செயற்திட்டத்தின் நிதிகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட வாகனத்திற்கு விபத்தினால் ஏற்பட்ட ரூபா 6,050,000 தொகையான நட்டம் 02 வருடங்கள் கடந்திருந்த போதிலும் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.9 ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரசபையின் வளங்கள்

அதிகாரசபையினால் அமைச்சருடைய அலுவலகத்தின் உத்தியோகத்தர்களுக்கான விமானப் பயணச்சீட்டுக்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 783,000 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் பிரதி அமைச்சரின் அலுவலகத்தில் சேவையாற்றிய தற்காலிக தொழிலாளர்கள் இருவருக்கும் ஒரு சாரதிக்குமாக ரூபா 692,255 தொகையான சம்பளம், மேலதிக நேரம் மற்றும் இணைந்த படிகள் என்பன அதிகாரசபையினால் செலுத்தப்பட்டிருந்தது.

### 4.10 ஆளணி நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 947 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 715 ஆனமையால் வெற்றிடங்கள் 232 ஆகும்.

(ஆ) அதிகாரசபையின் ஆட்சேர்த்தல் நடைமுறை பொதுத்திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஊழியர்களின் பிரத்தியேக கோவையில் அடங்கியுள்ள கல்விச் சான்றிதழ்களின் நிழற்படப்பிரதிகள் உண்மையானதும் சரியானதுமான பிரதிகள் என உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

Auditor General's Department



5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை வலுப்படுத்துவதற்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இனங்காணப்பட்ட நலிவுகளை சரிசெய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

5.2 கொள்வனவுத் திட்டம்

2006 இன் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டல்களுக்கு இணங்க கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

5.3 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காற்று தரக்கட்டுப்பாடு, ஒலி மற்றும் அதிர்வுகளைக் கட்டுப்படுத்துதல், வாகன புகைப் பரிசோதனைக் கட்டுப்பாடு மற்றும் மாலைதீவு செயற்திட்டத்தை அமுல்படுத்துதல் போன்ற இலங்கையில் பரவலாகவுள்ள புகை நிலைமையினை பின்தொடர் நடவடிக்கை செய்யும் செயற்திட்டத்தின் கீழ் கொழும்பு கோட்டையில் புகை நிலைமையைக் கண்காணிக்கும் அலகினை ஸ்தாபித்தல் தொடர்பாக 2012 ஆம் ஆண்டு முதல் சுட்டிக்காண்பிக்கப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) லுனாவ செயற்திட்டத்தின் மூலம் இனங்காணப்பட்ட முறையில் அவிருத்தி செய்யப்பட்ட வாய்க்கால் வழி மற்றும் வடிகாண் முறைமைகளுக்கு கைத்தொழில் மற்றும் வீடமைப்பு செயற்திட்டம் மூலம் மல அகற்றல் முறைமை மற்றும் வேறு இரசாயன கழிவுப் பொருட்களை விடுவப்பதன் மூலம் வாய்க்கால் வழிகளை மாசுபடுத்துதல் தொடர்பாக தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் 23 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் திருத்தப்பட்டு அபிவிருத்தி செய்வதற்கு தேவையான இனங்காணப்பட்ட 18 ஆம் பிரிவிற்காக அதிகாரச்சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

16

5.4 சுற்றாடல் மற்றும் சமூக பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் திருத்திய அதிகாரச்சட்டத்தின் 22 ஆம் பந்தியின் பிரகாரம் அபாயகரமான நீர் வழிந்தோடும் பிரதேசங்களை இனங்காணுதல் மற்றும் பாதுகாத்தல், வினைத்திறனாக மண்ணைப் பாதுகாத்தல், மண் பாதுகாப்பிற்கான நிகழ்ச்சித்திட்டம் சிபார்சு செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக சுற்றாடல் பாதுகாப்பை கருத்திற்கொள்ளாது மண் வெட்டுவதற்காக அதிகாரசபையின் சிபார்சினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. சிபார்சினை வழங்கும் போது சுற்றாடல் மதிப்பீடு மேற்கொள்ளப்படாமையின் காரணமாக சுற்றாடல் முறைப்பாடுகளும் கிடைத்திருந்தன.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீடு
(ஆ) கணணி மென் பொருள் முறைமைப் பாவனை
(இ) கணக்கீடு
(ஈ) கொள்வனவு நடைமுறை
(உ) பணிக்கொடை ஒதுக்கீடு
(ஊ) சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம்
(எ) ஆளணி நிர்வாகம்
(ஏ) ஒப்பந்த நிர்வாகம்
(ஐ) உள்ளகக் கணக்காய்வு

ஒப்பம்: எச்.ஏ.எஸ்.சமரவீர

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# 15.‘பிலிசறு’தேசிய திண்மக் கழிவு முகாமைத்துவ கருத்திட்டம்

## 15.1 அறிமுகம்

முறையற்ற திண்மக்கழிவு முகாமைத்துவமானது பாரிய பிரச்சினைகளில் ஒன்றாகும். முக்கியமான சுற்றாடல் பிரச்சினையாகவும் இலங்கையில் காணப்படுகின்றது. இலங்கையில் திண்மக்கழிவு பிரச்சினை தீவிரமாக்குவதற்கு பங்களிப்பு செய்துவரும் காரணிகளாவன யாதெனில், கழிவுச் சேகரிப்பு, கழிவு போக்குவரத்து, இடைநிலை சுத்திகரிப்பு முறைமை மற்றும் பொருத்தமான கழிவு அகற்றல் ஆகியவை தொடர்பான வடிவமைக்கப்பட்ட முறையொன்று காணப்படாமையாகும். இலங்கையில் காணப்படும் தற்போதைய திட்டமற்ற கழிவு அகற்றல் நடைமுறையானது பல சுற்றாடல் பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளதுடன் பொதுமக்களுக்கு பலவிதமான தொல்லைகளை ஏற்படுத்துவதாகவும் உள்ளது. இந்நடைமுறையின் விளைவாக சமூகங்கள் பாதிப்படைவதுடன் பலவிதமான சுகாதார, சமூக பொருளாதார மற்றும் கலாசார பிரச்சினைகளையும் தோற்றுவித்துள்ளது.

நாட்டின் அநேகமான பகுதிகளில் கழிவுச் சேகரிப்பு மற்றும் அகற்றல் தொடர்பான உட்கட்டமைப்பு மற்றும் வளங்கள் காணப்படாமையை காரணமாக சுற்றாடல் உணர்திறனுள்ள பகுதிகளில் குப்பைகளை சிதறடிப்பதும் கொட்டுவதும் கட்டுப்பாடற்ற விதத்தில் இடம்பெறுகின்றன. கைத்தொழிற்சாலைகள் மற்றும் வீடுகளால் தோற்றுவிக்கப்படும் அநேகமான திண்மக் கழிவை இறுதியாக அகற்றுவதற்கு முறையான வசதிகள் காணப்படவில்லை. முறையற்ற விதமாக கொட்டப்பட்ட கழிவுகள் வடிகால் வாய்க்கால்களில் நீரோட்டத்தை தடுக்கவும் அதனூடாக ஈக்கள், நுளம்புகள் மற்றும் எலிகள் போன்ற நோய்காவிகளுக்கு புகலிடத்தை ஏற்படுத்தவும் வழிசமைக்கின்றது. இயற்கைப் பகுதிகளில் உள்ள திறந்த குப்பை கொட்டும் அமைவிடங்கள் நிலம் மற்றும் மேற்பரப்பு நீர் என்பன மாசடைவதற்கும் ஆக்கிரமிப்புக்களை எளிதாக்கவும் வழிவகுக்கின்றன. கழிவுகளை திறந்த வெளியில் குறை வெப்பநிலையில் எரித்தலும் பரவலாக இடம் பெறுகின்றது. இது சுற்றாடல் மாசடைவதற்கு பங்களிப்பு செய்வதுடன் பாரதூரமான சுகாதார பிரச்சினைகளை ஏற்படுத்தவும் கூடும்.

இலங்கையில் திண்மக் கழிவு முகாமைத்துவம் (தி.க.மு) பற்றிய ஒட்டுமொத்த பொறுப்பு சம்பந்தப்பட்ட சட்டங்களின் கீழ் உள்ளூராட்சி அதிகாரசபை (உ.அ) களிடம் காணப்படுகின்றது. திண்மக் கழிவு முகாமைத்துவம் பற்றிய அதிகாரங்கள் மாநகரசபை கட்டளைச்சட்டம், நகரசபை கட்டளைச்சட்டம் மற்றும் பிரதேசசபை சட்டம் ஆகியவற்றால் அளிக்கப்பட்டுள்ளன. அநேகமான உள்ளூராட்சி அதிகாரசபைகள் தமது ஆளுகைக்குள் வரும் பௌதீக வளங்களின் மேம்பாட்டில் அதிக கவனத்தை செலுத்திவரும் அதேவேளையில் தி.க.மு பிரச்சினை பற்றிய கரிசனை ஒப்பீட்டளவில் மிகவும் குறைவாகவேயுள்ளது. தி.க.மு காக பயன்படுத்தும் வளங்களின் அளவும் ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளது.

## 15.2 பிலிசறு கருத்திட்டம் தாபித்தல்

இலங்கையில் அநேகமான உள்ளூராட்சி சபைகள் கழிவு முகாமைத்துவத்தில் ஒப்பீட்டளவில் குறைந்த கவனத்தை செலுத்துவதன் காரணமாக பல்வேறு தி.க.மு பிரச்சினையுடன் தொடர்புடைய அபாயங்களுக்கு பொது மக்கள் முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதுடன் இப்பிரச்சினைகளை தீர்ப்பது தொடர்பில் பொதுமக்கள் உள்ளூராட்சி அதிகாரசபைகள் மீது வைத்திருந்த நம்பிக்கையானது கடந்த சில வருடங்களாக கணிசமான அளவு குறைவடைந்துள்ளது.

எனவே கழிவு முகாமைத்துவ அக்கறை (கவலைகள்) தொடர்பாக உள்ளூராட்சி அதிகார சபைக்கு எதிராக பொதுமக்கள் பல்வேறு புகார்களை கொடுத்து மத்திய சுற்றாடல் அதிகாரசபை (ம.சு.அ) மற்றும் சுற்றாடல் அமைச்சு ஆகியவற்றை விழிப்பூட்டுகின்றனர்.

மேற்படி சூழ்நிலைகளை கருதத்தில் எடுத்த சுற்றாடல் அமைச்சர் ( சுற்றாடல் அமைச்சு) 'பிலிசறு' என பெயரிடப்பட்ட தேசிய மட்டத்திலான திண்மகழிவு முகாமைத்துவ நிதழிச்சித்திட்டத்தை சுற்றாடல் அமைச்சு மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபை ஆகியவற்றின் வழிகாட்டலின் கீழ் ஏனைய அரசாங்க நிறுவனங்கள்.

தனியார் நிறுவனங்கள் அரசுசாரா நிறுவனங்கள் மற்றும் இத்துறையைச் சேர்ந்த வல்லுநர்கள் ஆகியோாின் பங்கேற்றலுடன் ஆரம்பித்தார்.

'பிலிசறு' என்ற சொற்பதம் சிங்கள மொழியில் மீள்-வளமாக்கல் என்ற பொருளை தருகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான இலக்காகவே இது மாற்றமடைந்துள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் எண்ணக்கருவானது யாதெனில் கழிவாக அகற்றப்படும் வளங்களின் உச்ச பயன்பாட்டை பெற்று, உபயோகிக்கப்பட்ட இயலாத எச்சத்தை சுற்றாடல் ரீதியாக ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் அகற்றுதல் ஆகும்.

தேசிய ரீதியாக ஒருங்கிணைக்கப்பட்ட அனுகுமுறையில் இப்பிரச்சினையை அனுக வேண்டியதன் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டு, சுற்றாடல் அமைச்சு (சுற்றாடல மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சு என முன்னர் அழைக்கப்பட்டது) 'பிலிசறு' கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சரவை பத்திரமொன்றை சமர்ப்பித்தது. அமைச்சரவை அதற்கு கொள்கையளவில் அங்கீகாரத்தை 2007 யூலை 25 ஆம் திகதி வழங்கியது.

இந்நிகழ்ச்சித்திட்டமானது, ஏனையவற்றுக்கிடையில் பின்வருவனவற்றையும் உள்ளடக்குகின்றது.

- தேசிய கழிவு முகாமைத்துவ கொள்கையொன்றை தயாரித்தல்.
- கழிவு முகாமைத்துவத்தில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு இயலுமை விருத்தியையும் விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
- நடைமுறையில் உள்ள கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தை மேம்படுத்தும் முகமாக உள்ளூர் அதிகார சபைகளுக்கு தொழில்நுட்ப உதவி மற்றும் வளங்களை ஏற்பாடு செய்து புதிய முன்னெடுப்புக்களை ஆரம்பிக்க வழிசமைத்தலும்.
- வளங்களை நகர்த்தி அவற்றின் உச்ச பயனை பெறுவதன் மூலம் கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அனுசரனை வழங்கள்.
- கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தை கண்காணித்தல்.
- பொறுப்புள்ள தரப்பினரின் இணக்கப்பாடற்ற நடவடிக்கைகளுக்கு பரிகாரம் காணும் வகையில் நீண்ட கால சட்ட நடவடிக்கைகள் மூலமான அனுகுமுறை.

'பிலிசறு' நிகழ்ச்சித்திட்டம் இலங்கையில் திண்ம கழிவை முகாமைத்துவம் செய்வதற்கான தேசிய அனுகுமுறை, என தலைப்பிடப்பட்ட சுற்றாடல் இயற்கை வளங்கள் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை நிருபத்திற்கிணங்க அமைச்சரவையால் 2008 டிசம்பர் 19 ஆம் திகதி வழங்கப்பட்ட அங்கீகாரத்தை தொடர்ந்து 2008, சனவரி 1 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு 'பிலிசறு' தேசிய திண்ம கழிவு முகாமைத்துவ கருத்திட்டம் (பி.சு) ம.சு.அ யில் தாபிக்கப்பட்டது.

பிலிசறு நிகழ்ச்சித்திட்டத்தின் நடைமுறையாக்கலுக்கான ஒட்டு மொத்த வழிகாட்டலானது தி.க.மு (தேசிய பிலிசறு மேடை) பற்றிய உயர்மட்ட குழுவொன்றால்,சுற்றாடல் மற்றும் இயற்கை வனங்கள் அமைச்சு, உள்ளூராட்சி அதிகார சபைகள் மற்றும் மாகாண சபைகள் ஆகியவற்றின் செயலாளர்களின் இணைத் தலைமைத்துவத்துடன் வழங்கப்படுகின்றது,ஆரம்பத்தில் பிலிசறு நிகழ்ச்சித்திட்டமானது, மத்திய சுற்றாடல் அதிகார சபையில் 'பிலிசறு' கருத்திட்டம் என தலைப்பிடப்பட்ட கருத்திட்ட வடிவில் தாபிக்கப்பட்டு 2008 ஆம் ஆண்டிலிருந்து 3 வருடங்களுக்கு நடைமுறைபடுத்தப்பட்டது. ரூபாய் 5.675 மில்லியன் நிதி ஏற்பாடுகளானது பிரதானமாக பொது திறைசேரியிடமிருந்து பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சு (சு.இ.வ) 2008- 2010 காலகட்டத்தில் நடைமுறையாக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்டு இருந்த பணியின் நோக்கெல்லையின் பரிமாணம் மற்றும் வியக்கத்தக்க அளவையும் கருத்திற் கொண்டு, பிலிசறு நிகழ்ச்சித்திட்டத்தின் கருத்திட்ட அறிக்கையின் கீழ் இனங்காணப்பட்ட கருத்திட்ட செயற்பாடுகளை நேரகாலத்திற்கு நிறைவேற்றுவதை உறுதி செய்யும் முகமாக விஷேட பொருப்புக்கள் ஒப்படைக்கப்பட்ட அர்ப்பணிப்புள்ள கருத்திட்ட பணியாற்களுடன் மத்திய சுற்றாடல்அதிகாரசபையில் “ பிலிசறு கருத்திட்டம்” தாபிப்பதற்கான ஏற்பாடுகளை செய்தது. இத்திட்டத்தின் முக்கியத்துவம் மற்றும் காலத்தின் தேவையையும் கருத்திற் கொண்டு, அமைச்சரவையானது இக்கருத்திட்டத்தை மேலும் மூன்று வருடங்களுக்கு 2011 சனவரி 1 இல் இருந்து நீட்டிப்பதற்கான அங்கீகாரத்தை வழங்கியது.

அதற்கிணங்க, மூன்று வருடங்களுக்கான (2011-2013) நடவடிக்கை திட்டமொன்றை வடிவமைத்துள்ளதுடன், இதுவரையில் நிறைவடையாத செயற்பாடுகளும் அதில் கூட்டிணைக்கப்பட்டன.

## 15.3 தேசிய திண்மக் கழிவு முகாமைத்துவ கொள்கை.

பிலிசறு முன்னெடுப்பின் ஓர் பகுதியாக, சு.இ.அ திண்ம கழிவு முகாமைத்துவம் பற்றிய தேசிய கொள்கையொன்றை ஒக்டோபர் 2007 இல் வடிவமைக்க நடவடிக்கை எடுத்துள்ளதுடன் திண்ம கழிவு முகாமைத்துவம் பற்றிய தேசிய கொள்கையை நடைமுறைபடுத்துவதற்காக புதிய தேசிய கழிவு முகாமைத்துவ மூலோபாயங்களை வரைவு செய்துள்ளது. தற்சமயம், சம்பந்தப்பட்ட பிரதேசங்களில் பொருத்தமான கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு மூலோபாயங்களை செயற்பாடுகளாக பரிமாற்றம் செய்ய வேண்டிய தேவை மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு உள்ளூராட்சி அதிகாரசபைகளின் முழுமையான ஈடுபாட்டையும் ஒத்துழைப்பையும் பெறவேண்டிய அவசரமான தேவையொன்றும்எழுந்துள்ளது. பிலிசறு நிகழ்ச்சித்திட்டமானது மூலோபாயங்களை செயற்பாடாக பரிமாற்றம் செய்வதில் சவால்களை எதிர்கொள்கின்றது.

## 15.4 நோக்கங்கள்

பிலிசறு நிகழ்ச்சித்திட்டத்தில் ஐந்து பிரதான நோக்கங்கள் காணப்படுகின்றன.

- திண்மக் கழிவு முகாமைத்துவம் பற்றிய தேசிய கொள்கையொன்றை விருத்தி செய்தல்.
- தி.க.மு பற்றிய தேசிய மூலோபாயம் ஒன்றை விருத்தி செய்தல்.
- அனைத்து பங்குதாரர்களுக்கும் பயிற்சி மற்றும் இயலுமை கட்டியெடுப்பல் உள்ளடங்கலான தி.க.மு பற்றிய பயனுறுதியான கல்வியும் விழிப்புணர்வும் வழங்கள்.

- தி.க.மு கருத்திட்டங்கள்/ நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறையாக்கலுக்கு உள்ளூராட்சி அதிகாரசபைக்கான அனுசரனை வழங்கள்
- பயனுறுதியான சட்ட அமுலாக்களை மேம்படுத்தலுக்கான சட்ட மறுசீரமைப்பு மேற்கொள்ளல்.

பங்குதாரர்கள் முகம் கொடுக்கும் தற்போதைய திண்ம கழிவு பிரச்சினைகள் மற்றும் சிக்கல்கள், நாட்டின் ஒட்டுமொத்த திண்ம கழிவு மேம்பாடு, உடனடியான சுத்திகரிப்பு மற்றும் எச்சங்களை சுற்றாடல் சிநேக பூர்வமான முறையில் அகற்ற போன்ற பாரிய சிக்கல்கள், ஆகியவற்றை கருத்திற் கொண்டே இந் நோக்கங்கள் வடிவமைக்கப்பட்டன.

## 15.5 நோக்கெல்லை.

இவ்வாறான சூழ்நிலையில் திண்மக் கழிவானது வீட்டுக் கழிவுகள், வர்த்தக கழிவுகள். சந்தை கழிவுகள், நிறுவன மற்றும சில கைத்தொழில்களின் கழிவுகள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு (உ.அ) உரித்தாக்கப்பட்டுள்ள பொது இடங்களில் உற்பத்தியாகும் கழிவுகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது. பிலிசறு கருத்திட்டத்தின் நோக்கெல்லையானது பின்வரும் பிரதான செயற்பாடுகளை பொதுவாக உள்ளடக்குகின்றது.

### i. உள்ளூராட்சி அதிகாரசபைகளினால் திண்மக்கழிவு அகற்றல் பற்றிய தகவல்கள் சேகரிப்பு

தற்போதைய கழிவு அகற்றல் முறைகள், உ.அ கலால் கைவிடப்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கிடைக்கக் கூடியதாகவுள்ள வளங்கள் பற்றிய தகவல்கள் என்பன திட்டமிடல் நோக்கங்களுக்காக சேகரிக்கபடுகின்றன. இத் தரவுகளை சேகரிக்கும் செயற்பாட்டில், ம.சு.அ யின் பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர்களின் உதவி ம.சு.அ யின் மாகாண மற்றும் மாவட்ட அலுவலகங்களின் வலைப்பின்னல் மூலம் பெறப்படுகின்றது.

### ii. கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு

அதிகாரசபைகளால் மதிப்பீடு செய்யப்பட்டு, அவற்றை நடைமுறைபடுத்துவதற்கு தேவையான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்படுகின்றன. முன்மொழிவுகளின் வெற்றிகரமான நடைமுறையாக்கத்திற்கு மதிப்பீட்டு நடைமுறையொன்று உருவாக்கப்பட்டு, பல்வேறு தொழில்நுட்ப நிபுணத்துவர்களிடமிருந்து உதவியும் நாடப்படுகின்றது.

### iii. கழிவு மீள்சுழற்சி வங்கி முறைமை தயாரித்தல்

கழிவு வங்கி முறைமை நடைமுறையாக்கல் சாத்தியம் பற்றி சனச அபிவிருத்தி வங்கியுடன் பிலிசறு கருத்திட்டம் பேச்சுவார்த்தையில் ஈடுபடுகின்றது. வங்கியானது மீள்சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய கழிவுகளை சேகரிப்பதுடன், விஷேடமாக பிலாஸ்டிக் மற்றும் பொலித்தீன் வகைகளை கணக்கு வைத்திருப்பவர்களிடம் இருந்து சேகரித்து அதற்கு நிகரான மதிப்புத் தொகையை அவர்களின் பெயர்களில் வைப்பீடு செய்கின்றது. இதனைத் தொடர்ந்து வங்கியானது இவ்வாறு சேகரிக்கப்பட்ட கழிவினை மீள்சுழற்சியாளர்களுக்கு ஒழுங்கான முறையில் வங்கியின் செலவினங்களுக்காக பெயரலவிலான இலாபத்தை வைத்துக்கொண்டு விற்பனை செய்கின்றது. உண்மையில் சனச வங்கியுடன் இணைந்து பிலிசறு கருத்திட்டம் அறிமுகப்படுத்திய இத்திட்டமானது ஆக்கப்பூர்வமான அணுகுமுறையொன்றாகும்.

**iv. கழிவு சேகரிப்பு நிலையங்களை தாபித்தல்.**

**v. தொழில்நுட்ப ஆதரவு, நிறுவன மேம்பாடு மற்றும் இயலுமை கட்டியெழுப்பல்.**

**vi. உலோகம், பிலாஸ்டிக், கண்ணாடி மற்றும் காகித கழிவுகள் சேகரிப்பு வலையமைப்பை தாபித்து மீள்சுழற்சியை மேம்படுத்தல்.**

பிலாஸடிக் கழிவு, உலோகம், கண்ணாடி, மற்றும் காகிதம் என்பன மீள்சுழற்சிக்கு பயன்படுத்தப்படும் விரும்பத்தக்க பொருட்களாகும். தற்போது அதிகரித்துவரும் தனியார்துறை நிறுவனங்கள் பிலாஸ்டிக் மற்றும் காகித சேகரிப்பு சேவைகளை வழங்கிவருகின்றன. கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களாவன விஷேடமாக பாடசாலைகள், சமூக நிறுவனங்கள் மற்றும் மகளிர் சங்கங்கள் ஊடாக ஆரம்பிக்கப்படுகின்றன. கழிவுப் பொருட்களை அதிகளவில் மீள்சுழற்சிக்கு உட்படுத்துமாறு உள்ளூராட்சி அதிகாரசபைகள் ஊக்குவிக்கப்படுகின்றன.

**vii. உள்ளூராட்சி அதிகார சபை மட்டத்தில் செயற்கைப் பசளை பொறித் தொகுதிகளை தாபித்தல்**

திறந்த வெளிகள் மற்றும் நீர் நிலைகளில் திண்மக் கழிவுகளை முறையற்ற விதத்தில் கொட்டுவதால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு விஞ்ஞான ரீதியாக ஏற்றுக் கொள்ளத்தக்க நியாயமான தீர்மாணமொன்றை காணும் முயற்சியாக், தி.க.மு பற்றிய தேசிய குழவினால் தாபிக்கப்பட்ட தொழில்நுட்ப குழு உறுப்பினர்களின் நிபுணத்துவ அறிவின் மூலம் செயற்கை பசளை பொறித் தொகுதியொன்றையும சுற்றாடல் நேயமிக்க கழிவு அகற்றல முறையொன்றையும்தாபிப்பதற்கான முன்னெடுப்பை பிலிசறு கருத்திட்டம் எடுத்துவருகின்றது.

**viii. கழிவு எச்சங்களை அகற்றுவதற்கான சுகாதாரமான குப்பை நிரப்பு அமைவிடங்களை குறைந்த செலவில் நிர்மாணித்தல்.**

சுற்றாடலுக்கு உகந்த முறையில் இறுதிக் கழிவை அகற்றுவதற்காக வடிவமைக்கப்பட்ட அமைவிடமே சுகாதார குப்பை நிரப்பு அமைவிடமாகும். இவ்வடிவமைப்பானது எண்ணெய் கசிவுக் கழிவுத் திரவம், எரிவாயு, கழிவகற்றல் பரப்பிற்கான தினசரி பாதுகாப்பு (மூடி) வழிந்தோடும் மற்றும் இயக்க நீர் மாற்றுவழி ஆகியவற்றை உள்ளடக்குவதுடன் மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீர் மாசடைதளையும் இவை குறைக்கும். பிலிசுறு கருத்திட்டமானது பல சுகாதாரமான குப்பை கொட்டும் அமைவிடங்களை தாபிக்க திட்டமிட்டுள்ளதால் உள்ளூராட்சி அதிகாரசபைகள் அவற்றை பயன்படுத்தி கொத்தனி முறையிலான கழிவு எச்சங்களை அகற்றும் முறைமைக்குச் செல்லலாம்.

**ix. வீட்டில் செயற்கைப்பசளை தயாரிப்பை ஊக்குவித்தல்**

வீட்டு செயற்கை பசளை தயாரிப்பானது பொதுவாக சபையல் அறை மற்றும் வீட்டுத் தோட்டத்தில் இருந்து தோற்றுவிக்கப்படும் ஒப்பிட்டளவில் சிறிய அளவிளான சேதனப் பொருட்களை உள்ளடக்குகின்றது. ஓர் தொட்டியை அல்லது குழியொன்றை உபயோகிப்பதன் மூலம திறந்த சிறிய குவியல் ஒன்றில் இழக்கப்படும் வெப்பம் மற்றும் ஈரப்பதத்தைத் தக்கவைத்துக் கொள்ளலாம். கொள்கலன் ஒன்றின் நன்மையானது யாதெனில் அது சுத்தமாக இருப்பதுடன் வதிவடப் பிரதேசத்திற்கும் உகந்ததாகும். எனவே பிலிசறு கருத்திட்டமானது மானிய முறையில் உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு தொட்டிகளை வழங்கி வீட்டு செயற்கை பசளை தயாரிப்பை ஊக்குவிப்பதற்கு ஏற்பாடுகளை செய்கின்றது.

**x. முறையற்ற திண்மக் கழிவு முகாமைத்துவ ( தி.க.மு) நடைமுறைகளை தொடர்ந்தும் பின்பற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகளை கண்காணித்தலும் சட்ட நடவடிக்கை எடுத்தலும்.**

பிலிசறு கருத்திட்டமானது அதன் இறுதி நடவடிக்கையாக முறையான தி.க.மு நடைமுறைகளை பின்பற்றாத உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் நடவடிக்கையை ஆரம்பிக்கும், பிலிசறு கருத்திட்டத்தின் நிதியுதவியுடன் உள்ளூராட்சி அதிகாரசபைகளால் நடைமுறைப்படுத்தப்படும் தி.க.மு நிகழ்ச்சித்திட்டத்தின் ஒழுங்கான மதிப்பீடு மற்றும் கண்காணிப்பானது, உள்ளூராட்சி அதிகார சபை உறுப்பினர்கள், ம.சு.அ யின் மாவட்ட சுற்றாடல் உத்தியோகத்தர், பொது சுகாதார பரிசோதகர் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய பணியாட்களை உள்ளடக்கிய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு குழவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

## 15.6 பிலிசறு செயற்திட்டம்.

பிலிசறு கருத்திட்டத்தின் மூன்று வருட (2008-2000 மற்றும் 2011-2013) திட்டங்களுக்கு மேலதிகமாக, சம்பந்தப்பட்ட வருடங்களுக்கான வருடாந்த செயற்திட்டங்களும் தயாரிக்கப்படுகின்றன. அதற்கிணங்க, சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ளும் வரவு செலவுத் திட்டத்தின் அனைத்து செயற்பாடுகளும் நிறைவேற்றப்படும் வகையில் 2010 ஆம் ஆண்டின் பிலிசறு செயற்திட்டம் தயாரிக்கப்பட்டது. அதன் நடைமுறையாக்கல் காலகட்டத்தில் எதிர்கொள்ளப்பட்ட மாற்றங்களை அவ்வப்போது சீராக்கும் முகமாக பல திருத்தங்களுக்கு உட்பட்டது.

அவ்வாறே, வருட ஆரம்பத்தில் திட்டமிடப்பட்ட பல செயற்பாடுகளும், அவற்றுடன் தொடர்புடைய வரவு செலவுத்திடட்மும் பின் கட்டங்களில் ஏற்பட்ட தேவைகளை கூட்டிணைக்கும் முகமாக (விஷேடமாக பிலிசறு கருத்திட்ட கட்டுப்பாட்றிற்கு அப்பாலான பல சிக்கல்களையும் பிரச்சினைகளையும் தீர்க்கும் முகமாக) அவற்றின் நடைமுறையாக்கல் காலத்தில் மாற்றத்துக்கு உட்படுத்தப்பட்ட வேண்டியதாயிற்று. அவ்வாறான மாற்றங்களுக்கு தேவைக்கிணங்க, தேசிய பிலிசறு பீடம்/ ம.சு.அ முகாமைத்துவ சபை ஆகியவற்றின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

## 15.7 பிலிசறு கருத்திட்டத்தின் முன்னேற்றம்

பிலிசறு கருத்திட்டத்தின் முன்னேற்றமானது 2012 ஆம் ஆண்டின் செயற்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒவ்வொரு செயற்பாட்டின் கீழும் தெரிவுக்காகவும் எளிதில் புரிந்துக்கொள்வதற்காகவும் கொடுக்கப்பட்டுள்ளன. இருப்பினும், சில செயற்பாடுகள் மிகவும குறைந்த முன்னேற்றத்தை காட்டுவதையும் ( சில சூழ்நிலைகளில் முன்னேற்றமே அற்ற தன்மை) வலியுறுத்திக் கூற வேண்டியுள்ளது. இதன் காரணம் யாதெனில பொது திறைசேரியிடமிருந்து கிடைக்கப்பெற்ற வரையறுக்கப்பட்ட மூலதனம் ஆகும்.

இவ்வாறே, பிலிசறு கருத்திட்டமானது, செயற்திட்டத்தில் உள்ளடக்காத பல தேசிய நிகழ்ச்சித்திட்டங்களுக்கான மனிதவளம் மற்றும நிதிசார் ஆதரவை வழங்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டது.

### 15.7.1 செயற்கை பசளை பொறித் தொகுதிகளை ( பாரிய கருத்திட்டங்கள்) நிர்மானித்தல்.

**பாரிய செயற்கைப் பசளை பொறித் தொகுதிகளின் முக்கியத்துவம்.**

- **சுமையிறக்கல் மற்றும வகைப்படுத்தல் பகுதி**

கொண்டுவரப்பட்ட கழிவுகள் இறக்கப்பட்டு செயற்கை பசளைக்கு உகந்த கழிவாக வகைப்படுத்தப்பட்டு அருகிலுள்ள கழிவு அகற்றும அமைவிடத்திற்கு அனுப்பப்படவேண்டியுள்ளது. எனவே இவ்விடங்கள் எளிதில் அணுகக்கூடியதாகவும், மறைமுக அடுக்குப் பகுதிகளுக்கு அருகிலும்

நிர்மாணிக்கப்படுகின்றது. அதனைத் தொடர்ந்து உயிர் மக்கக் கூடிய கழிவுகள் அவ்வமைவிடத்திற்கு அனுப்பப்படுகின்றது.

- **திறந்த அடுக்குப் பிரதேசங்கள்**

கழிவுகள் இறக்கப்பட்டு வகைப்படுத்தப்பட்ட பின்னர், அவை கொங்கிரீட் திட்டொன்றில் (மேல் வானத்திற்கு திறந்த வகையில்) அடுக்காக ஒழுங்கமைக்கப்படுகின்றன். செயற்கை பசளையாக்கல் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு, ஆரம்பத்தில் கழிவை அடுக்கும் பகுதியே (கூரையற்ற) திறந்த அடுக்குப் பகுதியாகும். கூரை இல்லாததன் காரணமாக சூரிய ஒளியானது நேரடியாக கழிவு அடுக்குகளை சென்றடையக்கூடியதாகவுள்ளதுடன் இதன் மூலம் அடுக்குகளில் வெப்பம் அதிகரிக்கப்படுவதுடன், கழிவுகளின் உயிர்வழிவேண்டுகிற நுண்ணுயிர் செரிமானம் (செயற்கை பசளை) கலப்பு உரத்திற்கு செல்வது ஊக்குவிக்கப்படுகின்றதுடன் அடுக்குகளுக்கு தேவையான ஈரப்பத உள்ளடக்கத்தை வழங்குவதற்கான வாய்ப்பு மழைநீருக்கும் அளிக்கப்படுகின்றது.

அத்துடன் ஈக்குஞ்சுகளின் விருத்தியை குறைக்கவும மற்றும் முட்டைப்புழுக்களின் உயிரியல் ரீதியான கட்டுப்பாட்டை பறவைகள் மூலம் பேணவும் முடிகின்றது. திறந்த அடுப்பு பகுதி மற்றும் மறைமுக அடுக்குப் பகுதிகள் ஆகியவற்றுக்கு இடையிலான இடைவெளியின் விகிதம் முறையே 60:40 ஆக இருத்தல் வேண்டும்.

- **மறைமுக அடுக்குப் பிரதேசம்**

வகைப்படுத்தப்பட்ட கழிவானது இறுதியாக மறைமுக அடுக்குப் பகுதிக்கு கொண்டு வரப்படுவதால் இக்கட்டிடமானது சுமை இறக்கும் மற்றும் வகைப்படுத்தல் பகுதிக்கு அண்மையில் நிர்மாணிக்கப்படல் வேண்டும். கழிவுகள் பசளையாக்கப்படும் வகையில் அடுக்குகளாக பிரிக்கப்படுவதுடன், மற்றைய அனைத்து செயற்பாடுகளும் இங்கு இடம் பெறுகின்றன.

மத்தியில் அமைந்துள்ள வேதிப் பொருட்கள் கலந்த கழிவுநீர் சேகரிப்பு கால்வாய்க்கு வேதிப்பொருட்கள் கலந்த கழிவுநீர் வந்து சேருமாறு மத்தியில 1:80 விகித சரிவு அமையுமாறு தரையானது நிர்மாணிக்கப்படுகின்றது.

- **பொதியிடல் மற்றும் கலஞ்சியப் பகுதி**

உற்பத்தியாக்கப்பட்ட செயற்கை பசளையை இவ்விடத்தில் இருந்து அகற்றப்படும் வரை அவை பொதியாக்கப்பட்டு கலஞ்சியப்படுத்தப்பட வேண்டும். தேவையேற்படின் சலிப்பதற்கும், கீற்றுக்களாக்குவதற்கும் இடவசதியளிக்கப்பட்டுள்ளது.

- **வசதிகளை கட்டியெழுப்பல்**

தொழிலாளர்களுக்கு வசதியளிக்கும் வகையில் நிர்மாணிக்கப்பட்ட இப்பகுதியானது ஆண்களுக்கும் பெண்களுக்கும் வெவ்வேறான ஓய்வு அறைகளையும் குளியலறைகளையும் கெண்டுள்ளது. அவர்கள் முழநாளும் கழிவுகளுடன் பணியாற்றவும், அவற்றை மணக்கவும் வேண்டியுள்ளதால், வீடு திரும்புவதற்கு முன்னர் அவர்கள் தம்மை சுத்தம் செய்ய வேண்டிய போதுமான வசதிகளை செய்து கொடுக்க வேண்டும். இச்செயற்பாடானது இப்பணி தொடர்பான அவர்களின் உற்சாகத்தை உயர்த்தும் எனவும், நபர்கள் இத்துறையை நாடி வருவதற்கு ஊக்கமளிக்கும் எனவும் கருதப்படுகின்றது.

- **பிரதான அலுவலகம்**

இவ் அலுவலகமானது நிர்வாகத்தை மேற்கொள்ளும் வெளித்தரப்புடன் ஒத்துழைக்கும் முகமாகவும் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. அலுவலகத்திலிருந்து அமைவிடத்தின் முழுத் தோற்றத்தையும் காண்பதற்கு, அனுமதியளிக்கும் ஓர் இடத்திலேயே இந்த அலுவலகம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

- **காவலாளியின் சூழல்**

உபகரணங்கள் மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட செயற்கைப் பசளைக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் கண்காணிப்பை மேற்கொள்ளும் முகமாக நுளைவாயிலுக்கு அருகில் காவலாளியின் குடில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. ஒட்டு மொத்த அமைவிடத்தின் தோற்றத்தையும் காணும் வகையிலான ஓர் இடத்தில் இது அமைந்துள்ளது.

- **வேதிப் பொருட்கள் கலந்த கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமை**

செயற்கை பசளைக் குவியல்களில் இருந்து உற்பத்தியாகும் வேதிப் பொருட்கள் கலந்த கழிவுநீரை சேகரிப்பதற்கான முறையான வடிகால்களும் குழாய்களும் நிர்மாணிக்கப்பட வேண்டியுள்ளதுடன் செயற்கை பசளையாக்கல் செயல்முறைக்கு மீண்டும் உபயோகிக்பதற்காக வேதிப் பொருட்கள் கலந்த கழிவுநீர் தொட்டியில் சேகரிக்கப்படவும் வேண்டும்.

- **சிறந்த உள்ளகப் பாதை வலையமைப்பு**

பாரிய செயற்கை பசளை பொறித்தொகுதி பகுதிகளில் நிறைய கனரக வாகனங்கள் சேகரிப்பு வேளைகளில் கழிவுகளை ஏற்றிக்கொண்டு அமைவிடத்தைச் சுற்றி நகர்வதும், வாகனப் போக்குவரத்து இடம் பெறுவதும் தவிர்க்க முடியாதுள்ளது. எனவே, பாதை வலையமைப்பானது வாகனங்களை தடுத்து நிறுத்துவதாகவும் வாகன நகர்வின் சுமூகமான செயற்பாட்டை தாக்கும் ஆற்றல் உடையதாகவும் இருத்தல் வேண்டும்.

- **வட்டப்புற வேலி**

அமைவிடத்திற்குள் நுலைத்து கழிவுகளை குழப்பும் சுற்றித் திரிகின்ற விலக்குகளை தடுத்து நிறுத்துவதற்கான வேலியொன்று அவசியமாகின்றது. அத்துடன் இவ்வேலியானது வாகனங்கள், பொறித் தொகுதியில் உள்ள இயந்திரங்கள் ஆகியவற்றிற்கு பாதுகாப்பளித்துடன் துப்புரவு நடவடிக்கையையும் தடுக்கின்றது.

## இடைத்தடுப்பு வலயம்

கழிவு கொட்டப்படும் இடமொன்றை பார்க்கும் மக்களுக்கு அதிலிருந்து துர்நாற்றமொன்று வெளிவராது இருப்பினும் அழுகிய மணமொன்று வெளிவருகின்றது என்ற உணர்வு ஏற்படுகின்றது. இதுவொரு உளவியல் ரீதியான உண்மையென்பதுடன், இதன் காரணமாகவே கழிவு முகாமைத்துவ கருத்திட்டங்களுக்கு பொதுமக்களின் எதிர்ப்பும் ஏற்படுவதுண்டு. எனவே, பசளையாக்கல் பொறித் தொகுதியின் தோற்றத்தை மறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டியதுடன், அமைவிடத்தை சுற்றியும் இடைத்தடுப்பு அமைப்பொன்றை உருவாக்குவதற்கு மரநடுகையும் இடம் பெறுகின்றது. இச் செயற்பாடானது அமைவிடத்திலிருந்து தூசி, கழிவுப் பொருட்கள் வெளியேறுவதையும் தடுக்கின்றது.

ஏனைய செயற்கைப் பசளை கருத்திட்டங்களை பொருத்தவரை, அவற்றுக்கான நிதியுதவியை வழங்குவதற்கு முன்னர் தொழில்நுட்ப வலிமை மற்றும ஒழுங்கமைப்பு ஆகியவற்றை உறுதி செய்யும் முகமாக தொழில்நுட்ப மதிப்பீட்டு செயல்முறையொன்று மேற்கொள்ளப்பட்டது.

பிலிசறு கருத்திட்ட உத்தியோகத்தர்களால் கருத்திட்ட அமைவிடம் பற்றிய பூர்வாங்க விசாரணை யொன்று மேற்கொள்ளப்பட்டதை தொடர்ந்தே இந்த மதிப்பீட்டு செயல்முறை ஆரம்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பிலிசறு தேசிய கட்டமைப்பினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட (தொழில்நுட்ப உபகுழு என அழைக்கப்பட்ட) நிபுணத்துவ குழுவொன்றினால் கருத்திட்ட முன்மொழிவுகளின் நுண்ணாய்வு தொழில்நுட்ப மதிப்பீடும் இடம் பெற்றது. பிலிசற கருத்திட்டத்தினால் நிதியுதவி அளிக்கப்பட்ட எந்தவொரு கருத்திட்ட முன்மொழிவுகளின் திட்டமிடல் மற்றும் நடைமுறையாக்கல் தொடர்பில் பின்பற்றப்பட்ட முக்கிய நடவடிக்கைகளாவன பின்வருமாறு.

- எண்ணக்கரு அபிவிருத்தி.
- கருத்திட்ட முன்மொழிவு தயாரிப்பு
- சுற்றாடல் அனுமதியை பெற்றுக் கொள்ளல்
- உள்ளுர் அதிகாரசபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளல்
- காணியுடன் தொடர்புடைய மண் பரிசோதனை மற்றும் ஏனைய பரிசோதனை அறிக்கைகளை பெற்றுக் கொள்ளல்.
- எல்லை அளவையை நிறைவு செய்தல்
- வடிவமைப்பு ( அனைத்து கட்டிடங்களையும் திட்டமிட்டு வடிவமைத்தல்)
- உடன்படிக்கை தயாரிப்பு
- உடன்படிக்கை கைச்சாத்திடல்
- நிர்மாணங்களை ஆரம்பித்தல்
- கண்காணிப்பு மற்றும முன்னேற்ற மீளாய்வு
- அமைவிடத்தை கையளித்தல்

சில செயற்கை பசளை பொறித் தொகுதிகள் 2001 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு இருப்பினும், அவற்றின் வசதிகளை பேணுவதற்கு அல்லது மேம்படுத்துவதற்கு 2012 ஆம் ஆண்டிலும் தொழில்நுட்ப மற்றும நிதியுதவிகளை பிலிசறு கருத்திட்டம் தொடர்ந்தது.

**அ. கொலன்னாவ, பொத்துவில் தும்புற செயற்கைப் பசளை பொறித் தொகுதி.**



2011 ஆம ஆண்டில் இதன் நிர்மாணப் பணி முடிவுக்கு வந்துள்ளதுடன், ஒப்பந்தக்காரர் குறைபாடுகள் பொறுப்புக்கூறல் காலம் 2012 ஆண்டுவரையில் உள்ளது.

**ஆ. களுத்தறை, போரவத்தையில செயற்கை பசளை பொறித் தொகுதி**



கட்டுமானம் 2011 இல் முடிவடைந்தது. ஒப்பந்தக்காரரின் தவறுகள் திருத்த பொறுப்புடைய காலமும் 2013ல் முடிவடைந்தது. நியைய செயற்பாடுகள் கண்காணிக்கப்பட்டன. வேறாக்கப்பட்ட கழிவு 4 உள் ஊராட்சிசபைகளில் இருந்து கொண்டுவரப்பட்டன. நியையத்தில் தயாரிக்கப்படும் உரத்தினை விற்பதற்கான திருப்தியான பொறிமுறை பெறப்பட்டு, நிலைய வளாகமானது சிறப்பாக பேணப்பட்டது. சோளம் விளைவிப்பதற்கான உரத்தின் சோதனைப்பிரயோகத்திற்கான புது ஆய்வு ஆரம்பிக்கப்பட்டு உள்ளது. லீசர் ஆனது கழிவு பைல்களில் அதி உச்ச ஈரப்பதனை பேணுவதற்காக மீளப்பயன்படுத்தப்பட்டது. தெங்கு ஆய்வு நிறுவகத்தால் உரத்தின் தரம் பரிசோதிக்கப்பட்டது. அத்துடன் இந்த உரமானது, தெங்கு விளைவிப்பிற்கு பிரயோகிக்கக்கூடியது என உறுதிபடுத்தப்பட்டது. இந்த கண்டுபிடிப்பிற்கு ஏற்ப, தெங்கு விளைவிப்பு சபையானது அனைத்து பிராந்திய முகாமையாளர்களுக்கும் இந்த உரத்தை தென்னை விளைவிப்புக்கு பயன்படுத்த அறிவுறுத்தியது.

**இ. அநுராதபுரம், நுவரகம்பலாத கீர்த்தி குளம் செயற்கை பசளை பொறித் தொகுதி**

2011இல் உரத்தயாரிப்பு நிலையத்திற்கு அணுகல் வீதி மேம்படுத்தப்பட்டது மற்றும் வீதியின் பிற பகுதியின் மேம்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**ஈ. ரஜகமை மொன்ரோவியாவத்தை செயற்கை பசளை பொறித் தொகுதி**



உரத்தயாரிப்பு நிலையத்திற்கான அணுகல் வீதி 2012ல் ஆரம்பிக்கப்பட்டது. இதற்காக ரூ. 34.0 மில்லியன் மதிப்பிடப்பட்டது. ரஜ்கம பிரதேச சபை மூலமாக கட்டுமான பணியானது அமுல்படுத்தப்படுகிறது மற்றும் பௌதிக செயற்பாட்டு முன்னேற்றமானது 2013ல், 80 வீதம் உயர்ந்துள்ளது. உள் நாட்டு அரசாங்க திணைக்களத்தால் (தென் மாகாணம்) இந்த உரத்தயாரிப்பு நிலையத்தொகுதியானது செயற்படுத்தப் படுகின்றது. ஓகஸ்ட் மாத இறுதியில் தென் மாகாண முதலமைச்சர், டி.எல்.ஜி.எஸ்.பி இன் கண்காணிப்பின் கீழ் இருந்த செயற்பாடு மற்றும்

பேணுகையைகாலி எம்சி மற்றும் ரஜ்கம பிஎஸ்க்கு ஒரு ஒப்பந்தத்தின் மூலம் வழங்கத் தீர்மானித்தார். இரு ஊராட்சிசபைகளின் தலைவர்களும் இணைத்தலைவர்களாக ஒரு முகாமைத்துவ குழு அமைக்கப்பட்டது. பிலிசரு செயற்றிட்டமும் இதில் ஒரு உறுப்பினராக உள்ளது.

**உ. குருணாகல் மாநகரசபை, சுன்தரபொலவிற்கான செயற்கைபசளை பொறித் தொகுதி.**

குருநாகல் மாநகர சபை மற்றும் குருநாகல் பிரதேச சபை ஆகிய இரண்டும் வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில் உள்ளன. இவ்விரண்டினதும் மொத்த அளவு முறையே 11.3 மற்றும் 327 சதுர கிலோமீற்றர்களாகும். எம்சி மற்றும் பிஎஸ் இன் மொத்த சனத்தொகை 190,438. குருநாகல் மாநகரசபையால் பொறியியல் திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு வேலைகள் நடத்தப்படுகின்ரன. தினமும் சேகரிக்கப்படும் 42 எம்டி திண்மக்கழிவை முகாமை செய்வதற்காகவும் தினமும் 20 கனமீட்டர் உள் வீட்டு சாக்கடைத்தாங்கி சாக்கடையை பரிகரிக்க மற்றும் முகாமை செய்யவும் இந்த உரத்தயாரிப்பு நிலையம் வடிவமைக்கப்பட்டு உள்ளது.

மாநகர பொறியியலாளர் மற்றும் அவருடைய பொறியியல் ஊழியர்கள் கட்டுமானத்தை மேற்பார்வை செய்வதோடு, குருநாகல் மாநகரசபையின் பரிந்துரையுடன் பிலிசரு செயற்றிட்டத்தினால் கட்டுமானம் மீதான உள் வீட்டு கண்காணிப்புக்காக பொறியியல் உதவியாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டார்.ஒப்பந்தக்காரர் கட்டுமானத்தை முடித்தர். உரத்தயாரிப்பு நிலையம் மற்றும் சாக்கடை பரிகரிப்பு முறைமை ஆகியவற்றை ஆரம்பிப்பதற்காக இடமானது கே.எம்.சி யிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிலையமானது கழிவு இறக்கல், பிரித்தல் பிரதேசம், திறந்த பைலிங் பிரதேசம், மூடிய பைலிங் பிரதேசம், அகற்றல் மற்றும் பெறுமதி சேர்த்தல் பிரதேசம், உரம் மற்றும் மீள்சுழற்சிப்பொருட்களுக்கான களஞ்சியம், ஊழியர் ஓய்வு அறைகள், கழிவறைகள், நீர்த்தாங்கிகள், கண்காணிப்பாளர் குடில், அலுவலகம், சாக்கடை பரிகரிப்பு நிலையம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

**யாழ்ப்பாணத்தில் செயற்கைப் பசளை பொறித் தொகுதி**

யாழ்ப்பாண மாநகர சபைக்கான உரத்தயரிப்பு நிலையத்தின் விரிவாக்க திட்டமிடலுக்காக மண் பரிசோதனை நடத்தப்பட்டது. ஜே.எம்சி இன் கௌரவ நகரபிதா மற்றும் மாநகர பொறியியலளர் உடன், உரத்தயாரிப்பு நிலையத்திற்கான திட்டமிடலை ஆரம்பிப்பதற்கு என்றும் ஏற்கனவே உள்ள நிலையத்தின் பிரச்சனைகளை நீக்கி அதன் செயற்பாட்டை தொடர்தல் பற்றியும் ஒரு கலந்துரையாடல் நடத்தப்பட்டது.



**ஏ. தொம்பே, மாளிகாவத்தை செயற்கை பசளை பொறித் தொகுதி**

கழிவு நிலநிரப்பல் வேலைகளின் மீதியை முடிப்பதற்காக மளிகவத்தை, தொம்பேயில் உள்ள முழு இடமும் கொய்காவிற்கு கையளிக்கப்பட்டுள்ளது. இந்த இடத்தில் உத்தேசிக்கப்பட்ட உரத்தயாரிப்பு நிலையம் ஆனது, கொய்காவால் நிலநிரப்பல் செய்து முடிக்கப்பட்டு, மசூஅ இடம் கையளிக்கப்பெறும்வரை பிற்போடப்பட்டது. உரத்தயாரிப்பு நிலையமானது வடிவமைக்கப்பட்டு, கழிவு மீள்சுழற்சி களஞ்சியத்தை உள்ளிடுமாறு உள்ள டி.இ.சி.யின் கருத்தோடு அனுமதியும் பெறப்பட்டது. அனைத்து தேவையான தொழினுட்ப வடிவமைப்புகளும் நிறைவெய்தியுள்ளதோடு கட்டுமானம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

## 15.7.2 சீறீயு- நுடுத்துரு ஆளுவீலூர்னு சேயுறுஜகு புசுஜளு பேர்றீத் தோர்குதீ முடீக்குப்புடுடுது

திண்மக்கழிவு முகாமை வசதிகளுக்கான தொழினுட்ப மற்றும் நிதி உதவியை கோரும் ஊராட்சிசபைகள் மற்றும் பிற அரச நிறுவகங்களிலிருந்தான (இராணுவ அடிப்படையிலானவை மற்றும் கல்வி அமைப்புகள்) செயற்றிட்ட முன்மொழிவுகளை பிலிசரு செயற்றிட்டமானது, மதிப்பிட்டது. பிலிசரு செயற்றிட்டத்தின் முதன்மை நடவடிக்கையானது, சிறிய - நடுத்தர அளவான உரத்தயாரிப்பு வசதிகளை கட்டி மற்றும் அமுல்படுத்தலாகும். கழிவு அளவு மற்றும் உட்கட்டமைப்பு தேவைகள், தேவையான ஆவணப்படுத்தல் ஆகியவற்றிற்கான உதவிக் கோரிக்கைகள் மதிப்பிடப்பட்டன. அத்தோடு இவ்வுதவியை அளிப்பதற்கான அனுமதியும் பெறப்பட்டது.

**15.7.2.1 மலிம்பொட பி.எஸ் இல் உரத்தயாரிப்பு நிலையம்**





மலிம்பொட பிரதேச சபையானது இலங்கையின் தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தில் உள்ளது. இந்த பிரதேசசபையின் பரப்பு 36.32 சதுர கிலோமீற்றர்களாகும். இந்த பிரதேசசபையின் மொத்த சனத்தொகை 33474 ஆகும். 907 குடும்பங்களில் இருந்து மாநகர கழிவு சேர்க்கப்படுகிறது.

இந்த பிஎஸ் இற்கான உரத்தயாரிப்பு நிலையத்திற்கான கட்டுமானம் முடிவடைந்துள்ளது. ஒரு நாளுக்கு 2 மெற்றிக் தொன் அளவு கழிவை கையாளக்கூடிய கொள்ளளவை இது கொண்டுள்ளது. பொல்பெலகெடிய, பலெவிலசுல்தனகொட - கிழக்கு கிராமசேவகர் பிரிவு ஆகிய 3 விதிகள் உள்ள அரச காணியில் இது உள்ளது. இது கழிவுமுகாமைத்துவத்திற்காக அமைக்கபட்டுள்ளது.

இந்தக்கட்டுமானத்திற்காக ரூ. 5, 67,289.49 ஐ பிலிசரு செயற்றிட்டம் ஒதுக்கியுள்ளது.

### 15.7.2.2 கஹடகஸ்டிஜிலிய பிஎஸ்



இது நாட்டின் வட மத்திய மாகாணத்தின் அநுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ளது. இதன் பரப்பு 343 சதுர கிலோமீற்றர்களாகும். சனத்தொகை 33,130 ஆகும்.

நிதகும் 2 மெற்றிக் தொன் கழிவு சேர்க்கப்படுகிறது. 4.04 ஹெக்டர்கள் அளவுடைய நில பிரதேசத்தில், சிறிய அளவான உரத்தயாரிப்பு செயற்றிட்டம் கட்டப்பட்டது. இதற்கு ரூ. 6,497,638.42 செலவிடப்பட்டது.நிலைய கட்டுமானம் முடிவடைந்து, கழிவு உரத்தயாரிப்பு தற்போது செயன்முறையில் உள்ளது.

### 15.7.2.3 புலத்கொகுபிட்டிய பிஎஸ் உரத்தயாரிப்பு நிலையம்

இது இலங்கையின் சப்பிரகமுவ மாகாணத்தின் கேகாலை மாவட்டத்தில் அமைந்துள்ளது. இதன் பரப்பு 125 சதுர கிலோமீற்றர்கள், சனத்தொகை 52,000. 1,332 குடும்பங்கள், 6 நிறுவகங்கள், 26 கடைகள், 20 ஹொட்டேல்கள், 30 பாடசாலைகள், 2 மருத்துவமனைகள் மற்றும் ஒரு வாராந்த சந்தை இவற்றிலிருந்து கழிவு சேர்க்கப்படுகிறது.

இதற்கான கழிவுமுகாமை செயற்றிட்டமானது பிலிசரு செயற்றிட்டம் மூலமாக நிதியளிக்கப்படுகிறது. இது யக்கலகண்ட எனுமிடத்தில் நிதமும் 1 மெற்றிக்தொன் கழிவு கையாளும் வகையில் கட்டப்பட்டது. கட்டுமானம் முடிக்கப்பட்டுள்ளது.

### 15.7.2.4 திஸ்ஸமகாராம பிஸ் இற்கான உரத்தயாரிப்பு நிலையம்

இது, இலங்கையின் தென்மாகாணத்தில் அம்பாந்தோட்டை மவட்டத்தில் அமைந்துள்ளது. இதன் பரப்பு 842 சதுர கிலோமீற்றர்களாகும். சனத்தொகை 79,618 ஆகும். இந்த பிஎஸ் ஆனது, 18,750குடும்பங்கள்; 17 நிறுவகங்கள்; 137 தொழிற்றுறைகள்; 855 கடைகள்; 124 ஹோட்டல்கள்; 25 பாடசாலைகள்; 1 மருத்துவமனை ஆகியவற்றை உள்ளடக்கியது. நிதமும் 7 மெற்றிக்தொன் கழிவுஇந்த பிஎஸ்ஸில் சேகரிக்கப்படுகிறது.

திஸ்ஸமகாராம பிஎஸ் ஆனது பிலிசரு செயற்றிட்டத்திடமிருந்து, மாநகர கழிவு ஓட்டத்தில் சேரும் கழிவுகளின் அளவை மீள்பாவனைக்குட்படுத்தவும், சூழலில் அதன் தாக்கத்தை குறைக்கவும் என ஒரு திண்மக்கழிவு முகாமை வசதிக்கான செயற்றிட்டத்திற்கு நிதியுதவி கோரி செயற்றிட்ட முன்மொழிவு ஒன்றை சமர்ப்பித்தது. பிலிசரு திட்டமானது இந்த பிஎஸ் இற்கு ரூ. 4,303,379.42 இனை, கழிவினை பிரித்தல், மீள்சுழற்சி செய்தல், பரிகரித்தல் உரமாக்கலுக்கான கழுவு முகாமை வசதியினை கட்டவும் அமுல்ப்படுத்தவும் கொடுத்தது. இந்த இடமானது உடகந்தர எனும் இடத்தில் 4 ஹெக்டர்களுடனானது. கட்டுமானம் நிறைவடைந்து தற்போது கழிவு உரமாக்கல் நடைபெறுகிறது.



**15.7.2.5 உக்குவல பிளஸ் இல் உரத்தயாரிப்பு நிலையம்**

இது மத்திய மாகாணத்தின் மாத்தளை மாவட்டத்தில் உள்ளது. இதன் பரப்பு 82 சதுர கிலோமீற்றர்கள் மற்றும் சனத்தொகை 71,729 ஆகும். இந்தப்பிரதேசமானது 18,530 குடும்பங்கள், 425 கடைகள், 40 தொழிற்றுறைகள், 28 பாடசாலைகள், 25 ஹொட்டேல்கள், 3 மருத்துவமனைகள் மற்றும் 1 நிறுவகம் அத்துடன் 3 பிரதான பட்டினங்களை உடையது.

நிதமும் இது 2 மெட்ரிக் தொன் கழிவை சேகரிக்கிறது. பிலிசரு செயற்றிட்டமானது, உக்குவலை பிளஸ் இற்கு திண்ம கழிவு முகாமை வசதிகளை கட்டல் மற்றும் அமுல்ப்படுத்தல்உக்கு நிதியளித்தது. இந்த இடம் டெமடகொல்ல வீதியில் உள்ளது. இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 3,439,155.55 ஆகும். கட்டுமானப்பணி நிறைவடைந்து தற்போது கழிவு உரத்தயாரிப்பு நடைபெறுகிறது.

**15.7.2.6 மகா ஓயா பிளஸ் இல் உரத்தயாரிப்பு நிலையம்**

இது கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் உள்ளதோடு இதன் பரப்பு 720 சதுர கிலோமீட்டர்கள் மற்றும் சனத்தொகை 22,000 ஆகும். அண்ணளவாக நிதமும் ஒரு மெற்றிக் தொன் கழிவை இது கையாள்கிறது. கழிவானது 6,000 குடும்பங்கள், 180 கடைகள், 20 தொழிற்றுறைகள், 18 பாடசாலைகள், 10 நிறுவகங்கள், 1 மருத்துவமனை மற்றும் 1 வாராந்த சந்தையை உடையது.

பிலிசரு செயற்றிடமானது இந்த பிளஸ் இற்காக, ஒரு கழிவு முகாமை வசதியை மடகல என்னும் இடத்தில் கட்டுவதற்காக ரூ 4,727,725.18 ஒதுக்கியது. ஒரு அசைவாக்க முற்பணமாக மொத்த நிதி ஒதுக்கீட்டின் 20 வீதமானது இந்த சபைக்கு ஜுன் 2012 இல் விடுவிக்கப்பட்டது. கட்டுமானமானது தற்போது நடைபெறுவதோடு முதலாவது பற்றுச்சீட்டு பிலிசரு செயற்றிட்டத்திற்கு பண மீளப்பெறுகைக்காக சமர்ப்பிக்கப்பட்டது. அடுத்த வருடம் 2013 ∴பெப்ரவரியில் கிழக்கு மாகாணத்தில் நடக்கவுள்ள தயட்ட கிருள தேசிய மேம்பாட்டு நிகழ்ச்சிக்கு அமைவாக கட்டுமானம் முடிந்திருக்க வேண்டும் என்ற நோக்கிலேயே செயற்றிட்டம் வழங்கப்பட்டது. நிலையத்தின் கட்டுமானம் முடிவடைந்தது. தற்போது கழிவு உரமாக்கல் நடைபெறுகிறது.

**15.7.2.7 பதியத்தலாவ பிளஸ் இல் உரத்தயாரிப்பு நிலையம்**

இது கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் உள்ளது. இதன் பரப்பு 464 சதுர கிலோமீட்டர்கள் மற்றும் சனத்தொகை 19,457 ஆகும். இந்த பிளஸ் ஆனது 5301 குடும்பங்கள், 60 கடைகள், 18 பாடசாலைகள், 15 தொழிற்றுறைகள், 5 நிறுவகங்கள், 2 ஹொட்டேல்கள், 1 மருத்துவமனை மற்றும் ஒரு வாராந்த சந்தையை கொண்டது.

இந்த பிளஸ் ஆனது பிலிசரு செயற்றிட்டத்திடம், தான் நிதமும் சேகரிக்கும் ஒரு மெற்றிக்தொன் கழிவைபிரிக்க நிதி மற்றும் தொழினுட்ப உதவி பெற்றது. பிலிசரு செயற்றிட்டமானது ரூ 4,572,661.38 நிதி ஒதுக்கீட்டின் கழிவு முகாமை மற்றும் உரத்தயாரிப்பு கட்டுமானத்திற்கு அனுமதி அளித்தது. இந்த இடமானது கிரவன எனுமிடத்தில் 3 ஏக்கர்கள், 3 ரூட்கள், 33 பேர்ச்களுடன் உள்ளது. அசைவாக்க முற்பாக் கொடுப்பனவாக மொத்த ஒதுக்கீட்டில் 20 வீதப்பணம் ஜுன் 2012 இல் கொடுக்கப்பட்டது. 2013 ∴பெப்ரவரியில் கிழக்கு மாகாணத்தில் நடக்கவுள்ள தயட்ட கிருள தேசிய மேம்பாட்டு

நிகழ்ச்சிக்கு அமைவாக கட்டுமானம் முடிந்திருக்க வேண்டும் என்ற நோக்கிலேயே செயற்றிட்டம் வழங்கப்பட்டது. நிலையத்தின் கட்டுமானம் முடிவடைந்தது. தற்போது கழிவு உரமாக்கல் நடைபெறுகிறது.

**15.7.2.8 கட்டுநாயக்க - இலங்கை விமானப்படையில் உரத்தயாரிப்பு நிலையம்**

இலங்கை விமானப்படை - கட்டுநாயக்க, பிலிசரு செயற்றிட்டத்திடம் தனது வளாகத்தின் கழிவு முகாமைக்கு உதவுமாறு கோரி முன்மொழிவு சமர்ப்பித்தது. இது மேல்மாகாணத்தின் கம்பகா மாவட்டத்தில் உள்ளாது. இதன் பரப்பு 1200 ஏக்கர்களாகும். இவ்விடம் சேவையாட்கள் மற்றும் சிவில் ஊழியர்கள் உட்பட 6,600 நபர்களை கொண்டதாகும். இவ்விடத்தில் 1500 குடும்பங்கள் வாழ்கின்ரன, 2 கடைகள், 1 பாடசாலை, 1 மருத்துவமனை, உணவருந்து மிடங்கள், ஒரு கோழிப்பண்ணை, மற்றும் ஒரு பன்றிப்பண்ணை உள்ளன. நிதமும் 3 மெற்றிக்தொன் கழிவு உற்பத்திக்கப்படுகிறது.

பிலிசரி செயற்றிட்டமானது, ரூ.6,513,787.75 ஐ, வளாகத்தினுள் கழிவை பரிகரித்து உரமாக்கும் வசதியை கட்டுவதற்கும் அமுல்படுத்துவதற்கும் வழங்கியது. ஒரு அசைவாக்க முற்கொடுப்பனவு பணமாக, ரூ 1302757.55 ஆனது ஓகஸ்ட் 2012 கட்டுமானத்தை ஆரம்பிக்க தரப்பட்டது. இக்கட்டுமானமானது முடிவடைந்தது.




**15.7.2.9 தமன பி.எஸ் இல் உரத்தயாரிப்பு நிலையம்**

இது கிழக்கு மாகாணத்தின் அம்பாறையில் உள்ளது. இதன் பரப்பு 334 சதுர கிலோமீற்றர்கள் மற்றும் சந்த்தொகை 40,000 ஆகும். நிதமும் 1 மெற்றிக் தொன் கழிவு, 10700 குடும்பங்கள், 510 கடைகள், 60 தொழிற்றுறைகள், 40 ஹொட்டேல்கள், 31 பாடசாலைகள், 15 நிறுவகங்கள், 7 மருத்துவமனைகள் மற்றும் 3 வாராந்த சந்தைகள் மூலம் உற்பத்திக்கப்படுகிறது.

இந்த பிஎஸின் கோரிக்கைக்கமைய பிலிசரு செயற்றிட்டமானது, ரூ. 3,901,116.45 ஐ, சேகரிக்கப்பட்ட கழிவை உரமாகும் வசதியுடைய அமைப்புருவாக்கத்திற்காக வழங்கியது. இந்த இடம் 1 ஏக்கர் உடையதாயும் பஹலகம்புர என்றும் அழைக்கப்படுகிறது. கட்டுமான வேலை முடிவடைந்து தற்போது உரத்தயாரிப்பு நடைபெறுகறது.




**15.7.2.10 ஹொரவப்பொத்தான பிஎஸ் இல் உரத்தயாரிப்பு நிலையம்**

இந்து வட மத்திய மாகாணத்தில் அநுராதபுர மாவட்டத்தில் உள்ளது. பரப்பு 790 சதுர கிலோ மீற்றர்.சனத்தொகை 38,889 ஆகும். இந்த பிஎஸ் 11,100 குடும்பங்கள், 320 கடைகள், 65 தொழிற்றுறைகள், 17 நிறுவகங்கள், 8 வாராந்த சந்தைகள் மற்றும் 3 மருத்துவமனைகள் ஆகியவற்றிலிருந்து 1 மெற்றிக் தொன் கழிவை ஒரு நாளுக்கு பெறுகிறது. இந்த பி எஸ் ஆனது, ஹொரவபொத்தான, வலிமுவபொத்தான, மொடகொனவ, ரட்மலே, வெகெரபடுகல, கலவெடுபொல அகிய 6 முக்கிய பட்டினங்களை உடையது.

உதவிக்கான பிஎஸ் இன் கோரிக்கையின் மீது, பிலிசரு செயற்றிட்டம் ரூ. 5,323,275.50 இனை, உரத்தயாரிப்பு வசதி அமைப்பாக்கத்திற்காக வழங்கியது. தற்போது அது மொரகொட முகலன எனுமிடத்தில் கட்டப்பட்டுக்கொண்டிருக்கிறது. அசைவாக்க முற் கொடுப்பனவாக ரூ. 1,013,957.24 மொத்த ஒதுக்கீட்டின் 20 வீதம் நவம்பர் 2012 இல் வழங்கப்படது. இட தயார்படுத்தல் முடிவடைந்து கட்டுமானம் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது.

**15.7.2.11 கெபிதிகொல்லெவ பி.எஸ் இல் உரத்தயாரிப்பு நிலையம்**

கெபிதிகொல்லெவ பி.எஸ் ஆனது 406 சதுர கிலோமீற்றர் பரப்புடையதாயும், 28,140 சனத்தொகையுடையதாயும் வடமத்திய மாகாணத்தில் அநுராதபுர மாவட்டத்தில் உள்ளது. கெபிதிகொல்லெவ, குரட்டியவ, யகுவெவ, வஹல்குட மற்றும் குலெகடெ சந்திப்பு ஆகிய முக்கிய 5 பட்டினங்களை இது பெற்றிருக்கிறது.

பிலிசரு செயற்றிட்டமாஅது நிதி மற்று தொழினுட்ப உதவிய இந்த பி எஸ் இற்குஇ வழங்கும் முகமாக, ரூ. 6,764,089.32 ஒதுக்கி, அதில் 20 வித பணத்தை அசைவாக்க முற்கொடுப்பனவாக, கட்டுமானத்தை ஆரம்பிக்க என, நவம்பர் 2012 இல் வழங்கியது. இந்த கழிவு முகாமை வசதியானது உல்பத்ஹெனகலே எனுமிடத்தில் கட்டப்பட்டுக் கொண்டிருப்பதோடு, நிதமும் 2 மெற்றிக் தொன்னை கையாளும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**15.7.2.12 நமலொய பிஎஸ் இல் உரத்தயாரிப்பு நிலையம்**

இது நாட்டின் கிழக்கு மாகாணத்தில் அம்பாறையில், 108 சதுர கிலோமீற்றர்களையும் 23,209 சனத்தொகையையும் கொண்டு உள்ளது. நிதமும் 1 மெற்றிக் தொன் கழிவானது, 5,200 குடும்பங்கள், 278 கடைகள், 71 தொழிற்றுறைகள், 8 நிறுவகங்கள், 2 ஹொட்டேல்கள், 2 மருத்துவமனைகள் மற்றும் 2 வாராந்த சந்தைகள் ஆகியவற்றிலிருந்து உற்பத்திக்கப்படுகிறது.

2013இன் கிழக்கு மாகாணத்தின் தயட்ட கிருள தேசிய மேம்பாட்டு நிகழ்ச்சி 2013 இனையொட்டி, நமலொயா பிஎஸ் இன் கோரிக்கைக்கு இணங்க பிலிசரு செயற்றிட்டமானது ரூ. 4,284,956.92 இனை நிதி உதவியாக, சேகரிக்கப்படும் கழிவினை பரிகரித்து உரமாக்கும் வசதியை அமைப்பதற்காக வழங்கியது. இந்த செயற்றிட்டமானது 0.8 எச்.ஏ. அளவுடைய, பொல்ககஜானபடய இல் பொல்வத்தை

மேற்கு எனும் இடத்தில் அமைந்துள்ளது. கட்டுமானம் முடிந்து உரத்தயாரிப்பு தற்போது நடைபெறுகிறது.

**15.7.2.13 வலிகாமம் தெற்கு பிஎஸ் இல் உரத்தயாரிப்பு நிலையம்**

இது வடமாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் இது உள்ளது. இதன் நிதி, தொழினுட்ப உதவி கோரைக்கைக்கிணங்கி திண்ம கழிவு முகாமை உரத்தயாரிப்பு வசதிக்காக, ஆவணப்படுத்தல்களை மதிப்பிட்ட பின், தேவையான அனுமதிகாஇ பெற்ற பின்னர், பிலிசரு செயற்றிட்டம், ரூ. 4,972,920.99 இனை ஒதுக்கியது. அசைவாக்க முற் கொடுப்பனவாக ரூ. சுஎ. 947,223.05 நவம்பர் 2012 இல் வழங்கப்பட்டது.



**15.7.2.14 காத்தான் குடி பிஎஸ் இல் உரத்தயாரிப்பு நிலையம்**

இது கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் 6.5 சதுர கிலோமீற்றர் பரப்பும், 48,569 சனத்தொகையும் கொண்டுள்ளது. 12,691 குடும்பங்கள் மற்றும் வர்த்தக அமைப்புகளிலிருந்து நிதமும் 1 மெற்றிக் தொன் கழிவு சேர்க்கப்படுகிறது.

காத்தான்குடி யுசியின் கோரிக்கையின் படி பிலிசரு செரற்றிட்டமானது ரூ. 4,284,956.92 ஐ, நிதி உதவிகாக, சேர்க்கப்படும் கழிவை பரிகரித்து உரத்தயாரிப்புச்செய்யும் வசதியை அமைக்க வழங்கியது. இந்த நிலையமானது டீன்ஸ் வீதியில் புதுக்காத்தான்குடியில் எழுப்பப்பட்டுள்ளதோடு, கட்டுமானம் முடிந்து, கழிவு உரமாக்கல் நடைபெறுகிரது.




**15.7.2.15 கல்நெவ பிஏச் இல் உரத்தயாரிப்பு நிலையம்**

இது வட மத்திய மாவட்டத்தில் அனுராதபுர மாவட்டத்தில் 250 சதுர கிலோமீற்றர்களில், 45,692 சனத்தொகையுடன் உள்ளது. ஒரு மெற்றிக் தொன் கழிவு சேர்க்கப்படுகிறது. இந்த பிஎஸின் கோரிக்கைக்கிணங்கி, பிலிசரு செயற்றிட்டமானது ரூ. 5,295,245.90 நிதி வழங்கியுள்ளது. நிலயத்தின் கட்டுமானம் நிறைவடைந்து தற்போது கழிவு உரமாக்கல் நடைபெறுகிறது.

**15.7.2.16 ராஜன்கனய பிளஸ்**

இது வடமத்திய மாகாணத்தில் அனுராதபுர மாவட்டத்தில் 102 சதுர கிலோமீற்றரில் 30,298 சனத்தொகையுடன் உள்ளது. நிதமும் 1 மெற்றிக் தொன் கழிவை சேகரிக்கிறது. இதன் கோரிக்கைக்கிணங்க பிலிசரி செயற்றிட்டமானது, ரூ. 5,295,245.90 இனை வழங்கியது. நிலையத்தின் கட்டுமானம் முடிவடைந்துள்ளது.

**15.7.2.17 வீரகெடிய பிளஸ் இல் உரத்தயாரிப்பு நிலையம்**

இது தென் மாகாணத்தின் அம்பாந்தோட்டை மாவட்டத்தில்531 சதுர கிலோமீற்றர்களை கொண்ட 73228 சனத்தொகையை கொண்டதாகும். தினமும் 2 மெற்றிக் தொன் கழிவு சேர்க்கிறது. இதன் கோரிக்கையின் அடிப்படையில், பிலிசரு செயற்றிட்டமானது, ரூ. 2,221,348.05 ஐ ஒதுக்கியது. உரத்தயாரிப்பு நிலையத்தின் கட்டுமானம் முடிந்ததுடன் உரத்தயாரிப்பு நடைபெறுகிறது.



**15.7.2.18 அக்குரண பிளஸ் இல் உரத்தயாரிப்பு நிலையம்**

இது மத்திய மாகாணத்தில் கடி மாவட்டத்தில் 32.9 சதுர கிலோமீர்றர்களுடையதும் 61,288 சனத்தொகையும் கொண்டு விளங்குகிறது. தினமும் 4 மெற்றிக் தொன் கழிவு சேர்க்கப்படுகிறது. கழிவானது 12,850 குடும்பங்கள், 20 பாடசாலைகள்,இலிருந்து சேர்க்கப்படுகிறது. இதன் கோரிக்கைக்கிணங்கி பிலிசரு செயற்றிட்டமானது ரூ. 5,394,964.10 ஐ ஒதுக்கியதோடு நிதி, தொழினுட்ப வசதியையும் வழங்கியது. இந்த கழிவிலிருந்து உரந்தயரிக்கும் நிலையம் கட்டப்பட்டு, தற்போது கழிவிலிருந்து உரம் தயாரிக்கப்படுகிறது.

### 15.7.3 உயிர் எரிவாயு பொறித்தொகுதி நிர்மாணம்

சுமையல் அறைகள் மற்றும் சிற்றுண்டிச் சாலையில் இருந்து தோற்றுவிக்கப்படும் சேதனக் கழிவுகள் (உணவுக் கழிவுகள்) வளியற்ற செரிமானம் போன்ற சுத்திகரிப்பு செயற்பாட்டின் மூலம் உயிர்வாயுவை உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்த முடியும். அவ்வகையான கழிவுகளின் உக்கிப்போகும் பகுதியை உறுதி செய்வதற்கும் முகாமைத்துவம் செய்வதற்கு சாத்தியமான வழியொன்றாக வளியற்ற செரிமானச் செயற்பாடு நிரூபிக்கப்பட்டுள்ளது. வளியற்ற செரிமானம் சேதனப் பொருட்களின் (ஆவியாகக்கூடிய திண்மக்கழிவு) 50% மான குறைப்பிற்கு உதவுகின்றது.

மூலப்பொருட்களில் நிகழும் மாற்றத்தின் அளவானது மூலப்பொருட்களின்ல் சார்ந்துள்ளதுடன் குடியிருப்பு நேரங்களில் வளி இயக்கத்தால் உக்க வைப்பதன் மூலம் பெறப்படுபவை ஒத்ததாகவும் உள்ளன. உக்கிய சேதனப் பொருளில் இருந்து கிடைக்கும் ஏறத்தாழ 90% மான எரிசக்தி மிதேன்

வடிவத்தில் தக்கவைக்கப்படுகின்றது. மிதேன் பக்டீரியாவின் பரவலான இயற்கை நிகழ்வானது எடுத்துக்காட்டப்படுவது யாதெனில் வளியற்ற செரிமானமானது பல்வேறு ஈரலிப்பு கொள்ளளவில் 60 தொடக்கம் 99 சதவீதத்திற்கு மேல் ஏற்படக்கூடியது என்பதாலும் மிதேன் அளவானது, நகராட்சி திண்ம கழிவு முகாமைத்துவத்திற்கு முக்கியமானதல்ல என்பதுடன் செரிமானமடையும் சேதன ந.தி.க வின்தொன் ஒன்றில்பொதுவாக 100 முதல் 200 கன மீற்றர் உயிர்வாயு உருவாகின்றது. சுகாதார அமைச்சின் வேண்டுகோளுக்கு இணங்க சமையல் அறைகள் மற்றும் நோயாளர் விடுதிகளில் இருந்து தோற்றுவிக்கப்படும் உணவுக் கழிவுக்கு பரிகாரமாக அரசாங்க வைத்தியசாலைகளில் உயிர்வாயு பொறித்தொகுதிகளை தாபிக்க நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. அதேவேளையில் இராணுவ தளங்களில் இருந்தும் இவ்வாறான வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டுள்ளன. பிலிசறு கருத்திட்டமானது 19 நிறுவனங்களில் உயிர்வாயு பொறித்தொகுதிகளை ஆரம்பிக்கும் நடவடிக்கைகளை எடுத்ததுடன், நிர்மாணப்பணியை 2012 ஆம் ஆண்டில் நிறைவு செய்தது. இவ்வாறு தோற்றுவிக்கப்படும் உயிர்வாயுவானது அதே நிறுவனங்களில் சமையல் தேவைகளுக்காக உபயோகிக்கப்படுவதுடன், சமையலுக்காக முன்னர் உபயோகித்த எல்.பி. வாயுக்கான செலவையும் சேமிக்க உதவியது.





### 15.7.4 கழிவு ஏற்றிச் செல்லும் வாகனங்களை வழங்குதல்

கழிவு முகாமைத்துவம் தொடர்பாக உள்ளூராட்சி அதிகார சபைகளுக்குள்ள முக்கிய பொறுப்புக்களில் ஒன்றானது யாதெனில் வீடுகள், வர்த்தக நிலையங்கள் மற்றும் பொது இடங்களில் இருந்து கழிவை சேகரிப்பதாகும். கழிவை ஏற்றிச் செல்லும் வாகனங்களில் குறைபாடானது பாரியதொரு இடர்பாடாகவுள்ளதுடன், அப்பிரச்சினை உடனடியாகவே திருத்தப்படவுள்ளது. கழிவு போக்குவரத்தானது மேம்பாடு அடையாது இருப்பின் பசளையாக்கல் பொறித்தொகுதிகள் அவற்றின் இயலளவுக்கு இயக்கப்படாது. நாடெங்கிலும் உள்ள உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்காக கழிவு போக்குவரத்து டிராக்டர்கள் மற்றும் 77 டிரெய்லர்கள் கொள்வனவு செய்யும் முகமாக கேள்விப் பத்திரங்கள் (டென்டர்கள்) வழங்கப்பட்டன.

| இல | மாகாணம் | மாவட்டம் | டிரக்டர்களின் எண்ணிக்கை | டிரெய்லர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| **1** | மத்திய | கண்டி | 8 | 08 |
| **2** | | மாத்தளை | 3 | 03 |
| **3** | | நுவரெலியா | 1 | 01 |

| இல | மாகாணம் | மாவட்டம் | டிரக்டர்களின் எண்ணிக்கை | டிரெய்லர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| **4** | வடமத்திய | அநுராதபுரம் | 1 | 01 |
| **5** | வடமேல் | குருநாகல் | 19 | 19 |
| **6** | | புத்தளம் | 12 | 12 |
| **7** | சப்ரகமுவ | கேகாலை | 1 | 01 |
| **8** | | இரத்தினபுரி | 5 | 05 |
| **9** | தெற்கு | காலி | 5 | 05 |
| **10** | | ஹம்பாந்தோட்டை | 4 | 04 |
| **11** | | மாத்தறை | 6 | 06 |
| **12** | ஊவா | மொனராகலை | 1 | 01 |
| **13** | மேற்கு | கொழும்பு | 3 | 05 |
| **14** | | கம்பஹா | 4 | 04 |
| **15** | | களுத்துறை | 2 | 02 |
| | **மொத்தம்** | | **75** | **77** |

### 15.7.5 பசளையாக்கல் பொறித்தொகுதியின் இயக்கச் செயற்பாடுகளை கண்காணித்தலும் மதிப்பீடு செய்தலும்

பிலிசரு திண்மக்கழிவு முகாமைத்துவ கருத்திட்டத்தால் தாபிக்கப்பட்ட பசளையாக்கல் பொறித்தொகுதியின் பிரதான நோக்கங்களாவன யாதெனில் நாட்டில் மாநகராட்சி திண்மக்கழிவு முகாமைத்துவத் (மா.தி.க.மு) தின் இயக்க, நிதி மற்றும் சுற்றாடல் ரீதியான செயலாற்றுகையை மேம்படையச் செய்வதும், மேம்பட்ட செலவும் பயனுறுதியை உள்ளடக்கிய நகராட்சி திண்மக்கழிவு சேவைகளை சிறந்த முறையில் திட்டமிட்டு முகாமைத்துவம் செய்வதற்காக உள்ளூராட்சி அதிகாரசபைகளின் இயலுமையை திறம்பட கட்டியெழுப்புவதாகும். இவ்வேலைச் சட்டகத்தின் அடிப்படையில், நகராட்சி திண்மக்கழிவு சுத்திகரிப்பு மற்றும் அகற்றலை, இயலுமான வளங்களை மீள்சுழற்சிப் பொருட்களுடன் மீட்பதை இலக்காகக்கொண்டு தற்போதைய பசளையாக்கல் பொறித்தொகுதியின் செயற்பாடுகளை கருத்திட்டமானது மதிப்பீட்டுக்கு உட்படுத்தியது. இந்த இலக்கை அடையும் வகையில் கருத்திட்ட மதிப்பீடானது ஒரு முகாமைத்துவ மற்றும் திட்டமிடல் கருவியாக

நடாத்தப்படும் புரிந்துணர்விற்கான நினைவேடு ஆனது சர்வதேச நீர் முகாமை நிறுவகத்துடன் கைச்சாத்திடப்படது. இதன் நோக்கம் ஆனது, செயற்றிட்டத்தால் உதவப்பட உரத்தயாரிப்பு நிலையங்களை மதிப்பிடல் ஆகும். 15 நிலையங்கள் எழுந்தமாறாக தேரப்பட்டு, செயற்றிட்ட மதிப்பீட்டிற்காக தேவையான தகவல் சேகரிக்கப்பட்டது. ஐ.டபிள்யூ.எம்.ஐ ஆனது இறுதி அறிக்கை யை தயார் செய்யும் வேலையில் உள்ளது.





### 15.7.6 எஞ்சிய கழிவை அகற்றுவதற்கான துப்புரவான குப்பை நிரப்பு அமைவிடங்களை திட்டமிட்டு வடிவமைத்தல்

### 15.7.7 மீதியான கழிவு வெளியேற்றலுக்காக கழிவு நிலநிரப்பலை திட்டமிடல் மற்றும் வடிவமைத்தல்

#### 15.7.7.1 ரஜ்கம தற்காலிக குப்பை நிரப்பு அமைவிடம்

மா.தி.க ரஜ்கம கூட்டுப்பசளையாக்கல் பொறித்தொகுதிக்கு கொண்டு வரப்பட்டு அரை - இயந்திரமயமான முறையில் வகைப்படுத்தப்பட்டு சேதன கழிவு பதனிடப்பட்டு பசளையாக மாற்றப்படுகின்றது. சேதனப் பொருட்கள் அல்லாதவை மீண்டும் வகைப்படுத்தப்பட்டு மீள்சுழற்சிக்கு உகந்தப் பொருட்கள் விற்கப்படும் வகையில் வேறாக களஞ்சியப்படுத்தப்படுகின்றன. பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தின் (பொ.அ.ஒ.நி) கருத்திட்டத்தின் நிதியுதவி மற்றும் தொழில்நுட்ப உதவியின் கீழ் அதே அமைவிடத்தில் துப்புரவான குப்பை நிரப்பு அமைவிடத்தை நிர்மாணிக்க முன்மொழியப்பட்டுள்ளது.. இருப்பினும், முன்மொழியப்பட்டுள்ள துப்புரவு குப்பை நிரப்பு அமைவிடத்தை நிர்மாணிக்க சில வருடங்கள் எடுப்பதால், தற்போதைக்கு உகந்தவாறு அத்தகைய எஞ்சிய கழிவை அகற்றுவதற்கு பொருத்தமான தீர்வொன்ற நடைமுறைப்படுத்துமாறு ம.சு.அ யிடம் ரஜ்கம பி.ச வேண்டுகோள் விடுத்துள்ளது. எனவே, பொறித்தொகுதியில் இருந்து தோற்றுவிக்கப்படும் எஞ்சிய கழிவை அகற்றும் முகமாக தற்காலிக குப்பை நிரப்பு அமைவிடமொன்றை ''பிலிசறு கருத்திட்டம்'' வடிவமைத்தது. இக்குப்பை நிரப்பு அமைவிடமானது நாளாந்தம் 30 தொன் கழிவை அகற்றுவதற்கு இரண்டு வருட காலத்திற்கு இடவசதியை அளிக்கும். இவ்வசதியானது வேதிடப்பொருட்கள் கலந்த கழிவு நீர் குழாய் அமைப்பு மற்றும் சுத்திகரிப்பு முறைமை ஆகியவற்றுடன் சேராதவாறு கசியாத தன்மையைக் கொண்டிருக்கும் மேலும் இந்த குப்பை நிரப்பு அமைவிடம் எஞ்சிய கழிவின் 1/3 அளவு கெட்டியானதன் பின்னர் நாளாந்தம் தலை மறைப்புகளுடன் செயற்படும்.

#### 15.7.7.2 மாத்தறை – நீண்டகால அடிப்படையிலான குப்பை நிரப்பு அமைவிடம்

வேலிகம, கொடவிலவில் கூட்டுபசளையாக்கல் கருத்திட்டமொன்றை தாபிப்பதற்காக 2009 ஆம் ஆண்டில் மாத்தறை மாநகர சபைக்கு பிலிசறு கருத்திட்டத்தில் நிதியுதவி அளிக்கப்பட்டது. ஆனால் 2012 ஆம் ஆண்டு வரையில் எஞ்சிய கழிவானது அகற்றப்பட்ட இடமானது மாத்தறை பிலதுவ ஆகும். இச்செயற்பாடானது பல எண்ணிக்கையான சுற்றாடல் பிரச்சினைகளை அப்பிரதேசத்தில் ஏற்படுத்தியது. இப்பிரச்சினைகளுக்கு பரிகாரமாக, வெலிகமை கொட்டவல கூட்டு பசளையாக்கல் அமைவிடத்திற்கு அருகாமையில் அமைந்த காணியொன்றில் குறைந்த செலவு குப்பை நிரப்பு அமைவிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு மாத்தறை மா.ந.ச கு பிலிசறு கருத்திட்டம் நிதியுதவி அளித்தது. இச்செயற்பாட்டிற்கு ரூபா 20,34,556.83 வை பிலிசறு கருத்திட்டம் செலவிட்டதுடன், மாத்தறை, பிலதுவவில் அமைந்துள்ள திறந்த குப்பை கொட்டும் வெளியை புனர்நிர்மாணம் செய்வதற்கு மேலதிக ரூபா 4505931.49 யும் செலவிட்டது. பிலிசறு கருத்திட்டத்தால் 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஏனைய கருத்திட்டங்களில் ஒன்றானது யாதெனில் மாத்தறை மாநகர சபைக்கான துப்புரவு குப்பை நிரப்பு அமைவிட நிர்மாணம் ஆகும். முன்மொழியப்பட்டுள்ள இந்த குப்பை நிரப்பு அமைவிடத்தை வடிவமைப்பதற்கான மன் பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

#### 15.7.7.3 மெதிகிரிய குப்பை நிரப்பு அமைவிடம்

மெதிரிகிரியவில் அமைந்துள்ள கூட்டுபசளையாக்கல் பொறித்தொகுதியானது 2009 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிகரமாக இயங்கிக்கொண்டுள்ளது. பொறித்தொகுதியில் இருந்து தோற்றுவிக்கப்படும் எஞ்சிய கழிவானது பொருத்தமான அகற்றல் தேர்வு ஒன்றுக்காக தற்சமயம் காத்திருக்கின்றது. எனவே பொறுத்தமான குப்பை நிரப்பு அமைவிட வசதியை அதே இடத்தில் வடிவமைக்கும் முகமாக நடவடிக்கை கருத்திட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அமைவிடத்தை ஜே.சீ.பீ யிடமிருந்து விடுவித்து தற்போதைய நிலத்தில் எல் எஸ் சி எஸ் யுடன் மட்டங்களை பெறுமாறு பி.ச கேட்டுக்கொள்ளப்பட்டார்.

#### 15.7.7.4 பதுளை குப்பை நிரப்பு அமைவிடம்

பதுளை மாநகர சபையானது கடந்த 30 வருடங்களாக நகரத்திற்குள் அமைந்துள்ள விளையாட்டு மைதானத்தை மாநகராட்சி திண்மக் கழிவை அகற்றுவதற்காக பயன்படுத்துகின்றது. விளையாட்டு மைதானத்தின் சீரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணி தற்போது இடம்பெற்று வருகின்றது. எனவே, ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மேம்பாட்டு பணியை நடைமுறைப்படுத்தும் முகமாக ஏற்னவே தாபிக்கப்பட்டுள்ள குப்பைகளை அகற்றவும் விளையாட்டு மைதானத்தை விடுவிக்கவும் வேண்டிய தேவை இப்போது ஏற்பட்டுள்ளது. இச்சூழ்நிலையின் கீழ், பதுளை மாநகர சபையானது, தற்போதுள்ள குப்பைகளை அகற்றுவதற்கான குப்பை நிரப்பு அமைவிட வசதியை சார்நியா தோட்ட காணியொன்றில் வடிவமைக்குமாறு ம.சு.அ ஊடாக கருத்திட்டமானது வேண்டுகோள் விடுத்தது. கருத்திட்டமானது ஏற்கனவே விளையாட்டு மைதானத்தில் காணப்படும் 40,000 கன மீற்றர் மாநகர சபை திண்மக் கழிவுக்கான குப்பை நிரப்பு அமைவிட வசதியை வடிவமைக்கின்றது. இவ்வடிவமைப்பானது வேதிடப்பொருட்கள் கலந்த கழிவு நீர் முகாமைத்துவ முறைமை, இயக்க முறைகள் மற்றும் அடைப்புக்கு பின்னரான தெரிவுகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

### 15.7.8 கழிவு பரிமாற்ற நிலையங்கள்

காலி மற்றும் அம்பலாங்கொடை ஆகிய பகுதிகளுக்கு முன்மொழியப்பட்டுள்ள கழிவு பரிமாற்ற நிலையங்களுக்கான அமைவிடங்களின் மண் நிலைமைகளை கண்டறிய அவை மண் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இப்பகுதிகள் நீண்டகாலமாக குப்பை நிரப்புவதற்கு உபயோகிக்கப்பட்டுள்ளமை

பரிசோதனை மூலம் தெரிய வந்துள்ளது. எனவே இவ்வமைவிடத்தின் பலவீனமான மண் காரணமான நிரந்தர கட்டமைப்புகளுக்கு இவ்விட் உகந்தவையல்ல. எனவே காலி மாநகர சபைக்கு, தற்போதைய தரையை மேம்படுத்தி வடிவமைப்பை முன்னெடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

### 15.7.9 சுந்தர கம்பஹா நிகழ்ச்சித்திட்டம்

களணி தொடக்கம் கடவத்தை வரையிலான கண்டி வீதியின் ஒரு பகுதியானது முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்ட மாதிரியொன்றை நடைமுறைபடுத்துவதற்காக தெரிவு செய்யப்பட்டது. இவ்வீதியின் வழியே அமைந்திருக்கும் வர்த்தக நிலையங்களுக்கு கழிவு வெவ்வேறாக பிரிக்கும் தொட்டிகளும், 500 மீற்றர் தொலைவில் அமைந்துள்ள வீடுகளுக்கு கழிவு பசளைத் தொட்டிகளும் வழங்கப்படும். களணி பிரதேச சபையானது வெவ்வேறாக வகைப்படுத்தப்பட்ட கழிவை சேகரித்து கழிவு பசளையாக்கல் பொறித்தொகுதிக்கு ஏற்றியனுப்பும். சேதனக் கழிவு பசளையாக மாற்றப்படும் ஏனைய மீள்சுழற்சிக்கு உகந்த பொருட்கள் விற்பனை செய்யப்படும். இந்நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறையாக்கும் வகையில் பலசுற்றுப் பேச்சுவார்த்தைகள் பி.ச யுடன் மேற்கொள்ளப்பட்டன. 1500 கழிவு பசளைத்தொட்டிகளை பி.சக்கு பகுதிக்கொடுப்பனவு அடிப்படையிலான சலுகையில் வழங்குவதற்கு இணக்கம் ஏற்பட்டது. பிரதேச சபைக்கு கழிவுகளை பசளையாக்கல் பொறித்தொகுதிக்கு ஏற்றிச் செல்வதற்கான நெருக்கமாக அடைக்கப்படக்கூடிய வாகனம் வழங்கப்படும். பசளை தொட்டிகள், கொம்பக்டர் வாகனம் மற்றும் கழிவு வேறாக்கல் தொட்டிகள் என்பன அவசியமான கொள்முதல் நடைமுறைகளை பின்பற்றி கொள்வனவு செய்யப்பட்டன. பசளையாக்கல் பொறித்தொகுதிகளின் நிர்மாணப்பணி நிறைவடையும் தருவாயில் உள்ளது.




### 15.7.10 வீட்டு கூட்டு பசளையாக்கல் செயற்பட்டை ஊக்குவித்தல்

உள்ளூர் அதிகார சபைகளின் வேண்டுகோளுக்கு இணங்க, 4000 பசளை தொட்டிகள் கொள்வனவு செய்யப்பட்டு 2230 தொட்டிகள் 50% சலுகைக் கட்டணத்தில் விநியோகிக்கப்பட்டன.

| இல. | உள் ஊராட்சி சபை | விநியோகிக்கப்பட்ட தொட்டி எண். |
|---|---|---|
| 1 | பியகம பிஎஸ் | 1000 |

| இல. | உள் ஊராட்சி சபை | விநியோகிக்கப்பட்ட தொட்டி எண். |
|---|---|---|
| 2 | வரக்காபொல பிஎஸ் | 25 |
| 3 | உடுபட்டவ பிஎஸ் | 25 |
| 4 | ஜாயெல நகர சபை | 500 |
| 5 | ஸ்ரீஜயவர்தனபுர மாநகரசபை | 300 |
| 6 | யட்டியாந்தோட்டை பிரதேச சபை | 100 |
| 7 | அத்தனகல்ல பிரதேச சபை | 100 |
| 8 | தேசிய இரத்தின மற்றும் நகை கூட்டுத்தாபனம் | 20 |
| | **மொத்தம்** | **2070** |

### 15.7.11 கழிவு சேகரிப்பு தொட்டிகள்

இரசாயனப் பொருட்கள் உற்பத்தி செய்யும் கம்பனிகளிடமிருந்து அகற்றப்பட்ட இரசாயனப் பொருட்கள் தொட்டிகள் செலவில்லாமல் பெறப்பட்டு கழிவு சேகரிக்கும் தொட்டிகளாக தயாரிக்கப்பட்டன. இவ்வாறு தயாரிக்கப்பட்ட தொட்டிகள் (1000) ஒயமடுவ, அநுராதபுரம், குடா சுந்தரகம, தேவாலய, சொரகுண தேவாலயம், திஸ்ஸமஹாரா பி.ச ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற “தேசத்திற்கு மகுடம்” தேசிய அபிவிருத்தி கண்காட்சிக்கு வெளியில் கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்திற்கு உபயோகிக்கப்பட்டதுடன், கழிவு சேகரிப்பு தொட்டிகளும் (650) விநியோகிக்கப்பட்டன.

| இல. | நிறுவகம் | தொட்டி எண். |
|---|---|---|
| 1 | குச்சிவெளி பிஎஸ் | 100 |
| 2 | காவல்துறை நிலையம் | 60 |
| 3 | ஸ்ரீ சுனந்தராம பிரிவேனா, ருவன்வெல்ல | 05 |
| 4 | மேல் மாகாண சபை | 120 |
| 5 | மாவட்ட செயலகம் - அம்பாந்தோட்டையில், சோகம் இற்கு சமாந்தரமக நடந்த இளையோர் மாநாடு | 200 |

| இல. | நிறுவகம் | தொட்டி எண். |
|---|---|---|
| 6 | புரித மார்க்கஸ் தேவாலயம், டண்டுகம | 10 |
| 7 | எஸ்.எல். ஆர்மி கோப்ஸ் (கொடுப்பனவு , பதிவேடுகள்), பனகொட | 10 |
| 8 | புத்தள பிஎஸ் - தேசிய வெசக் விழா | 100 |
| 9 | கலஹிட்டியவ மத்திய கல்லூரி, கனேமுல்ல | 20 |
| 10 | மசுஅ - தியவன்ன வெசாக் கலாபய | 50 |
| 11 | வயம்ப பல்கலைக்கழகம், குளியாப்பிட்டிய | 30 |
| 12 | வீரகெட்டிய பிஎஸ் | 100 |
| 13 | பொல்ககவெல பிஎஸ் | 50 |
| 14 | ஹக்மன பிஎஸ் | 100 |
| 15 | வயம்ப தேசிய கல்வியியல் கல்லூரி | 30 |
| 16 | வயம்ப பல்கலைக்கழகம் | 30 |
| 17 | ருவன்நெல்ல ஸ்ரீ தர்மதிலகரமய | 04 |
| 18 | பொது மருத்துவமனை, நுகேகொட | 20 |
| 19 | கங்கா இஹால கொரலே பிஎஸ் | 100 |
| 20 | சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு | 200 |
| 21 | கந்தளாய் பிஎஸ் | 85 |
| 22 | ஸ்ரீ ராகுல கல்லூரி, மடிவெல | 10 |
| 23 | 2ம் படைப்பிரிவு விசேட படை, வவுனியா | 50 |
| 24 | 4ம் பட்டாலியன், பனகொட, எஸ்.எல். ஆமி முகாம் | 10 |
| | **மொத்தம்** | 1,474 |

### 15.7.12 கொழும்பு கழிவு உரமாக்கல் மீதான சாத்தியப்பாட்டுக் கற்கை

கௌரவ சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரின் வழிகாட்டலின் கீழ், கொழும்பு எம்சி பிரதேசத்தில், சேர்க்கப்பட்ட கழிவை உரமாக்கலுக்கான சாத்தியப்பாட்டுக்கற்கை நடத்த, ஒரு பங்காளர் கூட்டம் நடத்தப்பட்டு விற்பன்னர் அணியானது அடையாளம் காணப்பட்டது. இந்த கற்கையானது சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவகத்துடன் இணைந்து நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது.




### 15.7.13 விமானப்படை முகாம்களில் கழிவு முகாமைத்துவம்

இலங்கை விமானப்படையானது 8 முக்கிய முகாம்களை நாடு முழுவதும் கொண்டிருக்கிறது. தியத்தலாவ மற்றும் கட்டுநாயக்க வில் உள்ள முகாம்கள் பிலிசரு செயற்றிட்டத்தால், கழிவை உரமாக்கும் உரத்தயாரிப்பு நிலையங்களை அமைப்பதில் உதவப்பட்டன. விமானப்படையானது இந்த முறைமையை அதன் பிற முகாம்களுக்கும் அமுல்படுத்த எண்ணியுள்ளது. மசுஅ உடன் இந்த முன்மொழிவுக்கான முன்னெடுப்புக்காக ஒரு கூட்டம் நடைபெற்றது.

## 15.8 பாரிய மற்றும் நடுத்தர அளவிலான கூட்டு பசளையாக்கல் மற்றும் குப்பை நிரப்பு அமைவிட பங்குதாரர்களுக்கான செயற்பாட்டு மற்றும் பேணுகை பற்றிய பயிற்சி/ அனைத்து பங்குதாரர்களுக்கும் நி.தி.க.மு பற்றிய விழிப்புணர்வு மற்றும் கல்வி

பிலிசறு கருத்திட்டமானது சம்பந்தப்பட்ட உள்ளூர் அதிகார சபைகள் மற்றும் நிறுவனங்களின் பணியாட்களுக்கு மூன்று பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை 2013 ஆம் ஆண்டில் ஒருங்கிணைத்ததுடன், கூட்டு பசளையாக்கல் வசதிகளை தாபிக்கும் முகமாக நிதியுதவியையும் வழங்கியுள்ளது.

பயிற்சி நிகழ்ச்சியானது அலுவலர்களுக்கு கைமேல் அனுபவத்தை வழங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டதாகும். பயிற்சியாளர்கள் கோட்பாட்டு நீதியான கற்கைகளை மட்டும் பெறாமல் செயன்முறை ரீதியாக உரத்தயாரிப்பு அனுபவத்தை பெற்று பயனடையும் வண்ணம் இதன் பாடவிதானம் அமைக்கப்பட்டுள்ளது. நிலநிரப்பலின் விஞ்ஞான அம்சங்கள் மீதான விரிவான கோட்பாட்டு அறிவும் இந்த நிகழ்ச்சியில் நிலரிரப்பலின் தற்போதைய உத்திகளை அறிவதற்காக உள்ளடக்கப்பட்டுள்ளது.

பிலிசறு கருத்திட்டத்தால் பின்வரும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

| இல. | பங்கேற்றோர்களின் பிரிவு | திகதி | பங்கேற்றோர் எண். |
|---|---|---|---|
| 1 | வெலிகம உரத்தயாரிப்பு நிலையத்தில் திஸ்ஸமகராமவின் தொழிலாளர்கள் மற்றும் | 2013.10.10 to 14 | 08 |
| 2 | உக்குவளை பி.எஸ். உரத்தயாரிப்பு நிலையத்தில் தொழிலாளர்கள் மற்றும் | 2013.09.25 | 08 |
| 3 | கல்நெவ பி.எஸ். உரத்தயாரிப்பு நிலையத்தில் தொழிலாளர்கள் மற்றும் | 2013.06.27 | 11 |
| 4 | ககடகஸ்கிடிகிலிய பி.எஸ். உரத்தயாரிப்பு நிலையத்தில் தொழிலாளர்கள் மற்றும் | 2013.10.22 | 10 |
| 5 | வீரகெட்டிய பி.எஸ். உரத்தயாரிப்பு நிலையத்தில் தொழிலாளர்கள் மற்றும் | 2013.12.18 | 17 |
| 6 | தமன பி.எஸ். உரத்தயாரிப்பு நிலையத்தில் தொழிலாளர்கள் மற்றும் | 2013.02.02 | 05 |
| 8 | மகாஓயா பி.எஸ். உரத்தயாரிப்பு நிலையத்தில் தொழிலாளர்கள் மற்றும் | 2013.05.03 | 04 |

## 15.9 திண்மக்கழிவு முகாமைத்துவம் பற்றிய புவிசார் தகவலியல் முறைமை தரவுத்தளம் ஒன்றின் அபிவிருத்தி

கழிவு முகாமைத்துவம் தொடர்பான முறையான தரவுகள் இன்மையானது கழிவு முகாமைத்துவம் பற்றிய நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தி செய்வதில் முட்டுக்கட்டையாகவுள்ளதால் ம.சு.அ யின் புவிசார் தகவலியல் பிரிவால் விரிவான தரவுத்தளமொன்று தயாரிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறையாக்குவதற்கு அவசியமான புவிசார் அமைப்பு முறைமை மற்றும் கணினிகள் போன்ற உபகரணங்களை ம.சு.அ வழங்கியது.

இக்கருத்திட்டத்தின் கீழ் இலங்கையில் உள்ளூராட்சி அதிகார சபைகள் 340 இன் திண்மக்கழிவு முகாமைத்துவ தரவு/தகவல்கள் சேகரிக்கப்பட்டதுடன் அவை விரிவான புவி நிலப்பரப்பு சுற்றாடல் வளங்கள் தகவல் முறையை ஒன்றுடன் கூட்டிணைக்கப்பட்டது. (நாட்டின் மத்திய சுற்றாடல் வன தரவுத் தளம்) இம்முறையானது ம.சு.அ புவிசார் தகவலியல் பிரிவினால் பேணப்பட்டு இற்றைப்படுத்தப்படுகின்றது. இந்த புவிசார் தகவலியல் முறைமை தரவுத்தளமானது கிராம சேவகர் பிரிவு மட்டம் வரையிலான இலங்கையின் சுற்றாடல் சமூக பொருளாதார தரவு /தகவல்களை உள்ளடக்குகின்றது. இத்தரவு தளத்தின் பிரதான நோக்கமானது யாதெனில், சுற்றாடல் திட்டமிடல், முகாமைத்துவம், மதிப்பீடு, கண்காணிப்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மற்றும் அவ்வாறான தகவல்களை பரப்புதல் போன்றவற்றிற்கு அவசியமான புவிசார் நிலப்பரப்பு தரவுகள் வழங்குவதும் பகுப்பாய்வுகளை மேற்கொள்வதும் ஆகும்.




## 15.10 கழிவு முகாமைத்துவ ஊக்குவிப்பு செயற்பாடுகள்

### 15.10.1 கண்காட்சிகள்

கண்காட்சிகளில் பங்கேற்பதன் பிரதான நோக்கமானது யாதெனில், முறையான கழிவு முகாமைத்துவம் தொடர்பாக பங்குதாரர்களுக்கு, விஷேடமாக பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு விழிப்பூட்டுவது ஆகும். இச்சந்தர்ப்பமானது பிலிசறு மற்றும் அதன் செயற்பாடுகள் பற்றி அவர்களை விழிப்பூட்டுவதற்கும் பயன்படுத்தப்பட்டது. சில கழிவு சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் முறைகளானவை இந்நாட்டிற்கு புதியவை ஆகையால், இச்செயல்முறைகளையும் அவற்றின் பணிகளையும் விபரிக்குமுகமாக கல்விச் சாதனங்கள் மாதிரிகளாக உபயோகிக்கப்பட்டன.

அடிப்படையில், மக்கள் பின்வரும் பரப்புக்கள் தொடர்பாக கண்காட்சிகளில் விழிப்பூட்டப்பட்டனர்.

- கழிவுகளை வண்ண குறியீடுகளின் படி பிரித்தெடுத்தல்
- கழிவுக்கட்டப்பாடு
- செயற்கை பசளையாக்கம் (பசளையாக்கல் வளவுகளில் உள்ளுர் முறைகள் மற்றும் காற்றுவிசை முறைகள் உபயோகித்தல்)
- துப்புரவான குப்பை நிரப்பல் செயற்பாடு
- இலங்கை மற்றும் சர்வதேச நாடுகளில் மேற்படி தொழில்நுட்ப பிரயோகம்

காட்சி பலகைகள், துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள் மற்றும் நாற்காட்டிகள் போன்ற சாதனங்களை உபயோகித்து செய்திகள் பரப்பிய, பிலிசறு கருத்திட்டம் பங்கேற்ற கண்காட்சிகளின் பட்டியல் பின்வருமாறு.

| இல. | கண்காட்சி | அமைவிடம் | திகதி |
|---|---|---|---|
| 1 | எடெக்ஸ் 2013 கண்காட்சி | பி.எம்.ஐ.சி.எச் | 20 - 22 ஜனவரி 2012 |
| 2 | தயட்டகிருள 2013 கண்காட்சி | அம்பாறை | ஏப்ரல் 2013 |

அட்டவணை: பிலிசறு கருத்திட்டம் பங்கேற்ற கண்காட்சிகள்

### 15.10.2 பிலிசறு கருட்டத்தால் செய்து முடிக்கப்பட்ட கழிவு முகாமைத்துவ கருத்திட்டங்கள் ஆரம்பித்தலின் போது இடம்பெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

பிலிசறு கருத்திட்டத்தின் தொழில்நுட்ப மற்றும் நிதியுதவியைப் பெற்று சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி அதிகார சபைகளால் தாப்பிக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட திண்மக்கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பொதுமக்களின் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களின் ஆதரவை அவர்களுக்கு வழங்க வேண்டியதன் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டு, சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி அதிகாரசபைகளால் ஏற்பாடு செய்யப்பட்ட திறப்பு அல்லது அத்திவாரக்கல் நாட்டு விழாக்களுக்கு கூடிய பெருந்திரளான மக்கள் மற்றும் பாடாசாலை மாணவர்கள் ஆகியோரை பயன்படுத்திக் கொண்டு அவற்றிக்கு சமாந்தரமாக பல்வேறு கல்வி மற்றும் வழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. ‘‘பிலிசறு’’கருத்திட்டத்தினால் செய்து முடிக்கப்பட்ட கருத்திட்டங்களின் திறப்பு விழா நிகழ்சிகளின் பட்டியல் கீழே காணப்படுகின்றது.

***அட்டவணை: உத்தியோகபூர்வ திறப்பு விழாக்கள்/அத்திவாரக்கல் நாட்டல்/ ஒப்பந்தம் கைச்சாத்திடல் ஆகிய நிகழ்வுகளில் நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்***

| இல | உள்ளூராட்சி, அரச நிறுவகம் | திறந்த திகதி |
|---|---|---|
| 1 | நாமல் ஓயா பிலிசரு உரத்தயாரிக்கு நிலைய திறப்பு வைபவம் | 20 ஏப்ரல் 2013 |
| | தமன பிலிசரு உரத்தயாரிக்கு நிலைய திறப்பு வைபவம் | 20 ஏப்ரல் 2013 |
| | மகா ஓயா பிலிசரு உரத்தயாரிக்கு நிலைய திறப்பு வைபவம் | 21 ஏப்ரல் 2013 |
| 2 | மலிம்பொட பிலிசரு உரத்தயாரிக்கு நிலைய திறப்பு வைபவம் | 30 ஓகஸ்ட் 2013 |
| 3 | களனி பல்கலைக்கழக மருத்துவபீட பிலிசரு உரத்தயாரிக்கு நிலைய திறப்பு வைபவம் | 11 டிசம்பர் 2013 |
| 4 | குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தில் கழிவு முகாமை விழிப்புணர்வு | 1 ஜனவரி 2013 |





## 15.11. சுற்றாடல் முன்னோடி பிரிகேட் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக பாடசாலை கழிவு முகாமைத்துவம் பற்றிய விழிப்புணர்வு

சுற்றாடல் முன்னோடி பிரிகேட் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக பாடசாலை பிள்ளைகள் ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் ஏனைய பணியாட்கள் ஆகியோர் கழிவு முகாமைத்துவம் தொடர்பாக விழிப்பூட்டப்பட்டனர்.

## 15.12 கருத்திட்ட ஒருங்கிணைப்பும் முகாமைத்துவமும்

கௌரவ சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரின் வழிகாட்டலின்படி, மாநகர கழிவு முகாமைத்துவத்திற்கான கோப்பரேட் திட்டம் ஆனது, அனைத்து பங்காளர்களின் ஆலோசனைகளோடு தயாரிக்கப்பட்டது. மற்றும் மேலதிக நிதி மற்றும் அடுத்த 5 ஆண்டுகளுக்கு திட்டத்தை விரிவுபடுத்துவதற்கு என கோரி அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கேற்ப 2013ம் ஆண்டுக்கு 290 மில்லியனுக்கு அனுமதி வழங்கப்பட்டது. 2014ல் இந்த செயற்றிட்ட நடவடிக்கைகளுக்காக தேசிய பாதீட்டில் ரூ. 200 மில்லியன் ஒதுக்கப்பட்டது.

2013ல், செயற்றிட்டத்திலிருந்து 6 அலுவலர்கள் பதவி விலகினர். மசுஅ ஆனது 22 ஊழியர்களை ஜூலையில் விலக்கியது. அதன் தகவல் பின்வருமாறு:

| பதவி | இல. |
|---|---|
| செயற்றிட்டப் பணிப்பாளர் | 01 |
| பதில் கணக்காளர் | 01 |
| பிரிவு சுற். அலுவலர் | 01 |
| மொத்தம் | **03** |

| புதவி | விலக்கல் | விலகல் |
|---|---|---|
| பிரதிப் பணிப்பாளர் | 01 | - |
| பிரதி முகாமையாளர் | 01 | 02 |
| சிரேட்ட பொறியியலாளர் | 02 | - |
| கணக்காளர் | - | 01 |
| கனிட்ட கணக்காளர் | 01 | - |
| செயற்றிட்ட அலுவலர் | 03 | - |
| நிர்வாக அலுவலர் | 01 | - |
| எண்ணிக்கை அளவையாளர் | 01 | - |
| செயற்றிட்ட பொறியியலாளார் | 01 | - |
| செயற்றிட்ட உதவியாளர் | 01 | 01 |
| செயற்றிட்ட செலயாளர் | - | O1 |
| வரைஞர் | 01 | - |
| கொள்முதல் உதவியாளர் | - | 01 |
| கணக்கியல் உதவியாளர் | 01 | - |
| எழுதுவினைஞர் | 05 | - |
| சுாரதி | 03 | - |
| அலுவலக உதவியாளர் | 01 | - |
| மொத்தம் | **22** | **06** |

31 டிசம்பர் 2013 அன்று, செயற்றிட்டமானது 3 ஊழியரை மட்டும் கொண்டிருந்தது. கொள்முதல் வேலைகள், எஸ்.டி.எ.ஃ.ப். - கொய்கா செயற்றிட்டத்தின் கொள்முதல் முகாமையால் கையாளப்பட்டன. 2013ல் இருந்த ஊழியர்கள் பின்வருமாறு பட்டியலிடப்பட்டனர்.

## 15.13 நிதிசார் முன்னேற்றம்

2013ம் ஆண்டுக்காக, ஆரம்பத்தில் செயற்றிட்டத்திற்கு ரூ200 மில்லியன் ஒதுக்கப்பட்டது. செயற்றிட்டமானது, மேலதிக நிதியை செயற்றிட்ட நடவடிக்கைகளுக்கான அமைச்சரவைப்பத்திரம் மூலமாக கோரியது. அதன்படி, மேலதிக ரூ. 265 மில்லியனுகான அமைச்சரவை அனுமதி கிடைத்தது. எவ்வாறாயினும் பொது திறைசேரியானது அனுமதிக்கப்பட்ட நிதியில் ரூ. 65 மில்லியனை மட்டும் வெளிவிட்டது. செயற்றிட்டத்தின் மொத்த நிதி முன்னேற்றமானது ரூ. 265 மில்லியன் ஆகும். இது 200 வீத முன்னேற்றமாகும். தற்போதைய ஆண்டின் ஒதுக்கீட்டிலிருந்து முன்னைய ஆண்டுக்கான வேலைகளின் பலகொடுப்பனவுகளை செய்ய வேண்டும்.

பிலிசரு செயற்றிட்டம்

நிதி நடத்தைக் கூற்று

31 டிசம்பர் 2013ல் முடிந்த வருடத்திற்கானது

| | 2013 ரூ. | | 2012 ரூ. | |
|---|---|---|---|---|
| வருமானம் | | | | |
| அரச மானியங்கள் | | 265,000,000.00 | | 220,960,000.00 |
| உரத்தொட்டிகளிலிருந்தான விற்பனை | | 2,565,007.13 | | 4,488,817.97 |
| எம்.ஐ.எஸ்.எல். வருமானம் | | 510.40 | | 261,618.21 |
| மீளத்திருப்பமுடியா வைப்புகள் | | - | | 170,000.00 |
| டி.்.பரர்ட் வருமானம் | | 27,412.50 | | 10,308,234.63 |
| | | 267,592,930.03 | | 236,188,670.81 |
| செலவுகள் | | | | |
| முக்கிய உரத்தயாரிப்பு நிலையங்கள் அமைத்தல் | | | | |
| | | | | |
| கொலன்னாவ | 569,449.80 | | 301,572.54 | |
| களுத்துறை பொகொரவத்தை | 138,967.77 | | 1,047,561.87 | |
| ஹிக்கடுவ, மொனொரவியவத்தை | 225,017.10 | | 19,980,525.70 | |
| குருநாகல், சுந்தரபொல | 38,305,755.36 | | 22,861,335.32 | |
| அநுராதபுர, நுவரகம்பலாத்தை | 664,610.80 | | 2,154,847.96 | |
| யாழ்ப்பாணம் | 91,368.00 | | - | |
| முக்கிய உரத்தயாரிப்பு நிலையங்களின் செயற்பாட்டுச் செலவு | 1,956,229.53 | | 6,161,683.84 | |
| முக்கிய உரத்தயாரிப்பு நிலையங்களின் மேம்படுத்தல்கள் | - | | 1,086,312.51 | |

| பிலிசரு செயற்றிட்டம்<br>நிதி நடத்தைக் கூற்று<br>31 டிசம்பர் 2013ல் முடிந்த வருடத்திற்கானது | | | | |
|---|---|---|---|---|
| | **2013 ரூ.** | | **2012 ரூ.** | |
| முக்கிய உரத்தயாரிப்பு நிலையங்களின் திட்டமிடல், வடிவமைப்பு | - | 41,951,398.36 | 1,703,346.10 | 55,297,185.84 |
| | | | | |
| நிலநிரப்பல் இடங்கள், மாற்றும் நிலையங்கள் அமைத்தல் | | | | |
| தேரப்பட அமைவிடங்களில் நிலநிரம்பல்களின் திட்டமிடல், வடிவமைப்பு, அமுல்ப்படுத்தல்கள் | - | - | 4,255,164.23 | 4,255,164.23 |
| | | | | |
| சிறியளவான உரத்தயாரிப்பு நிலையங்கள் மற்றும் எ.டபிள்யூ.எம் நிகழ்ச்சிகளுக்கான வசதிப்படுத்தல் | | | | |
| உள் ஊராட்சிகளுக்கான சிறியளவான உரத்தயாரிப்பு நிலையங்கள் | 111,086,200.21 | | 77,341,133.04 | |
| சிறியளவான உரத்தயாரிப்பு நிலையங்களுக்கான ஓ,எம் மற்றும் மேம்பாடுகள் | 210,406.35 | | 1,645,089.35 | |
| பிலிசரு திட்டத்தாலமைக்கப்பட்ட உரநிலையங்களின் செயற்பாடுகளை கண்காணித்தல் | 92,330.84 | | 137,083.11 | |
| உள் ஊராட்சிகள், மருத்துவமனைகள், இராணுவ முகாம்கள், அரச அமைப்புகளுக்கான உயிர்வாயு நிலையங்கள் | - | | 1,191,629.80 | |
| ஈ-கழிவு, உடிர்மருத்துவ - சுகாதார கழிவுகள், மருத்துவ கழிவுகளின் முகாமைத்துவம் | - | | 162,798.50 | |

| பிலிசரு செயற்றிட்டம்<br>நிதி நடத்தைக் கூற்று<br>31 டிசம்பர் 2013ல் முடிந்த வருடத்திற்கானது | | | | |
|---|---|---|---|---|
| | **2013 ரூ.** | | **2012 ரூ.** | |
| சுந்தர கம்பகா நிகழ்ச்சியின் அமுல்ப்படுத்தல் | - | | 5,342,400.00 | |
| உள் ஊராட்சிகள், பள்ளிகள், மத இடங்கள், நிறுவகங்களுக்கு வீட்டு உரத்தொட்டி மற்றும் சேகரிப்பு தொட்டி தரல் | - | | 15,730,644.21 | |
| கழிவுசேர்த்தல், போக்குவரத்து வாகனங்கள், நிலநிரப்பல் கருவிகள் இயந்திரங்கள் வழங்கல் | 7,105,193.85 | | 158,041,852.04 | |
| கழிவு முகாமைத்துவ முன்னிறுத்தல் நடவடிக்கைகள் | 484,275.28 | | 17,744,815.82 | |
| தயட்ட கிருள தேசிய மேம்பாட்டு கண்காட்சி | - | | 2,491,024.06 | |
| திண்மக்கழிவு முகாமை மீதான ஜி.ஐ.எஸ். தரவித்தளம் அபிவிருத்தி | - | | 1,769,636.80 | |
| பாடசாலைகளில் கழிவு முகாமைத்துவத்தை சூழல் முன்னோடி நிகழ்ச்சியை வலுப்படுத்தல் மூலமாக மேம்படுத்தல் | 2,974,702.70 | | 14,416,876.65 | |
| அரச, தனியார் துறை அமெளப்புகள், தொழில்முனைவோருக்கான கழிவு குறைத்தல், முகாமை நிகழ்ச்சியின் அங்கீகாரத்திற்கான தேசிய அணுகல் | 3,000,000.00 | | 5,025,000.00 | |
| உரத்தயாரிப்பு, தரக்கட்டுப்பாட்டு நியமங்களமைத்தல், உரத்தரத்தை வசதிப்படுத்தலுக்கான சந்தைப்படுத்தல் வாய்ப்புகளைத்தரல் | - | | 43,470.00 | |

| பிலிசரு செயற்றிட்டம்<br>நிதி நடத்தைக் கூற்று<br>31 டிசம்பர் 2013ல் முடிந்த வருடத்திற்கானது | | | | |
|---|---|---|---|---|
| | **2013 ரூ.** | | **2012 ரூ.** | |
| அனைத்து பங்காளர்கள், பயிற்சி கொள்ளளவுக்கான விழிப்பு, ஐ.எஸ்.டபிள்யூஎம் கல்வி மற்றும் பாரிய, நடுத்தர அளவான உர நிலநிரப்பல்களின் பேணுகை, செயற்பாடு மீதான பயிற்சி | - | | 901,893.13 | |
| ஐ.எஸ்.டபிள்யூஎம் பயிற்சி நிலையத்தை கண்டியிலமைத்தல் | - | 124,953,109.23 | 570,772.28 | 302,556,118.79 |
| | | | | |
| கொய்கா செலவுகள் | | | | |
| நில வேலைகள் | 854,582.59 | | | |
| செயற்றிட்ட செயற்பாடு மற்றும் பேணுகை | 179,148.84 | 1,033,731.43 | | |
| | | | | |
| செயற்பாட்டு செலவுகள் | | | | |
| போக்குவரத்து (எரிபொருள், பேணுகை) | 2,460,379.64 | | 4,314,404.83 | |
| அலுவலக வழங்கல்கள் | 1,038,485.21 | | 2,002,498.96 | |
| செயற்றிட்ட ஊழியர்களுக்கான சம்பளங்கள் | 9,935,121.15 | | 20,111,113.59 | |
| பணிக்கொடை முன்னேற்பாடு | 124,700.05 | | | |
| ஈ.பி.எ.்.ப். | 1,808,164.29 | | 1,969,976.15 | |
| ஈ.டி.எ.்.ப். | 283,602.90 | | 492,493.91 | |
| ஓவர்டைம், வருவாய், விசேட கொடுப்பனவு | 850,937.91 | | 2,483,390.58 | |

| பிலிசரு செயற்றிட்டம்<br>நிதி நடத்தைக் கூற்று<br>31 டிசம்பர் 2013ல் முடிந்த வருடத்திற்கானது | 2013 ரூ. | | 2012 ரூ. | |
|---|---|---|---|---|
| தொடர்பாடல், தபால் | 285,070.59 | | 349,013.11 | |
| வாடகைகள் | 3,979,007.67 | | 3,408,800.05 | |
| செயற்றிட்ட ஒருங்கிணைப்பு, முகாமைத்துவம் | 852,385.94 | | 204,066.00 | |
| வங்கிக்கட்டணங்கள் மற்றும் பற்று வரி | 12,000.00 | | 20,100.00 | |
| நிச்சயமின்மை, பலவிதமானவை | 63,887.21 | | 34,700.00 | |
| நிலையம், கருவிகளின் சொத்து தேய்மானம் | 2,221,182.74 | | 10,308,234.63 | |
| வாகன சேவை, திருத்தம் | 1,021,045.67 | 24,935,970.97 | 2,383,072.50 | 48,081,864.31 |
| மொத்த செலவுகள் | | 192,874,209.99 | | 410,190,333.17 |
| செலவுகள் மேலான வருமானம் (வருமானம் மேலன செலவுகள்) | | 74,718,720.04 | | (174,001,662.36) |

| பிலிசரு செயற்றிட்டம் | | | |
|---|---|---|---|
| **நிதி நிலைக் கூற்று** | | | |
| **31 டிசம்பர் ல்** | | | |
| | | | |
| | குறிப்பு | **2013** | **2012** |
| சொத்துகள் | **இல.** | **ரூ.** | **ரூ.** |
| | | | |
| நடைமுறைச்சொத்து அல்லாதவை | | | |
| சொத்து, நிலையம் மற்றும் கருவி | 3 | 3,323,343.20 | 5,544,525.94 |
| மொத்த நடைமுறைச்சொத்தல்லாதவை | | **3,323,343.20** | **5,544,525.94** |
| | | | |
| நடைமுறைச்சொத்துக்கள் | | | |
| வங்கியில் பணம் | | 2,325,730.62 | 12,376,929.24 |
| பண இம்ப்ரெஸ்ட் | | 30,000.00 | 30,000.00 |
| நுகரக்கூடிய இருப்புகள் | 4 | 148,326.50 | 460,170.50 |
| முற்கொடுப்பனவு | | - | 191,202.84 |
| வாங்ககூடிய முற்கொடுப்பனவு | | - | 680,000.00 |
| அசைவாக்கத்திற்கான முற்கொடுப்பனவு | 5 | 21,166,886.39 | 45,627,495.09 |
| மசுஅ - வாங்ககூடியது | | - | 33,404.93 |
| எரிபொருள் வைப்பு - நதிஷா ட்ரவல்ஸ் | | 200,000.00 | 200,000.00 |
| மொத்த நடைமுறைச் சொத்துகள் | | **23,870,943.51** | **59,599,202.60** |
| | | | - |
| மொத்த சொத்துகள் | | **27,194,286.71** | **65,143,728.54** |
| | | | |
| குறைவு: நடைமுறை பொறுப்புகள் | | | |
| நடந்த செலவுகள் | 6 | 83,305,395.30 | 191,887,664.83 |
| கொடுப்பனவு நிறுத்தம் | 7 | 14,228,293.45 | 19,982,460.20 |
| பணிக்கொடை கொடுப்பனவு | 8 | - | 814,769.95 |
| மசுஅ இற்கான கொடுப்பனவு | 9 | - | 4,535,655.30 |
| கொய்கா செயற்றிட்டத்திற்கான கொடுப்பனவு | 10 | 2,318,105.00 | 2,438,454.80 |
| மீளளிக்கபடும் வைப்புகள் | 11 | 350,000.00 | 350,000.00 |
| மொத்த நடைமுறைப் பொறுப்புகள் | | **100,201,793.75** | **220,009,005.08** |
| | | | |
| நிகர சொத்துகள் | | **(73,007,507.04)** | **(154,865,276.54)** |
| | | | |
| மீதி பி/எ.்.ப் | | (156,766,995.69) | 10,376,260.10 |
| ஆண்டுக்கான மிகை.். ( பற்றாக்குறை) | | 74,999,362.98 | (174,001,662.36) |
| மூலதன மானியம் மற்றும் மிகை | | 8,760,125.67 | 8,760,125.72 |
| | | **(73,007,507.04)** | **(154,865,276.54)** |

| பிலிசரு செயற்றிட்டம் | | |
|---|---|---|
| பணப்பாய்வுக் கூற்று | | |
| 31 டிசம்பர் 2013ல் முடிந்த வருடத்திற்கானது | | |
| | | |
| குறிப்பு | **2013 ரூ.** | **2012 ரூ.** |
| | | |
| செயற்படுத்தும் நடவடிக்கைகள் | | |
| இருப்புக்களின் குறைவு | 311,844.00 | 1,544,519.00 |
| முற்கொடுப்பனவுகளின் குறைவு | 191,202.84 | 636,627.96 |
| வாங்கக்கூடிய முற்கொடுப்பனவுகளின் குறைவு | 680,000.00 | 242,224.99 |
| அசைவாக்க முற்கொடுப்பனவின் குறைவு (அதிகரிப்பு) | 24,460,608.70 | (7,962,418.41) |
| மசுஅ இடமிருந்து வாங்க வேண்டியதன் குறைவு | 33,404.93 | (33,404.93) |
| பிற வாங்க வேண்டியவற்றின் அதிகரிப்பு | - | (100,000.00) |
| நடந்த செலவுகளின் அதிகரிப்பு (அல்லது குறைவு) | (108,582,269.53) | 170,409,525.25 |
| கொடுப்பனவு நிறுத்தத்தின் அதிகரிப்பு (அல்லது குறைவு) | (5,754,166.75) | 4,131,670.84 |
| மசு அ கொடுப்பனவின் அதிகரிப்பு (அல்லது குறைவு) | (4,535,655.30) | 4,535,655.30 |
| கொய்கா செயற்றிட்டத்திற்கான கொடுப்பனவின் அதிகரிப்பு (அல்லது குறைவு) | (120,349.80) | 2,438,454.80 |
| மீளத்தரப்படும் வைப்புகளின் அதிகரிப்பு | - | 50,000.00 |
| செயற்பாடுகளினாலான பண ஆக்கம் | **(93,315,380.91)** | **175,892,854.80** |
| குறைவு: கொடுத்த பணிக்கொடை | (939,470.00) | - |
| நடவடிக்கைகளை செயற்படுத்தலில் நிகரப் பணப்பாய்ச்சல் | **(94,254,850.91)** | **175,892,854.80** |
| | | |
| முதலீட்டு நடவடிக்கைகள் | | |
| முக்கிய உர நிலையங்களமைத்தல் | (41,951,398.36) | (55,298,185.84) |
| நிலையான சொத்து வாங்கல் | - | (1,187,242.00) |
| நிலநிரப்பலிடங்கள் மற்றும் மாற்று நிலையங்களமைத்தல் | - | (4,255,164.23) |
| சிறியளவான உர நிலையங்கள் மற்றும் எஸ்.டபிள்யூ.எம் நிகழ்ச்சிகளின் வசதிப்படுத்தல் | (124,953,109.23) | (302,556,118.79) |
| கொய்கா செலவுகள் | (1,033,731.43) | - |
| செயற்றிட்ட செயற்படுத்தும் நடவடிக்கைகள் | (22,309,444.89) | (37,742,054.73) |
| முதலீட்டு நடவடிக்கைகளுக்கான பணப்பாய்ச்சல் பயன்பாடு | **(190,247,683.91)** | **(401,038,765.59)** |
| | | |
| நிதி நடவடிக்கைகள் | | |

| | | |
|---|---|---|
| திறைசேரியிலிருந்து பெற்ற நிதிகள் | 265,000,000.00 | 220,960,000.00 |
| உரத்தொட்டி விற்பனை வருமானம் | 2,592,929.63 | 4,684,986.18 |
| குவிந்த நிதியின் மாற்றம் | 6,858,406.57 | 553,609.04 |
| நிதிநடவடிக்கைகளிலிருந்து பணப்பாய்ச்சல் | **274,451,336.20** | **226,198,595.22** |
| | | |
| ஆண்டுக்கான பணம் மற்றும் பண நிகரானவைகள் | **(10,051,198.62)** | **1,052,684.43** |
| ஆண்டுத்தொடக்கத்தில் பணம் மற்றும் பண நிகரானவைகள் | **12,406,929.24** | **11,354,244.81** |
| ஆண்டிறுதியில் பணம் மற்றும் பண நிகரானவைகள் - (குறிப்பு ஏ) | **2,355,730.62** | **12,406,929.24** |
| | | |
| குறிப்பு ஏ - ஆண்டிறுதியில் பணம் மற்றும் பண நிகரானவைகள் | | |
| வங்கியில் பணம் | 2,325,730.62 | 12,376,929.24 |
| பண இம்ப்ரெஸ்ட் | 30,000.00 | 30,000.00 |
| | **2,355,730.62** | **12,406,929.24** |

## பிலிசரு செயற்றிட்டத்தின் கணக்கியல் கொள்கைகள்

**1. கோர்பரேட் தகவல்**

**1.1 வதிவிட சட்ட அமைப்பு**

பிலிசரு செயற்றிட்டமானது மசூஅ இல் 1 ஜனவரி 2008 இல், “பிலிசரு நிகழ்ச்சி - இலங்கையில் கழிவு முகாமைத்துவத்திற்கான ஒரு தேசிய அணுகல்” எனத்தலைப்பிடப்பட்டதும் சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்டதும் நாட்டின் முறையற்ற திண்மகழிவு முகாமைத்துவத்தின் பிரச்சனையைக் கூழும் நோக்குடன் அமைந்திருப்பதுமான அமைச்சரவை புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் அமைக்கப்பட்டது. இது 19 டிசம்பர் 2007 அன்று அமைச்சரவையால் அனுமதிக்கப்பட்டது.

இந்த செயற்றிட்டத்தின் காலத்திற்கமைந்த தேவை மற்றும் முக்கியத்துவத்தை கருத்திற் கொண்டு, அமைச்சரவையானது1 ஜனவரி 2011 இலிருந்து 3 ஆண்டுகளுக்கு நீடிக்க அனுமதி வழங்கியது.

**நோக்கங்கள்**

பிலிசரு செயற்றிட்டத்தில் உள்ள முக்கிய நோக்கத் தொகுதி

1. **முறையான வளப்பாதுகாப்பு மற்றும் முறையான எஸ். டபிள்யூ.எம். ஐ உறுதிப்படுத்தல்**

எஸ். டபிள்யூ.எம். இல் சரியான கொள்கை மற்றும் உத்தியை பயன்படுத்தல் மற்றும் குப்பை வெளியேற்றுகை ஊடாக வீணாக்கப்பட்ட வளங்களை பாதுகாத்தல் மற்றும் உத்தியோக பூர்வமற்ற , முறையற்ற எஸ்.டபிள்யூ.எம் ஆல் பாதிக்கப்பட்ட இயற்கை வளங்களை பாதுகாத்தல்

2. **சம்பந்தப்பட ஊழியர்க்கு எஸ்.டபிள்யூ.எம் பிரச்சனைகள் சார்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தல் மற்றும் அவர்களின் திறன் மேம்படுத்தல்**

எஸ்.டபிள்யூ.எம் சம்பந்தப்பட்டவை தொடர்பில், விசேடமாக உள் ஊராட்சி தலைவர்கள் ஊழியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தலும் பயிற்றலும் மற்றும் டி.ஈ.ஓக்கு எஸ்.டபிள்யூ.எம் முகாமை அணுகலை பயிற்றல். எஸ்.டபிள்யூ.எம் சார் திறன் மேம்பாட்டிற்காக, தேவையான பட்டறைகள்,

ஒழுங்கு செய்யப்பட்டன. இவற்றில் தனியார், அரசாங்கம், அரசு சாரா, கல்வி, மற்றும் விசேட ஊழியர்கள் பங்குபற்றினர். சில விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் பின்வருமாறு:

- ”தயட்டகிருள” தேசிய கண்காட்சி போன்ற நிகழ்ச்சிகளில் கண்காட்சிகள்
- பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், பிற நிறுவகங்கள் மற்றும் நிகழ்வுகளில் துண்டுப்பிரசுரங்கள் மற்றும் சுவரொட்டிகளை விநியோகித்தல்
- கழிவு முகாமை மீதான நூல்கள் மற்றும் அறிக்கைகள் உள்ளிட்ட ஆவணங்கள் வெளியிடல்
- பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் கல்வி நிகழ்ச்சிகள்
- திண்மக் கழிவு முகாமைத்துவம் மற்றும் கழிவு நிலநிரப்பல்கள் மீதான தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகள்
- பத்திரிகை ஆக்கங்கள் மற்றும் சிறப்பம்சங்கள்
- உள் ஊராட்சி மற்றும் பிற அமைப்புகளின் தலைவர்களுக்கான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்
- பிளாஸ்டிக் பாவனையை குறைக்க துணிப்பைகளை விநியோகித்தல்

**3. எஸ்.டபிள்யூ.எம் செயற்றிட்டங்களின் அமுல்படுத்துகை**

தேவையான தொழினுட்ப அறிவு, நிதி, வளங்களை, எஸ்.டபிள்யூ.எம் செயற்றிட்டங்கள் செயற்படும் உள் ஊராட்சிசபைகளுக்கும் ஆரம்பிக்கவிருக்கும் உள் ஊராட்சிசபைகளுக்கும் தருவதற்காக. சிறிய அளவான உர நிலையங்கள் (நாளுக்கு 10 தொன்னுக்கு குறைந்த பெறுகை) மற்றும் சில பாரிய உர நிலையங்களின் கட்டுமானத்துடன் செயற்றிட்டமானது 115 உள் ஊராட்சிகளுக்கு உதவியுள்ளது.

**4. எஸ்.டபிள்யூ.எம் நிகழ்ச்சிகளை கண்காணித்தல்**

இலங்கையில், எஸ்.டபிள்யூ.எம் இன் பொறுப்பானது எல்.ஏக்களினதாகும். ஆனால் பெரும்பாலான பொது முறைப்பாடுகள் எம்.ஓ.ஈ., மசுஅ ஆல் பெறப்பட்டுள்ளன. உள் ஊராட்சிசபைகளின் தேவையான வளங்களை அடையாளங்காண்பதற்காகவும் உள் ஊராட்சிசபைகளுக்கு எஸ்.டபிள்யூ.எம் ஐ முறையாக அமுல்படுத்த உதவுவதற்காகவும் எஸ்.டபிள்யூ.எம் செயற்றிட்டங்களின் கருத்துக்கேட்பு நடத்தப்பட்டது.

**5. எஸ்.டபிள்யூ.எம் இற்கு உதவுவதற்காக வசதியளித்தல்**

வளங்களை மீள் சுழற்சிக்குட்படுத்துவதற்கான முன்னேற்பாட்டிற்கு உதவுவதற்காக எஸ்.டபிள்யூ.எம் இன் இருப்பிலுள்ள மீள்சுழற்சிக்கான வசதிகளை (கருவிகள், நிதி, இன்னபிற) மேம்படுத்தலும் சந்தையை ஆக்கல் மற்றும் குடும்ப மட்டங்களில் கழிவு பிரித்தல் மூலமாக வளங்களை பாதுகாத்தலும். நாடுமுழுவதும் தேவையுள்ள இடங்களில் எஸ்.டபிள்யூ.எம் சேகரிப்பு மையங்களை திறத்தலும் எஸ்.டபிள்யூ.எம் இல் பங்கேற்பை அதிகரிப்பதற்காக மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தலும். மேலும், சலுகைவிலைகளில் வீட்டு உரத்தொட்டிகள் வழங்கல் மற்றும் கழிவு வேறாக்கல் தொட்டிகள் வழங்கல்.

**6. எஸ்.டபிள்யூ.எம் இற்கான தேவையான நிதி வசதிகளிற்கான முன்னேற்பாடு**

எஸ்.டபிள்யூ.எம் நோக்கத்திற்காக உள் ஊராட்சிசபைகளுக்கு நிதி வசதிகளை தர நடவடிக்கை எடுக்கப்பட்டது. இது பல்வேறு அமைப்புகளூடாக, அரசாங்கத்திலிருந்தும் பிற முகவரகங்களிலிருந்தும் பெற்ற நிதியால் நடத்தப்படும்.

**7. கழிவு மீள்சுழற்சி வங்கி முறைமை அமைத்தல்**

இந்த கழிவு வங்கி முறைமைக்கு ஏற்ப, ஒரு மதிபிற்குரிய வங்கியானது கணக்கு வைப்பாளர்களிடமிருந்து கழிவு சேகரிக்க உடன்பட வேண்டும். சேகரிக்கப்படும் கழிவுக்கு சமனான தொகை அவர்களின் வங்கிக்கணக்கில் வைப்பிலிட வெண்டும். செகரிக்கப்பட்ட கழிவானது வங்கியால் மீள்சுழற்சியாளர்களுக்கு விற்கப்பட்டு பணமாக மாற்றப்படும்.

**2. கணக்கீட்டு கொள்கைகளின் சுருக்கம்**

**2.1 பொது**

**2.1.1 இணக்கப்பாட்டு கூற்று**

இலங்கை பட்டயக்கணக்காளர்கள் நிறுவகத்தினால் பரிந்துரைக்கப்பட்டுள்ள இலங்கை கணக்கியல் தரங்களுக்கு இணங்க பிலிசறு திண்மக் கழிவு முகாமைத்துவ கருத்திட்டத்தின் ஐந்தொகை மற்றும் சம்பந்தப்பட்ட நிதிசார் செயலாற்றுகை கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் கணக்கு குறிப்புகள் என்பன தயாரிக்கப்பட்டுள்ளன.

**2.1.2 இறுதிக்கணக்கை தயாரிப்பதற்கான அடிப்படை**

கருத்திட்டத்தின் இறுதிக்கணக்கானது பொதுவாக ஏற்றுக்கொள்ளக்கூடிய கணக்கியல் கொள்கைகளின் அடிப்படையில் வரலாற்று ரீதியான கிரய மாற்றத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது. கணக்கில் தாக்கம் செலுத்தும் பண வீக்க காரணிகள் சம்பந்தமாக சீராக்கல் இடம்பெறவில்லை. மேற்படி கணக்கானது இலங்கை ரூபாவில் தயாரிக்கப்பட்டுள்ளது.

**2.1.3 ஒப்பீட்டுத்தகவல்கள்**

கருத்திட்டத்தால் கணக்கியல் கொள்கைகள் சீராக பிரயோகிக்கப்பட்டுள்ளதுடன் முன்னைய ஆண்டு கணக்கியல் புள்ளிவிபரங்களுடன் முரணற்றவிதத்தில் காணப்படுவதுடன் பொருந்தும் வகையில் தேவைக்கு ஏற்ப மீளமைக்கப்பட்டுள்ளன.

**2.1.4 ஆதனம், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்**

**2.1.4.1 அங்கீகாரமும் அளவீடும்**

ஒரு சொத்துக்கு பெறுமதி சேர்க்கும் போது அதன் காவுத் தொகையில் ஏற்படும் அதிகரிப்பானது நேரடியாக மூலதன மானியக் கணக்கு பற்று வைக்கப்படுகின்றது.

ஆதன, இயந்திர, உபகரணங்கள் திரண்ட பெறுமானத் தேய்வும் கழிக்கப்பட்டு கிரயத்தில் பதியப்பட்டுள்ளன. ஒரு சொத்துக்கு பெறுமதி சேர்க்கும் வேளையில் அதன் காவுத் தொகையில் ஏற்படும் ஏதும் அதிகரிப்பானது நேரடியாக மூலதன மானியக் கணக்கில் பற்று வைக்கப்படுகின்றது.

பொறி மற்றும் பொறித்தொகுதியின் கொள்விலையானது அவற்றை பயன்படுத்தும் நோகத்திற்காக தொழில்படு நிலைக்கு கொண்டு வருவதற்கு ஏற்பட்ட ஏதும் செலவுகளுடனான கொள்வனவு அல்லது நிர்மாண செலவுகளையும் கொண்டிருக்கும்.

பொறி மற்றும் பொறித்தொகுதி கொள்விலையானது அங்கீகரிக்கப்பட்ட திகதியில் உள்ளவாறு ரொக்கப் பண விலையாகும். அதாவது கொள்விலைத் தினமாகும்.

**2.1.4.2 தேய்மானம்**

பயன்படு பொருளாதார ஆயுட்காலத்திற்கு ஏற்ப குறிப்பிட்ட தொகைகள் பதிவழிப்பதற்காக சகல ஆதனங்கள், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி அல்லது கிரயத்திற்கு நேர்கோட்டு முறையை பயன்படுத்தி பெறுமானத் தேய்வு ஏற்பாடுகள் கணக்கிடப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| மோட்டார் வாகனம் | 25% |
| அலுவலக உபகரணங்கள் | 25% |
| தளபாடங்கள் | 10% |
| ஆய்வுகூட உபகரணங்கள் | 10% |
| கட்டிடங்கள் | 2.5% |

**2.1.5 பொருட் பதிவுகள்**

பொருட் பதிவுகளுக்கான செலவுகளானது அவற்றின் தற்போதைய அமைவிடத்தில் பொருட் பதிவுகள் செய்யும் போது ஏற்பட்ட செலவுகள் அனைத்தையும் உள்ளக்குகின்றது.

இக்கருத்திட்டமானது வீட்டுக் கூட்டுப்பசளைகளை குறைந்த மானிய விலையில் வழங்கப்படுவதுடன், தேசிய மட்ட விழாக்கள் பாடசாலை கண்காட்சிகள் போன்றவைகளுக்கு வேண்டுகோளின் அடிப்படையில் கழிவு பிரித்தல் தொட்டிகள் இலவசமாக வழங்க்கப்படுகின்றன.

எஞ்சிய பசளை தொட்டிகள், கழிவு பிரித்தல் தொட்டிகளின் மதிப்பானது இறுதிக்கணக்குகளுக்காக கருத்திட்ட வருடத்தின் முடிவில் சீராக்கப்படுகின்றது.

எஞ்சிய ஊக்குவிப்பு சாதனங்களான பிலிசறு தொப்பிகள், டீ-சர்ட்ஸ் மற்றும் புடவை பைகள் என்பன கையிருப்பு முடிவாக கருதப்படுகின்றன.

**2.1.6 காசும் காசுக்கு சமமானவைகளும்**

காசுப்பாய்ச்சல் கூற்றின் தேவைக்காக காசும் காசுக்கு சமமானவைகளும் கையிலுள்ள காசாகவும் வங்கியிலுள்ள வைப்பாகவும் வரையறைக்கப்படுகின்றன.

**2.1.7 பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்**

கோரிக்கையின் பேரில் அல்லது ஐந்தொகை திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள் கொடுப்பனவுக்குரிய ஐந்தொகையிலுள்ள நடைமுறைப் பொறுப்பக்களே பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

கருத்திட்டமானது கடந்த கால சம்பவங்களின் விளைவாக சட்ட அல்லது ஆக்கபூர்வமான கடப்பாடொன்றை கொண்டிருக்கும் வேளையில் ஏற்பாடுகளும் பொறுப்புக்களும் அங்கீகரிக்கப்படுகின்றதுடன் கடப்பாட்டை தீர்பதற்கு பொருளாதார நன்மைகளின் வெளியேற்றம் ஒன்று அவசிப்படும் என்பது நிகழக்கூடிய ஒரு விடயமாகும்.

**2.1.8 ஊழியர்களுக்கான ஓய்வுகால பயன்கள்**

**(அ) வரையறுக்கப்பட்ட பயன்திட்டங்கள்**

தேர்ந்தெடுக்கப்பட்ட ஓய்வூதிய பயன்திட்டமானது 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க 15 பணிக்கொடை சட்டத்தின் கொடுப்பனவின் கீழ் அவசியமாகின்றதாகும். கருத்திட்ட பணியாட்களின் கணக்குகளில் ஓய்வுதிய பணிக்கொடையின் ஏ்றபாடுகள் 16 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு நியமத்தின் அடிப்படையில் “ஓய்வூ பணிக்கொடை செலவினம்” - ஊழியரின் முதலாம் ஆண்டு சேவையிலிருந்து செய்யப்பட்டிருந்தது.

**(ஆ) வரையறுக்கப்பட்ட பங்களிப்பு திட்டங்கள் - ஊ.சே.நி, ஊ.ந.தி**

வரையறுக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதி பங்களிப்புக்கும் ஊழியர் நம்பிக்கை நிதி பங்களிப்புக்கும் உரித்தாகவுள்ள அனைத்து ஊழியர்களும் குறிப்பிட்ட நிலைக்கு ஏற்றவாறு சம்பந்தப்பட்ட பங்களிப்பு நிதியங்களால் மாற்றப்படுவர்.

**2.1.9 பின்தள்ளப்பட்ட வருமானம்**

**2.1.9.1 அரசாங்க கொடைகள்**

ஒழுங்கு முறையான விதத்தில் ஊழியர்கள் தொடர்பான உரிய கிரயங்கள் தொடர்பாக தேவையான நட்டஈடுகளை மீளளிப்புச் செய்வது சம்பந்தமாக ஆண்டுபூராவும் நிதிசார் செயலாற்றுகை கூற்றுக்கு அரசாங்க கொடைகள் செலவு வைக்கப்படுகின்றன.

நிதிசாரா மானியங்கள் உள்ளடங்களான மானியங்களுடன் தொடர்புடைய சொத்துக்கள் சமவிலையில் ஐந்தொகையில் குறிப்பிடப்படுவதுடன் உரிய சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலத்தின் படி வருமானக் கூற்றுக்களுக்கு செலவு வைக்கப்படுகின்றன.

**2.1.9.2 உரத்தொட்டிகளிலிருந்தான வருமானம்**

உரத்தொட்டிகளிலிருந்தான வருமானம் பணப்பாய்ச்சல் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**2.1.9.3 மீளளிக்கப்படாத வைப்புக்கள்**

மீளளிக்கப்படாத வைப்புக்களில் இருந்து கிடைக்கும் பெறுகைகள் பணப்பாய்ச்சல் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**2.1.10 செலவினம்**

கருத்திட்டத்தை நடாத்திச் செல்வதற்காக ஏற்பட்ட செலவினங்கள் மற்றும் ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் உச்ச அளவில் பேணுதல் தொடர்பான செலவினங்கள் என்பன முறையான கணக்கீட்டை சமர்ப்பிக்கும் பொறுப்பு செயலாற்றுகை கூற்றுக்கு அறிவிடப்பட்டுள்ளன.

குறிப்பு 3 - சொத்து நிலையம் மற்றும் கருவி

| சொத்து பிரிவு | செலவு,மறுமதிப்பீட்டு அளவு | | | திரண்ட தேய்மானம் | | | கொண்டுசெல்லும் அளவு |
|---|---|---|---|---|---|---|---|
| | 01.01.2013 அன்று மீதி | ஆண்டின்போது மேலதிகம் | 31.12.2013 அன்று மீதி | 01.01.2013 அன்று மீதி | 2013ம் ஆண்டுக்கான கட்டணம் | 31.12.2013 அன்று மீதி | |
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| மோட்டார் வாகனம் | 20,800,000.00 | - | 20,800,000.00 | 20,319,315.07 | 480,683.93 | 20,799,999.00 | 1.00 |
| தாபாடம், பொருத்தல்கள் | 2,737,843.50 | - | 2,737,843.50 | 1,041,213.90 | 273,784.35 | 1,314,998.25 | 1,422,845.25 |
| கட்டிடங்கள் (கராஜ்) | 1,500,000.00 | - | 1,500,000.00 | 111,765.82 | 37,500.00 | 149,265.82 | 1,350,734.18 |
| அலுவலக கருவிகள் | 10,308,047.78 | - | 10,308,047.78 | 8,965,071.82 | 1,342,976.96 | 10,308,048.78 | (1.00) |
| ஆய்வுகூட கருவிகள் | 862,374.60 | - | 862,374.60 | 226,373.33 | 86,237.50 | 312,610.83 | 549,763.77 |
| மொத்தம் | **36,208,265.88** | **-** | **36,208,265.88** | **30,663,739.94** | **2,221,182.74** | **32,884,922.68** | **3,323,343.20** |

| குறிப்பு 4 - நுகரக்கூடிய இருப்புகள் | | | |
|---|---|---|---|
| | | | |
| குறிப்புறை | அளவு | விலை | பெருமானம் ரூ. |
| உரத்தொட்டி | 3 | 2,550.00 | **7,650.00** |
| கழிவு சேர்ப்பு தொட்டி ஆர்.பி.சி | 30 | 3,250.00 | **97,500.00** |
| துணிப்பைகள் | 260 | 140.00 | **36,400.00** |
| டி-ஷேர்ட்கள் | 14 | 475.00 | **6,650.00** |
| பிலிசரு தொப்பிகள் | 1 | 126.50 | **126.50** |
| **மொத்தம்** | | | **148,326.50** |

| குறிப்பு இல 05 - அசைவாக்க முற்கொடுப்பனவு - மீளெடுக்கக்கூடிய அளவு | | |
|---|---|---|
| | | |
| **பாரிய செயற்றிட்டங்கள்** | **ரூ.** | **ரூ.** |
| | | |
| ஹிக்கடுவ - வீதிக் கட்டுமானம் | 3,719,043.52 | |
| உயிர்வாயு நிலையங்கள் - இசுச்ரு எஞ்சினியர்ஸ் | 1,000,000.00 | 4,719,043.52 |
| | | |
| சிறு செயற்றிட்டங்கள் - உள் ஊராட்சிசபைகள் | | |
| | | |
| பொரலஸ்கமுவ யுசி (சம்பத்பியச) | 326,906.64 | |
| கேகாலை யூசி | 311,364.77 | |
| எல்பிடிய பிஎஸ் | 300,000.00 | |
| களனி பி.எஸ். | 1,250,627.43 | |
| மாவதகம பிஎஸ் | 728,418.92 | |
| தனமல்வில பிஎஸ், செவனகல | 519,164.44 | |
| கலென்பிந்துனுவெவ பிரதேச சபை | 1,280,662.97 | |
| இபலோகம பிரதேச சபை | 241,693.48 | |
| மதவாச்சி பிரதேச சபை | 200,000.00 | |
| ரம்பேவ பிரதேச சபை | 1,299,527.68 | |
| திரப்பனே பிரதேச சபை | 1,114,405.12 | |
| சாவகச்சேரி நகர சபை | 447,255.65 | |
| அம்பாந்தோட்டை பிரதேச சபை | 512,638.94 | |
| ருவன்வெல்ல பிரதேச சபை | 745,289.31 | |
| வனத்தவில்லுவ பிரதேச சபை | 668,678.35 | |
| தலாவ பிஎஸ் | 864,110.22 | |
| தலாவ பிஎஸ் - தம்புட்டேகம | 1,003,849.34 | |
| புத்தளம் பிஎஸ் | 1,477,875.47 | |
| இலங்கை வான் படை - கட்டுநாயக்க | 503,985.31 | |
| எஸ்.எல்.ஏ.எஃப் தியத்தலாவ | 504,751.00 | |

| குறிப்பு இல 05 - அசைவாக்க முற்கொடுப்பனவு - மீளெடுக்கக்கூடிய அளவு | | |
|---|---|---|
| | | |
| **பாரிய செயற்றிட்டங்கள்** | **ரூ.** | **ரூ.** |
| காத்தான்குடி | 551,292.49 | |
| சாவகச்சேரி | 1,121,383.44 | |
| கபிதிகொல்லாவ பிளஸ் | 473,961.90 | 16,447,842.87 |
| **மொத்தம்** | | **21,166,886.39** |

| குறிப்பு இல 06 - நடந்த செலவுகள் | | | |
|---|---|---|---|
| செலுத்த வேண்டியவர் - வாடிக்கையாளர் | **குறிப்புரை** | **பற்றுச்சீட்டின் திகதி** | **அளவு ரூ.** |
| அலவ்வ பிளஸ் | 5ம் பற்றுசீட்டின் கொடுப்பனவு | 04.03.2013 | 642,798.05 |
| அசோசியேட்டட் மோட்டர் வேய்ஸ், டிமோ | லொறி,டிப்பர் வாங்கல் | | 5,932,000.00 |
| தமன பிளஸ் | இறுதி பற்றுசீட்டின் கொடுப்பனவு | 05.02.2014 | 1,281,836.08 |
| அம்பாந்தோட்ட பிளஸ் | 2ம் பற்றுசீட்டின் கொடுப்பனவு | 10.04.2013 | 209,213.94 |
| ஹிக்கடுவ மொனொரொவியவத்தை | 4ம் பற்றுசீட்டின் கொடுப்பனவு | 13.08.2013 | 30,014,634.00 |
| காத்தான்குடி பிளஸ் | 1ம் பற்றுசீட்டின் கொடுப்பனவு | 05.02.2014 | 3,495,462.41 |
| களனிய பிளஸ் | இறுதி பற்றுசீட்டின் கொடுப்பனவு | 30.07.2013 | 380,995.46 |
| மகா ஓயா பிளஸ் | 3ம் பற்றுசீட்டின் கொடுப்பனவு | 05.02.2014 | 820,350.58 |
| மலிம்பொட பிளஸ் | இறுதி பற்றுசீட்டின் கொடுப்பனவு | 10.02.2014 | 1,307,797.82 |
| மாவத்தகம பிளஸ் | 3ம் பற்றுசீட்டின் கொடுப்பனவு | 19.06.2013 | 2,767,816.76 |
| மதவாச்சி பிளஸ் | இறுதி பற்றுசீட்டின் கொடுப்பனவு | 13.06.2013 | 611,943.87 |
| மாத்தறை யூசி | மேலதிக வேலைக்கான கொடுப்பனவு | 07.02.2014 | 200,000.00 |
| மகாவ பிளஸ் | இறுதிப் பற்றுச்சீட்டின் கொடுபனவு | 28.01.2014 | 739,819.78 |
| மெதிரிகிரிய - யுடகனவ | மேலதிக வேலைக்கான கொடுப்பனவு | 11.01.2013 | 35,422.20 |
| நிகவெரட்டிய பிளஸ் | 3ம் பற்றுச்சீட்டின் கொடுப்பனவு | 20.12.2013 | 252,483.39 |
| நிகினி ஓட்டோமேஷன் சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிட்டட் | கொன்வெயர் பட்டிகள் வாங்கியமைக்கான மீதிக் கொடுப்பனவு | | 1,178,240.00 |
| நிவிதிகல பிளஸ் | இறுதி பற்றுச்சீட்டின் கொடுப்பனவு | 04.10.2013 | 132,125.59 |
| பன்னல பிளஸ் | நிறுத்தப்பட்ட பணத்தை வெளிவிடல் | 18.09.2013 | 75,257.27 |
| புத்தளம் பிளஸ் | 4ம் பற்றுச்சீட்டின் கொடுபனவு | 08.01.2013 | 823,759.74 |
| ராஜ்கம - மொனொரொவிய உரக்கூடம் | செயற்பாட்டுச் செலவை மீளவழங்கல் | | 87,864.00 |

| | | | |
|---|---|---|---|
| ஆர்.பி.சி பொலிமர் | பிரிக்கும் திட்டிகள் எண். 600 | 09.10.2012 | 12,650,433.00 |
| இலங்கை வான்படை - கட்டுநாயக்க | 2ம் பற்றுச்சீட்டின் கொடுப்பனவு | 04.02.2014 | 1,308,649.07 |
| இலங்கை வான்படை - தியத்தலாவ | 2ம் பற்றுச்சீட்டின் கொடுப்பனவு | 11.05.2013 | 5,224,193.49 |
| தனமல்வில | சிறு உர நிலையம் | 15.11.2012 | 441,921.00 |
| திரிப்பனே பிஎஸ் | இறுதி பற்றுச்சீட்டின் கொடுப்பனவு | 30.01.2014 | 2,741,138.32 |
| திஸ்ஸமகாராமய பிஎஸ் | 2ம் பற்றுச்சீட்டின் கொடுப்பனவு | 05.02.2014 | 1,830,999.48 |
| ஸ்கிட் இரும்பு ஏற்றி வாங்க | 2 இலக்கங்கள் | | 6,940,000.00 |
| உர ஹல்ட்டர்கள் வாங்கல் | 4 இலக்கங்கள் | | 1,178,240.00 |
| **மொத்தம்** | | | **83,305,395.30** |

| குறிப்பு இல 07 - நிறுத்தியமை கொடுத்தல் | | |
|---|---|---|
| குறிப்புரை | அளவு ரூ. | |
| பாரிய கட்டுமானச் செயற்றிட்டங்கள் | | |
| | | |
| கொலன்னாவ ஸ்குயார் மெஷ் எஞ்சினியரிங் (பிரைவேட்) லிமிட்டட் | 2,814,677.06 | |
| கொலன்னாவ ∴பென்ஸ் | 79,172.50 | |
| நிறுத்தியமை கொடுத்தல் - அநுராதபுர அணுகல் வீதி | 664,610.80 | |
| பயிற்சி முகாம் - மெதிரிகிரிய இற்கான கொடுப்பனவு | 68,118.43 | |
| நிகினி ஓட்டோமேஷன் (பிரைவேட்) லிமிட்டட் - பாரிய இடங்களுக்கான கொன்வே பட்டிகள் | 806,804.12 | |
| மெதிரிகிரிய | 21,902.25 | |
| ஹிக்கடுவ வீதி கட்டுமானம் | 776,630.54 | |
| களுத்துறை - கழிவு முகாமைத்துவ அதிகாரசபை - மீளமைத்தல் | 5,776.50 | |
| குருநாகல் பாரிய உர இடம் - தெஷான் எஞ்சினியர்ஸ் | 541,419.71 | **5,779,111.91** |
| | | |
| சிறு கட்டுமான செயற்றிட்டங்கள் | | |
| | | |
| உள் ஊராட்சிசபை | | |
| கம்பகா 1 | 15,698.50 | |
| தலாவ பிஎஸ் - தம்புட்டேகம | 36,728.06 | |
| சிடிஎ∴ப் முகாம் - கல்கிரியகம | 44,867.15 | |
| வனாத்தவில்லுவ பிரதேச சபை | 48,825.44 | |
| சாவகச்சேரி நகரசபை | 49,354.00 | |
| கராதெனிய பிஎஸ் | 54,488.04 | |
| காக்கைதீவு | 63,604.73 | |
| ஆர்மௌரெட் கோப்ஸ் பயிற்சி நிறுவகம், கல்குலம | 86,318.69 | |
| ஜாயெல நகரசபை | 87,559.85 | |
| எல்பிடிய பிஎஸ் | 105,812.34 | |
| வீரகெட்டிய பிரதேச சபை | 111,067.40 | |
| தலாவ பிஎஸ் | 126,681.54 | |

| குறிப்பு இல 07 - நிறுத்தியமை கொடுத்தல் | | |
|---|---|---|
| குறிப்புரை | அளவு ரூ. | |
| கேகாலை யுசி | 130,280.32 | |
| நிவித்திகல பிஎஸ் (எஸ்.டபிள்யூ.எம் சேர்த்தல் மையம்) | 132,125.59 | |
| மாத்தளை எம்சி | 132,478.59 | |
| பொல்பிதிகம பிரதேச சபை | 136,813.10 | |
| குருவிட்ட பிஎஸ் (எஸ்.டபிள்யூ.எம் சேர்த்தல் மையம்) | 146,627.35 | |
| நிக்கவெரட்டிய பிஎஸ் | 150,636.90 | |
| ரத்தோட்டை பிஎஸ் | 154,987.17 | |
| மாகோ பிஎஸ் | 193,556.65 | |
| மாகவ பிஎஸ் | 193,556.63 | |
| மாவத்தகம பிஎஸ் | 197,445.20 | |
| கம்பகா 2 | 199,696.50 | |
| மலிம்பட பிரதேச சபை | 200,347.96 | |
| ரிதிகம பிஎஸ் | 201,726.55 | |
| பதஹேவஹெட பிஎஸ் | 207,237.88 | |
| அக்குரணை பிஎஸ் | 253,441.14 | |
| கல்நெவ பிரதேச சபை | 264,762.30 | |
| ராஜன்கனய பிரதேச சபை | 264,762.30 | |
| பெலியட்ட பிஎஸ் | 270,649.68 | |
| கிரிந்த - பொஹுல்வத்தை பிஎஸ் | 281,519.59 | |
| இபலொகம பிரதேச சபை | 302,116.85 | |
| மதவாச்சி பிரதேச சபை | 309,339.59 | |
| கெபித்திகொல்லாவ பிஎஸ் | 322,099.49 | |
| பொல்ககாவெல்ல பிஎஸ் | 332,523.99 | |
| மீரிகம பிஎஸ் | 345,283.22 | |
| பதவியா பிஎஸ் | 345,903.25 | |
| களனி பிஎஸ் | 694,793.01 | |
| காத்தான்குடி பிஎஸ் | 417,307.00 | |
| தமன பிஎஸ் | 195,056.00 | |
| திஸ்ஸமகாராமய பிஎஸ் | 215,169.00 | |
| வலிகாமம் தெற்கு பிஎஸ் | 236,806.00 | |
| நாமல் ஓயா பிஎஸ் | 189,127.00 | 8,449,181.54 |
| **மொத்தம்** | | **14,228,293.45** |

| குறிப்பு இல 08 - பணிக்கொடை கொடுபனவு (31.12.2012) | | | | | |
|---|---|---|---|---|---|
| **சேர்ந்த திகதி** | **பெயர்** | **ஈபிஎ∴ப் இல** | **மாத அடிப்படை சம்பாம்** | **ஆண்டு எண்.** | **அளவு** |
| **02.05.2008** | ஆஎ.பி. பிரேமரத்ன | 1068 | 40,000.00 | 4.67 | 93,400.00 |
| **02.05.2008** | ஜி.டி.குணதிலக | 1069 | 85,000.00 | 4.67 | 198,475.00 |
| **02.05.2008** | யு.டி.டபிள்யூ.ஏ. குணவர்தன | 1066 | 85,000.00 | 4.67 | 198,475.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **09.05.2008** | பி.எல்.டி.கே. ரொஹான் லியனகே | 1074 | 40,000.00 | 4.67 | 93,400.00 |
| **02.06.2008** | கே.ஏ.ஜி.எஸ். பெரேரா | 1079 | 13,560.00 | 4.50 | 30,509.95 |
| **09.06.2008** | ஜி.ஏ.டி. பெரேரா | 1081 | 13,560.00 | 4.50 | 30,510.00 |
| **11.08.2008** | எ.்.ப். சுனேத்ரா ரனதுங்க | 1089 | 40,000.00 | 4.33 | 86,600.00 |
| **06.10.2008** | அனுப பஸ்கால் | 1124 | 40,000.00 | 4.17 | 83,400.00 |
| | | | | | **814,769.95** |
| | | | | | |

குறிப்பு:

1. பணிக்கொடை முன்னேற்பாடு செயற்றிட்ட காலத்தின் (2008-2013) அடிப்படையில் ஆக்கப்பட்டது.

2. செயற்றிட்டம் முடியும் திகதியில் மற்றும் தற்போது வேலை செய்பவர்களில் 31.12.2013 அன்று 5 வருடம் பூர்த்தி செய்த ஊழியர்களுக்கான முன்னேற்பாடு தயாரிக்கப்பட்டது.

| குறிப்பு இல 09 - 31 டிசம்பர் 2012 அன்று மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு கொடுக்க வேண்டியவை | | | |
|---|---|---|---|
| **குறிப்புரை** | | **பற்றுச்சீட்டின் திகதி** | **அளவு ரூ.** |
| தேசிய பசுமை விருது | | 03.12.2012 | 3,000,000.00 |
| கட்டிட வாடகை ஒக்-நவ்-டிச - 2012 | | 31.12.2012 | 772,200.00 |
| தேசிய முகாம் ரந்தெனிகல (ஜம்போரி) | | | 509,342.00 |
| டிசம்பர் 2013 ஊழியர் சம்பளங்கள் | | 25.12.2012 | 254,113.30 |
| | | | **4,535,655.30** |

| குறிப்பு இல 10 - 31 டிசம்பர் 2013ல் கொய்கா செயற்றிட்டத்திற்கான கொடுப்பனவு | | | |
|---|---|---|---|
| **பற்றுச்சீட்டின் திகதி** | **கொடுக்க வேண்டியவர் / வாடிக்கையாளர்** | | **அளவு** |
| 26.11.2012 | சுவசர தக்சலவ - பள்ளி நிகழ்ச்சி | | 487,500.00 |
| 26.11.2012 | ஈபிபி ஆணையாளர் நிகழ்ச்சி | | 1,170,954.80 |
| 26.11.2012 | பசுமை இளையோர் நிகழ்ச்சி | | 780,000.00 |
| குறைவு: முற்கொடுப்பனவு தீர்த்தல்கள் | | | (120,349.80) |
| 31 டிசம்பர் 2013 ல் கொய்க செயற்றிட்டத்திற்கு கொடுக்க வேண்டிய நிகர தொகை | | | **2,318,105.00** |

| குறிப்பு இல 11 - 31.12.2013 இல் மீளத்தரக்கூடிய வைப்புகள் | | | |
|---|---|---|---|
| திகதி | பெயர் | பற்று. இல | அளவு |
| **18.08.2010** | வெமர கொன்ஸ்ரக்ஷன் (பிரைவேட்) லிமிட்டட் | 61022 | 10,000.00 |
| **20.08.2010** | செண்ட் மேரிஸ் கொன்ஸ்ட்ரக்ஷன் | 61003 | 10,000.00 |
| **23.08.2010** | சமிந்த கொன்ஸ்ட்ரக்ஷன் | 61009 | 10,000.00 |
| **23.08.2010** | பந்தில சிவில் எஞ்சினியரிங் | 61010 | 10,000.00 |
| **23.08.2010** | ∴புர்னி டைனமிக் எஞ்சினியரிங் (பிரைவேட்) லிமிட்டட் | 61012 | 10,000.00 |
| **23.08.2010** | காமினி கொன்ஸ்ட்ரக்ஷன் | 61015 | 10,000.00 |
| **25.08.2010** | சூரியா பில்டர்ஸ் | 61019 | 10,000.00 |
| **25.08.2010** | சுமனசேகர கொன்ஸ்ட்ரக்ஷன் | 61021 | 10,000.00 |
| **26.08.2010** | ஸ்டார் கொன்ஸ்ரக்ஷன் அண்ட் எஞ்சினியர்ஸ் (பிரைவேட்) | 61025 | 10,000.00 |
| **27.08.2010** | இசுரு எஞ்சினியரிங் சேர்விசஸ் (பிரைவேட்) லிமிட்டட் | 61033 | 10,000.00 |
| **30.08.2010** | ஜி.ஜி.சி. இண்டர்நேசனல் (பிரைவேட்) லிமிட்டட் | 61036 | 10,000.00 |
| **30.08.2010** | ஆசிரி கொன்ஸ்ட்ரக்ஷன் | 61039 | 10,000.00 |
| **17.08.2010** | ஆர் எச் ஸ்டீல் பில்டிங் சிச்டம்ஸ் (பிரைவேட்) | 61193 | 10,000.00 |
| **18.08.2010** | என் அண்ட் ஏ எஞ்சினியரிங் சேர்விசஸ் (பிரைவேட்) லிமிட்டட் | 61199 | 10,000.00 |
| **28.04.2011** | டெஷான் எஞ்சினியரிங் (பிரைவேட்) லிமிட்டட் | 61990 | 10,000.00 |
| **29.04.2011** | வெமாரா கொன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிட்டட் | 61992 | 10,000.00 |
| **02.05.2011** | ஆர் எச் ஸ்டீல் பில்டிங் சிச்டம்ஸ் (பிரைவேட்) | 61195 | 10,000.00 |
| **04.05.2011** | ஏ.எஸ்.பி. கொன்ஸ்ரக்ஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் | 61198 | 10,000.00 |
| **05.05.2011** | ஸ்டேட் எஞ்சினியரிங் கோப்பரேஷன் | 62401 | 10,000.00 |
| **09.05.2011** | ஜி.ஜி.சி.இண்டர்நேஷனல் (பிரைவெட்) லிமிட்டட் | 52403 | 10,000.00 |
| **11.05.2011** | பந்தில சிவில் எஞ்சினியர்ஸ் | 62404 | 10,000.00 |
| **11.05.2011** | இண்டஸ்ரியல் எஞ்சினியரிங் எண்டர்பிரைஸெஸ் | 62407 | 10,000.00 |
| **12.05.2011** | கே.ஈ.எஸ் எஞ்சினியரிங் (பிரைவேட்) லிமிட்டட் | 62408 | 10,000.00 |

| குறிப்பு இல 11 - 31.12.2013 இல் மீளத்தரக்கூடிய வைப்புகள் | | | |
|---|---|---|---|
| திகதி | பெயர் | பற்று. இல | அளவு |
| **23.05.2011** | அந்தனி பில்டர்ஸ் | 62418 | 10,000.00 |
| **13.05.2011** | அசேலாராச்சி கொன்ஸ்ட்ரக்ஷன் (பிரைவேட்) லிமிட்டட் | 62411 | 10,000.00 |
| **19.05.2011** | காமினி கொன்ஸ்ட்ரக்ஷன் | 62415 | 10,000.00 |
| **04.05.2011** | சுபசிங்க கொன்ஸ்ட்ரக்ஷன் | 62420 | 10,000.00 |
| **24.05.2011** | வாஹிட் கொன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 62422 | 10,000.00 |
| **25.05.2011** | நியூ லாண்ட் இண்டஸ்ரீஸ் (பிரைவேட்) லிமிட்டட் | 62423 | 10,000.00 |
| **25.05.2011** | அக்ஸஸ் இண்டர்நேஷனல் (பிரைவேட்) லிமிட்டட் | 62426 | 10,000.00 |
| **19.04.2012** | அசேலாராச்சி கொன்ஸ்ட்ரக்ஷன் (பிரைவேட்) லிமிட்டட் | 63172 | 10,000.00 |
| **20.04.2012** | டெஷான் எஞ்சினியரிங் (பிரைவேட்) லிமிட்டட் | 63176 | 10,000.00 |
| **24.04.2012** | ஆர். எச். ஸ்டீல் பில்டிங்ஸ் சிஸ்டம்ஸ் (பிரைவேட்) | 63182 | 10,000.00 |
| **25.04.2012** | ஆர் ஈ வீரக்கோன் கம்பனி | 63184 | 10,000.00 |
| **09.05.2012** | ஏ.டி.எஸ்.எல். இண்டர்நேஷனல் (பிரைவேட்) லிமிட்டட் | 63192 | 10,000.00 |
| **மொத்தம்** | | | **350,000.00** |

| செயற்றிட்ட செயற்பாட்டு நடவடிக்கைகள் | |
|---|---|
| **குறிப்புறை** | **31.12.2013** |
| போக்குவரத்து (எரிபொருள், பேணுகை) | 2,460,379.64 |
| அலுவலக வழங்கல்கள் | 1,038,485.21 |
| செயற்றிட்ட ஊழியர் சம்பளம் | 9,935,121.15 |
| ஈபிஎ.்.ப் | 1,808,164.29 |
| ஈடிஎ.்.ப் | 283,602.90 |
| ஒவர்டைம், சப்சிடன்ஸ், விசேட கொடுப்பனவு | 850,937.91 |
| தொடர்பாடல், தபால் | 285,070.59 |
| வாடகைகள் | 3,979,007.32 |
| செயற்றிட்ட ஒருங்கிணைப்பு, முகாமை | 852,385.94 |
| வங்கி கட்டணங்கள், பற்று வரி | 12,000.00 |
| நிச்சயமின்மை, பலவகையானவை - பிற | 63,887.21 |
| வாகனச்சேவைகள், திருத்தல் | 1,021,045.67 |
| முத்திரை வரி - செலுத்த்தேவையில்லை - ஜே.ஈ - 961 | (8,102.03) |
| குறைவு - முற்கொடுப்பனவு தீர்த்த பணத்தின் மீதி - 2013 (ஜே.ஈ - 961) | (272,540.91) |
| மொத்தம் | |

| | |
|---|---|
| | **22,309,444.89** |

| சிறிய அளவான உட நிலையங்கள், எஸ்.டபிள்யூஎம் நிகழ்ச்சியின் உதவி | |
|---|---|
| **குறிப்புறை** | **31.12.2013** |
| உள் ஊராட்சிகளுக்கான சிறிய அளவான உர நிலையங்கள் | 111,086,200 |
| சிறிய அளவான உர நிலையங்களுக்கான ஓ மற்றும் எம் மற்றும் மேம்பாடுகள் | 210,406 |
| பிலிசரு செயறிட்டத்தால் அமைக்கப்பட்ட உர நிலையங்களின் செயற்பாடுகளை கண்காணித்தல் | 92,331 |
| கழிவு சேர்ப்பு மற்றும் போக்குவரத்து வாகனங்கள் மற்றும் நிலநிரப்பல் கருவிகள், இயந்திரங்கள் வழங்கல் | 7,105,194 |
| கழிவு முகாமை முன்னிறுத்தல் நடவடிக்கைகள் | 484,275 |
| சூழல் முன்னோடி நிகழ்ச்சியூடாக பள்ளிகளில் கழிவு முகாமைத்துவத்தை மேம்படுத்தல் | 2,974,703 |
| அரசாங்க, தனியார் பிரிவு அமைப்புகள் மற்றும் தொழில்தருனர்களுக்கான கழிவு குறைத்தல், முகாமைத்துவ நிகழ்ச்சியின் அங்கீகாரத்திற்கான தேசிய அணுகல் | 3,000,000 |
| **மொத்தம்** | **124,953,109** |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } டீஎம்2/எல்/பீஎஸ்பீ/4/13/31 | මබේ අංකය / உமது இல. / Your No. } | දිනය / திகதி / Date } 2014 டிசெம்பர்18

தலைவர்,
மத்திய சுற்றாடல் அதிகார சபை

**பிலிசறு செயற்திட்டத்தின் 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

பிலிசறு செயற்திட்டத்தின் 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது.

1.2 **செயற்திட்ட அமுலாக்கல், நோக்கம், நிதியளிப்பு மற்றும் செயற்திட்டக்காலம்**

பிலிசறு செயற்திட்டமானது மத்திய சுற்றாடல் அதிகார சபையில் நிறுவப்பட்டுள்ள பிலிசறு செயற்திட்டப் பிரிவால் அமுலாக்கப்படுவதுடன் செயற்திட்டத்தை சுற்றாடல் மற்றும் புனர் உற்பத்தி வலு அமைச்சினால் செயற்படுத்தப்படுகின்றது. முறையான வளப் பாதுகாப்பு மற்றும் திண்மக் கழிவு முகாமைத்துவத்தினை உறுதிப்படுத்தல், திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பாகக் குறித்த நபர்களது அறிவையும் திறமையையும் முன்னேற்றுதல் மற்றும் திண்மக் கழிவு முகாமைத்துவச் செயற்திட்டத்தை அமுலாக்குதல், நிகழ்ச்சித்திட்டங்களை அவதானித்தல், வசதிகளை வழங்குதல், தேவையான நிதியேற்பாட்டினை வழங்குதல், திண்மக் கழிவு மீள் சுழற்சி வங்கி முறைமையை நிறுவுதல், முறைப்படி திண்மக் கழிவு முகாமைத்துவத்தை மேற்கொள்ளாத உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்பன பிரதான நோக்கங்களாகும். 6 ஆண்டுகளுக்கான நிதியத் திட்டத்தின் பிரகாரம் செயற்திட்டத்தின் மொத்தக் கிரயம் ரூபா 5.6 பில்லியன் ஆகும். அதில் ரூபா 2.675 பில்லியனைத் திறைசேரியின் மூலமும் ரூபா 03 பில்லியன் 2008 ஆம் ஆண்டிற்கான வரவு, செலவுத் திட்டத்தின் மூலம் அறிமுகஞ் செய்து வைக்கப்பட்ட "பசுமை வரி" மூலமாகவும் பெறுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்ட உத்தேசத்திற்கமைய, பிலிசறு செயற்திட்டம் 2008 ஜனவரி 01 ஆந் திகதி ஆரம்பமாகி 2011 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடையவிருந்தபோதும், குறித்த காலத்தினுள் செயற்திட்ட நடவடிக்கைகள் முடிவுறாமையால் 2010 செப்டம்பர் 16 ஆந் திகதிய அமைச்சரவைப் பத்திரம் இலக்கம்

1

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

Auditor General's Department

.0/1905/432/008 மற்றும் அமைச்சரவைச் செய்திக் குறிப்பு இலக்கம; 10/2010 க்கமைய செயற்திட்டத்தினது காலப்பகுதியை 2011 ஜனவரி 01 தொடக்கம் 3 ஆண்டுகளுக்கு நீடிப்பதற்கும், 2008 – 2010 வரையிலான எதிர்வரும் மூன்று ஆண்டுகளின்போது அமுலாக்கத்திற்குத் தேவையான நிதியேற்பாடான ரூபா 5.6 பில்லியன் செலவின எல்லைக்குள் செலவினத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் சிபார்சு செய்யப்பட்டது. 2013 ஆம் ஆண்டினது செயல் திட்டத்தின் பிரகாரம் செயற்திட்டத்திற்கான மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 0.2 பில்லியன் ஆகும்.

நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அல்லாத நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தயாரித்தல், அமுலாக்கல் மற்றும் பேணுதல், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்தல் மற்றும் பயன்படுத்துதல், காலத்திற்கேற்ப நியாயபூர்வமான கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரித்தல் என்பனவும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால்

2

கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதீப்பீடுகளினையும் அத்துடன் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான்பெற்றுக்கொண்டேன். ஆகையினால், எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பத்தகு தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கத்தினது நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) செயற்திட்டத்தின் அமுலாக்கலிற்காக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க, செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டனவா என்பதும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைச் சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

Auditor General's Department

3. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தெரிவதும் எனக்களிக்கப்பட்ட சிறந்த தகவல்களுக்கும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களிற்கிணங்கவும் இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழக்கூடிய சீராக்கங்களைத் தவிர

(அ) செயற்திட்டம் 2013 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள். அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைச் சீராக்குவதற்கு முகாமைத்துவம் திருப்திகரமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

4. நிதிக்கூற்றுக்கள்

4.1 நிதிச் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான செலவினம் ரூபா 317,396,336 ஆகும். 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 1,952,031,164 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம் முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் தொடர்பான பொழிப்பு பின்வரும் கூற்றில் காணப்படுகின்றது.

| செலவின விடயம் | 2013 ஆம் ஆண்டிற்கான செலவினம் | 2012 ஆம் ஆண்டிற்கான செலவினம் | 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கொம்போஸ்ட் தொகுதியை நிர்மாணித்தல் | 45,816,245 | 55,297,185 | 511,191,805 |
| தரையை நிரப்புவதற்கான நிர்மாண வேலை | 732,443 | 4,255,167 | 17,211,401 |
| சிறு அளவிலான கொம்போஸ்ட் தொகுதி | 246,921,008 | 302,556,119 | 1,208.284,882 |
| மற்றும் வீடுகளுக்கான கொம்போஸ்ட் பைகளை அனுப்புதல் (எரிபொருளும் பராமரிப்பும்) | 2,460,379 | 4,059,468 | 17,624,018 |
| அலுவலக எழுதுகருவி பொருட்களும் வழங்குதலும் | 726,177 | 2,002,499 | 5,948,026 |
| சம்பளம் | 12,915,044 | 22,573,584 | 108,626,343 |
| அஞ்சல் மற்றும் ஊடகம் | 285,081 | 349,013 | 3,772,920 |
| செயற்திட்ட ஒருங்கிணைப்பும் முகாமைத்துவமும் | 852,386 | 204,066 | 3,034,053 |
| அலுவலக வாடகை | 4,739,702 | 3,408,800 | 19,347,056 |
| மேலதிக நேரக் கொடுப்பனவு | 850,938 | 2,483,391 | 7,312,962 |
| வங்கிக் கட்டணமும் வரவு வரியும் | 12,000 | 20,100 | 837,327 |
| காப்புறுதி | - | 254,937 | 2,583,181 |
| வாகனங்களைக் கழுவுதலும் பழுதுபார்த்தலும் | 1,021,046 | 2,383,072 | 7,159,330 |

5

| | | | |
|---|---|---|---|
| கொரிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்திற்கான செலவினம் | - | - | 19,387,597 |
| செயற்திட்ட பதவியணியினரது பயிற்சியும் சுற்றோட்டத்தைக் கட்டியெழுப்புதலும் | - | - | 5,171,390 |
| நிகழ்ச்சித்திட்ட ஊக்குவிப்பு | - | - | 4,959,320 |
| ஏனையவை | 63,887 | 34,700 | 9,579,553 |
| | 317,396,336 | 399,882,098 | 1,952,031,164 |

5 **கணக்காய்வு அவதானிப்புரைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) 2011 ஆம் ஆண்டில் செயற்திட்ட வாகனம் ஒன்றிற்கு ஏற்பட்ட ரூபா 6,050,000 இழப்பானது 2 ஆண்டுகள் கடந்திருந்தும் பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கை நிதிப் பிரமாணம் 757 க்கமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

6. **நிதிசார் மற்றும் பௌதிக செயலாற்றல்**

6.1 **நிதியப் பயன்பாடு**

செயற்திட்டம் 2013 ஆம் ஆண்டின்போது நிதியத்தைப் பயன்படுத்திய விதம் மற்றும் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் ஒட்டு மொத்த நிதியப் பயன்பாடு தொடர்பான சில தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்ட குறிப்பில் காணப்படுகின்றன.

6

| நிதியத்தின் தோற்றுவாய் | செயற்திட்ட நடவடிக்கைகளுக்கு முதலீடு செய்ய உத்தேசித்துள்ள தொகை | 2013 ஆம் ஆண்டின் போது பயன்படுத்திய தொகை | 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்திய மொத்தத் தொகை |
|---|---|---|---|
| | ரூபா. மில் | ரூபா. மில் | ரூபா. மில் |
| பசுமை வரி | 3,000 | - | - |
| இலங்கை அரசாங்கம் | 2,675 | 317 | 1,998 |
| | 5,675 | 317 | 1,998 |

6.2 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் நோக்கமான திண்மக் கழிவு முகாமைத்துவச் செயற்திட்ட அமுலாக்கலின் கீழ் பல்வேறு பிரதேச சபைகளுக்கான கொம்போஸ்ட் தொகுதிகளை நிர்மாணிப்பதற்கான நிதியைச் செயற்திட்டம் வழங்கியிருந்தது. இது சம்பந்தமான கணக்காய்வுப் பரிசோதனைகளின்போது கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் புலனாகின.

(i) பிலிசறு செயற்திட்டத்தால் தனமல்வில பிரதேச சபைக்கு கொம்போஸ்ட் தொகுதியினது பாதுகாப்பு வேலி, அலுவலக மற்றும் களஞ்சியக் கட்டிட நிர்மாண வேலைகளுக்கு ரூபா 1,806,413 மதிப்பிடப்பட்ட கிரயத்தின் அடிப்படையில் ரூபா 1,241,652 முற்பணமாக வழங்கப்பட்டிருந்தபோதும், சாத்தியக் கூறு ஆய்வின்றி இத்தொகுதிக்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதால் எதிர்பார்த்த நோக்கத்திற்கமைய கழிவுகளை அகற்றுதல் மற்றும் உர உற்பத்திக்கென அதி கூடிய வேகத்துடன் நடவடிக்கை எடுக்கப்படாது போனமை கணக்காய்வில் புலனாகியது.

(ii) கொலன்னாவ பொத்துவில்கும்புறவில் பாரிய அளவிலான கொம்போஸ்ட் தொகுதி நிர்மாண வேலைக்கு ரூபா 100.861 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இதற்கான சாத்தியக் கூறு ஆய்வு

மேற்கொள்ளப்படவில்லை. 2013 மார்ச் 02 அன்று மேற்கொள்ளப்பட்ட நேரடிக் கணக்காய்வுப் பரிசோதனையின்போது புலனாகியவாறு கொம்போஸ்ட் தொகுதியானது அதற்கு அருகே அமைந்திருந்த கழிவுப் பொருட்களால் மூடப்படுவதற்கான சாத்தியம் கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டபோதும், அது கவனத்திற் கொள்ளப்படவில்லை. 2013 டிசெம்பர் 11 அன்று அக்கழிவுப் பொருட்கள் கொம்போஸ்ட் தொகுதியின் மேல் வீழ்ந்திருந்தன. இக்கொம்போஸ்ட் தொகுதியை நிர்மாணிப்பதற்கும் இயந்திர சாதனங்களைப் பெறுவதற்கும் ரூபா 114.06 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

(iii) பாரியளவிலான கொம்போஸ்ட் தொகுதியின் கீழ் பொலனறுவை மாவட்டத்தில் உள்ள யுதகனாவ பிரதேசத்தில் 6 ஏக்கரில் ரூபா 22,442,860 செலவில் கொம்போஸ்ட் தொகுதியொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. பாரியளவிலான இக் கொம்போஸ்ட் செயற்திட்டம் ஹிங்குராக்கொடை மற்றும் மெதிரிகிரிய பிரதேச கழிவுப் பொருட்களை உபயோகிப்பதன் மூலம் மாதாந்தம் 20 தொன் கார்பனிக் உரத்தை உற்பத்தி செய்ய இலக்கிடப்பட்டபோதும், நாளாந்தம் 2 டிறக்டர் கழிவுகள் மாத்திரமே பெறப்பட்டதால் குறித்த இலக்கை எய்த முடியாதிருந்தது. மேலும், இத் தொகுதியைத் தொடர்ந்து நடாத்துவதற்கு மெதிரிகிரிய பிரதேச சபை வருடாந்தம் ரூபா 2 மில்லியன் செலவிட வேண்டியிருந்தது. இதன் காரணமாக இக் கழிவு முகாமைத்துவச் செயற்திட்டம் தோல்வியடைத்திருந்தது.

(iv) ஏழு உள்ளூராட்சி நிறுவனங்களது கழிவு முகாமைத்துவத்திற்கென ரூபா 112,200,183 செலவில் ஹிக்கடுவை மொன்றோவியாவத்தையில் நிர்மாணிக்கப்பட்ட பாரிய அளவிலான கொம்போஸ்ட் தொகுதியில் கொம்போஸ்ட் உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(v) மேலும், சிறிய அளவிலான கொம்போஸ்ட் தொகுதிகளை நிர்மாணிப்பதற்கு 12 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு ரூபா 15,705,465 வழங்கப்பட்டிருந்தது. எனினும், 2014 ஆகஸ்ட் மாதமளவிலும் கொம்போஸ்ட் தொகுதிகள் நிர்மாணிக்கப்படாதிருந்தன. சிறிய அளவிலான கொம்போஸ்ட் செயற்திட்டங்களை அமுலாக்குவதற்கு கலென்பிந்துனுவெவ பிரதேச சபைக்கு 2011 நவெம்பர் 22 அன்று ரூபா

1,280,663 முற்பணம் வழங்கப்பட்டபோதும், கொம்போஸ்ட் தொகுதி நிர்மாணிக்கப்படவில்லை. குறித்த முற்பணத்தைப் திருப்பி பெற முடியாதிருந்தது.

(vi) சிறிய அளவிலான கொம்போஸ்ட் தொகுதி நிர்மாணிக்கப்பட்டு 2 வாரங்களுக்குள் கொம்போஸ்ட் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்ட வேண்டிய போதிலும், 14 உள்ளுராட்சி நிறுவனங்களில் ரூபா 44,490,219 செலவில் நிர்மாணிக்கப்பட்ட கொம்போஸ்ட் தொகுதிகளில் கொம்போஸ்ட் உற்பத்தி ஆரம்பிக்கப்படாதிருந்தது.

(vii) ஏனைய 3 உள்ளுராட்சி நிறுவனங்களுக்கு கொம்போஸ்ட் தொகுதி நிர்மாணிப்பதற்கென ரூபா 3,444,748 வழங்கப்பட்டிருந்தபோதும், இச் செயற்திட்டம் தற்போது கைவிடப்பட்டிருந்தது.

(viii) உள்ளுராட்சி நிறுவனங்களால் கொம்போஸ்ட் தொகுதி நடவடிக்கைகள் ஆரம்பமாவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்க வேண்டும் என உடன்படிக்கைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தபோதும், 103 கொம்போஸ்ட் தொகுதிகளுக்கான சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்கள் பெறப்படாதிருந்தன. மேலும், செயற்திட்டம் உற்பத்தி செய்யும் உரத்தினது தரத்தை உயர்த்துவதற்கென கல்ரீசீடியா, காட்டுச் சூரியகாந்தி, கெப்பட்டியா, கன்சூரிய போன்ற நைட்ரஜன் அடங்கிய மரங்களது பயிர்ச்செய்கை செயற்திட்டம் ஆரம்பமாகிய திகதி தொடக்கம் செயற்திட்டக் காணியில் தொடர்ச்சியாகப் பேணப்படவும் பராமரிக்கப்படவும் வேண்டுவதுடன் அம்மரங்களது இலைகள் கொம்போஸ்ட் உற்பத்திக்கான மூலப்பொருட்களாகப் பயன்படுத்தப்பட வேண்டுமெனினும், எனினும். அவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ix) கொம்போஸ்ட் தொகுதி உற்பத்தி செய்யும் கார்பனிக் உரத்தினது மாதிரிகள் கமத்தொழில் திணைக்களத்தின் கீழ் உள்ள கார்பனிக் உர உற்பத்தி மற்றும் பிரசார நிகழ்ச்சித்திட்டத்தின் பிரபல்யப்படுத்தும் செயல் திட்டத்தின் கீழ் 3 மாதங்களுக்கு ஒரு தடவை தரக் கட்டுப்பாட்டுக்குட்படுத்தப்பட வேண்டுமாயினும், 91 உள்ளுராட்சி நிறுவனங்கள் அதற்கமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

செயற்திட்டமானது அது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

(x) பெலி அத்த பிரதேச சபை அமுலாக்கிய கொம்போஸ்ட் தொகுதியில் திண்மக் கழிவு மீள் சுழற்சியின் வாயிலாக உற்பத்தியாகிய அசுத்த நீரை வெளியேற்றுவதற்கு நிர்மாணிக்கப்பட வேண்டிய கொள்கலன் தாங்கி போதியனவாகவும் முறையாகவும் அமைக்கப்படாது இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) பிலிசறு செயற்திட்டம் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு 2008 முதல் 2013 வரை ரூபா 187.93 மில்லியன் செலவிட்டிருந்தபோதும், செயற்திட்டத்தின் பிரதான நோக்கமான திண்மக் கழிவு முகாமைத்துவம் சம்பந்தமாக குறித்த நபர்களது அறிவு விருத்தியடையாதிருப்பது உள்ளூராட்சி நிறுவனங்களது கழிவுப் பொருள் சேகரிப்பின்போது அவதானிக்கப்பட்டது. மேலும், திண்மக் கழிவு அகற்றுதலுக்கான 6,160 கொள்கலன்களுக்கு ரூபா 19,434,130 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டு உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்குமிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் நோக்கமானது எய்தப்படாதிருந்தது.

(இ) நிலத்தை நிரப்புவதற்கான நடவடிக்கைகளுக்கு செயற்திட்டம் செலவிட்ட தொகை ரூபா 163 மில்லியன் ஆகும். ஆயினும், 2008 – 2010 செயல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 09 நில நிரப்புதல் நடவடிக்கைகளில் எதுவுமே 2013 டிசெம்பர் 31 வரை நடைபெற்றிருக்கவில்லை.

### 6.3 மனிதவள முகாமைத்துவம்

2014 ஜூன் 02 ஆந் திகதி தொடக்கம் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் ஐவர் பிலிசறு செயற்திட்டத்திற்கென நியமிக்கப்பட்டிருந்தனர். பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் பேரில் இப் பதவிக்கென ஒரு உத்தியோகத்தருக்கு மாதாந்தம் ரூபா 40,000 மாதாந்த சம்பளம் மற்றும் மாதாந்த எரிபொருள் படியாக ரூபா 20,000 என்பன வழங்கப்பட்டிருந்தன. எனினும், இந்த உத்தியோகத்தர்களது அடிப்படைத் தகைமைகள் பரீசீலிக்கப்படாது ஆட்சேர்ப்பு நடைபெற்றிருந்தமை தெரியவந்ததுடன், செயற்திட்டத்தின் சிரேஷ்ட பொறியியலாளரும் பிரதி முகாமையாளரும் (பொது சனத் தொடர்பு) ஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுகையில் பதவிகளுக்குத் தேவையான தகைமைகள் அற்ற உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டு சம்பளமும் படியுமாக ரூபா 6,403,600 அவர்களுக்கு 2008 முதல் 2012 வரை வழங்கப்பட்டிருந்தமை

அவதானிக்கப்பட்டது. கணக்காய்வில் இவ் விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து அந்த உத்தியோகத்தர்களது வேலை முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. எவ்வாறாயினும், 2013 ஆம் ஆண்டின்போது அவ்விருவருக்கும் பணிக்கொடையாக ரூபா 524,825 வழங்கப்பட்டிருந்தது.

ஒப்பம் :- டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
*K/Y*

## சுருக்கங்கள்

| | | |
|---|---|---|
| BOD | - | உயிரியல் ஆக்சிஜன் தேவை |
| BOI | - | முதலீட்டுச் சபை |
| CEA | - | மத்திய சுற்றாடல் அதிகாரசபை |
| COD | - | கெமிக்கல் ஆக்சிஜன் டிமாண்ட் |
| CETRAC | - | கட்டுமான உபகரணங்கள் பயிற்சி மையம் |
| DDG | - | துணை இயக்குனர் ஜெனரல் |
| DEO | - | பிரதேச சுற்றாடல் அதிகாரி |
| DO | - | மாவட்ட அலுவலகம் |
| E & NR | - | சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை வளங்கள் |
| EE & A | - | சுற்றுச்சூழல் கல்வி விழிப்புணர்வு |
| EIA | - | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு |
| EM & A | - | சுற்றுச்சூழல் மேலாண்மை மதிப்பீடு |
| EMS | - | சுற்றுச்சூழல் மேலாண்மை அமைப்பு |
| EPC | - | சுற்றுச்சூழல் மாசு கட்டுப்பாடு |
| EPL | - | சுற்றுச்சூழல் பாதுகாப்பு லைசென்ஸ் |
| GSMB | - | புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கபீரோ |
| HRD | - | மனித வள மேலாண்மை |
| HWM | - | அபாயகரமான கழிவு மேலாண்மை |
| IEE | - | பூர்வாங்க சுற்றாடல் பரீட்சை |
| IEMP | - | ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் |
| ITI | - | தொழில்துறை தொழில்நுட்ப நிறுவனம் |
| JBIC | - | சர்வதேச ஒத்துழைப்பு, ஜப்பான் பேண்ட் |
| KPS | - | குருவிட்ட பிரதேச சபை |
| NBRO | - | தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு |
| LLF | - | சுமை அடிப்படையில் லைசென்ஸ் கட்டணம் |
| NEA | - | தேசிய சுற்றாடல் சட்டம் |
| NEIC | - | தேசிய சுற்றுச்சூழல் தகவல் மையம் |
| NERD | - | தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் |
| OP & M | - | செயல்பாடு திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு |
| PO | - | மாகாண அலுவலகம் |
| PVC | - | பொலிவீனைல் குளோரைட் |
| SEO | - | மூத்த சுற்றுச்சூழல் அதிகாரி |
| SLTB | - | இலங்கை போக்குவரத்து சபை |
| SRO | - | துணை வட்டார அலுவலகம் கண்டி சுழு |
| TPS | - | தமன்கடுவ பிரதேச சபை |
| WDF | - | கழிவு நீர் வெளியேற்ற கட்டணம் |
| WEA | - | வயம்ப சுற்றாடல் அதிகார சபை |
| WWMA | - | மேற்கு மாகாணம் கழிவு மேலாண்மை |
| WPO | - | மேற்கு மாகாண அலுவலகம் |
| CPO | - | மத்திய மாகாண அலுவலகம் |
| SaPO | - | சப்ரகமுவ மாகாண அலுவலகம் |
| SuPO | - | தென் மாகாண அலுவலகம் |
| NCPO | - | வட மத்திய மாகாண அலுவலகம் |
| EPO | - | கிழக்கு மாகாண அலுவலகம் |
| UPO | - | ஊவா மாகாண அலுவலகம் |
| NPO | - | வடக்கு மாகாண அலுவலகம் |
| JAICA | - | ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு தொழில் |
| IQMU | - | காற்று தரம் கண்காணிப்பு பிரிவு |

| | | |
|---|---|---|
| PM | - | நுண் துகள்கள் |
| KECO | - | கொரிய சுற்றுச்சூழல் ஒத்துழைப்பு |
| NCC | - | தேசிய ஒருங்கிணைப்புக் குழு |
| TACMIC | - | தொழில்துறை கெமிக்கல்ஸ் மேலாண்மை தொழில்நுட்ப ஆலோசனைக் குழு |
| MEEE | - | மின்னணு மற்றும் மின்சார உபகரணங்களை மேலாண்மை |
| BMICH | - | பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம் |
| CFL | - | காம்பாக்ட் ஒளிரும் விளக்கு |
| PAA | - | கருத்திட்டத்தை அங்கீகரிக்கும் நிறுவனம் |
| NRM&M | - | இயற்கை வள மேலாண்மை மற்றும் கண்காணிப்பு அலகு |
| EM&A | - | சுற்றாடல்மேலாண்மை விழிப்புணர்வு |
| NWP | - | தேசிய நன்செய் நிலம் கொள்கை |
| NWSC | - | தேசிய நன்செய் நிலம் ஸ்டீரிங் குழு |
| DWLC | - | வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் |
| UDA | - | நகர அபிவிருத்தி அதிகாரசபை |
| ICASL | - | இலங்கை பட்டயக் கணக்குகள் நிறுவனம் |
| SLLRDC | - | இலங்கை காணி மீட்டல் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் |
| GN | - | கிராம சேவகர் |
| DS | - | பிரதேச செயலாளர் |
| CCD | - | கரையோர பாதுகாப்புத் திணைக்களம் |
| MC | - | மாநகர சபை |
| EE&A | - | சுற்றுச்சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவு |
| EPP | - | சுற்றுச்சூழல் பயனீர் திட்டம் |
| WED | - | உலக சுற்றுச்சூழல் தினம் |
| TRC | - | தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு |
| DELEC | - | மாவட்ட சுற்றுச்சூழல் சட்டம் குழு |
| NWS&DB | - | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை |
| LGA | - | உள்ளூராட்சி அதிகாரசபை |
| MENR | - | சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை வள அமைச்சு |
| MERE | - | சுற்றுச்சூழல் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சு |
| PP | - | பிலிசரு திட்டம் |
| NSWMSC | - | தேசிய திட கழிவு மேலாண்மை துணை மையம் |
| KMC | - | குருநாகல் மாநகர சபை |
| ICTAD | - | கட்டுமான பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் |
| EDCF | - | பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியம் |
| PPA | - | திட்டம் தயாரித்தல் உதவியாளர் |
| NPD | - | தேசிய திட்டமிடல் திணைக்களம் |
| ERD | - | வெளி வள துறை |
| NSWMC | - | தேசிய திண்மக் கழிவு முகாமைத்துவ மத்திய நிலையம் |
| WPWMA | - | மேற்கு மாகாணம் கழிவு மேலாண்மை ஆணையம் |
| CLG | - | உள்ளூராட்சி ஆணையாளர் |
| BOQ | - | அளவைப்பட்டியல் |
| ISWM | - | ஒருங்கிணைந்த திட கழிவு மேலாண்மை |